D.
V2,3:N96
N56.2.1.
218920

வெளியீடு 6-12-96 Issued 6-12-96

440/97

# தமிழ்நாடு
# சட்டமன்றப் பேரவை நடவடிக்கைகள்
# செயலக வெளியீடு

# TAMIL NADU
# LEGISLATIVE ASSEMBLY DEBATES
# OFFICIAL REPORT

சனிக்கிழமை, மே 25, 1996– தொகுதி 2 – எண் 1

**Saturday the 25th May, 1996 – Volume 2 – No. 1**

*சட்டமன்றப் பேரவைச் செயலகம், சென்னை - 600 009*

**Legislative Assembly Secretariat, Fort St. George,
Chennai-600 009**

*விலை ரூ. 3.00*] [**Price Rs. 3.00**

## 25–5–1996

## உள்ளடக்கம்


| | பக்கங்கள் |
|---|---|
| தமிழ்நாடு அரசின் ஆளுநரும் அமைச்சரவையும் | i-iv |
| Personnel of the Government of Tamil Nadu | v-viii |
| தமிழ்நாடு சட்டமன்றப் பேரவையின் முக்கிய அலுவலர்கள் | ix-x |
| தமிழ்நாடு சட்டமன்றப் பேரவை உறுப்பினர்களின் பட்டியல் (அகர வரிசைப்படி) | xi-xxi |
| *1.* **தகவல் கோரல்–** | |
| (அ) 24-5-1996 அன்று இரங்கல் தீர்மானம் | 1-8 |
| எடுத்துக்கொள்ளப்பட்ட நடைமுறை பற்றி ஓர் உறுப்பினர் பத்திரிகைக்களித்த செய்தி குறித்து | 36-44 |
| (ஆ) உறுப்பினர் கொடுத்துள்ள அறிவிப்பு குறித்து | 8-9 |
| *2.* **சிறப்புக் கவன ஈர்ப்பு–** | |
| வேலூர் அருகே நடந்த பேருந்து விபத்து குறித்து | 8-19 |
| *3.* **விதி 110–ன்கீழ் மாண்புமிகு முதலமைச்சரின் அறிக்கை–** | |
| தூத்துக்குடியில் அண்மையில் நடைபெற்ற கலவரங்கள் குறித்து | 19-21 |
| *4.* **அறிவிப்பு–** | |
| மாற்றுத் தலைவர்கள் பட்டியல் | 21 |

| | | |
|---|---|---|
| | | பக்கங்கள் |
| 5. | ஆளுநர் உரைக்கு நன்றி தெரிவிக்கும் தீர்மானத்தின்மீது விவாதம்- | 21-109 |
| | *திரு. பசும்பொன் தா. கிருட்டிணன் | 21-36 |
| | திரு. ச. அழகிரி | 44-58 |
| | *திரு. அ. அசோகன் | 58-60 |
| | *டாக்டர் இ. எஸ்.எஸ். இராமன் | 60-66 |
| | திரு. வ. வேலுசாமி | 67-71 |
| | *திரு. கே. சுப்பராயன் | 71-82 |
| | திரு. செல்வராஜ் என்கிற கவிதைப்பித்தன் | 83-87 |
| | *திரு. வி. கே. லட்சுமணன் | 88-93 |
| | *திரு. இ. புகழேந்தி | 93-98 |
| | *திரு. ஜி. நிஜாமுதீன் | 99-103 |
| | *திரு. செங்கை சிவம் | 103-109 |


218920



## தமிழ்நாடு அரசின் ஆளுநரும் அமைச்சரவையும்
## ஆளுநர்—டாக்டர் எம். சென்னா ரெட்டி
## அமைச்சரவையின் உறுப்பினர்கள்

1. முதலமைச்சர் .. **மாண்புமிகு டாக்டர் மு. கருணாநிதி:** பொது, பொது நிர்வாகம், இந்திய ஆட்சிப் பணியாளர், மாவட்ட வருவாய் அதிகாரிகள், உள்துறை, நிதி, திட்டம், தொழில்கள், மதுவிலக்கு மற்றும் ஆயத்தீர்வை, வணிக வரிகள்.

2. கல்வி அமைச்சர் : **மாண்புமிகு பேராசிரியர் க. அன்பழகன் :** கல்வி (தொழில் நுட்பக் கல்வி உட்பட), சட்டமன்றம், தேர்தல்கள், மின்னணுவியல், அறிவியல் மற்றும் தொழில் நுட்பவியல், விளையாட்டு மற்றும் இளைஞர் அணி, முன்னாள் இராணுவத்தினர்.

3. மக்கள் நல்வாழ்வு மற்றும் மின் துறை அமைச்சர் : **மாண்புமிகு திரு. ஆற்காடு நா. வீராசாமி:** மக்கள் நல்வாழ்வு, மருத்துவக் கல்வி மற்றும் குடும்ப நலம், மின்சாரம்.

4. வருவாய்த் துறை அமைச்சர் : **மாண்புமிகு திரு. நாஞ்சில் கி. மனோகரன்:** வருவாய், வருவாய் வாரியம், மாவட்ட வருவாய்த் துறைப் பணியாளர்கள், மாவட்டத் துணை ஆட்சியாளர்கள்.

5. ஊரக வளர்ச்சி மற்றும் உள்ளாட்சித் துறை அமைச்சர் : **மாண்புமிகு திரு. கோ. சி. மணி:** நகராட்சி நிர்வாகம், சமுதாய வளர்ச்சி, ஊராட்சிகள், ஊராட்சி ஒன்றியங்கள் மற்றும் கிராமப்புறக் கடன் சம்பந்தப்பட்டவை, நகர்ப்புற மற்றும் கிராமப்புற குடிநீர் வழங்கல்.

6. வேளாண்மைத் துறை அமைச்சர் : **மாண்புமிகு திரு. சோ. ஆறுமுகம்:** வேளாண்மை, வேளாண்மைப் பொறியியல் வேளாண் பணிக் கூட்டுறவுச் சங்கங்கள் தோட்டக் கலை, கரும்பு வரி மற்றும் கரும்பு வளர்ச்சி.

7. பொது பணித் துறை அமைச்சர். : **மாண்புமிகு திரு. துரைமுருகன்:** பொதுப் பணிகள், பாசனம் (சிறுபாசனப் உட்பட), திட்டப் பணிகள்.

8. போக்குவரத்துத் துறை அமைச்சர் : **மாண்புமிகு டாக்டர் க. பொன்முடி என்கிற தெய்வசிகாமணி:** போக்குவரத்து, அரசுடைமையாக்கப்பட்ட போக்குவரத்து, இயக்கூர்திகள் சட்டம், துறைமுகங்கள், நெடுஞ்சாலைகள், சென்னைப் பெருநகர் வளர்ச்சிக் குழுமம்.

9. தமிழ் ஆட்சிமொழி மற்றும் தமிழ்ப் பண்பாட்டுத் துறை அமைச்சர். : **மாண்புமிகு டாக்டர் மு. தமிழ்க்குடிமகன்:** தமிழ் ஆட்சிமொழி, தமிழ்ப் பண்பாடு.

10. உணவு மற்றும் பொது விநியோகத் துறை அமைச்சர். : **மாண்புமிகு திரு. கே. என். நேரு:** உணவு, விலைவாசிக் கட்டுப்பாடு, நுகர்பொருள், பொது விநியோக முறை.

11. பால்வளத் துறை அமைச்சர் : **மாண்புமிகு திரு. க. சுந்தரம்:** பால், பால் பெருக்குத் திட்டம், குடிசை மாற்றுத் திட்டம், இடவசதிக் கட்டுப்பாடு.

12. தொழிலாளர் நலத் துறை அமைச்சர் : **மாண்புமிகு திரு. அ. இரகுமான்கான்:** தொழிலாளர், மக்கள தொகைக் கணக்கு, வேலைவாய்ப்பு மற்றும் பயிற்சி, இரும்பு மற்றும் எஃகுக் கட்டுப்பாடு, அச்சுக் காகிதக் கட்டுப்பாடு, வக்ஃப்



13. சட்டத் துறை அமைச்சர் : **மாண்புமிகு திரு. ஆலடி அருணா:** சட்டம், நீதிமன்றங்கள், சிறைகள், எடைகள், அளவைகள் பற்றி சட்டம் இயற்றுதல், கம்பெனிகள் பதிவு, கடன் நிவாரணம் (கடன் வழங்கல், சீட்டு நிதி இவை பற்றிய சட்டம் இயற்றுதல் உட்பட).

14. கூட்டுறவுத் துறை அமைச்சர் : **மாண்புமிகு திரு. வே. தங்கபாண்டியன்:** கூட்டுறவு, புள்ளிவிவரங்கள்.

15. கைத்தறித் துறை அமைச்சர் : **மாண்புமிகு திரு. என். கே. கே. பெரியசாமி:** கைத்தறி, நெசவாலைகள், சுற்றுச் சூழல் மாசுக் கட்டுப்படுத்துதல்.

16. பிற்பட்டோர் நலத் துறை அமைச்சர் : **மாண்புமிகு திரு. எம். ஆர். கே. பன்னீர்செல்வம்:** பிற்பட்டோர் நலம், மிகப் பிற்பட்டோர் நலம் மற்றும் சீர் மரபினர், வெளிநாடு வாழ் இந்தியர்கள், அகதிகள் மற்றும் வெளியேற்றப்பட்டோர்.

17. வனம் மற்றும் கால்நடைத் துறை அமைச்சர் : **மாண்புமிகு திரு. பொங்கலூர் நா. பழனிச்சாமி:** வனம், சின்கோனா, கால்நடை பராமரிப்பு.

18. வீட்டு வசதித் துறை அமைச்சர் : **மாண்புமிகு திரு. கு. பிச்சாண்டி:** வீட்டு வசதி, ஊரக வீட்டு வசதி வளர்ச்சி, நகர அமைப்பு மற்றும் நகர்ப்புற வளர்ச்சி.

19. ஊரகத் தொழில் துறை மற்றும் பதிவுத் துறை அமைச்சர் : **மாண்புமிகு திரு. இ. பெரியசாமி:** ஊரகத் தொழில்கள் (கிராம மற்றும் குடிசைத் தொழில்கள் உட்பட), பதிவுத் துறை, முத்திரைச் சட்டம், சத்துணவு.

20. செய்தி-விளம்பரத் துறை அமைச்சர் : **மாண்புமிகு திரு. வ. முல்லைவேந்தன்:** செய்தி மற்றும் விளம்பரம், திரைப்படத் தொழில் நுட்பவியல், திரைப்படச் சட்டம்.

| | |
|---|---|
| 21. இந்து சமய அறநிலையத் துறை அமைச்சர் | : **மாண்புமிகு புலவர் பூ.ம. செங்குட்டுவன்:** இந்து சமய அறநிலையத் துறை. |
| 22. சமூக நலத் துறை அமைச்சர் | : **மாண்புமிகு திருமதி எஸ். பி. சற்குணம்:** சமூக நலம் (மகளிர் மற்றும் குழந்தைகள் நலம் உட்பட), பிச்சைக்காரர் விடுதிகள், அனாதை விடுதிகள், சீர்திருத்த நிர்வாகம். |
| 23. ஆதிதிராவிடர் நலத் துறை அமைச்சர் | : **மாண்புமிகு திரு. சமயநல்லூர் எஸ். செல்வராஜ்:** ஆதிதிராவிடர் நலன், மலைவாழ் பழங்குடியினர், பிணைத் தொழிலாளர். |
| 24. சுற்றுலாத் துறை அமைச்சர் | : **மாண்புமிகு திரு. என். சுரேஷ் ராஜன்:** சுற்றுலா, சுற்றுலா வளர்ச்சிக் கழகம். |
| 25. கதர் மற்றும் அச்சுத் துறை அமைச்சர் | : **மாண்புமிகு திரு. அந்தியூர் ப. செல்வராசு:** கதர் வாரியம், பூமிதானம் மற்றும் கிராமதானம், எழுதுபொருள் மற்றும் அச்சுத் துறை, அரசு அச்சகம். |
| 26. மீனளத் துறை அமைச்சர் | : **மாண்புமிகு திருமதி எஸ். ஜெனிபர் சந்திரன்:** மீனளம், மீன் வளர்ச்சிக் கழகம். |



## PERSONNEL OF THE GOVERNMENT OF TAMIL NADU

## GOVERNOR—Dr. M. CHANNA REDDY

## MEMBERS OF THE COUNCIL OF MINISTERS

| | |
|---|---|
| 1. Chief Minister | .. **THE HON. DR. M. KARUNANIDHI:** Public, General Administration, Indian Administrative Service, District Revenue Officers, Home, Finance, Planning, Industries, Prohibition and Excise and Commercial Taxes. |
| 2. Minister for Education | .. **THE HON. PROF. K. ANBAZHAGAN:** Education including Technical Education, Legislature, Elections, Electronics, Science and Technology, Sports and Youth Service Corps and Ex-Servicemen. |
| 3. Minister for Health and Electricity. | .. **THE HON. THIRU ARCOT N. VEERASAMY:** Health, Medical Education and Family Welfare and Electricity. |
| 4. Minister for Revenue | .. **THE HON. THIRU NANJIL K. MANOHARAN:** Revenue, Board of Revenue, District Revenue Establishment and Deputy Collectors. |
| 5. Minister for Rural Development and Local Administration. | .. **THE HON. THIRU KO. SI. MANI:** Municipal Administration, Community Development, Panchayats, Panchayat Unions and Rural Indebtedness and Urban and Rural Water Supply. |
| 6. Minister for Agriculture | .. **THE HON. THIRU S. ARUMUGHAM:** Agriculture, Agricultural Engineering, Agro Service Co-operatives, Horticulture, Sugarcane Cess and Sugarcane Development. |

| | | |
|---|---|---|
| 7. Minister for Public Works | .. | **THE HON. THIRU DURAIMURUGAN:** Public Works, Irrigation including Minor Irrigation and Programme Works. |
| 8. Minister for Transport | : | **THE HON. DR. K. PONMUDI (A) DEIVASIGAMANI:** Transport, Nationalised Transport, Motor Vehicles Act, Ports and Highways and Madras Metropolitan Development Authority. |
| 9. Minister for Tamil Official Language and Tamil Culture | : | **THE HON. DR. M. THAMIZH KUDIMAGAN:** Tamil Official Language and Tamil Culture. |
| 10. Minister for Food and Public Distribution System | .. | **THE HON. THIRU K.N. NEHRU:** Food, Price Control and Civil Supplies and Public Distribution System. |
| 11. Minister for Milk | .. | **THE HON. THIRU K. SUNDARAM:** Milk and Dairy Development, Slum Clearance and Accommodation Control. |
| 12. Minister for Labour | .. | **THE HON. THIRU A. REHMAN KHAN:** Labour, Census, Employment and Training, Iron and Steel Control, Newsprint Control and Wakf. |
| 13. Minister for Law | .. | **THE HON. THIRU ALADI ARUNA:** Law, Courts, Prisons, Legislation on Weights and Measures, Registration of Companies, Debt Relief including Legislation on Money lending and Legislation on Chits. |
| 14. Minister for Co-operation | .. | **THE HON. THIRU V. THANGA PANDIAN:** Co-operation and Statistics. |



| | | |
|---|---|---|
| 15. Minister for Handlooms | .. | **THE HON. THIRU N.K.K. PERIASAMY:** Handlooms, Textiles and Environmental Pollution Control. |
| 16. Minister for Backward Classes | .. | **THE HON. THIRU M.R.K. PANNEER SELVAM:** Backward Classes, Most Backward Classes and Denotified Communities, Indians Overseas, Refugees and Evacuees. |
| 17. Minister for Forest and Animal Husbandry | .. | **THE HON. THIRU PONGALUR N. PALANISAMY.** Forest, Cinchona and Animal Husbandry. |
| 18. Minister for Housing | .. | **THE HON. THIRU K. PITCHANDI:** Housing, Rural Housing Development, Town Planning and Urban development. |
| 19. Minister for Rural Industries and Registration | .. | **THE HON. THIRU I. PERIASAMY:** Rural Industries including village and Cottage Industries, Registration and Stamp Act and Nutritious Meals. |
| 20. Minister for Information and Publicity | .. | **THE HON. THIRU V. MULLAI VENDAN:** Information and Publicity, Film Technology and Cinematography Act. |
| 21. Minister for Hindu Religious and Charitable Endowments | .. | **THE HON. THIRU PULAVAR P.M. SENGUTTUVAN:** Hindu Religious and Charitable Endowments. |
| 22. Minister for Social Welfare | .. | **THE HON. TMT. S.P. SARGUNAM:** Social Welfare including Women's and Children's Welfare, Beggars Home, Orphanages and Correctional Administration. |

| | | |
|---|---|---|
| 23. Minister for Adi Dravidar Welfare | .. | **THE HON. THIRU SAMAYANALLUR S. SELVARAJ:** Adi Dravidar Welfare, Hill Tribes and Bonded Labour. |
| 24. Minister for Tourism | .. | **THE HON. THIRU N. SURESH RAJAN:** Tourism and Tourism Development Corporation. |
| 25. Minister for Khadi and Printing | .. | **THE HON. THIRU ANDHIYUR P. SELVARASU:** Khadi Board, Bhoodan and Gramdan, Stationery and Printing and Government Press. |
| 26. Minister for Fisheries | .. | **THE HON. TMT. S. JENEFER CHANDRAN:** Fisheries and Fisheries Development Corporation. |



## தமிழ்நாடு சட்டமன்றப் பேரவையின் முக்கிய அலுவலர்கள் பட்டியல்

| | | | |
|---|---|---|---|
| 1. | திரு. டி. சாலமன் ஜெயபால், பி.எஸ்.சி.,பி.எல்., | .. | கூடுதல் செயலாளர் |
| 2. | திரு. வெ. இராசாராமன், பி.எஸ்.சி.,பி.எல்., | .. | இணைச் செயலாளர் |
| 3. | திரு. பெ. இராசமாணிக்கம், பி.ஏ.,பி.எல்., | .. | இணைச் செயலாளர் (பதிப்பாளர்) |
| 4. | திரு. கா.ப. இராஜன், டி.ஆர்.எஸ்., | .. | துணைச் செயலாளர் |
| 5. | திருமதி பானுமதி ஆனந்தராஜன், பி.எஸ்.சி., பி.ஜி.எல்., | .. | துணைச் செயலாளர் |
| 6. | திரு. கி. சாயிநாதன், பி.ஏ.,பி.ஜி.எல்., | .. | துணைச் செயலாளர் |
| 7. | திருமதி பவானி சுப்பையா, பி.ஏ.,பி.ஜி.எல்., | .. | துணைச் செயலாளர் |
| 8. | திரு. சா. கணேசன், பி.ஏ., பி.ஜி.எல்., | .. | துணைச் செயலாளர் |
| 9. | திரு. தி. திருமாவளவன், பி.எஸ்.சி., பி.எல்., | .. | துணைச் செயலாளர் |
| 10. | திரு. செ.ஏ. துரைபாண்டியன், பி.ஏ.,பி.எல்., | .. | துணைச் செயலாளர் (பதிப்பாளர்) |
| 11. | திரு. டி. சுந்தரராஜலு, எம்.ஏ., | .. | துணைச் செயலாளர் (பதிப்பாளர்) |
| 12. | திரு. வெ. இராமகிருஷ்ணன், எம்.ஏ.,பி.எல்., | .. | பேரவைத் தலைவரின் சிறப்புச் செயலாளர் |
| 13. | திரு. ப. சீ. வெங்கடராமன், பி.காம்., | .. | குழு அலுவலர் |
| 14. | திருமதி வீ. நா. உமா, பி.ஏ., | .. | குழு அலுவலர் |
| 15. | திரு. க. சம்பத்ராஜன், பி.ஏ., | .. | சார்புச் செயலாளர் |
| 16. | திரு. எம். ஜோபாய், பி.காம்., | .. | சார்புச் செயலாளர் |

| | | |
|---|---|---|
| 17. | திரு. இரா. முருகானந்தம், பி.எஸ்.சி.,பி.ஜி.எல்., | .. சார்புச் செயலாளர் |
| 18. | திரு. கோ. ஞானப்பிரகாசம், எம்.ஏ., பி.எல்., | .. சார்புச் செயலாளர் |
| 19. | திரு. ஜி. அனீஸ் அகமத், பி.ஏ.,பி.ஜி.எல்., | .. சார்புச் செயலாளர் |
| 20. | திரு. மா. செல்வராஜ், பி.எஸ்.சி.,பி.எல்., | .. சார்புச் செயலாளர் |
| 21. | திரு. வெ.சி. சுப்பிரமணியன், எம்.ஏ., | .. சார்புச் செயலாளர் |
| 22. | திரு. சு. பாலச்சந்தர், பி.ஏ.,பி.எல்., | .. சார்புச் செயலாளர் |
| 23. | திரு. பு.அ. செல்வராஜ், பி.எஸ்.சி., | .. சார்புச் செயலாளர் |
| 24. | திருமதி என். துளசிபாய், பி.ஏ., | .. சார்புச் செயலாளர் |
| 25. | திரு. கே. ரவீந்திரன், எம்.ஏ., | .. சார்புச் செயலாளர் |
| 26. | திரு. ஊ.கு. சுப்பிரமணியன், எம்.ஏ., | .. சார்புச் செயலாளர் |
| 27. | திரு. டி. கோவிந்தராஜு, எம்.ஏ.,பி.எட்., | .. சார்புச் செயலாளர் |
| 28. | திரு. ஏ.எம்.பி. ஜமாலுதீன், பி.ஏ.,பி.எல்., | .. சார்புச் செயலாளர் |
| 29. | திரு. இரா. வெங்கடேசன், எம்.ஏ.,எல்.எல்.பி., டி.காம்., டி.ஜே.பி.ஆர்.,டி.ஐ.ஆர்.பி.எம்., | .. தலைமை நிருபர் |
| 30. | திரு. மு. ஆறுமுகப்பெருமாள், எம்.ஏ.,பி.லிட்., | .. தலைமை நிருபர் |
| 31. | திரு. செ. சந்திரகுமார், எம்.ஏ., | .. தலைமை நிருபர் |
| 32. | திரு. கோ. ஸ்ரீராமன், பி.காம்., | .. உதவி விவாதப் பதிப்பாளர் |
| 33. | திரு. ம. ஸ்ரீனிவாசலு, பி.காம்., பி.எல். | உதவி விவாதப் பதிப்பாளர் |



## தமிழ்நாடு சட்டமன்றப் பேரவை
## உறுப்பினர்கள் பட்டியல் (அகர வரிசைப்படி)
## பெயர்களும் தொகுதிகளும்

| | | |
|---|---|---|
| 1. | அசோகன், திரு. அ. | .. திருவாரூர் (செ.வ.) |
| 2. | அந்தியூர் செல்வராசு, திரு. ப. | .. அந்தியூர் (செ.வ.) |
| 3. | அபுல்ஹசன், திரு. எம்.எம்.எஸ். | .. மயிலாடுதுறை |
| 4. | அப்துல் நாசர், திரு. அ.வ. | .. புவனகிரி |
| 5. | அப்துல் லத்தீப், திரு. ம. | .. வாணியம்பாடி |
| 6. | அப்பாவு, திரு. மு. | .. ராதாபுரம் |
| 7. | அமரமூர்த்தி, திரு. டி. | .. அரியலூர் |
| 8. | அய்யலுசாமி, திரு. வி. | .. கோவில்பட்டி |
| 9. | அருண்குமார், திரு. பா. | .. மேட்டுப்பாளையம் |
| 10. | அழகர்ராஜா, திரு. என்.ஆர். | .. தேனி |
| 11. | அழகிரி, திரு.ச. | .. சிதம்பரம் |
| 12. | அழகுவேலு, திரு. ச. | .. கண்டமங்கலம் (செ.வ.) |
| 13. | அன்பழகன், பேராசிரியர் க. | .. துறைமுகம் |
| 14. | அன்பழகன், திரு. வ. | .. செய்யார் |
| 15. | அன்பில் பொய்யாமொழி, திரு. | .. திருச்சிராப்பள்ளி-2 |
| 16. | ஆசையன், திரு. பி. | .. ஆண்டிப்பட்டி |
| 17. | ஆண்டமுத்து, திரு. வெ. அ. | .. பவானிசாகர் |
| 18. | ஆண்டி அம்பலம், திரு. எம். | .. நத்தம் |

19. ஆரூண் ரஷீத், திரு. ஜே.எம். .. வில்லிவாக்கம்
20. ஆலடி அருணா, திரு. .. ஆலங்குளம்
21. ஆல்பன், டாக்டர் வே. .. திருவட்டாறு
22. ஆவுடையப்பன், திரு. இரா. .. அம்பாசமுத்திரம்
23. ஆறுமுகம், திரு. சோ. .. வீரபாண்டி
24. ஆறுமுகம், திரு. டி.பி. .. திருசெங்கோடு
25. ஆற்காடு நா. வீராசாமி, திரு. .. அண்ணாநகர்
26. ஆனந்தன், திரு. பால. .. வந்தவாசி (செ.வ.)
27. இரகுமான்கான், திரு. அ. .. இராமநாதபுரம்
28. இராசமாணிக்கம், திரு. க.வெ.வீ. .. மேலூர்
29. இராசமாணிக்கம், திரு. பி. .. ஒரத்தநாடு
30. இராசன், திரு. வி.பி. .. ராஜபாளையம் (செ.வ.)
31. இராமசாமி, திரு. கே. ஆர். .. திருவாடனை
32. இராமசாமி, திரு. வை. .. பண்ருட்டி
33. இராமச்சந்திரன், திரு. ஓ. ஆர். .. கம்பம்
34. இராமச்சந்திரன், திரு. சி. இரா. .. தொண்டாமுத்தூர்
35. இராமச்சந்திரன், திரு. மா. .. திருவோணம்
36. இராமலிங்கம், திரு. ஏ. .. காட்டுமன்னார் கோவில் (செ.வ.)
37. இராமலிங்கம், திரு. செ. .. திருவிடைமருதூர்
38. இராமன், டாக்டர் இ.எஸ்.எஸ். .. பள்ளிப்பட்டு
39. இராமஜெயம், திரு. ந.பூ. .. மைலாப்பூர்
40. இராஜரெட்டி, திரு. ச. .. தளி
41. இராஜேந்தர் திரு. டி .. பூங்காநகர்



42. இராஜேந்திரன் என்கிற தீரன், திரு. அ. .. ஆண்டிமடம்
43. இளங்கோ, திரு. கோ. .. அவினாசி (செ.வ.)
44. இளம்வழுதி, திரு. இ. .. எழும்பூர் (செ.வ.)
45. ஈஸ்வரன், திரு. ரா. .. வாசுதேவநல்லூர் (செ.வ.)
46. உதயசூரியன், திரு. தா. .. சங்கராபுரம்
47. உபயதுல்லா, திரு. எஸ்.என்.எம். .. தஞ்சாவூர்
48. கணேசன், திரு. இ. .. எடப்பாடி
49. கணேசன், திரு. கே.சி. .. ஜெயங்கொண்டம்
50. கருணாநிதி, டாக்டர் மு. .. சேப்பாக்கம்
51. கருப்பண்ண உடையார், திரு. ந. .. பாபநாசம்
52. கருப்புசாமி, திரு. சொ. .. சங்கரநயினார்கோவில் (செ.வ.)
53. கருப்புசாமி, திரு. டி. .. உப்பிலியாபுரம் (ஆ.வா.)
54. கல்யாணம், திரு. குத்தாலம் பி. .. குத்தாலம்
55. கன்னையன், திரு. க. .. தொட்டியம்
56. காஞ்சனா கமலநாதன், டாக்டர் .. கிருஷ்ணகிரி
57. காந்தி, திரு. ஆர். .. இராணிப்பேட்டை
58. கிட்டு, திரு. சைதை கா. .. சைதாப்பேட்டை
59. கிருட்டிணன், திரு. பசும்பொன் தா... சிவகங்கை
60. கிருஷ்ணசாமி, டாக்டர் க. .. ஓட்டப்பிடாரம் (செ.வ.)
61. கிருஷ்ணன், திரு. எஸ்.வி. .. நாங்குநேரி
62. கிருஷ்ணன், திரு. சீ.வெ. .. வேடசந்தூர்
63. குண்டன், திரு. தா. .. உதகமண்டலம்

64. குமாரதாஸ், டாக்டர் தே. .. கிள்ளியூர்
65. கோதண்டம், திரு. கு. .. ஸ்ரீபெரும்புதூர் (செ
66. கோபால், திரு. பா. .. மேட்டூர்
67. கோபு, திரு. சி. .. அணைக்கட்டு
68. கோமதி சீனிவாசன், திருமதி .. வலங்கைமான் (செ.வ
69. கோவிந்தன், திரு. ப. .. தாரமங்கலம்
70. கோவிந்தன், திரு. வி. .. பேரணாம்பட்டு (செ.வ)
71. சக்கரபாணி, திரு. ஆர். .. ஒட்டன்சத்திரம்
72. சண்முகம், திரு. கோ. .. திருப்பத்தூர்
73. சண்முகம், திரு. சி. .. ஆலந்தூர்
74. சண்முகம், திரு. ம. .. கிணத்துக்கடவு
75. சந்தானம், திரு. எல். .. சோழவந்தான்
76. சந்திரசேகரன், திரு. சி. .. சேந்தமங்கலம் (ஆ.வா.)
77. சந்திரசேகரன், திரு. துரை. .. திருவையாறு
78. சமயநல்லூர் செல்வராஜ், திரு. எஸ். .. சமயநல்லூர் (செ.வ.)
79. சம்பத், திரு. ஏ.ஜி. .. முகையூர்
80. சரஸ்வதி, திருமதி ஆர். .. தாராபுரம் (செ.வ.)
81. சற்குணம், திருமதி எஸ்.பி. .. டாக்டர் இராதாகிருஷ்ணன் நகர்
82. சாமிநாதன், திரு. மு.பெ. .. வெள்ளக்கோவில்
83. சிங்காரவேலு, திரு. வி.பி. .. வால்பாறை (செ.வ.)
84. சிவபுண்ணியம், திரு. வை. .. மன்னார்குடி
85. சிவராமன், திரு. ஆர். .. திருப்பத்தூர்



86. சிவராஜ், திரு. சு. .. ரிஷிவந்தியம்
87. சிவலிங்கம், திரு. எஸ்.ஆர். .. பனமரத்துப்பட்டி
88. சிவானந்தம், திரு. ஆர். .. ஆரணி
89. சிவாஜி, திரு. இ.ஏ.பி. .. திருத்தணி
90. சின்னையா, திரு. வெ. .. திருமயம்
91. சீனிவாசன், திரு. ஏ. ஆர். ஆர். .. விருதுநகர்
92. சுகவனம், திரு. இ.ஜி. .. பர்கூர்
93. சுடலைமுத்து, திரு. அ. .. போடிநாயக்கனூர்
94. சுதர்சனம், திரு. டி. .. பூந்தமல்லி
95. சுந்தரம், திரு. க. .. பொன்னேரி (செ.வ.)
96. சுந்தரம், திரு. ந. .. காரைக்குடி
97. சுந்தரம், திரு. பி.ஆர். .. ராசிபுரம்
98. சுந்தர், திரு. கே. .. உத்திரமேரூர்
99. சுப்பராயன், திரு. கே. .. திருப்பூர்
100. சுப்பிரமணி, திரு. பி.என். .. ஆற்காடு
101. சுப்பிரமணி என்கிற சி.சு. மணி, திரு. சி. .. திருவள்ளூர்
102. சுப்பிரமணியன், திரு. அ.லெ. .. திருநெல்வேலி
103. சுரேஷ் ராஜன், திரு. என். .. கன்னியாகுமரி
104. செங்குட்டுவன், புலவர் பூ.ம. .. மருங்காபுரி
105. செங்கை சிவம், திரு. .. பெரம்பூர் (செ.வ.)
106. செல்லக்குமார், டாக்டர் அ. .. தியாகராயநகர்
107. செல்வம், திரு. ரெ. .. குளித்தலை

108. செல்வராஜ், திரு. டி. .. உடுமலைப்பேட்டை

109. செல்வராஜ் என்கிற கவிதைப்பித்தன், திரு. .. கொளத்தூர் (செ.வ.)

110. சேகரன், திரு. ஆர். ஆர். .. ஓமலூர்

111. சேதுநாதன், திரு. ரா. .. திண்டிவனம்

112. சொக்கர், திரு. ஆர். .. சிவகாசி

113. சொக்கலிங்கம், திரு. ஜி. .. திருப்போரூர் (செ.வ.)

114. ஞானசேகரன், டாக்டர் ஆ. .. மேல்மலையனூர்

115. ஞானசேகரன், திரு. சி. .. வேலூர்

116. டேவிட் செல்வின், திரு. எஸ். .. ஸ்ரீவைகுண்டம்

117. தங்கபாண்டியன், திரு. வே. .. அருப்புக்கோட்டை

118. தங்கமணி, திரு. கே. .. மானாமதுரை (செ.வ.)

119. தங்கவேலன், திரு. சுப. .. கடலாடி

120. தங்கவேல், திரு. அ. ல. .. சேலம்-2

121. தங்கவேல், திரு. என். .. குன்னூர் (செ.வ.)

122. தண்டபாணி, திரு. சி.டி. .. கோயம்புத்தூர் மேற்கு

123. தமிழரசன், திரு. குழந்தை. .. விருதாசலம்

124. தமிழ்க்குடிமகன், டாக்டர் மு. .. இளையான்குடி

125. தமிழ்ச்செல்வன், திரு. ஆர். .. அரக்கோணம் (செ.வ.)

126. தமிழ்மணி, திரு. வீ. .. செங்கல்பட்டு

127. தளபதி, திரு. கோ. .. சேடப்பட்டி

128. தனபாலன், திரு. கே. ஆர். ஜி. .. சேலம்-1

129. தனபால், திரு. வி.ஜி. .. குடியாத்தம்



130. தாமரைக்கனி, திரு. இரா. .. ஸ்ரீவில்லிபுத்தூர்

131. திசைவீரன், திரு. உ. .. பரமக்குடி (செ.வ.)

132. திருஞானசம்பந்தம், திரு. வி. .. பேராவூரணி

133. திருநாவுக்கரசு. திரு. எஸ். .. அறந்தாங்கி

134. திருவேங்கடம், திரு. பெ. சு. .. கலசப்பாக்கம்

135. துரை, திரு. க. .. திருவெறும்பூர்

136. துரைசாமி, திரு. பா. .. வரகூர் (செ.வ.)

137. துரைமுருகன், திரு. .. காட்பாடி

138. தெய்வநாயகம், திரு. எ. .. மதுரை மத்தி

139. தேவராஜன், டாக்டர். மு. .. பெரம்பலூர் (செ.வ.)

140. நடராஜன், திரு. அ. .. பேரூர்

141. நடராஜன், திரு. டி. .. செஞ்சி

142. நயினா முகமது, திரு. கோ. .. கடையநல்லூர்

143. நன்னன், திரு. கொ.வி. .. செங்கம் (செ.வ.)

144. நாகரத்தினம், திரு. ச. .. கிருஷ்ணராயபுரம் (செ.வ.)

145. நாஞ்சில் கி. மனோகரன், திரு. .. திருவல்லிக்கேணி

146. நிஜாமுதீன், திரு. ஜி. .. நாகப்பட்டினம்

147. நேரு, திரு. கே. என். .. லால்குடி

148. பத்மா, டாக்டர் .. நன்னிலம் (செ.வ.)

149. பரணிகுமார், திரு. பா. .. திருச்சிராப்பள்ளி-1

150. பழனிசாமி, திரு. ஜி. .. திருத்துறைப்பூண்டி (செ.வ.)

151. பழனிவேல் ராஜன், திரு. பி.டி.ஆர். .. மதுரை மேற்கு

152. பன்னீர்செல்வம், திரு. எம். ஆர். கே. .. குறிஞ்சிப்பாடி
153. பன்னீர்செல்வம், திரு. மு.. .. சீர்காழி (செ.வ.)
154. பாண்டுரங்கன், திரு. என். .. பெரணமல்லூர்
155. பாலகிருஷ்ணன், திரு. சோ. .. முதுகுளத்தூர்
156. பாலசுப்பிரமணியம், திரு. சீ.ந. .. பவானி
157. பாலசுப்பிரமணியன், திரு. ப. .. பட்டுக்கோட்டை
158. பிச்சாண்டி, திரு. கு. .. திருவண்ணாமலை
159. புகழேந்தி, திரு. இ. .. கடலூர்
160. புரட்சிமணி, திரு. எஸ். .. மங்களூர் (செ.வ.)
161. பூவேந்தன், திரு. த. .. பழனி (செ.வ.)
162. பெரியசாமி, திரு. இ. .. ஆத்தூர்
163. பெரியசாமி, திரு. என். .. தூத்துக்குடி
164. பெரியசாமி, திரு. என். கே.கே. .. ஈரோடு
165. பெரியசாமி, திரு. நா. .. பெருந்துறை
166. பெரியண்ணன், திரு. அ. .. புதுக்கோட்டை
167. பெருமாள், திரு. வி. .. ஏற்காடு (ஆ.வா)
168. பெர்னார்டு. திரு. இரா. .. குளச்சல்
169. பொங்கலூர் நா. பழனிசாமி, திரு. .. சிங்காநல்லூர்
170. பொன்முடி, திரு. எஸ். எஸ். .. பல்லடம்
171. பொன்முடி என்கிற தெய்வசிகாமணி டாக்டர் க. .. விழுப்புரம்
172. பொன்னம்மாள், திருமதி ஏ. எஸ். .. நிலக்கோட்டை (செ.வ.)
173. மகேந்திரன், திரு. ஆர். .. நாட்ராம்பள்ளி



174. மணி, டாக்டர் அ. .. உளுந்தூர்பேட்டை (செ.வ.)
175. மணி, திரு. நெல்லிக்குப்பம், அ. .. நெல்லிக்குப்பம்
176. மணி, திரு. கோ. சி. .. கும்பகோணம்
177. மணி, திரு. டி .. விளவங்கோடு
178. மணி, திரு. ஜி.கே. .. பெண்ணாகரம்
179. மணிக்கண்ணன், திரு. ஆ. ஜெ. .. திருநாவலூர்
180. மணிநாடார், திரு. எஸ். எஸ். .. சாத்தான்குளம்
181. மணிமாறன், திரு. ஆர். .. திண்டுக்கல்
182. மணிவர்மா, திரு. கே. .. தண்டராம்பட்டு
183. மதிவாணன், திரு. இரா. .. இராயபுரம்
184. மதிவாணன், திரு. செ. .. அச்சரப்பாக்கம் (செ.வ.)
185. மனோகரன், திரு. கு. .. தர்மபுரி
186 மாயவன், திரு. தி.ப. .. ஸ்ரீரங்கம்
187. மாரிமுத்து, திரு. அ. .. வானூர் (செ.வ.)
188. முகம்மது இஸ்மாயில், திரு. எஸ். எஸ். .. அரவக்குறிச்சி
189. முகம்மது கோதர் மைதீன், திரு. .. பாளையங்கோட்டை
190. முத்து, திரு. வி. .. சங்கரி (செ.வ.)
191. முத்துராமலிங்கம், திரு. எம். .. திருமங்கலம்
192. முபாரக், திரு. பி.எம். .. கூடலூர்
193. முருகேசன், திரு. பொ. .. காஞ்சிபுரம்
194. முல்லைவேந்தன், திரு. வ. .. மொரப்பூர்
195. முனிரத்தினம், திரு. ஆ. மு. .. சோளிங்கர்

| | | |
|---|---|---|
| 196. மூக்கப்பன், திரு. இரா. | .. | சின்னசேலம் |
| 197. மூக்கையா, திரு. எல். | .. | பெரியகுளம் |
| 198. மோகனதாசன், திரு. கோ. | .. | பூம்புகார் |
| 199. மோகன் கந்தசாமி, திரு. ப. | .. | பொங்கலூர் |
| 200. மோசஸ், டாக்டர் எம். | .. | நாகர்கோவில் |
| 201. ரங்கநாதன், திரு. ப. | .. | புரசைவாக்கம் |
| 202. ரவி அருணன், திரு. கு. | .. | தென்காசி |
| 203. ரவிசங்கர், திரு. கு. | .. | விளாத்திகுளம் |
| 204. ராணி, செல்வி க. | .. | தலைவாசல் (செ.வ.) |
| 205. ராமசாமி, திரு. ஏ.எம். | .. | ஆத்தூர் |
| 206. ராமச்சந்திரன், திரு. செ. | .. | திருப்பரங்குன்றம் |
| 207. ராஜு, திரு. எஸ். | .. | பொள்ளாச்சி |
| 208. ராஜேந்திரன், திரு. எஸ். கே. | .. | சத்தியமங்கலம் |
| 209. ராஜேந்திரன், திரு. ஏ. | .. | போளூர் |
| 210. ராஜ்குமார் மன்றாடியார், திரு. என். எஸ். | .. | காங்கேயம் |
| 211. லட்சுமணன், திரு. வி. கே. | .. | கோயம்புத்தூர் (கிழக்கு) |
| 212 வல்லரசு, திரு. பி.என். | .. | உசிலம்பட்டி |
| 213. வாசுகி முருகேசன், திருமதி | .. | கரூர் |
| 214. விஜயகுமார், திரு. கே. எம். | .. | சாத்தூர் |
| 215. விஜயன், திரு. டி. சி. | .. | திருவொற்றியூர் |
| 216. வீரப்பன், திரு. கோ. க. | .. | கபிலர்மலை |
| 217. வெங்கடசாமி, திரு. பி. | .. | ஓசூர் |



| | | |
|---|---|---|
| 218. வெங்கடாசலம், திரு. அ. | .. | ஆலங்குடி |
| 219. வெங்கடாசலம், திரு. ஜி. எல். | .. | பாலக்கோடு |
| 220. வெங்கடேசன், திரு. ச. க | .. | மதுராந்தகம் |
| 221. வெங்கடேசன், திரு. பே. வே. ஸ்ரீ. | .. | காவேரிப்பட்டினம் |
| 222. வெங்கிடு, திரு. ஜி.பி. | .. | கோபிச்செட்டிப் பாளையம் |
| 223. வேடம்மாள், திருமதி ஏ. ஆர். | .. | அரூர் (செ.வ.) |
| 224. வேணு, திரு. கே. | .. | கும்மிடிப்பூண்டி |
| 225. வேதரத்தினம், திரு. எஸ். கே. | .. | வேதாரண்யம் |
| 226. வேலாயுதன், திரு. சி. | .. | பத்மநாபபுரம் |
| 227. வேலுசாமி, திரு. வ. | .. | மதுரை கிழக்கு |
| 228. வேல்சாமி, திரு. க. | .. | நாமக்கல் (செ.வ.) |
| 229. வேல்துரை, திரு. பா. | .. | சேரன்மகாதேவி |
| 230. வைத்தியலிங்கம், திரு. மீ. அ. | .. | தாம்பரம் |
| 231. ஜெனிபர் சந்திரன், திருமதி | .. | திருச்செந்தூர் |
| 232. ஜோதிகண்ணன், திரு. மு. ந. | .. | முசிறி |
| 233. ஸ்டாலின், திரு. மு. க. | .. | ஆயிரம் விளக்கு |
| 234. வெற்றிடம் | .. | மொடக்குறிச்சி |

# தமிழ்நாடு சட்டமன்றப் பேரவை

**வைகாசி 12, தாது, திருவள்ளுவர் ஆண்டு—2027**

**1996, மே 25, சனிக்கிழமை**

மாண்புமிகு பேரவைத் தலைவர் **திரு. பி.டி.ஆர். பழனிவேல் ராஜன்** அவர்கள் தலைமையில் காலை 9.30 மணியளவில் பேரவை கூடியது.

**மாண்புமிகு பேரவைத் தலைவர்:**

"அரும்பயன் ஆயும் அறிவினார் சொல்லார்

பெரும்பயன் இல்லாத சொல்."

அரும் பயன்களை ஆராய்ந்து அறியக்கூடிய ஆற்றல் படைத்தவர் பெரும் பயன் விளைவிக்காத எந்தச் சொல்லையும் பயன்படுத்தமாட்டார்.

[குறிப்பு:- ஓர் உரையின் தொடக்கத்தில் (*) உடுக்குறியிடப் பெற்றிருந்தால் அவ்வுரை உறுப்பினரால் சரிபார்க்கப் பெற்றது என்பதைக் குறிக்கும்.]

## 1. தகவல் கோரல்

**(அ) 24-5-1996 அன்று இரங்கல் தீர்மானம் எடுத்துக்கொள்ளப்பட்ட நடைமுறைபற்றி ஓர் உறுப்பினர் பத்திரிகைக்களித்த செய்தி குறித்து.**

**மாண்புமிகு பேரவைத் தலைவர்** : திரு. அப்துல் லத்தீப்.

**திரு. ம. அப்துல் லத்தீப்:** மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, ஒரு முக்கியமான பிரச்சினை குறித்து தங்கள் கவனத்தை ஈர்க்க விரும்புகிறேன். அனுமதி அளிக்க வேண்டுமென்று கேட்டுக் கொள்கிறேன்.

இன்று காலை இந்தியன் எக்ஸ்பிரஸ் நாளேட்டில் ஒரு செய்திக் குறிப்பு வெளியாகியிருக்கிறது. நேற்றையதினம், நாம் இந்த அவையில் இரண்டு இரங்கல் தீர்மானங்களை நிறைவேற்றினோம். அந்த இரங்கல் தீர்மானங்களில் உறுப்பினர்களுடைய கருத்துக்களைப் பதிவு செய்யாமல் வெறுமனே தீர்மானத்தை நிறைவேற்றிவிட்டது, தனக்கு ஏமாற்றத்தை

அளிப்பதாக நம்முடைய மாண்புமிகு அண்ணா திராவிட முன்னேற்றக் கழகத்தினுடைய தலைவர் திரு. திருநாவுக்கரசு அவர்கள் கூறியதாக செய்தி வெளியாகியிருக்கிறது. அலுவல் ஆய்வுக் குழுவில் பல்வேறு கருத்துக்கள் சொல்லப்பட்டன. அந்தக் கருத்துக்களின் அடிப்படையில்தான் நேற்றையதினம் நிறைவேறிய தீர்மானம், கருத்துக்கள் சொல்லப்படாமலேயே நம்முடைய உள்ளக் கருத்தைப் பதிவு செய்யும் வகையில், நம்முடைய உணர்வுகளைப் பதிவு செய்யும் வகையில் தீர்மானத்தை நிறைவேற்றிவிட்டு சபை அத்துடன் ஒத்திவைக்கப்படும் என்ற முடிவு எல்லோராலும் ஒப்புக்கொள்ளப்பட்டு, ஒருமித்தக் கருத்தாக உருவாக்கப்பெற்று நேற்றையதினம் அந்தத் தீர்மானம் நிறைவேற்றப்பட்டு, சபை அத்துடன் ஒத்திவைக்கப்பட்டது. எங்களைப் பொறுத்தவரையில் நாங்களும் அலுவல் ஆய்வுக் குழுவில் கலந்து கொண்டோம். அலுவல் ஆய்வுக் குழுவில் ஒவ்வொருவராக கூப்பிட்டு மாண்புமிகு முதலமைச்சர் அவர்களும் கேட்டார்கள். நீங்களும் அதற்கு ஒத்துழைப்புத் தந்தீர்கள். அதுகுறித்து உறுப்பினர்கள் தனித்தனியாக கருத்து சொல்லவேண்டிய அவசியம் இல்லை, இருக்கின்ற வெவ்வேறு சூழ்நிலையைக் கருத்தில் கொண்டு, தீர்மானத்தை கருத்துக்கள் கேட்காமலேயே உணர்வுபூர்வமாகப் பதிவு செய்து சபையை ஒத்திவைப்பது என்று முடிவு செய்தோம். ஆனால், நம்முடைய மரியாதைக்குரிய திருநாவுக்கரசு ஏமாற்றம் அடைந்திருப்பதாக செய்தி வெளியாகியிருக்கிறது. ஒருவேளை தாங்கள் அவருக்கு ஏதாவது, தன்னுடைய கருத்துக்களைக் கூறலாம் என்று தனிப்பட்ட முறையிலே கூறினீர்களா? அதனால் அவருக்கு, தாங்கள் கூறியதற்கு மாற்றமாக சபை ஒத்திவைக்கப்பட்டதை குறித்து ஏமாற்றம் ஏற்பட்டதா என்று எங்களுக்கு வியப்பாக இருந்தது. எனவேதான் அதற்கு தங்கள் மூலமாக விளக்கம் பெறவேண்டும் என்று இந்தப் பிரச்சினையை நான் எழுப்பியிருக்கிறேன். இது மிக முக்கியமான பிரச்சினை. இரண்டு பெருமாட்டிகள், தமிழ்நாட்டு மக்களால் பாராட்டப்பெறுகின்ற இந்தப் பெருமாட்டிகளுக்கு நாம் சரியான, உரிய மரியாதை அளிக்கவில்லையென்ற எண்ணம் நம்முடைய மக்களுக்கு ஏற்படக்கூடும். எனவே, அதுகுறித்து தாங்கள் விளக்கம் அளிக்க வேண்டுமென்று தங்களிடத்தில் நான் கேட்டுக்கொண்டு அமர்கிறேன்.

**திரு. இரா. தாமரைக்கனி:** மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, மாண்புமிகு இதயதெய்வம் புரட்சித் தலைவருடைய மனைவி ஜானகி அம்மையார் முன்னாள் முதலமைச்சர். அதேமாதிரி இராணி அண்ணாதுரை, அறிஞர் அண்ணாவினுடைய மனைவி. இரண்டு பேரும் தமிழ்நாட்டுக்கு முக்கியமானவர்கள். ஒரு முன்னாள் முதலமைச்சர் என்கிற முறையில் நீங்கள் சபையை ஒத்திவைத்தீர்கள்.





ஒத்திவைக்கின்ற அந்தத் தீர்மானத்தில் ஏன் பேசுவதற்கு நீங்கள் அனுமதிக்கக் கூடாது? தமிழ்நாட்டிலே மட்டுமல்ல, இந்திய மட்டத்திலே ஒரு முதலமைச்சர், முதன் முதலில் ஒரு பெண் முதலமைச்சரின் இரங்கல் தீர்மானம் என்று சபையை ஒத்தி வைத்தால் மட்டும் போதுமா? ஒத்திவைக்கிற மாதிரி ஒரு நாடகம் ஆடி, உண்மையிலேயே அறிஞர் அண்ணாவினுடைய மனைவி மீதும், அறிஞர் அண்ணா மீதும், புரட்சித் தலைவர் . . .

முற்பகல் 9-35

**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** நாடகம் ஆடுவது என்று சொல்வதை நான் ஏற்றுக்கொள்வதற்கில்லை.

**திரு. இரா. தாமரைக்கனி:** அப்படி என்றால் வெளிவேஷம் என்று வைத்துக்கொள்ளுங்கள்.

**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** அந்த வார்த்தையை நீங்கள் பயன்படுத்தினாலும் எல்லாம் ஒன்றுதான் (குறுக்கீடு) நீக்க வேண்டாம்.

**திரு. இரா. தாமரைக்கனி:** அப்படி என்றால் நீக்கிவிடுகிறீர்களா?

**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** அப்படியே இருப்பதும், இல்லாதிருப்பதும் என்னுடைய உரிமை. என்னுடைய உரிமையை மாண்புமிகு உறுப்பினர்கள் எடுத்துக்கொள்ளக்கூடாது என்று கண்டிப்பாக நான் சொல்லக் கடமைப்பட்டிருக்கிறேன்.

**திரு. இரா. தாமரைக்கனி:** ஆகவே அலுவல் ஆய்வுக் குழு என்பது, ஒரு சம்பிரதாய முறைப்படி சபாநாயகர் தலைமையிலே எதிர்க்கட்சித் தலைவர்கள் எல்லாம் உட்கார்ந்து பேசுகிறீர்கள். நாங்கள் எதிர்க்கட்சிகள். அதாவது அண்ணா திராவிட முன்னேற்றக் கழகத்தைச் சேர்ந்தவர் ஒரு உறுப்பினர் மட்டும்தான் அதிலே இருக்கிறார். மற்றவர்கள் எல்லாம் தோழமைக் கட்சிகள். நீங்களே நேற்று சட்டசபையிலே பேசும்போது, உங்களுக்குப் பாராட்டு தெரிவித்தபோது 11 எதிர்க்கட்சி உறுப்பினர்கள் தான் இருக்கிறார்கள், மீதி எல்லாம் ஆளும் கட்சி மற்றும் ஆளும் கட்சியின் தோழமைக் கட்சி என்று சொன்னீர்கள். உங்களுக்கு ஆமாம் சாமி போடுகிறவர்கள்தான் அலுவல் ஆய்வுக் குழுவிலே இருக்கிறார்கள்.

**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** மாண்புமிகு உறுப்பினர் திரு. தாமரைக்கனி அவர்கள் கண்ணியமாகப் பேச வேண்டுமென்று கடைசியாக, கண்டிப்பாக நான் சொல்கின்றேன். ஆளும் கட்சியிலே இருக்கிற உறுப்பினர்களை, அவையிலே இருக்கின்ற உறுப்பினர்களை, ஆமாம் சாமி, இல்லை சாமி என்று வருணிப்பது முறையற்றதாகும்.

**திரு. இரா. தாமரைக்கனி:** கண்ணியத்தோடுதான் பேசுகிறேன். கடமை, கண்ணியம், கட்டுப்பாடு என்ற அறிஞர் அண்ணா வழியில்தான் நாங்களும் வந்தோம்.

[1996 மே 25

**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** 'உங்களை ஆதரிப்பவர்கள்' என்று நீங்கள் சொல்லலாம். ஆமாம் சாமி என்று கட்டாயமாகச் சொல்லக்கூடாது.

**திரு. ஜி. பழனிசாமி:** மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, அதை அவைக்குறிப்பிலிருந்து நீக்க வேண்டும். இந்த மாதிரி பேசுவதை நீக்க வேண்டும்.

***திரு. எல். சந்தானம்:** மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, இந்த விவாதத்தைப் பொறுத்தவரையில் நான் வள்ளுவருடைய ஒரு குறளைச் சொல்லலாம் என்று கருதுகிறேன்.

"அன்பிற்கும் உண்டோ அடைக்குந்தாள் ஆர்வலர்

புன்கண்நீர் பூசல் தரும்."

என்று சொன்னார்கள். அதுபோல் இறந்தவர்கள் இருவரும் இந்தத் தமிழகத்துப் பெருமாட்டிகள் என்கிற முறையில் அவர்களுக்கு நாம் நம்முடைய பேச்சு விளக்கங்களைத் தருவதைக் காட்டிலும் அவர்கள் மீது அதிக பாசம் கொண்டதனால் நம்முடைய புன்கண்நீராலேயே அவர்களுக்கு அஞ்சலி செய்திருக்கிறோம் என்பதுதான் உண்மை. என்று நான் விளக்கம் சொல்லக் கடமைப்பட்டிருக்கிறேன். (மேசையைத் தட்டும் ஒலி).

**திரு. இரா. தாமரைக்கனி:** பேரவைத் தலைவர் அவர்களே....

**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** நீங்கள் உட்காருங்கள். மாண்புமிகு உறுப்பினர், இந்திய தேசிய முஸ்லீம் லீக் தலைவர் அவர்கள்.

**திரு. ம. அப்துல் லத்தீப்:** தேசிய முஸ்லீம் லீக் தலைவர் என்று சொன்னார்கள். எனவே இந்தப் பேரவையின் மூலமாக நான் சொல்லிக்கொள்கிறேன். இந்திய தேசிய லீக்தான் இந்திய தேசிய முஸ்லீம் லீக் என்ற பெயரே கிடையாது. ஆகவே மதச் சார்பற்ற கட்சி இந்திய தேசிய லீக்.

**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** திரு. லத்தீப் அவர்கள் ஒரு முக்கியமான பிரச்சினையை எழுப்பினார்கள். எழுப்பிய திரு. லத்தீப் அவர்கள் முழு விவரங்களையும் சொல்லவில்லை. மாண்புமிகு உறுப்பினர் திரு. திருநாவுக்கரசு அவர்கள் வருத்தப்பட்டார்கள், கவலைப்பட்டார்கள் என்று சொன்னார்கள். வருத்தப்படுவதற்கும், கவலைப்படுவதற்கும் மாண்புமிகு உறுப்பினர் திரு. திருநாவுக்கரசு அவர்களுக்கு முழு உரிமை உண்டு. அந்த அறிக்கையிலே ஆட்சேபணைக்குரியது, பேரவைத் தலைவர் மரபு மீறி நடந்துகொண்டார் என்ற வாக்கியம்தான். நான் ஏற்கெனவே உங்கள் வாழ்த்துரைக்கெல்லாம்



நன்றி சொல்கிற நேரத்தில் இந்த அவையின் ஊழியன், இந்த அவையின் காவலன், இந்த அவையின் முடிவுதான் என்னுடைய முடிவு என்று சொன்னேன். ஆகவே அலுவல் ஆய்வுக்குழுவில் விதி அமைப்புப்படி நான் தலைவர் என்றாலும் அந்தக் குழுவின் முடிவுதான் என்னுடைய முடிவு. அந்தக் குழுவிலே இடம் பெற்ற மாண்புமிகு முதலமைச்சர் உள்ளிட்ட 17 உறுப்பினர்கள் எல்லோருமே அவரவர்களுடைய கருத்துக்களைச் சொன்னார்கள். அந்தக் குழுவின் தலைவர் என்ற முறையில் நான் பேச வேண்டிய அவசியம் எனக்குக் கிடையாது. பேச உரிமையுண்டு, பேசாமலும் இருக்கலாம். நான் பேசாமல் இருந்ததால் அந்தக் குழுவிற்கு நான் தலைவர் இல்லையென்று பொருள் ஆகாது. ஆனால், இந்த மன்றத்திற்கு நான் சொன்னது எந்தவகையிலே பொருந்துமோ அதேதான் அலுவல் ஆய்வுக் குழுவிற்கும் பொருந்தும்.

*முற்பகல் 9-40*

மாண்புமிகு உறுப்பினர் தாமரைக்கனி அவர்கள் என்னிடம் அனுமதி வாங்காமல்கூட பேசினார்கள். நான் எதிர்க்கட்சிகளுக்குச் சில உரிமைகளை வழங்க வேண்டும் என்று சொன்ன காரணத்தினால் அவரைப்பேச அனுமதித்தேன். இதிலே ஒரு முக்கியமான கருத்தை நீங்கள் தெரிந்து கொள்ளவேண்டும். முன்னாள் பிரதமர்கள், முன்னாள் முதலமைச்சர்கள் ஆந்திரகேசரி திரு. பிரகாசம், திரு. குமாரசாமி ராஜா ஆகிய இவர்களெல்லாம் சென்னை மாநிலத்தின் முன்னாள் முதலமைச்சர்கள், திரு. ஓ.பி. ராமசாமி ரெட்டியார் போன்றவர்கள் எல்லாம் இறந்த நேரத்தில் பேரவை சிறிது நேரம் ஒத்திவைக்கப்பட்டது. பிறகு பேரவை கூடியது என்பதை குறிப்புகளிலேயிருந்து நீங்கள் பார்க்கலாம். உறுப்பினர் திரு. திருநாவுக்கரசு அவர்கள் தீர்மானம் பேரவைத் தலைவரால் வைக்கப்பட்டாலும் அவையை அன்றையதினம் ஒத்திவைக்கலாம் என்று கூறிய கருத்தினை ஏற்றுக்கொண்டு, அலுவல் ஆய்வுக் குழு கூட்டத்தில் நேற்றையதினம் பேரவையை ஒத்திவைக்கலாம் என்பதை மாண்புமிகு முதலமைச்சர் அவர்கள் ஏற்றுக்கொண்டு, எல்லா உறுப்பினர்களும் இதற்கு இசைவு தந்து, அந்த முடிவு எடுக்கப்பட்டது. மேலும், திரு. திருநாவுக்கரசு அவர்கள் ஏற்கெனவே பேரவைத் துணைத் தலைவராகப் பணியாற்றியவர் என்ற காரணத்தினால் எந்தவொரு இரங்கல் தீர்மானம் பேரவைத் தலைவரால் அவைக்கு வைக்கப்பட்டாலும், அந்தத் தீர்மானத்தின் மீது எந்த உறுப்பினருக்கும் இதுவரை பேச வாய்ப்பளித்ததில்லை என்பது அவருக்குத் தெரிந்திருக்கும். அப்படியிருக்கையில், நான், பேரவைத் தலைவர் மரபுகளை மீறினேன் என்று இந்தியன் எக்ஸ்பிரஸ் பத்திரிகைக்கு அவர் சொன்னது எனக்கு மிகவும் வருத்தத்தை அளிக்கின்றது. இது பேரவைத் தலைவருக்குக்

களங்கம் கற்பிக்கும் வகையில் அமைந்துள்ளது என்பதையும் தெரிவித்துக் கொள்கிறேன். இருந்தாலும், இனிமேல் இப்படிப்பட்ட சம்பவங்கள் நடக்காது என்று நம்பி, இந்த அளவோடு விட்டுவிடுகிறேன். மாண்புமிகு முதலமைச்சர் அவர்கள்

**மாண்புமிகு டாக்டர் மு. கருணாநிதி:** மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, தங்களுடைய இந்தத் தீர்ப்பிற்குப் பிறகு, அல்லது இந்தக் குறிப்புரைக்குப் பிறகு நான் பேசுவதற்கு தங்களுடைய அனுமதியை கோருகின்றேன். அனுமதி அளிப்பீர்கள் என்ற நம்பிக்கையோடு, எனக்காக மாத்திரமல்ல, அலுவல் ஆய்வுக் குழுவிலே கலந்துக்கொண்ட எல்லா கட்சிகளுடைய உறுப்பினர்கள் சார்பாக நான் சிலவற்றை இங்கே சொல்ல வேண்டியிருக்கிறது.

இப்பொழுது இந்திய தேசீய லீக்கினுடைய தலைவர் திரு. அப்துல் லத்தீப் அவர்கள் எழுப்பிய பிரச்சினையின் காரணமாகவும், அதைத் தொடர்ந்து மாண்புமிகு உறுப்பினர் தாமரைக்கனி அவர்கள் பேசியதன் காரணமாகவும், இந்த அவையில் திருமதி ஜானகி அம்மையார் அவர்களுடைய அனுதாபத் தீர்மானம், அண்ணியார் திருமதி ராணி அண்ணாதுரை அவர்களைப் பற்றிய அனுதாபத் தீர்மானம் இவைகளை எல்லாம் ஏதோ ஒரு கேலிக்குரியதாக ஆகிவிட்டதோ, அதற்கு எல்லா கட்சி அலுவல் ஆய்வுக் குழு உறுப்பினர்களும் காரண கர்த்தாக்களாக ஆகிவிட்டார்களோ என்ற கலக்கம் எனக்கு ஏற்பட்டுள்ளது. அலுவல் ஆய்வுக் குழுவில் நடைபெறுகின்ற எந்த நிகழ்ச்சிகளையும் அந்தக் குழுவில் கலந்துக் கொண்டவர்களால் வெளியிடப்படக்கூடாது என்ற விதிமுறை இருக்கிறதோ, இல்லையோ எனக்குத் தெரியாது, அப்படி ஒரு சம்பிரதாயம், அதாவது மரபு கடைபிடிக்கப்பட்டு இதுவரையில் வந்திருக்கின்றது. அதற்கு மாறாக, இன்று இந்த அவையில் இந்த விவாதம் எழுந்திருக்கின்றது. அன்றைக்குச் சட்டப் பேரவையினுடைய செயலாளர் அவர்கள் தங்களுடைய அறையில் அலுவல் ஆய்வுக் குழு உறுப்பினர்களுக்கு, ஏற்கெனவே மறைந்த முன்னாள் முதல்வர்களுக்காக எவ்வளவு நேரம், அதாவது எத்தனை நாள் என்ற அளவிற்கு அவை ஒத்திவைக்கப்பட்டது என்ற விவரங்களை எடுத்துச் சொன்னார்கள்.

முற்பகல் 9-45

தாங்களே இங்கு படித்துக் காட்டியதைப் போல மறைந்த குமாரசாமி இராஜா அவர்கள் முன்னாள் முதல்வர் என்ற முறையிலே மறைந்தபோதும், ஓமந்தூரார் அவர்கள் முன்னாள் முதல்வர் என்ற முறையிலே மறைந்தபோதும் 1/2 மணி நேரம் என்றும் 15 நிமிடங்கள் என்றும்தான் அவை ஒத்திவைக்கப்பட்டிருக்கின்ற நிகழ்ச்சிகளையெல்லாம், அன்றைக்கு செயலாளர் அவர்கள் தங்களுடைய



அறையிலே எடுத்துக் காட்டினார்கள். இருந்தாலும் மாண்புமிகு உறுப்பினர் திருநாவுக்கரசு அவர்கள் ஒருநாள் ஒத்திவைத்தால் என்ன என்ற கருத்தைச் சொன்னபோது நானும் ஏற்றுக்கொண்டேன். அலுவல் ஆய்வுக்குழுவின் எல்லா உறுப்பினர்களும், எல்லாக்கட்சி உறுப்பினர்களும் ஏற்றுக்கொண்டார்கள். எல்லாக் கட்சி உறுப்பினர்களும் இந்த அலுவல் ஆய்வுக்குழுவில் அங்கம் வகிக்கின்ற அளவுக்கு இடம் அளிக்கப்பட்டிருக்கிறது. முதலில், சட்டப்படி இவ்வளவு பேருக்குத்தான் இடம் அளிக்க வகையுண்டு என்று சொல்லப்பட்டபோதும்கூட, தங்களிடத்திலும், சட்டமன்றத் துறை செயலாளரிடத்திலும் நானும் அவை முன்னவர் பேராசிரியர் அவர்களும்தான் வாதாடி, இங்கேயுள்ள சில கட்சிகள் ஒரு உறுப்பினர், இரு உறுப்பினர்களைக் கொண்டதாக இருந்தாலும்கூட, மார்க்சிஸ்ட் கமயூனிஸ்ட் கட்சி அகில இந்திய கட்சிகளிலே ஒன்று, இரண்டு மாநிலங்களிலே இன்றைக்கு ஆட்சி நடத்திக் கொண்டிருக்கின்ற கட்சி, ஜனதாதள கட்சி இன்றைக்கு டெல்லியிலே ஆட்சி நடத்துகின்ற அளவிற்கு நிலையை உருவாக்கி இருக்கின்ற கட்சி, பாரதீய ஜனதா கட்சி இன்றைக்கு டெல்லியிலே ஆட்சிப் பொறுப்பிலே இருக்கின்ற கட்சி என்று இவைகளையெல்லாம் எடுத்துச் சொல்லி, நம்முடைய கிருஷ்ணசாமி அவர்களுடைய கட்சியையும் அலட்சியப்படுத்திவிடக்கூடாது, எனவே, எல்லாக் கட்சிகளும் அலுவல் ஆய்வுக் குழுவிலே இடம்பெறவேண்டும் என்று நாங்கள் வைத்த கோரிக்கையை பெருமனதோடு அன்றைக்கு ஏற்றுக் கொண்டீர்கள். எல்லோரும் கலந்து எடுத்த முடிவைத்தான் இந்த அவையில் நாம் நிறைவேற்றி இருக்கின்றோம். தங்களை அன்று பாராட்டிப் பேசுகின்ற நேரத்திலேயே, ஒரு பாராட்டு நிகழ்ச்சியிலேகூட சில விரும்பத்தகாத வார்த்தைகள், குறுக்கீடு இவைகளெல்லாம் ஏற்பட்டது உள்ளபடியே மனச்சங்கடத்தை உருவாக்ககூடியதாகும். அதைப்போல திருமதி ஜானகி அம்மையார் அவர்களுடைய இரங்கல் தீர்மானத்தில் பேசும்போது, கடந்த கால நிகழ்ச்சிகள், இந்த அவையில் நடைபெற்ற நிகழ்ச்சிகள் இவைகளைப் பற்றியெல்லாம் யாராவது எடுத்துச் சொல்லி ஒரு விரும்பத்தகாத நிலை ஏற்படக்கூடாது என்பதற்காகத்தான் அதை வெளிப்படையாகக்கூட அலுவல் ஆய்வுக் குழுவிலே எடுத்துச் சொல்லி எல்லோரும் ஒருமனதாக ஒத்துக்கொண்ட பிறகுதான் தாங்களே அந்தத் தீர்மானத்தைப் படிப்பது என்ற ஒரு முடிவு ஏற்பட்டது. மறைந்தவர்கள் இருவரும், என்னைப் பொறுத்தவரையில், ஜானகி அம்மையார் சகோதரி போன்றவர், அண்ணியார் இராணி அவர்கள் எனக்கு அன்னையைப் போன்றவர்கள். நேற்றைக்குக்கூட நான் கேபினெட் அறைக்குச் சென்றபோது, அலுவலர்களை அழைத்து உத்திரவிட்டிருக்கிறேன். கேபினெட் அறையிலே எல்லா முதலமைச்சர்களுடைய படமும்

இருக்கிறது. ஜானகி அம்மையாருடைய படம் இல்லை. முதல் பெண் அமைச்சர் என்ற முறையில் அவர்களுடைய படத்தையும் உடனடியாக மாட்டுங்கள் என்று நான் உத்திரவிட்டிருக்கிறேன். (மேசையைத் தட்டும் ஒலி) எனவே, எல்லோரிடத்திலும், மறைந்தவர்களிடத்திலே மரியாதை செலுத்துகின்ற, மாற்றாராக இருந்தாலும் மரியாதை செலுத்துகின்ற ஒரு மரபை இந்த அவையில் நாம் வளர்த்துக் கொண்டிருக்கிறோம். அந்த மரபுக்கு ஊனம் வராமல் இனிமேல் நாம் நடந்துகொள்ள வேண்டும் என்று தாங்கள் எடுத்துச் சொன்ன அந்தக் கருத்தை நானும் ஏற்றுக் கொண்டு இந்த விளக்கத்தை இந்த அவையின் முன் வைத்து அமர்கின்றேன்.

## 2. சிறப்புக் கவன ஈர்ப்பு

### வேலூர் அருகே நடந்த பேருந்து விபத்து குறித்து

**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** அடுத்து சிறப்புக் கவன ஈர்ப்பு. பேரவை விதி 56-இன் கீழ் மாண்புமிகு உறுப்பினர்கள் திரு. சி. ஞானசேகரன், திரு. இரா. தாமரைக்கனி, திரு. ஜி. பழனிசாமி ஆகியோர் வேலூரில் நடைபெற்ற பேருந்து விபத்து குறித்து அறிவிப்புக் கொடுத்திருக்கிறார்கள். 56-வது விதியின் கீழ் அனுமதி மறுக்கப்பட்டாலும், 55-வது விதியின் கீழ் அவர்கள் மூன்று பேருக்கும் கருத்தை மிகச் சுருக்கமாகச் சொல்வதற்கு நான் அனுமதி அளிக்கின்றேன். (குறுக்கீடு) முதலில் திரு. ஞானசேகரன்.

## 1. தகவல் கோரல்-தொடர்ச்சி

### (ஆ) உறுப்பினர் கொடுத்துள்ள அறிவிப்பு குறித்து

**திரு. இரா. தாமரைக்கனி:** மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, மதுரை மீனாட்சி அம்மன் கோவிலில் குண்டு வெடித்த சம்பவம் தொடர்பாக ஒரு ஒத்திவைப்புத் தீர்மானம் கொடுத்திருந்தேன். அது ஒரு முக்கியமான பிரச்சினை, பொதுமக்கள் பிரச்சினை. பக்தர்களுடைய பிரச்சினை. சட்டம் ஒழுங்குப் பிரச்சினை. பாகிஸ்தான் உளவாளிகள் நாட்டில் புகுந்துவிட்டார்கள், அந்தப் பிரச்சினையை...

**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** முதல் பிரச்சினை, பேரவைத் தலைவர் நிற்கும்போது எந்த உறுப்பினரும் எழுந்திருக்கக்கூடாது. நான் உட்கார்ந்த பிறகுதான், நீங்கள் பாயின்ட் ஆஃப் ஆர்டர் அல்லது ஒழுங்குப் பிரச்சினை என்று கேட்டுத்தான் பேச வேண்டும். அந்த மரபை எக்காரணத்தைக் கொண்டும் மீறக்கூடாது.



## 2. சிறப்புக் கவன ஈர்ப்பு-தொடர்ச்சி

### வேலூர் அருகே நடந்த பேருந்து விபத்து குறித்து-தொடர்ச்சி

**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** அ. வேலூர் விபத்து குறித்து திரு. சி. ஞானசேகரன்.

*முற்பகல் 9-50*

**திரு. சி. ஞானசேகரன்:** மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே,

*"யாமறிந்த மொழிகளிலே தமிழ்மொழிபோல்*
*இனிதாவது எங்கும் காணோம்*
*பாமரராய், விலங்குகளாய், உலகனைத்தும்*
*இகழ்ச்சிசொலப் பான்மை கெட்டு*
*நாமமது தமிழரெனக் கொண்டிங்கு*
*வாழ்ந்திடுதல் நன்றோ? சொல்லீர்!*
*தேமதுரத் தமிழோசை உலகமெலாம்*
*பரவும் வகை செய்தல் வேண்டும்*

என்று அன்னைத் தமிழை வணங்கி என்னுடைய சிறப்புக் கவன ஈர்ப்பினை இன்றைதினம் மாண்புமிகு போக்குவரத்துத் துறை அமைச்சர் அவர்களுடைய கவனத்திற்கு கொண்டு வருகிறேன்.

23.5.96 ஆம் தேதி அதிகாலை வேலூர் தொகுதியில் இருக்கக்கூடிய பெருமுகை என்ற கிராமத்திற்கு அருகே ஒரு தனியார் பேருந்தும், பட்டுக்கோட்டை அழகிரி போக்குவரத்துக் கழகப் பேருந்தும், நள்ளிரவு 1-00 மணிக்கு ஒன்றோடு ஒன்று நேருக்கு நேர் மோதிக்கொண்டது. அதில் 15 பேர் இறந்திருக்கிறார்கள். 40 பேர் மாண்டிருக்கிறார்கள். நான் அந்தச் செய்தி கேட்டவுடன் மறுநாள் காலை அந்த இடத்திற்குச் சென்று வந்த பிறகு, மாண்புமிகு முதலமைச்சர் அவர்களுடைய உத்திரவின்படி என்னுடைய மாவட்டத்தினுடைய அமைச்சர், மாண்புமிகு பொதுப்பணித் துறை அமைச்சர் அவர்கள் சம்பவ இடத்திற்குச் சென்றிருக்கிறார்கள். அதேபோல மாவட்ட ஆட்சித் தலைவர் அவர்களும் சென்று இறந்தவர்களின் குடும்பத்திற்கு 3000 ரூபாய் ஆர்.டி.ஓ. மூலமாக வழங்கவும், அதேபோல, மாவட்ட ஆட்சித் தலைவரும், மாண்புமிகு பொதுப்பணித் துறை அமைச்சர் அவர்களும் இன்சூரன்ஸ் கம்பெனியை அழைத்துப் பேசி இறந்தவர்கள் குடும்பத்திற்கு 10000 ரூபாய் உடனடியாக வழங்கவும், பெரிய காயம் அடைந்தவர்களுக்கு 5000 ரூபாய் இன்சூரன்ஸ் கம்பெனி வழங்க வேண்டும் என்றும்,

சிறுகாயம் அடைந்தவர்களுக்கு 3000 ரூபாய் இன்சூரன்ஸ் கம்பெனி உடனடியாக வழங்க வேண்டும் என்றும் உத்திரவிட்டு அதற்கு ஏற்பாடு செய்திருக்கிறார்கள். இந்த மாதிரி விபத்துகள் என்பது அதிகமாகிக் கொண்டேயிருக்கின்றன. உலக நாடுகளிலே விபத்துகள் அதிகமாக நடக்கின்ற நாடு என்ற வரிசையில் இந்தியா மூன்றாவது இடத்தை வகித்துக் கொண்டிருக்கிறது. சூரத் என்ற நகரத்தில்தான் விபத்துகளே இல்லாத நிலை இருக்கிறது. அருணாசலப் பிரதேசம் என்ற மாநிலம்தான் விபத்துகளே இல்லாத ஒரு மாநிலமாக இருந்து கொண்டிருக்கிறது. 2.75 நிமிடத்திற்கு ஒருவர் இந்தியாவிலே இப்போது இறந்து கொண்டிருக்கிறார்கள். நம்முடைய தமிழகத்தில் இறப்பு என்பது 'மாஸ் டெத்' போல 13 பேர், 15 பேர் என்று அடிக்கடி விபத்தில் இறக்கிறார்கள் என்பது மன வருத்தத்தை அளிக்கக்கூடிய ஒன்றாக இருக்கிறது. இதற்குக் காரணம் என்ன என்பதை முதலிலே இந்த அரசு ஆராயவேண்டும் என்று நான் கேட்டுக் கொள்ளக் கடமைப்பட்டிருக்கிறேன்.

"நோய்நாடி நோய்முதல் நாடி அதுதணிக்கும்
வாய்நாடி வாய்ப்பச் செயல்"

என்று சொல்லுவார்கள். இந்த விபத்துகளுக்கு காரணம் என்ன என்பதை இந்த அரசு ஒரு கணம் தீர ஆராய வேண்டும். தூங்காமல் ஓட்டுநர்கள் 24 மணி நேரமும் தொடர்ந்து வேலை செய்கிற காரணத்தினால்தான் தூக்கம் வருகிறது என்று ஒரு நிமிடம் அவர்கள் கண் அசந்தால்கூட விபத்துகள் உடனடியாக நடந்துவிடுகின்றன. தமிழகத்திலே இப்படித்தான் விபத்துகள் ஏற்பட்டுக் கொண்டிருக்கின்றன. குறிப்பாக தனியார் பஸ்கள், ஆம்னி பஸ்கள் எங்கு பார்த்தாலும் புற்றீசலைப் போல நிறைய விடப்பட்டிருக்கின்றன. அவை எப்போதும் 24 மணி நேரமும் ஓடிக் கொண்டிருக்கின்றன. ஆம்னி பஸ்களில் சைலன்சரை கழட்டிவிட்டு அவர்கள் ஹெலிகாப்டரைப் போல சத்தத்துடன் இரவு முழுவதும் ஓட்டுகிறாரகள். பட்டுக்கோட்டை அழகிரி போக்குவரத்துக் கழகம் என்பது அரசு நடத்துகின்ற ஒரு போக்குவரத்துக் கழகம். இந்தப் போக்குவரத்துக் கழகத்தில் எல்லாம்கூட ஓட்டுநர்கள் ஓய்வின்றி, நாம் பணியை கொடுக்கின்ற காரணத்தினாலோ என்னவோ தெரியவில்லை, இரவு நேரத்தில் 1.10 நிமிடத்திற்கு இந்தச் சம்பவம் நடந்து, இப்படி பலபேர் இறக்கக்கூடிய நிகழ்ச்சிகள் நடந்து இருக்கின்றன. பொதுவாக டிரான்ஸ்ப்போர்ட்டை எடுத்துக் கொண்டால் தமிழகத்தில் இருக்கக்கூடிய டிரான்ஸ்போர்ட்தான் மிகச் சிறந்த டிரான்ஸ்போர்ட் என்பதை நான் மறுக்கவில்லை. ஓட்டுநர்களுக்கு ஒரு மாநிலத்தில் இரவு 1-00 மணியிலிருந்து விடியற்காலை 4-00 மணி வரை பேருந்துகளையோ, அல்லது லாரிகளையோ இயக்கக்கூடாது என்று



கட்டளையிட்டு அதை முறைப்படுத்திப் பார்த்ததில் விபத்துகளின் விகிதம் குறைந்திருப்பதாக அறிக்கை இருக்கின்றது. அது எந்த மாநிலம் என்று சரியாகத் தெரியவில்லை. ஆகவே நான் நம்முடைய மாண்புமிகு முதலமைச்சர் அவர்களையும், போக்குவரத்துத் துறை அமைச்சர் அவர்களையும் கேட்டுக்கொள்வதெல்லாம் அப்படி ஏதாவது ஒரு விதியை நம்முடைய தமிழகத்திலே நீங்கள் உருவாக்கி இரவு 1 மணி முதல் விடியற்காலை 4-00 மணி வரையிலும் இதுபோன்று வாகனங்களை இயக்கக்கூடாது என்ற ஒரு நிலையை உருவாக்கி ஓட்டுநர்களுக்கு கொஞ்சம் ஓய்வு அளித்தால் விபத்தைத் தடுக்க முடியுமா அல்லது பட்டுக்கோட்டை அழகிரி போக்குவரத்துக் கழக வாகனங்களில் ஏதாவது பிரேக் ஃபெயில்யூரா? அல்லது அந்த வாகனங்கள் சரியாக பராமரிக்கப்படவில்லையா? என்று சற்று ஆராய்ந்து பார்த்து உடனடியாக விபத்துகளைத் தடுப்பதற்கு அரசு முறையாக நடவடிக்கை எடுக்க வேண்டும் என்று கேட்டுக்கொள்கிறேன். என்னுடையத் தொகுதியில் நடந்திருக்கின்ற இந்தச் சம்பவம் வருத்தத்தை அளிக்கக்கூடிய ஒரு சம்பவமாக, அதிர்ச்சியை அளிக்கக்கூடிய ஒரு சம்பவமாக இருக்கிறது. இந்த விபத்தில் இறந்தவர்களுக்கு நம்முடைய மாண்புமிகு அமைச்சர் அவர்கள் 3000 ரூபாய் அறிவித்திருக்கிறார்கள். மாண்புமிகு முதலமைச்சர் அவர்களுக்கு மாவட்ட ஆட்சித் தலைவர் அவர்கள் அறிக்கை அனுப்பிய பிறகு அந்தத் தொகையை அதிகரிக்க முடியுமா என்று பார்க்கிறேன் என்று அவர்கள் ஒரு பேட்டி அளித்திருக்கிறார்கள். நான் மாண்புமிகு முதலமைச்சர் அவர்களைக் கேட்டுக் கொள்வதெல்லாம் நீங்கள் ஏற்கெனவே இன்சூரன்ஸ் கம்பெனி மூலமாக 10,000 ரூபாய் கொடுப்பதும், 3,000 ரூபாய் ஆர்.டி.ஓ. மூலமாக இந்த இறந்தவர்களின் குடும்பங்களுக்குக் கொடுப்பதும் போதாது. மீண்டும் இன்னொரு 10,000 ரூபாய் நீங்கள் அரசு நிதியிலிருந்து இறந்தவர்களின் குடுபத்திற்கு வழங்க வேண்டும் என்று கேட்டுக் கொள்கிறேன். நம்முடைய முதல்வர் அவர்கள் தாராள மனம் படைத்தவர்கள். இப்படி எதிர்பாராத விதமாக குடும்பத் தலைவரை இழந்து தவிக்கின்ற அந்தக் குடும்பங்களுக்கு 10,000 ரூபாய் கொடுத்து அவர்களுடைய குடும்பங்களுக்கு நல்வாழ்வு அளிக்கவேண்டும் என்று நான் கேட்டுக் கொள்கிறேன்.

*முற்பகல் 9-55*

இன்னொரு நிகழ்ச்சி குறித்து நான் பேரவைத் தலைவரிடம் ஏற்கெனவே அனுமதி கேட்டிருக்கிறேன். திரு. ராஜிவ்காந்தி அவர்களுடைய நினைவை குறிக்கும் வண்ணம்--நம்முடைய மாண்புமிகு முதலமைச்சர் அவர்களிடம் நான் முதல் முதலில் கோரிக்கை வைத்தேன். ராஜிவ்காந்தி போக்குவரத்துக் கழகம் என்று பெயரிட்டமைக்காக

எங்களுடைய நெஞ்சார்ந்த நன்றியைத் தமிழ் மாநில காங்கிரஸ் சார்பாக, முதலமைச்சர் அவர்களுக்கு நன்றி என்னும் மலர்களை அவர்கள் இதயத்தின் முன்னாலே படைக்க கடமைப்பட்டிருக்கிறேன். நான் இதே அவையிலே 5-2-1992 அன்று பேசியபோது, இதற்கான வாக்குறுதியை அன்றைய முதலமைச்சர் அவர்களிடம் பெற்றிருந்தும் கூட--ராஜிவ்காந்தி அவர்களுடைய பெயரை போக்குவரத்துக் கழகத்திற்குச் சூட்டுவதாகச் சொன்னார்கள். பிறகு விட்டுவிட்டாலும், தன்னுடைய பெயரை அந்தப் போக்குவரத்துக் கழகத்திற்கு வைத்துக்கொள்ளாமல் எங்களுடைய இணையிலா தலைவர் ராஜிவ்காந்தி அவர்களுடைய பெயரைச் சூட்டியதற்காக எங்களுடைய நன்றியை நான் மீண்டும் மீண்டும் காணிக்கையாக்கிக் கொள்கிறேன். நான் ஏற்கெனவே தெரிவித்த விபத்து குறித்து அரசின் கவனத்திற்கு கொண்டுவந்து இன்னும் 10 ஆயிரம் ரூபாய் இறந்தவர்களுக்கு அதிகப்படுத்திக் கொடுப்பதற்கு மாண்புமிகு போக்குவரத்துத் துறை அமைச்சர் அவர்கள் ஆவன செய்வார்களா என்று அறிய விரும்புகிறேன்.

**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** மாண்புமிகு உறுப்பினர் திரு. தாமரைக்கனி.

**திரு இரா. தாமரைக்கனி:** மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, வேலூர் அருகே பெருமுகை என்னும் இடத்தில் 22-5-1996 அன்று அழகிரி போக்குவரத்துக் கழக பேருந்தும் தனியார் போக்குவரத்து வண்டியும் மோதிக் கொண்டதில் 13 பேர் உயிரிழந்தார்கள். 30 பேர் அரசு மருத்துவமனையில் அனுமதிக்கப்பட்டார்கள். இப்படிப்பட்ட விபத்துகள் அடிக்கடி நடைபெறுகின்றன. ஏற்கெனவே எனக்கு முன்னால் பேசிய மாண்புமிகு உறுப்பினர் திரு. சி. ஞானசேகரன் அவர்கள் அரசுப் போக்குவரத்துக் கழகங்களின் பேருந்துகள் அடிக்கடி விபத்துக்குள்ளாகின்றன என்றும் அதற்குக் காரணம் சரியான பராமரிப்பு இல்லை என்றும் சொன்னார்கள். எனவே நல்ல பராமரிப்புக்கு அரசு முயற்சி செய்ய வேண்டும். அதுமட்டுமல்லாமல் இப்படிபட்ட விபத்துகள் நடக்கின்றபோது--அரசு பேருந்துகள் விபத்துக்குள்ளாகிறபோது இறந்தவர்களுக்கு நஷ்ட ஈடு கொடுப்பது குறித்தும், காயம் அடைந்தவர்களுக்கு நஷ்ட ஈடு கொடுப்பது குறித்தும் அரசாங்கத்தையே முழுவதுமாக நம்ப வேண்டியிருக்கிறது. நான் ஏற்கெனவே, சென்ற சட்டமன்ற கூட்டத் தொடரில் இதுகுறித்து பேசியிருக்கிறேன். அரசுப் பேருந்துகள் ஆனாலும் சரி, தனியார் பேருந்துகள் ஆனாலும் சரி, இதுபோன்ற விபத்து நடக்கும்போது, அந்த பேருந்துகளில் பயணம் செய்பவர்களின் டிக்கெட்டுடன் சேர்த்து இன்சூரன்ஸ் கட்டணம் வசூல் செய்தால் இறந்தவர்களின் குடும்பத்திற்கும், காயம்



அடைந்தவர்களுக்கும் கொடுப்பதற்கு உதவியாக இருக்கும். இதற்கு அரசு ஆவன செய்யவேண்டும் என்று கேட்டுக் கொள்கிறேன். எதற்கெடுத்தாலும் அரசாங்கத்தை எதிர்பார்க்கின்ற ஒரு சூழ்நிலை இருக்கக்கூடாது என்று நான் நினைக்கிறேன். அதற்கு அரசு ஆவன செய்ய வேண்டுமென்று கேட்டுக் கொள்கிறேன். அரசுப் போக்குவரத்துக் கழகங்களில் பயணம் செய்து இறந்தவர்களின் குடும்பத்திற்கும், காயப்பட்டவர்களுக்கும் முந்தைய முதலமைச்சர் புரட்சித் தலைவி ஜெயலலிதா அவர்கள் 50 ஆயிரம் 25 ஆயிரம் என்று கொடுத்தார்கள். ஆனால் தற்போது இறந்தவர்களுக்கு 3 ஆயிரம்தான் கொடுக்கிறீர்கள், பெருங் காயம் அடைந்தவர்களுக்கு 5 ஆயிரம் என்றும் சிறிய காயம் அடைந்தவர்களுக்கு 3 ஆயிரம், அப்படி இல்லையென்றால் 2 ஆயிரம் என்றுதான் கொடுக்கிறீர்கள். அதுவும் மாவட்ட ஆட்சித் தலைவரிடமிருந்து ரிப்போர்ட் வந்தபின் கொடுப்பதாக சொல்லியிருக்கிறீர்கள். மாண்புமிகு பொதுப்பணித் துறை அமைச்சர் அவர்கள, விபத்து நடந்த இடத்தில் ஆறுதல் சொல்லும் போது அங்கே பத்திரிக்கைகளுக்கு இதுபோல் பேட்டி கொடுத்திருக்கிறார்கள். ஆகவே, இதுபோன்ற நிகழ்ச்சிகளுக்கு நீங்கள் உடனுக்குடன் தாராள மனப்பான்மையுடன் அந்தக் குடும்பங்களுக்கு உதவித் தொகை கொடுக்க வேண்டும். மக்களின் வரிப்பணம் மக்களுக்குத்தான் போய்ச் சேரும். ஆகவே, தாராளமாக 50 ஆயிரம் ரூபாய் என்ற அளவில் இறந்தவர்களுக்குக் கொடுங்கள். பெருங் காயம் அடைந்தவர்களுக்கு 25 ஆயிரம் ரூபாய் என்ற அளவில் கொடுங்கள். சிறு காயம் அடைந்தவர்களுக்கு 15 ஆயிரம், 20 ஆயிரம் என்ற அளவில் உங்கள் மனதில் எப்படி தோன்றுகிறதோ அப்படிக் கொடுங்கள். எனவே, இவற்றை எல்லாம் கருத்தில்கொண்டு அதிக அளவில் அவர்களுக்கு நிதி, நஷ்டஈடு கொடுக்க வேண்டுமென்று கேட்டுக் கொள்கிறேன். இது குறித்து தகுந்த பதிலை மாண்புமிகு போக்குவரத்துத் துறை அமைச்சர் அவர்கள் தெரிவிப்பார்களா என்று அறிய விரும்புகிறேன்.

**மாண்மிகு பேரவைத் தலைவர்:** மாண்புமிகு உறுப்பினர் திரு ஜி. பழனிசாமி.

**திரு. ஜி. பழனிசாமி:** மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, வடாற்காடு அம்பேத்கார் மாவட்டம் வேலூர் அருகே பெருமுகை என்னும் இடத்தில் நடந்திருக்கின்ற பேருந்து விபத்தில் 15 பேர் இறந்து இருக்கிறார்கள். இறந்தவர்களின் குடும்பத்தவர்களுக்கு மாண்புமிகு அமைச்சர் அவர்கள் நேரில் பார்த்து ஆறுதல் தெரிவித்து இருக்கிறார்கள். மாண்புமிகு முதலமைச்சர் அவர்கள்கூட நிவாரணம் வழங்குவதற்கான ஆணையை இட்டிருக்கிறார்கள். குறிப்பாக தமிழகத்தில் இதுபோன்ற

[திரு. ஜி. பழனிசாமி] [1996 மே 25

பஸ் விபத்துகள் தொடர்ச்சியாக நடைபெற்றுக் கொண்டிருக்கின்றன. நிவாரணம் கொடுப்பது என்பது இறந்துபோனவர்களின் உறவினர்களை முழுமையாக திருப்திபடுத்திவிடாது என்றாலும்கூட இதுபோன்ற பேருந்து விபத்துகளை தடுப்பது தொடர்பாக, அதிக வேகம் போகின்ற பேருந்துகளின் வேகத்தை குறைப்பதற்கு அரசாங்கம் ஏதாவது முயற்சிகளை மேற்கொள்ள வேண்டுமென்று நான் கேட்டுக்கொள்கிறேன். குறிப்பாக இந்தப் பேருந்து விபத்துகள் நடைபெறுவதற்கு இன்னொரு காரணம், ஓட்டுநர்களை கேட்கிறபோது சொல்லுகிறார்கள், மதுரையிலிருந்து சென்னைக்கு வரவேண்டுமென்று சொன்னால், அல்லது திருநெல்வேலியிலிருந்து சென்னைக்கு வரவேண்டும் என்று சொன்னால், ஏற்கெனவே இரண்டு இடங்களில் ஓட்டுநர்கள் மாற்றப்பட்டு வந்தார்கள்.

முற்பகல் 10-00

ஆனால் இன்றைக்கு ஒரே டிரைவராக வருகிற காரணத்தினாலே இந்த விபத்துக்கள் ஏற்பட்டுவிடுகின்றன. நாங்கள் முன்னெச்சரிக்கையாக வாகனங்களை ஓட்டினாலும் எதிரில் வரும் வண்டிகள் எப்படி வருகிறது என்பதை அறிய முடியாத சூழ்நிலை இருக்கிறது என்றும் சொல்லுகிறார்கள். மேலும் இரண்டாவதாக ஒன்றைச் சொல்லுகிறார்கள். அதாவது, இன்றையதினம் வாகனங்களுக்கும், லாரிகளுக்கும் பொருத்தப்பட்டிருக்கிற விளக்குகளின் ஒளி எதிரில் வரும் வண்டிகளின் பார்வையை மறைத்து விடுவதன் காரணத்தினாலேயும், விபத்து ஏற்படுவதற்கான வாய்ப்பு இருக்கிறது என்று விபத்து நடந்த பல்வேறு இடங்களில் சொல்லுகிறார்கள். ஆகவே மாண்புமிகு போக்குவரத்துத் துறை அமைச்சர் அவர்கள் வாகனங்களின் வேகத்தை குறைப்பதற்கு, அரசு போக்குவரத்துக் கழகத்தினுடைய பேருந்துகளின் ஓட்டுநர்களை மாற்றுவதற்கு அல்லது தனியார் பேருந்துகளை இரவில் ஓட்டலாமா என்பதையெல்லாம் ஆய்வு செய்ய வேண்டும். அந்த வகையில் ஆய்வு செய்து இதுபோன்ற விபத்துக்களைத் தடுப்பது என்பது நல்லது. நம்முடைய தமிழகத்தில் அநேகமாக விபத்துகள் குறைவாக இருந்தது. இப்போது அதிகரித்து இருக்கிறது. இதனை அமைச்சர் அவர்களின் கவனத்திற்கு கொண்டு வர விரும்புகிறேன். முழுமையாக பயிற்சி அளிக்கப்படாத ஓட்டுநர்கள் கூட நியமிக்கப்பட்டிருக்கிறார்கள். அதுபோன்ற ஓட்டுநர்களுக்கு குறைந்தபட்சம் ஒரு ஆறு மாத காலமாவது பயிற்சி அளித்து அவர்களுக்குத் தொலைதூர பேருந்துகளை விடுவதற்கு நடவடிக்கைகளை மேற்கொள்ள வேண்டுமென்று கேட்டுக்கொண்டு, விபத்து நடந்த காரணத்தினால் பாதிக்கப்பட்ட குடும்பங்களுக்கு போதுமான நிதி உதவிகளை அளிக்கவேண்டுமென்று, இந்த மாதிரியான விபத்துகள் தொடர்ந்து நடக்காமல் இருக்க அரசு முன்முயற்சிகளை மேற்கொள்ள வேண்டுமென்று கேட்டு அமருகிறேன்.



1996 மே 25]

**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** மாண்புமிகு போக்குவரத் துறை அமைச்சர்.

***மாண்புமிகு டாக்டர் க. பொன்முடி என்கிற தெய்வசிகாமணி:*** மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, மாண்புமிகு உறுப்பினர்கள் எழுப்பியிருக்கிற விபத்துக் குறித்த விவரங்களை இந்த அவைக்குத் தெரிவிக்க விரும்புகிறேன்.

23-5-1996 அன்று விடியற்காலையில் 1-15 மணியளவில் சென்னை-பெங்களூர் நெடுஞ்சாலையில் வடாற்காடு-அம்பேத்கார் மாவட்டம் சத்துவாச்சேரி காவல்நிலைய எல்லைக்குட்பட்ட பிள்ளையார் குப்பம் கிராமத்தில் வேலூரிலிருந்து சென்னைக்கு வந்துகொண்டிருந்த பட்டுக்கோட்டை அழகிரி போக்குவரத்து பேருந்தும் சென்னையிலிருந்து பெங்களூர்க்கு சென்றுகொண்டிருந்த பி.ஆர். டிராவல்ஸ் ஒன்றும் நேருக்கு நேர் மோதிக்கொண்டதில் 11 ஆண்களும், 2 பெண்களும் இறந்துவிட்டார்கள். மேலும் 37 நபர்கள் காயம் அடைந்தவர்கள் சிகிச்சைக்கு அனுப்பி வைக்கப்பட்டனர். இவர்களில் 20 நபர்கள் வேலூர் சி.எம்.சி. மருத்துவமனையில் சிகிச்சை பெற்று வருகின்றனர். மூன்று நபர்கள் சி.எம்.சி. மருத்துவமனையில் புறநோயாளியாக சிகிச்சை பெற்று சென்று விட்டார்கள். 14 நபர்கள் வேலூர் அரசு மருத்துவமனையில் உள்நோயாளிகளாக சிகிச்சை பெற்று வருகின்றனர். இறந்தவர்களில் 5 நபர்களின் உடல் அவர்களது உறவினர்களால் அடையாளம் கண்டுபிடிக்கப்பட்டு கொண்டு செல்லபட்டுவிட்டன. அடையாளம் தெரியாத 8 நபர்களின் உடல்கள் வேலூர் மருத்துவமனையில் சவக்கிடங்கில் பாதுகாக்கப்பட்டு வருகின்றன. புலன் விசாரணையில் தனியார் பேருந்தை ஓட்டி வந்த ஓட்டுநர் (இறந்துவிட்டவர்) பேருந்தை அதிவேகமாகவும், கவனக்குறைவாகவும் ஓட்டியதால்தான் இந்த விபத்து நடந்துள்ளதாகத் தெரிய வருகிறது. சம்பவம் நடந்த இடத்தில் மாவட்ட காவல் துறை கண்காணிப்பாளர் தலைமையில் காவலர்களும் பட்டுக்கோட்டை அழகிரி போக்குவரத்து கழக அதிகாரிகளும் பொது மக்கள் துணையுடன் மீட்பு பணிகளை அதிவிரைவாக மேற்கொண்டு காயம் அடைந்தவர்களுக்கு முதல் உதவியும் விரைவாக சிகிச்சை செய்ய நடவடிக்கையும் மேற்கொண்டனர். சம்பவ இடத்தையும் மருத்துவமயையில் சிகிச்சை பெற்று வருபவர்களையும் மாண்புமிகு பொதுப்பணித்துறை அமைச்சர் திரு. துரைமுருகன் அவர்களை முதலமைச்சர் அவர்கள் அனுப்பி வைத்து 23-5-1996 அன்று பார்வையிட்டு ஆறுதல் கூறினார்கள். விரைவாகவும், நல்லமுறையிலும் சிகிச்சை அளிக்கவும் உத்தரவிட்டுள்ளார். விபத்தில் காயம்

அடைந்தவர்களுக்கு மாண்புமிகு முதலமைச்சர் அவர்களால் அறிவிக்கப்பட்ட உதவித் தொகை ரூ. 3000/- மாவட்ட ஆட்சித் தலைவர் அவர்களால் வழங்கப்படுகிறது. இது தவிர, இறந்தவர்களின் குடும்பங்களுக்கு தலா ரூ. 10,000 நிதி உதவி இன்ஷூரன்ஸ் நிறுவனம் மூலம் இடைக்கால நிவாரணமாக உடனடியாக வழங்கிட மாண்புமிகு பொதுப்பணித்துறை அமைச்சர் ஏற்பாடு செய்தார்கள். இந்த உதவித் தொகை ரூ. 3,000 என்பது எப்போதும் வழங்கப்பட்டு வரும் தொகைதான் வழங்கப்பட்டிருக்கிறது. எனவே, இதுவரை இன்ஷூரன்ஸ தொகை என்று சொன்னால் அந்தத் தொகையைப் பெறுவதற்கு 2 அல்லது 3 ஆண்டுகளாக காத்திருக்கக்கூடிய நிலையிருக்கும். அது அமைச்சர் அவர்களின் தலையீட்டினால் உடனடியாக ரூ. 10,000 வழங்குவதற்கு ஏற்பாடு செய்யப்பட்டுள்ளது. மேலும் சி.எம்.சி. மருத்துவமனை செலவுகளைக்கூட போக்குவரத்துக் கழகமே ஏற்றுக்கொள்கிறது. மேலும் மாண்புமிகு உறுப்பினர் திரு. தாமரைக்கனி அவர்கள் ஒரு யோசனை சொன்னார்கள். டிக்கெட் வாங்குகிறபோதே பயணிகளிடமிருந்து இந்த இன்ஷூரன்ஸ் தொகையை வாங்கவேண்டுமென்று சொன்னார்கள். அவர்களுக்குத் தெரிந்திருக்கும் என்று நினைக்கிறேன். இன்ஷூரன்ஸ் என்று சொல்கிறபோது பேருந்துகளை இன்ஷூரன்ஸ் சொல்லுகிறபோதே அதில் பயணம் செய்கிறவர்களுக்கும் அந்த இன்ஷூரன்ஸ் உண்டு. இறந்துவிட்டால் அந்த இன்ஷூரன்ஸ் தொகையைப் பெற முடியும். மேலும் மாண்புமிகு உறுப்பினர் ஞானசேகரன் பேசியபோது அவசரத்தில் பேசியக் காரணத்தினால் 15 பேர்கள் இறந்துவிட்டார்கள். 40 பேர்கள் இறந்துவிட்டார்கள் என்று சொன்னார்கள். அதை அவைக்குறிப்பில் இருந்து எடுத்துவிடவேண்டுமென்று கேட்டுக் கொண்டு 37 நபர்கள் காயம் அடைந்திருக்கிறார்கள் என்று மாற்றிக் கொள்ளும்படி அதையும் சுட்டிக் காட்டி, உறுப்பினர்கள் அளித்திருக்கிற இந்த ஆலோசனைகளை எல்லாம் போக்குவரத்துத் துறை கண்காணிக்கும் என்று தெரிவித்துக் கொள்கிறேன். மேலும், விபத்துக்கள் என்று சொல்லும்பொழுது, இந்த அரசு பொறுப்பேற்று ஒருமாதம் கூட ஆகாத சூழ்நிலையில் இதுபோன்ற விபத்துக்கள் ஏற்படாமல் இருக்க போக்குவரத்துத் துறை கவனம் செலுத்தும் என்பதை மட்டும் மாண்புமிகு உறுப்பினர் அவர்களுக்குத் தெரிவித்துக் கொள்கிறேன்.

முற்பகல் 10-05

**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** மாண்புமிகு முதலமைச்சர் அவர்கள்.

**மாண்புமிகு டாக்டர் மு. கருணாநிதி:** தலைவர் அவர்களே, இந்த விபத்தின் அடிப்படையில் மாண்புமிகு உறுப்பினர் திரு. ஞானசேகரன் அவர்களும், மாண்புமிகு உறுப்பினர் திரு. தாமரைக்கனி அவர்களும்



சில கருத்துக்களை எடுத்துச் சொல்லி, உயிரிழந்தவர்களுடைய குடும்பங்களுக்கு மேலும் நிதியுதவி அளிக்கவேண்டுமென்று கேட்டிருக்கின்றார்கள். ஆயுள் காப்பீட்டுக் கழகத்தின் சார்பில் மிகத் தாமதமாக வந்துசேர வேண்டிய தொகை உடனடியாக பொதுப் பணித்துறை அமைச்சருடைய ஏற்பாட்டின் காரணமாகவும், அம்பேத்கார் மாவட்ட ஆட்சித் தலைவருடைய முயற்சியின் காரணமாகவும் உடனடியாக வழங்கப்பட்டுள்ளது. போக்குவரத்துத் துறை அமைச்சர் குறிப்பிட்டதைப் போல வழக்கமாக அரசின் சார்பில் 3 ஆயிரம் ரூபாய்தான் நிதியாக வழங்கப்பட்டு வருகிறது. அந்த நிதி வழங்கப்பட்டிருக்கிறது. மேலும் நிதி வழங்கப்பட வேண்டும் என்று திரு. ஞானசேகரன் அவர்கள் இங்கே குறிப்பிட்டார்கள். இலட்சக்கணக்கில் வழங்கலாம் என்று திரு. தாமரைக்கனி அவர்கள் குறிப்பிட்டார்கள். இந்த விபத்திற்கு என்ன காரணம் என்பதை இந்தியக் கம்யூனிஸ்ட் கட்சியினுடைய தலைவர் திரு ஜி. பழனிசாமி அவர்கள் இங்கே எடுத்துக்காட்டி, ஓட்டுநர்களை ஓய்வுபெறச் செய்து மீண்டும் வாகனங்களை ஓட்டச் செய்ய ஒரு முறை வகுக்க வேண்டும் என்று எடுத்துக்காட்டினார்கள். அத்துடன் நல்ல பயிற்சி பெற்றவர்களை ஓட்டுநர்களாக நியமிக்க வேண்டும் என்ற ஒரு அரிய கருத்தையும் இங்கே எடுத்துக் கூறியிருக்கிறார்கள். இந்தக் கருத்துக்கள் எல்லாம் போக்குவரத்துத் துறையால் மேற்கொள்ளப்படும் என்றாலும்கூட, நாம் எவ்வளவு எச்சரிக்கையாகச் சென்றாலும் எதிரே வருகின்ற வேறு வாகனங்களிலே ஓட்டுநர்களாக இருப்பவர்கள் அந்த எச்சரிக்கையோடு வருகின்றார்களா என்பதுதான் இப்போதுள்ள பெரும் பிரச்சினையாகும். இந்த விபத்திலேகூட, நம்முடைய போக்குவரத்துத் துறையைச் சார்ந்த பட்டுக்கோட்டை அழகிரி போக்குவரத்துக் கழகத்தினுடைய அந்தப் பேருந்து ஓட்டுநரால் இந்த விபத்து ஏற்படவில்லை என்றும், இதற்கு முழுமுதற் காரணம் எதிரே வந்த அந்த ஆம்னி பஸ் ஓட்டுநர் தான். அழகிரி போக்குவரத்துக் கழகத்தினுடைய ஓட்டுநர் எவ்வளவு ஒதுங்கிச் சென்று வாகனத்தை நிறுத்த முயன்றும்கூட முடியாமல், அதன்மீது, எதிரே வந்த ஆம்னி பஸ் மோதியது என்றும், அதன் காரணமாக இந்தப் பெரும் விபத்து ஏற்பட்டது என்றும் எனக்குத் தகவல் கிடைத்திருக்கிறது. எனவே, இந்தத் துறையிலே உள்ள ஓட்டுநர்களை, அலுவலர்களை மாத்திரம் திருத்திப் பயன் இல்லை. எல்லோருடைய மனமும் திருந்தியாக வேண்டும். மிக வேகமாகச் செல்ல வேண்டும்; அதுவும் இரவு நேரங்களில் மிக வேகமாகச் செல்ல சாலைகளில் இடம் இருக்கிற காரணத்தினால், போக்குவரத்து குறைவாக இருக்கிற காரணத்தினால், அப்படிப்பட்ட வாய்ப்புகள் இருப்பதாலும், இத்தகைய விபத்துக்கள் தவிர்க்க முடியாதவைகளாக ஆகிவிடுகின்றன. எனினும், இங்கே

எடுத்துச் சொல்லப்பட்ட கருத்துக்களைத் தள்ளிவைத்து விடாமல், போக்குவரத்து துறை கவனத்திலே எடுத்துக்கொள்ளும் என்ற உறுதியை என் சார்பிலும் அளித்து, இன்னும் சிலர் யார் என்றே தெரியாத, அடையாளம் தெரியாத நிலையிலே இருக்கிற காரணத்தினால் அவர்களுடைய குடும்பங்களைப் பற்றியும் விசாரித்து மற்றும், இறந்தவர்களுடைய குடும்பங்களைப் பற்றியும் விசாரித்து. உடனடியாக மாவட்ட ஆட்சித் தலைவரிடம் அறிக்கை கேட்கப்பட்டுள்ளது. அந்த அறிக்கை கிடைத்தவுடன் என்றில்லாமல், திரு. ஞானசேகரன் இங்கே கூறியவாறு மேலும் ஒரு பத்தாயிரம் ரூபாய் நிதியாக அந்தக் குடும்பங்களுக்கு வழங்கப்படும் என்பதைத் தெரிவித்துக் கொள்கிறேன். *(மேசையைத் தட்டும் ஒலி)*

**திரு ச. அழகிரி:** பேரவைத் தலைவர் அவர்களே, ஒரு பாயிண்ட் ஆஃப் கிளாரிபிகேஷன். இன்ஷூரன்ஸ் தொகை இறந்தவர்களுக்கு வழங்கப்பட்டதாக மாண்புமிகு போக்குவரத்துத் துறை அமைச்சர் அவர்கள் சொன்னார்கள். அரசாங்கப் பேருந்துகள் இன்ஷூரன்ஸ் செய்யப்பட்டிருக்கின்றனவா? வழங்கப்பட்டிருக்கிற அந்த தொகை ஆம்னி பஸ் இன்ஷூரன்ஸிலிருந்து கொடுத்ததா அல்லது அரசாங்கப் பேருந்து இன்ஷூரன்ஸிலிருந்து கொடுத்தநா, அல்லது இன்ஷூரன்ஸ் நிறுவனமே கொடுத்ததா என்பதனை அறிய விரும்புகின்றேன்.

**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** மாண்புமிகு பொதுப் பணித் துறை அமைச்சர்.

**மாண்புமிகு திரு. துரைமுருகன்:** பேரவைத் தலைவர் அவர்களே, பிரைவேட் ஆப்பரேட்டர்களுக்கு காம்ப்ரஹென்சிவ் இன்ஷூரன்ஸ் இருக்கிறது. அந்த இன்சூரன்ஸ் கம்பெனிக்காரர்களைக் கூப்பிட்டு அவர்களிடம் வாங்கியிருக்கிறோம். டிரான்ஸ்போர்ட் துறை சார்பிலும் நாங்கள் கொடுத்திருக்கிறோம்.

முற்பகல் 10-10

**திரு. ச. அழகிரி:** பேரவைத் தலைவர் அவர்களே, அரசாங்கப் போக்குவரத்து நிறுவனங்கள் இன்ஷூரன்ஸ் செய்வது கிடையாது. எனவே நீங்கள் மோதுகிறபோது இறந்துபோனவர்கள் நஷ்டமடைகிறார்கள். தனியார் மோதினால் லாபம் அடைகிறார்கள். எனவே அரசாங்க போக்குவரந்து நிறுவனங்களும் இன்ஷூரன்ஸ் செய்யுமா என அறிய விரும்புகிறேன்.

**மாண்புமிகு டாக்டர் க. பொன்முடி என்கிற தெய்வசிகாமணி:** பேரவைத் தலைவர் அவர்களே, மாண்புமிகு உறுப்பினர் அவர்களின் கருத்துக்களை ஏற்று, போக்குவரத்துத்துறை நிறுவனங்களின் 20 எம்.டி.களிடம் ஆலோசித்து முடிவு எடுக்கப்படும்.



# 3. விதி 110-ன் கீழ் மாண்புமிகு முதலமைச்சரின் அறிக்கை

## தூத்துக்குடியில் அண்மையில் நடைபெற்ற கலவரங்கள் குறித்து.

**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** அண்மையில் தூத்துக்குடி நகரில் நடந்த கலவரங்களைப் பற்றி இங்கே ஒரு சில உறுப்பினர்கள் ஒத்திவைப்புத் தீர்மானம் கொடுத்திருக்கிறார்கள். அதே நேரத்தில் 110-வது விதியின் கீழ் அந்தக் கலவரங்களைப் பற்றி அறிக்கை ஒன்றை சட்டமன்றப் பேரவைக்கு அளிக்க வேண்டுமென்று மாண்புமிகு முதல்வர் அவர்கள் என்னுடைய அனுமதியைக் கோரியிருக்கிறார்கள். அந்த அனுமதி வழங்கப்பட்டிருக்கின்றது. மாண்புமிகு முதலமைச்சர் அவர்கள்.

**மாண்புமிகு டாக்டர் மு. கருணாநிதி:** தலைவர் அவர்களே, சட்டமன்றப் பேரவை விதி 110-ன் கீழ், கீழ்க்கண்டவாறு அறிக்கையை வெளியிட அனுமதி கோரியிருக்கிறேன்.

10-5-1996-லிருந்து தூத்துக்குடி நகரில் எதிர்பாராத விதமாக கலவரம் மற்றும் வன்முறைச் செயல்கள் ஏற்பட்டன. மேலும் 11-5-96 அன்று காவல் துறையினர் நிலைமையைக் கட்டுப்படுத்த துப்பாக்கிப் பிரயோகம் நடத்தியதில் ஒருவர் மரணமடைந்தார். கலவரத்தில் வெடிகுண்டு வீச்சில் ஐவர் காயமடைந்தனர்.

இந்த அரசு பொறுப்பேற்ற உடனேயே அங்கே சட்டம் ஒழுங்கை நிலை நாட்டவும், அமைதியை ஏற்படுத்தவும் எல்லா சமுகத்தினர்களுடையிலும் ஒற்றுமையையும் நல்லுறவையும் ஏற்படுத்த வேண்டும் என்ற நோக்கத்தோடு சட்ட அமைச்சர் அவர்களும் மீன் வளத்துறை அமைச்சர் அவர்களும் 14-5-96 அன்று தூத்துக்குடிக்கு அனுப்பி வைக்கப்பட்டனர். அவாகள் தூத்துக்குடி சென்று இருதரப்பினர்களையும் சந்தித்து அவர்களின் கருத்தையும் கேட்டறிந்து அமைதி ஏற்பட சமாதானக் கூட்டத்தை நடத்தினார்கள்.

சமாதானக் கூட்டத்தில் பங்கு கொண்ட பெரியவர்களின் உறுதி மொழிக்கும் ஒத்துழைப்பிற்கும் ஏற்ப நகரில் மாமூல் நிலை திரும்பியுள்ளது. சமாதானக் கூட்டத்தில் வற்புறுத்தப்பட்ட நியாயமான கோரிக்கைகளை ஏற்று தற்போது பணியிலுள்ள மாவட்ட நீதிபதி ஒருவரைக் கொண்ட விசாரணைக்குழு ஒன்றினை நியமனம் செய்ய அரசு முடிவெடுத்துள்ளது. இதற்கிணங்க அத்தியாவசியப் பொருட்கள் சட்டத்தின் கீழ் ஏற்படுத்தப்பட்டுள்ள மதுரை தனி நீதிமன்றத்தின் நீதிபதியாகப் பணிபுரியும் மாவட்ட நீதிபதி திரு. வி.கே. திருநாவுக்கரசு அவர்களை சென்னை உயர் நீதிமன்றத்தின் பரிந்துரையின்படி ஒரு நபர் விசாரணைக்

குழுவாக அரசு நியமித்திருக்கிறது. இந்த விசாரணைக் குழு 10-5-96ல் இருந்து தூத்துக்குடி நகரில் ஏற்பட்ட கலவரம் மற்றும் வன்முறைச் செயல்கள், 11-5-96 அன்று காவல்துறையினர் நடத்திய துப்பாக்கிப் பிரயோகம் முதலியவை குறித்து விசாரிக்கவும், கலவரங்களில் காயமடைந்தோர், பாதிக்கப்பட்டோர், பொருட்சேதமுற்றோர் ஆகியோருக்கு நஷ்டஈடு வழங்க தகுந்த பரிந்துரைகள் செய்யவும் மேலும் இது போன்ற கலவரங்கள் மற்றும் வன்முறைகள் இனி ஏற்படாமல் தடுக்கவும், நகரில் அமைதி நிரந்தரமாக ஏற்பட ஆலோசனைகள் வழங்கவும் மேற்சொன்ன விசாரணைக் குழு கேட்டுக் கொள்ளப்பட்டிருக்கிறது.

இரண்டு மாத காலத்திற்குள் தனது அறிக்கையை அரசுக்கு சமர்ப்பிக்க வேண்டுமென இக்குழு கேட்டுக் கொள்ளப்பட்டிருக்கிறது.

## 4. அறிவிப்பு

### மாற்றுத் தலைவர்கள் பட்டியல்

**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** பேரவைக்கு ஓர் அறிவிப்பு. தமிழ்நாடு சட்டமன்றப் பேரவை விதி 9, உள விதி(1)-இன் கீழ், கீழ்க்காணும் உறுப்பினர்களை முதலாவது கூட்டத் தொடருக்கு மாற்றுத் தலைவர்களாக (Panel of Chairmen) நியமிக்கிறேன்.

திரு. பெ.சு. திருவேங்கடம்

திரு. அ.லெ. சுப்பிரமணியன்

திரு. இ. புகழேந்தி

திருவோணம் திரு. மா. இராமச்சந்திரன்

திரு. டி. சுதர்சனம்

திரு. ஜி. பழனிசாமி

## 5. ஆளுநர் உரைக்கு நன்றி தெரிவிக்கும் தீர்மானத்தின் மீது விவாதம்

**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** அடுத்து, ஆளுநர் உரைக்கு நன்றி கூறும் தீர்மானத்தின் மீது விவாதம்.

சிவகங்கை சட்டமன்றத் தொகுதி உறுப்பினர் திரு பசும்பொன் தா. கிருட்டிணன் அவர்கள் அந்தக் தீர்மானத்தை முன்மொழிவார்கள்.





***திரு பசும்பொன் தா. கிருட்டிணன்:** மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, உங்கள் அனுமதியோடு கீழ்க்காணும் தீர்மானத்தை நான் முன்மொழிகிறேன்.

'1996-ஆம் ஆண்டு மே திங்கள் 23-ஆம் நாளன்று சட்டமன்றப் பேரவைக்கு ஆளுநர் அவர்கள் உவந்தளித்த பேருரைக்குத் தமிழ்நாடு சட்டமன்றப் பேரவை உறுப்பினர்கள் பெரிதும் நன்றியுடையவர்களாவர்.'

முற்பகல் 10-15

**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** வழிமொழியக் கூடியவர் திரு. கே. சுந்தர்.

**திரு.கே. சுந்தர்:** மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, மாண்புமிகு உறுப்பினர் அண்ணன் திரு. தா. கிருட்டிணன் அவர்களால் முன்மொழியப்பெற்ற இந்தத் தீர்மானத்தை நான் வழிமொழிகிறேன்.

**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** திரு. தா. கிருட்டிணன் அவர்கள் விவாதத்தைத் தொடங்கி வைப்பார்கள்

**திரு. பசும்பொன் தா. கிருட்டிணன்:** மாண்புமிகு சட்டமன்றப் பேரவைத் தலைவர் அவர்களே, இந்தச் சிறப்புமிக்க சட்டமன்றக் கூட்டத்திலே மேதகு ஆளுநர் அவர்கள் ஆற்றிய உரைக்கு நன்றி தெரிவிக்கின்ற ஒரு தீர்மானத்தை சட்டமன்றம் நிறைவேற்றித் தருவது ஒரு ஜனநாயகக் கடமை என்ற காரணத்தினாலே அந்தத் தீர்மானத்தை உங்களுடைய அனுமதியோடு நான் இங்கே முன்மொழிந்து இருக்கின்றேன். அந்தத் தீர்மானம் முறைப்படி வழிமொழியப்பட்டு இருக்கின்றது. இந்தத் தீர்மானத்தின் மீது என்னுடைய கருத்துக்களைச் சொல்வதற்கு நீங்கள் அனுமதி அளித்ததற்காக நான் நன்றி தெரிவித்துக்கொள்கின்றேன்.

ஒரு பொருத்தமான காலகட்டத்தில், ஒரு பொருத்தமான தங்களை, ஒரு பொருத்தமான காரியத்திற்கு நம்முடைய மாண்புமிகு முதல்வர் அவர்கள் முன்மொழிந்து, அதற்கு இந்த சட்டமன்றத்தினுடைய ஒருமித்த ஆதரவோடு ஏகமனதாக நீங்கள் தேர்ந்தெடுக்கப்பட்டு இந்த அவையிலே வீற்றிருக்கின்றீர்கள். உங்களுக்கு எல்லோரும் பாராட்டுத் தெரிவித்தார்கள். நம்முடைய மாண்புமிகு முதல்வர் அவர்களும் உங்களை நிரம்பப் பாராட்டி இருக்கின்றார்கள். நானும் இந்த நேரத்திலே உங்களைப் பாராட்டுவது என்னுடைய கடமை என்ற காரணத்தினாலே, என்னுடைய பாராட்டுதலையும் வாழ்த்துதலையும் உங்களுக்கு நான் தெரிவித்துக் கொள்கிறேன்.

இந்த நன்றி தெரிவிக்கின்ற இந்தத் தீர்மானத்தில், இந்த மாமன்றத்தில் ஆளும் கட்சியான திராவிட முன்னேற்றக் கழகத்தின் சார்பிலே

ஏராளமான மூத்த உறுப்பினர்கள் இருந்தாலும். என்னை மாண்புமிகு முதல்வர் அவர்கள் இந்தத் தீர்மானத்தை முன்மொழிவதற்கு அனுமதி அளித்து இருக்கின்றார்கள். அவர்களால் நான் பல்வேறுபட்ட பெருமையைப் பெற்று இருக்கின்றேன். ஏறத்தாழ 10 ஆண்டுக் காலம் நடாளுமன்ற மக்களவையில் இருக்கின்ற வாய்ப்பை பேரறிஞர் அண்ணா அவர்களாலே 1967 ஆம் ஆண்டும், 1971 ஆம் ஆண்டு நம்முடைய மாண்புமிகு முதல்வர் அவர்களாலேயும் நான் பெற்று இருக்கின்றேன். அதேபோல, 1970 ஆம் ஆண்டு முதல் 1976 ஆம் ஆண்டு வரை மானாமதுரை ஊராட்சி ஒன்றியத்தினுடைய பெருந்தலைவராக இருக்கின்ற வாய்ப்பையும் மாண்புமிகு முதல்வர் அவர்களாலே, நம்முடைய திராவிட முன்னேற்றக் கழகத்தின் ஒப்பற்ற தலைவராலே பெற்று இருக்கின்றேன். அதைப்போலவே 1989 ஆம் ஆண்டு முதல் 1996 ஆம் ஆண்டு வரையில் டில்லி நாடாளுமன்ற மாநிலங்களவை உறுப்பினராக 7 ஆண்டுக்காலம் இருக்கின்ற வாய்ப்பை எனக்கு மாண்புமிகு முதல்வர் அவர்கள், திராவிட முன்னேற்றக் கழகத்தின் ஒப்பற்ற தலைவர் அவர்கள் வழங்கிப் பெருமை சேர்த்து இருக்கிறார்கள. அந்தக் காலகட்டத்தில் மாண்புமிகு வி.பி. சிங் அவர்கள் பிரதமராக இருந்தபோது 1990 ஆம் ஆண்டு இந்திய அரசாங்கத்தின் சார்பில் அனுப்பப்பட்ட ஐ.நா. குழுவில் திராவிட முன்னேற்றக் கழகத்தின் உறுப்பினராக நானும் சென்று, மூன்று மாத காலம் அந்த அவையிலே கலந்துக்கொண்டு, நடவடிக்கையிலே கலந்து கொள்கிற ஒரு பெரிய வாய்ப்பையும் மாண்புமிகு முதல்வர் அவர்கள் எனக்கு வழங்கிப் பெருமை சேர்த்து இருக்கிறார்கள். அதைப்போன்று, இந்தப் பெருமையும் எனக்கு இன்றைக்கு வழங்கப்பட்டு இருக்கின்றது. எனக்குத் தாயாக, தந்தையாக, அண்ணன் ஆக ஆசான ஆக இருந்து வழிநடத்திச் செல்லக் கூடிய நம்முடைய ஒப்பற்ற தலைவருக்கு நான் இந்த நேரத்தில் நன்றி செலுத்துவது என்னுடைய கடமை என்று நான் கருதுகிறேன.

முற்பகல் 10-20

அதுமட்டுமல்ல, அவர்கள் ஒரு சாதாரண கற்பாறையாக இருந்த என்னை, செதுக்கிச் செதுக்கி ஒரு நல்ல சிலையாக வடித்து, இந்த நாட்டு மக்களுக்குப் பணியாற்றுகின்ற ஒரு வாய்ப்பையும் தந்திருக்கிறார்கள் என்ற காரணத்தினாலே மீண்டும் ஒருமுறை இந்த மன்றத்திலே என்னுடைய நன்றியைத் தெரிவித்து என்னுடைய உரையை நான் துவக்க விரும்புகின்றேன்.

ஆளுநர் அவர்கள் உரை என்பதும், நாடாளுமன்றத்தில் குடியரசுத் தலைவர் உரை என்பதும், அப்போது இருக்கின்ற ஆட்சியினுடைய கொள்கை விளக்க அறிக்கைதான். அதைப்போல, நம்முடைய இந்தச்





சிறப்புமிக்க மாமன்றத்தில் நம்முடைய மேதகு ஆளுநர் அவர்கள் ஆற்றியிருக்கின்ற உரை, திராவிட முன்னேற்றக் கழக அரசாங்கத்தினுடைய ஒரு கொள்கை அறிக்கை, என்றாலும். அது அறிக்கை என்பதைவிட கொள்கைக் குறிப்பு என்று நான் சொல்ல விரும்புகிறேன். காரணம், நம்முடைய மாண்புமிகு அ.தி.மு.க. சட்டமன்ற உறுப்பினர் திருநாவுக்கரசு அவர்கள் பத்திரிகைக்குச் செய்தி கொடுககிறபோது. இது ஒரு குறுகிய அறிக்கை. குறுகிய திட்டங்கள் என்று குறிப்பிட்டிருந்தார். உண்மைதான். குறுகிய அறிக்கைதான். ஆனால், அந்தக் குறுகிய அறிக்கையில் விரிவான திட்டங்கள் அடங்கி இருக்கின்றன எனபது அவருக்குத் தெரியாமல் இருக்க முடியாது. ஒரே வரியிலேகூட ஆளுநர் அவாகள் தன்னுடைய அறிக்கையை முடித்திருக்கலாம். "My Government" or "This Government will reconstruct the demolished structure of the Tamil Nadu Government and Tamil Nadu Assembly" என்றுகூட அவர் சொல்லியிருக்கலாம். அதிலே எல்லாம் அடங்கி இருக்கின்றது. இப்போது நம்முடைய அரசாங்கத்தின்முன் நிற்கின்ற முழு முதல் பிரச்சினை, உடைந்துபோய்விட்ட, நொறுங்கி போய்விட்ட, சிதைந்து போய்விட்ட இந்த அரசாங்க நிர்வாகத்தையும், சட்டமன்ற நடவடிக்கை மரபுகளையும் நாம் திருப்பி புதுப்பிக்க வேண்டிய நிலை இருக்கின்றது. எனவே, நம்முடைய மாண்புமிகு முதல்வர் அவர்களுக்கு ஏராளமான பணிகள் அவர் முன்னாலே கிடக்கின்றன. இருந்தாலும்கூட, திட்டவட்டமாக, தெளிவாக மக்களுக்கு தேவை எது. என்பதை கண்டறிந்து, மக்களோடு இரண்டற கலந்து பழகுகிற காரணத்தினாலே அவர் பல்வேறுபட்ட திட்டங்களை இதிலே அறிவித்திருக்கிறார்கள்.

இன்னும் நான் சுருக்கமாக சொல்ல வேண்டுமானால் இந்த அரசு அண்ணா வழியில் அயராது உழைக்கின்ற அரசு. ஆதிக்கமற்ற சமுதாயத்தை அமைப்பதற்காகப் பாடுபடும் அரசு. இந்தித் திணிப்பை எப்போதும் எதிர்க்கின்ற அரசு. வன்முறை தவிர்த்து வறுமையை வெல்லுகின்ற அரசு. மத்தியில் கூட்டாட்சியும், மாநிலத்தில் சுயாட்சியும் உருவாவதற்கு பாடுபடுகின்ற அரசு. அந்த அரசை நடத்துகிற கட்சி. நம்முடைய முதல்வர் அவர்கள் எங்களுடைய திராவிட முனனேற்றக் கழக சட்டமன்ற உறுப்பினர்கள் கூட்டத்திலே பேசுகிறபோது, ஒரு கருத்தைச் சொன்னார்கள். எப்படிப்பட்ட ஆட்சி தமிழ்நாட்டிலே வரவேண்டும் எனபதைவிட, எப்படிப்பட்ட ஆட்சி வரக்கூடாது என்பதற்காக தமிழ்நாட்டு மக்கள் இப்போது வாக்களித்திருக்கிறார்கள் என்பதை நீங்கள் எல்லாம் மனதிலே வைத்து பணியாற்ற வேண்டும் என்று எங்களுக்கு அறிவுரை வழங்கினார்கள். அதுதான் மையக்கருத்து.

[திரு. பசும்பொன் தா. கிருட்டிணன்] [1996 மே 25

இதற்கு முன்னாலே நடைபெற்ற ஆட்சி எப்படி இருந்தது என்பதை பலபேர் அறிந்திருந்தாலும், நான் அதைச் சொல்ல கடமைப்பட்டிருக்கின்றேன். அந்த ஆட்சி ஊழல் இல்லாத ஆட்சி என்று யாரும் சொல்ல முடியாது. அந்த ஆட்சியிலே ஊதாரித்தனம் மிகுந்திருந்தது என்பதை எல்லோரும் ஒத்துக்கொண்டுதான் இருக்கின்றார்கள். அந்த ஆட்சியில் ஆடம்பரம் மிகுந்திருந்தது என்பதை யாரும் மறுக்க முடியாது. ஏன் ஆணவம்கூட அதிகரித்திருந்தது, அதையும் மறுக்க முடியாது. கலாசார சீரழிவு அந்த ஆட்சியிலே ஏற்பட்டிருந்தது. இதையும் யாரும் மறுக்க முடியாது. இவைகளை எல்லாம் நான் குறிப்பிடுகிறபோது, எதிர்க் கட்சியிலே இருக்கிற முன்னாள் ஆளும் கட்சி நண்பர்கள், மாண்புமிகு உறுப்பினர்கள் வருத்தப்படக்கூடாது. நான் தனிப்பட்ட யாரையும் குறை கூறிச் சொல்லவில்லை. பேரறிஞர் அண்ணா அவர்கள் ஒருமுறை மாநிலங்கள் அவையில் முதன் முதலாக உரையாற்றும்போது, ஆளும் கட்சியை சாடி, பேசி கருத்துக்களைச் சொல்கிறபோது ஒன்றை சொன்னார்கள்.

"Condemnation of an institution cannot be misconstrued as a denunciation of an individual." என்று சொன்னார்கள். ஓர் அமைப்பைப் பற்றி, ஒரு நிர்வாகத்தைப் பற்றி, ஓர் அமைச்சகத்தைப் பற்றி, ஓர் அமைச்சரைப் பற்றி நான் கண்டித்துக் குறை கூறிப் பேசும்போது, அதைத் தனிப்பட்ட ஒருவரைக் குறை கூறிப் பேசுவதாகத் தயவுசெய்து கருதக்கூடாது என்று சொல்லிவிட்டுதான், தன்னுடைய பேச்சை ஆரம்பித்தார்கள். அதைத்தான் இங்கே நான் சொல்லவிரும்புகிறேன்.

முற்பகல் 10-25

கடந்தகால ஆட்சியில் நமக்கு ஏற்பட்டுவிட்ட அந்த கசப்பான உண்மைகளை நாம் எண்ணிப் பார்த்தால், தமிழ்நாட்டு மக்கள் ஓர் அற்புதமான முடிவை - அவசரமான முடிவை அல்ல - ஆழ்ந்து சிந்தித்து ஒரு முடிவை இன்றைக்கு அறிவித்து, அதன் மூலமாக நம்முடைய மாண்புமிகு தலைவர் கலைஞர் அவர்களுடைய தலைமையில் திராவிட முன்னேற்றக் கழக ஆட்சி இங்கே உருவாகியிருக்கிறது. இந்த ஆட்சியிடத்தில் தமிழ்நாட்டு மக்கள் நிரம்ப எதிர்பார்க்கிறார்கள் என்பது உண்மை. அப்படி நிரம்ப எதிர்பார்க்கிற அந்த காலகட்டத்தில் - ஐந்தாண்டுக் காலம் இந்த ஆட்சி உறுதியாக இருக்கப் போகிறது. அதில் யாருக்கும் எந்தவிதமான ஐயபபாடும் தேவையில்லை - இந்த ஐந்தாண்டுக் காலத்தில் தமிழ்நாட்டு மக்களுடைய அந்த உணர்வுகளைப் புரிந்து வைத்திருக்கின்ற நம்முடைய முதல்வர் அவர்கள், பல்வேறுபட்ட திட்டங்களை அறிவிக்க இருக்கிறார்கள்.



1996 மே 25] [திரு. பசும்பொன் தா. கிருட்டிணன்]

குறுகிய திட்டம், குறுகிய அறிக்கை என்று மாண்புமிகு உறுப்பினர் திருநாவுக்கரசு அவர்கள் குறிப்பிட்ட காரணத்தாலே, இந்த அறிக்கையில் இருக்கக்கூடிய சில குறிப்பிட்ட திட்டங்களை மட்டும் நான் அவருக்குச் சொல்லக் கடமைப்பட்டிருக்கிறேன். உள்ளாட்சித் தேர்தல்களை உடனே நடத்துவதற்கு இந்த அறிக்கையிலே தெரிவிக்கப்பட்டிருக்கிறது. வறட்சியின் காரணமாக நிலவரி ரத்து செய்யப்பட்டிருக்கின்றது. கடன் நிவாரணம் அளிப்பதாக இந்த அறிக்கையிலே உறுதி சொல்லப்பட்டிருக்கிறது.

மக்களின் வசதிக்கேற்றமாதிரி, ரேஷன் கடைகளில் எல்லாவிதமான அத்தியாவசியப் பண்டங்களும் வழங்கப்படும் என்று கூறப்பட்டு இருக்கிறது. கூட்டுறவுச் சங்கங்களின் தேர்தல்கள் பல ஆண்டுக்காலம் ஒத்திவைக்கப்பட்டு--இடையிலே நடந்த தேர்தலையும் ரத்து செய்தபின்பு--மீண்டும் அந்தக் கூட்டுறவுச் சங்கத் தேர்தல்கள் நடத்தப்படும் என்று இந்த அறிக்கையில் தெளிவுபடுத்தப்பட்டு இருக்கிறது. தொழில் முதலீடுகள் அதிகரிக்க, முதலீட்டாளர்களுடன் நேய அணுகுமுறை ஏற்படுத்தப்படும் என்று உறுதி சொல்லப்பட்டிருக்கிறது. மாவட்டந்தோறும் மதுவிலக்குப் பிரச்சாரத்தில் பெண்கள் ஈடுபடுத்தப்படுவார்கள், ஒரு மாவட்டத்திற்கு ஆயிரம் பேர் வீதம் 25,000 பேர் நியமிக்கப்படுவார்கள் என்று உறுதி கொடுக்கப்பட்டிருக்கிறது. கிராமப்புறங்களில் அடிப்படை மருத்துவவசதிகள் அளிக்கப்படும் என்று உறுதி சொல்லப்பட்டு இருக்கிறது. கல்வித் தரத்தை மேம்படுத்த நடவடிக்கை எடுக்கப்படும் என்று உறுதி அளிக்கப்பட்டிருக்கின்றது. பிற்படுத்தப்பட்ட, மிகவும் பிற்படுத்தப்பட்ட, தாழ்த்தப்பட்டோர் ஆகிய இந்த நசுக்கப்பட்ட, ஒடுக்கப்பட்ட, ஓரங்கட்டப்பட்ட மக்களுக்கு இதுவரை அளிக்கப்பட்டுவந்த 69 சதவீத இட ஒதுக்கீடு - இடையில் பறிபோனது - மீண்டும் நிலைநிறுத்தப்படும் என்று உறுதி சொல்லப்பட்டிருக்கிறது.

வட ஆற்காடு, திருச்சி, திண்டுக்கல் இப்படிப்பட்ட மாவட்டங்களில் இருக்கக்கூடிய தோல் தொழிற்சாலைகளால் ஏற்பட்டிருக்கக்கூடிய பிரச்சினைகள், உடனடியாக அரசாங்கத்தின் கவனத்தில் எடுத்துக்கொள்ளப்பட்டு, அந்தப் பிரச்சினைகள் தீர்த்துவைக்கப்படும், அதிலே ஏறத்தாழ 10 லட்சம் தொழிலாளர்கள் பணியாற்றுகிறார்களே, அவர்களுக்கு மறுவாழ்வு அளிக்கப்படும் என்ற உறுதிமொழியும் தரப்பட்டிருக்கிறது. உயர்நிலை ஊழல் விசாரணைக்குழு-மிக மிக முக்கியமான ஒரு திட்டம்-எங்கும் இலலாத ஒரு திட்டம், மத்திய சர்க்காரிலே கூட இறுதிவரையில் சிந்திக்கப்படாத ஒரு திட்டம்-இந்தத் திட்டத்தை ஏற்கெனவே நம்முடைய முதல்வர் அவர்கள் 1972 ஆம்

ஆண்டே கொண்டு வந்தார்கள். அந்தத் திட்டம் 1983-லேயோ 1984-லேயோ அப்போது அது ரத்து செய்யப்பட்டது. இப்போது அந்தத் திட்டத்திற்கு மீண்டும் உயிர் கொடுப்பதற்கு நம்முடைய ஆளுநர் அறிக்கையில் உறுதி சொல்லப்பட்டிருக்கிறது. இந்த ஆண்டு டிசம்பருக்குள் சென்னை நகருக்கு கிருஷ்ணா குடிநீர் கொண்டு வரப்படும் என்று உறுதி சொல்லப்பட்டிருக்கிறது. நம்முடைய முதல்வர் அவர்கள் உறுதி சொன்னால், அதை நிச்சயமாக நிறைவேற்றுவார்கள் என்பதை மாண்புமிகு உறுப்பினர்கள் எல்லாம் உணருவார்கள் என்பதை நான் தெரிவித்துக் கொள்கிறேன். அடிப்படை வசதிகளுக்காக, சென்னைக்கு 200 கோடி ரூபாயும் மதுரை, கோவை திருச்சி, சேலம், நெல்லைக்கு 100 கோடி ரூபாயும் ஒதுக்கப்படும் என்று உறுதி இங்கே சொல்லப்பட்டிருக்கிறது.

(முற்பகல் 10-30)

மாநில மனித உரிமை ஆணையம்-எந்த மாநிலத்திலும் இல்லாத ஒரு ஆணையம்-இங்கே உருவாக்கப்படும் என்று இங்கே தெரிவிக்கப்பட்டிருக்கிறது. மீண்டும் தமிழகத்தில் மேலவை அமைக்கப்படும் என்ற உறுதியையும் இந்த அறிக்கை மூலமாக நம்முடைய அரசாங்கம் இந்த மாமன்றத்தின் மூலம் இந்த் நாட்டுக்கு அறிவித்திருக்கிறது. மத்தியில் கூட்டாட்சி, மாநிலத்தில் சுயாட்சி அமைவதற்கு மேலும் வலியுறுத்தப்படும், அதற்கான ஏற்பாடுகள் செய்யப்படும் என்று வலியுறுத்தப்பட்டிருக்கிறது. காவல்துறையை மக்களின் நல்லுறவுத் துறையாக மாற்றுதல் என்ற அந்த வகை முயற்சிகளிலும் நம்முடைய அரசு ஈடுபடும் என்று வலியுறுத்திச் சொல்லப்பட்டிருக்கிறது. காவிரி நடுவர் மன்ற இடைக்கால ஆணை செம்மையாகச் செயல்பட உடனடியாக நடவடிக்கை எடுக்கப்படும் என்ற உறுதியும் இங்கே சொல்லப்பட்டிருக்கிறது. சமுதாய நல்லிணக்கத்தைப் போற்றிப் பாதுகாக்கவும், சமய சார்பின்மையையும் கடைப்பிடித்து, அனைத்து மதத்தினரையும், அனைத்து வருப்பினரையும் ஒரு தாய் மக்கள் என்ற எண்ணத்தை நீடித்து நிலைப்படுத்துவதற்கு உரிய நடவடிக்கைகளை, விரைந்து செயல்படுத்துவதுடன், தேவைப்படும் பகுதிகளில் எல்லாம் சமூகப் பெரியவர்களையும், அனைத்துக்கட்சி முன்னோடிகளையும் கொண்ட அமைதிக் குழுக்களை அமைத்துப் பணியாற்றும் என்ற உறுதியையும் இந்த அறிக்கையிலே தெரிவிக்கப்பட்டிருக்கிறது. எங்கும் தமிழ், எதிலும் தமிழ் என்ற அந்த கொள்கையை நிறைவேற்றுவதற்கு தனி அமைச்சகமே ஒன்றை உருவாக்கி, அதற்கென தனி அமைச்சரையும் உருவாக்கி, அந்த முயற்சியிலே இந்த அரசாங்கம் ஈடுபடும் என்று இத்தனை திட்டங்களை இந்த அறிக்கையில்



உள்ளடக்கி மேதகு ஆளுநர் அவர்கள் மூலமாக நம்முடைய மாண்புமிகு முதலமைசசர் அவர்கள் அறிவித்து இருக்கிறார்களே, இது மாண்புமிகு உறுப்பினர்களுக்கு தெரியாதா? குறிப்பாக மாண்புமிகு திருநாவுக்கரசு அவர்களுக்கு தெரியாதா என்று நான் இங்கே கேட்க விரும்புகிறேன். அதுமட்டுமல்ல, இதைத் தொடர்ந்து இன்னும் ஒரு சில விளக்கங்களைத் தெரிவிப்பது என்னுடைய கடமை. நான் கிராமத்திலிருந்து வந்தவன். விவசாயக் குடும்பத்தில் பிறந்தவன். விவசாயத்தை இன்றும் நம்பி இருக்கக்கூடியவன். விவசாயிகள் எந்தெந்த அளவிற்கு பாதிக்கப்பட்டிருக்கிறார்கள் என்பதைத் தெளிவாக உணர்ந்தவன். அந்த விவசாயிகளுக்கு பல்வேறு வகையிலே இந்த அறிக்கையிலே வாய்ப்புகள், வசதிகள், உரிமைகள், சலுகைகள் அறிவிக்கப்பட்டிருக்கின்றன என்பதை நான் இங்கே தெரிவிக்க வேண்டும். 1990 ஆம் ஆண்டு ஆளுநர் அறிக்கையிலேயே நம்முடைய தலைவர் அவர்கள் விவசாயக் கடன் ரத்து செய்யப்படும் என்று சொல்லவில்லை. ஆனாலும் கூட அதற்கான முயற்சியை மேற்கொண்டார்கள். விவசாயக் கடன் ரத்து செய்யப்பட்டது. அதிலே ஒரு விளக்கத்தை நான் சொல்ல விரும்புகிறேன். 1989ஆம் ஆண்டு மாண்புமிகு முதல்வர், தலைவர் கலைஞர் அவர்கள் ஆட்சிப் பொறுப்புக்கு வந்தவுடன் விவசாயக் கடன் ரத்து செய்யப்பட வேண்டுமென்ற கோரிக்கையை மத்திய சர்க்காருக்கு எழுதி, அப்போது பிரதமராக இருந்த மாண்புமிகு ராஜீவ் காந்தி அவர்கள் இடத்தில் கேட்டார்கள். ஆனால், பிரதமர் ராஜீவ்காந்தி அவர்கள் அதை ஏற்க முடியாது என்று திரும்ப கடிதம் அனுப்பி விட்டார்கள். அதுகுறித்து நான் நாடாளுமன்றத்தில் ஒரு கேள்வி எழுப்பினேன். அந்தக் கேள்விக்கு பதில் அளித்த அப்போதிருந்த நிதி அமைச்சர் மாண்புமிகு சவான் அவர்கள் It is not the problem concerned only with Tamil Nadu, it is the problem of whole of India. இந்தப் பிரச்சினை தமிழ் நாட்டுக்கு மட்டும் உரியதல்ல, இந்தியா முழுவதற்கும் இருக்கிறது. ஏறத்தாழ 10 ஆயிரம் கோடி ரூபாய் சலுகை அளிக்க வேண்டும். இது இயலாத காரியம், நடைபெற முடியாத காரியம் என்று மறுத்தார்கள். அதற்கு பிறகு 1990ஆம் ஆண்டு மாண்புமிகு வி.பி. சிங் அவர்கள் பிரதமராக வந்த பிறகு மீண்டும் நம்முடைய மாண்புமிகு முதல்வர் அவர்கள் கடிதம் எழுதினார்கள். ஏற்கனவே முன்னாள் பிரதமர் அவர்களுக்கு நான் கடிதம் எழுதினேன். விவசாயக் கடன் ரத்து செய்ய முடியாது என்று மறுத்து விட்டார்கள். நீங்கள் இப்போது பிரதமராக வந்திருக்கிறீர்கள். ஆகவே விவசாயக் கடன் ரத்து செய்யப்படும் என்று மக்களுக்கு நான் கொடுத்த வாக்குறுதியை நிறைவேற்றுவதற்கு நீங்கள் உதவி செய்யுங்கள் என்று சொன்னபோது மாண்புமிகு வி.பி.சிங் அவர்கள் முதலமைச்சர்களுடைய மாநாட்டை டெல்லியிலே

கூட்டினார்கள். அந்த மாநாட்டிற்கு எல்லா முதலமைச்சர்களும் வந்தார்கள். அந்த மாநாட்டில் வி.பி. சிங் அவர்கள் ஒரு கருத்தைச் சொன்னார்கள். மாண்புமிகு தமிழ் நாட்டு முதலமைச்சர் கலைஞர் அவர்கள் விவசாயக் கடன் ரத்து செய்யப்பட வேண்டுமென்று ஒரு கோரிக்கை வைத்திருக்கிறார்கள். நல்ல கோரிக்கை தான். மக்களுக்கு கொடுத்த வாக்குறுதியை நிறைவேற்றுவது அரசியல் தலைவருடைய கடமை. அந்த வகையிலே நான் அதை மதிக்கிறேன். ஆனால் இந்திய அரசாங்கத்தினுடைய நிதி நிலைமை எல்லாக் கடன்களையும் ரத்து செய்வதற்கு வாய்ப்பு இல்லாமல் இருக்கிறது என்றாலும் கூட ஒரு யோசனை சொல்கிறேன். அந்த யோசனையை எல்லா முதலமைச்சர்களும் பரிசீலியுங்கள் என்று கேட்டார்கள். என்ன யோசனை என்று சொன்ன போது அவர்கள் சொன்னார்கள், மொத்தம் இருக்கிற கடனில் பாதிக் கடனை மத்திய சர்க்கார் ஏற்றுக்கொள்ளும், மீதி பாதியை மாகாண அரசாங்கங்கள் ஏற்றுக் கொள்ளுங்கள் என்று சொன்னார்கள். வந்திருந்த முதலமைச்சர்கள் எல்லாம் ஏற்க முடியாது என்று சொன்னார்கள். மாநிலத்தில் நிதிநிலைமை சரி இல்லை. கடனை ரத்து செய்வதாக இருந்தால் முழுமையாக மத்திய சர்க்காரே அந்தத் தொகையை தாருங்கள், எங்களால் முடியாது என்று சொன்னார்கள். நம்முடைய மாண்புமிகு முதலமைச்சர் அவர்கள் கடைசி வரையில் பேசாமல் இருந்தார்கள். கடைசியாக வி.பி. சிங் அவர்கள் என்ன தமிழ் நாட்டு முதலமைச்சர் பேசாமல் இருக்கிறீர்களே என்று சொன்னபோது, அவர்கள் இறுதியாக எழுந்து சொன்னார்கள். நான் பலமுறை இந்த விவசாயக் கடனை ரத்து செய்ய வேண்டுமென்று கோரிக்கை வைத்திருக்கிறேன், இதற்கு முன்னாலிருந்த அரசாங்கம் அதை ஏற்றுக்கொள்ளவில்லை. மாண்புமிகு எம்.ஜி.ஆர். அவர்கள் கூட முதலமைச்சராக இருக்கிறபோது இந்தக் கோரிக்கையை வைத்து இருக்கிறார்கள். அதையும் அப்போது இருந்த மத்திய சர்ககார் ஏற்றுக் கொள்ளவில்லை. ஆனால் இப்போது பிரதமராக வந்திருக்கிற மாண்புமிகு வி.பி. சிங் அவர்கள் நம்முடைய கொள்கையை ஏற்றுக் கொண்டிருக்கிறார். அதுவே நமக்கு ஒரு வெற்றி. விவசாயக் கடன் ரத்து செய்யப்படவேண்டும் என்ற கொள்கையை ஏற்றுக் கொண்டிருக்கிறார். அது ஒரு வெற்றி, இதிலே அவர்கள் சொல்வது, பாதித் தொகையை மத்திய சர்க்கார் ஏற்றுக்கொள்ளும், மீதி பாதித் தொகையை மாகாண சர்க்கார் ஏற்றுக் கொள்ளுங்கள் என்று சொல்லியிருக்கிறார்கள். இதிலே நான் தெரிவித்துக் கொள்ள விரும்புவது, எல்லா முதலமைச்சர்களையும் நான் கேட்டுக் கொள்கிறேன், நம்முடைய பிரதமர் வி.பி. சிங் அவர்கள் சொல்கிற கருத்தை நாம் எல்லோரும் ஏற்றுக் கொள்வோம், பாதித் தொகையை மத்திய சர்க்கார் தரட்டும்,



அந்த அளவிற்குப் பாதியையாவது தருகிறார்களே, அதை நாம் வரவேற்போம், மீதி பாதி இருக்கிறதே அதற்கு நான் பிரதமர் அவர்களிடத்திலே ஒரு வேண்டுகோள் வைக்கின்றேன். அந்த மீதி பாதித் தொகையை இப்போது இருக்கிற சூழ்நிலையில் மாநில அரசுகள் தாங்கிக் கொள்ள முடியாத நிதி நெருக்கடியில் இருக்கின்றன. ஆகையினால், அந்த மீதி பாதித் தொகையை மத்திய சர்க்காரே மாநிலங்களுக்கு கடனாகக் கொடுக்கவேண்டும் என்று, பாரதப் பிரதமர் அவர்களைக் கேட்டுக் கொள்கிறேன் என்று சொன்னார். எல்லோரும் கை தட்டினார்கள். பிரதமர் வி.பி. சிங் அவர்களும் அதை ஏற்றுக் கொள்வதைத் தவிர, அவர்களுக்கு வேறு வகையில்லை. ஆகையினாலே, சாணக்கியமாக, திறமையாக, அற்புதமாக தன்னுடைய வாதத்தை எடுத்து வைத்தது மட்டுமல்ல, தன்னுடைய. கொள்கையை நிறைவேற்றுவதற்கு பிரதமரிடத்திலே எந்த வகையிலே எல்லாம் வாதாடி வெற்றி பெற்று, தமிழ்நாட்டிற்கு மட்டுமல்ல, அகில இந்தியாவிற்கும் விவசாயிகளுடைய கடனை ரத்து செய்து, பெற்றுத் தந்த, உரிமையைப் பெற்றுத் தந்த ஒரு ஒப்பற்ற தலைவரைத்தான் தமிழ்நாடு இன்றைக்கு முதலமைச்சராகப் பெற்று இருக்கிறது. (மேசையைத் தட்டும் ஒலி) ஆகையினாலே, இதிலே பல்வேறுபட்ட திட்டங்களை விளக்கமாக அவர்கள் சொல்லவில்லை என்று கருதவேண்டிய அவசியம் இல்லை.

மாண்புமிகு பேரவைத் துணைத் தலைவர் தலைமை

முற்பகல் *10–35*

இப்போது விவசாயிகளுக்கு நில வரியை ரத்து செய்து இருக்கிறார். இப்போது விவசாயிகளுக்கு கடன் உதவி, கடன் நிவாரணம் அளிக்கப்படும் என்று கூறியிருக்கிறார். இன்னும் என்னென்ன திட்டங்களை அவர்கள் அறிவிக்கப்போகிறார். அவருடைய உள்ளத்திலே என்ன இருக்கிறது என்பதை நம்மாலே கண்டுபிடிக்க முடியாது. அந்த அளவிற்கு பல்வேறு திட்டங்கள் விவசாயிகளுக்காக வர இருக்கின்றன. அதே நேரத்தில், விவசாயிகளுக்கு இந்த நேரத்தில் மின்சாரம் வரும், இத்தனை மணியிலிருந்து இத்தனை மணி வரையிலும் வரும் என்ற உறுதி அளிக்கப்படும் என்று சொல்லப்பட்டு இருக்கிறது. இது ஒரு முக்கியமான பிரச்சினை. விவசாயிகள் இரவிலே எல்லாம் காத்துக் கிடக்கிறார்கள். எப்போது மின்சாரம் வரும் எப்போது வராது என்று தெரியவில்லை. ஆனால், இந்த அறிவிப்பு இன்றைக்கு விவசாயிகளுக்கு பால் வார்த்ததைப் போல அமைந்திருக்கிறது என்பதை நான் தெரிவித்துக் கொள்ள விரும்புகிறேன்.

இன்னொன்றையும் முதலமைச்சர் அவர்களுடைய கவனத்திற்கு நான் கொண்டு வர வேண்டும். இன்றைக்கு விவசாயிகளுக்கு வீட்டு

வரி என்ற அந்த அடிப்படையில், வீட்டுக்கு மேல் கூரைக்கு ஒரு வரி, கீழ்த் தளத்திற்கு ஒரு வரி எனறு இரட்டை வரி போடப்பட்டு இருந்தது. சென்ற அரசாங்கத்திலேதான் இந்த வரி விதிக்கப்பட்டு இருந்தது. இந்தியாவில் எந்த மாநிலத்திலும் இப்படிப்பட்ட இரட்டை வரி கிடையாது. தமிழ்நாட்டிலேதான் இந்த இரட்டை வரி இருந்தது. அடித்தளத்திற்கும் வரி. அதை அகற்ற ஆட்சிப் பொறுப்பேற்ற முதல் நாளில், முதல் கையெழுத்திட்டார் நம்முடைய தலைவர் அவர்கள் நம்முடைய மாண்புமிகு முதல்வர் அவர்கள். (மேசையை தட்டும் ஒலி) அந்தத் தலவரி, அறவே நீக்கப்படும் என்று. ஏறத்தாழ 14 கோடி ரூபாய்க்கு அந்த வரி ரத்து செய்யப்படும். ஏற்கனவே பாக்கி இருக்கக்கூடிய 23 கோடி ரூபாய், அதுவும் ரத்து செய்யப்படும் என்று அறிவித்த அறிவிப்பு இருக்கிறதே, இது கோடிக்கணக்கான மக்களிடத்திலே இன்றைக்கு பெரிய மகிழ்ச்சியையும், உற்சாகத்தையும் ஏற்படுத்தி இருக்கிறது என்பதை நான் இந்த மன்றத்தினுடைய கவனத்திற்குக் கொண்டுவர விரும்புகிறேன்.

இன்னொன்று, நிலத்திற்குப் போட்டிருக்கிற வரி. ஒரு ரூபாய்க்கு 10 ரூபாய் வரையில் செஸ் விதிக்கலாம் என்று கடந்த கால ஆட்சியிலே போடப்பட்டு இருக்கிறது. விவசாயிகளுக்கு என்ன வருமானம் இருக்கிறது, எப்படி அவர்கள் அதைச் செலுதத முடியும். ஆனால் ரூபாய்க்கு. 10 ரூபாய் வரையில், செஸ் ஏற்றிக் கொள்ளலாம், அது பஞ்சாயத்து யூனியனுக்குப் போகக்கூடிய அந்த நிதி என்று போட்டுவிட்டு, இப்போது, இந்த ஆண்டு ரூபாய்க்கு 5 ரூபாய் வசூல் செய்யலாம் என்று போட்டிருக்கிறார்கள். ரூபாய்க்கு, 5 ரூபாய் மேல் வரி வசூலிக்கப்படுகிறது. அதையும் ரத்து செய்யவேண்டும் என்று நான் முதல்வர் அவர்களிடத்திலே இந்த நேரத்திலே கேட்டுக் கொள்வது என்னுடைய கடமை.

இன்னொன்று, மரங்களை பல ஆண்டுக்காலமாக வளர்த்து பயன்படுத்திக்கொண்டு வருகிறார்கள். அதற்கு 2-சி பட்டா என்று வழங்கப்பட்டு இருக்கிறது. அந்த 2-சி பட்டாவிற்கு நீங்கள் ஆட்சியிலே இருந்த காலத்திலே, வெறும் 5 ரூபாய்தான் வரி இருந்தது. இன்றைக்கு அந்த 5 ரூபாய் வரி 60 ரூபாயாக ஏற்றப்பட்டு இருக்கிறது. கடந்த ஆட்சியிலே அந்தக் காரியம் செய்யப்பட்டு இருக்கிறது. ஆகையினாலே அதையும் நம்முடைய முதல்வர் அவர்கள் பரிசீலிக்க வேண்டும் என்று நான் தெரிவித்துக் கொள்கிறேன். ஆளுநர் அறிக்கையிலே குறிப்பிடப்படவில்லை என்று சொன்னாலும் கூட, இவைகளை எல்லாம், முதல்வர் அவர்கள் மனதிலே வைத்துக் கொள்வார்கள் என்ற காரணத்தாலே, இதை நான் தெரிவித்துக் கொள்கிறேன்.





அதேபோல், உள்ளாட்சித் தேர்தல்களை உடனடியாக நடத்துவதற்கு, அறிவிப்பு தரப்பட்டிருக்கிறது. உள்ளாட்சித் தேர்தல்கள் நடந்துவிட்டாலே, முக்கால்வாசிப் பிரச்சினைகள் தீர்ந்து போகும். தெருவிளக்குகள் இன்றைக்கு எரியவில்லை. அவைகள் எரிந்துவிடும். குடிநீர் கிடைக்கவில்லை. அவைகள் கிடைக்கும். சாலை வசதிகள் அறவே இல்லை. ஓரளவிற்கு அவைகள் எல்லாம் கிடைத்துவிடும். ரேசன் கடைகளிலே பொருட்கள் கிடைக்கவில்லை. அவைகள் எல்லாம் உள்ளாட்சித தேர்தல்கள் நடந்துவிட்டாலே கிடைத்துவிடும். அப்படிபட்ட அந்த நல்ல திட்டத்தை கலைஞர் அவர்கள் அறிவித்திருக்கிறார்கள். நம்முடைய மாண்புமிகு முதல்வர் அவர்கள் அறிவித்திருக்கின்றார்கள். இதிலே குடிதண்ணீர் பிரச்சினைக்கு நம்முடைய முதல்வர் அவர்கள் மிக முக்கியத்துவம் தந்திருக்கின்றார்கள். அவர்கள் அறிவித்திருக்கின்றார்கள், ஏற்கெனவே ஆட்சியிலே இருந்தபோது மின்சாரம் இல்லாத கிராமமே இல்லை என்று ஆக்குவேன் என்று அறிவித்து எல்லா குக்கிராமங்களுக்கும் ஹேபிடேஷன்ஸ்-குடியிருப்புகளுக்கும் கூட மின்சார வசதி செய்து கொடுத்தார்கள். அதைப்போல இப்போது ஒரு சபதம் எடுத்துக்கொண்டு அறிவித்திருக்கின்றார்கள். எந்த குக்கிராமங்களுக்கும் குடி தண்ணீர் இல்லை; அதுவும் பாதுகாக்கப்பட்ட குடிதண்ணீர் இல்லை என்ற நிலை இல்லாமல் ஆக்குவேன் என அறிவித்திருக்கிறார்கள். இது ஒரு பெரிய வரப்பிரசாதம் கிராமத்து மக்களுக்கு. இதிலே ஒன்றை நான் குறிப்பிட விரும்புகிறேன். ஏற்கெனவே இருந்த ஆட்சியில் அவருடைய கொள்கைக் குறிப்பை ஆளுநர் மூலமாக தெரிவித்தபோது பிப்ரவரி மாதம் 14-ஆம் தேதி என்று கருதுகிறேன். அதிலே ஒரு தவறான குறிப்பு இருக்கிறது. அதை கவனத்திற்குக் கொண்டுவருவ்தற்காகச் சொல்கிறேன்.

"Only 50 rural habitations in the State are yet to be provided with protected drinking water supply."-- Only 50 rural habitation, not 50 Villages.

"All these habitations will be covered by March 1996 and every habitation in the State will have atleast one protected source of Water-supply.

*முற்பகல் 10-40*

இப்படி சென்ற ஆட்சி, மறைந்துபோன ஆட்சி, அந்த ஆட்சியில் இப்படிப்பட்ட ஒரு தவறான கருத்து சொல்லப்பட்டிருக்கிறது. ஆனால் நம்முடைய மாண்புமிகு முதல்வர் அவர்கள் முதல்வராக வருவதற்கு முன்பே திராவிட முன்னேற்றக் கழகத்தின் தலைவராக இருக்கிற அந்தக் காலக் கட்டத்தில் தங்களுடைய தேர்தல் அறிக்கையை

வெளியிடுகிறபோது அவர்கள் என்ன தெரிவித்திருக்கிறார்கள் தெரியுமா? தமிழ்நாட்டில் இன்னும் 1,044 குடிநீர் வசதியற்ற குடியிருப்புகளும்- குடியிருப்பு என்பது வேறு, கிராமங்கள் என்பது வேறு. ஹேபிடேஷன் என்பது வேறு, வில்லேஜஸ் என்பது வேறு--1,044 குடிநீர் வசதியற்ற குடியிருப்புகளும், 35,734 பகுதி அளவு குடிதண்ணீர் வசதியற்ற குடியிருப்புகளும் உள்ளன. இது தலைவர் அவர்களுக்கு கிடைத்த செய்தி. ஆனால் அரசாங்கம் கொடுத்திருக்கிற தகவல் 50 குடியிருப்புகளுக்கு மட்டும்தான் குடிதண்ணீர் வசதி செய்து தரப்படவில்லை என்று தெரிவிக்கப்பட்டிருக்கிறது. ஆக, இப்படிப்பட்ட தவறான செய்திகளை நாட்டு மக்களுக்குச் சொல்லித்தான் கடந்த ஆட்சி நடைபெற்றது என்பதை நான் இங்கே தெரிவித்துக்கொள்ள விரும்புகிறேன்.

அதேபோல் தொழில் துறை வளர்ச்சிக்கு நம்முடைய தலைவர் அவர்கள் உறுதி அளித்திருக்கின்றார்கள். ஏற்கெனவே 1989ஆம் ஆண்டு அவர்கள் பொறுப்பேற்றிருந்தபோது அப்போது கவர்னர் அறிக்கையில் ஒரு கொள்கையைச் சொல்லியிருக்கிறார்கள்.

Tamil Nadu occupied the Fifth place in terms of Central investment in the State in 1975-1976. Central investment in the State has not kept pace, with the result that the State has slipped in 1986-87 to the tenth place. Government would continue to press for greater share of Central investment in the State as a catalyst to rapid industrial growth. 1989-ஆம் ஆண்டு ஆளுநர் உரையில் நம்முடைய தலைவர் மாண்புமிகு முதல்வர் அவர்கள் முதல்வராக இருந்தபோது தெரிவிக்கப்பட்ட கருத்து, அப்போது சொன்னது மத்திய சர்க்காரினுடைய இன்வெஸ்ட்மெண்ட், மத்திய சர்க்காரினுடைய முதலீடு வெகுவாக தமிழ்நாட்டில் குறைந்து போய்விட்டது. 3-வது இடத்திலே இருந்தது 10-வது இடத்திற்கு வந்துவிட்டது. எனவே இந்த அரசாங்கம் மத்திய அரசாங்கத்தினுடைய இன்வெஸ்ட்மென்ட்-முதலீட்டை அதிகப்படுத்துவதற்கு முயற்சி எடுத்துக்கொள்ளும் என்று அப்போது தெரிவித்திருக்கிறார்கள். அது இப்போதும் தொடரும். அந்த அறிக்கையில் அவர்கள் தெரிவித்திருப்பது "In the present economic context. Tamil Nadu endowed with good infrastructure, well educated and skilled manpower, and international airport and several seaports should have been in the forefront of industrial development in the Country. However in the last 5 years the State has not been able to capitalise on its advantages. This Government will adopt an investor friendly approach and strive enthusiastically to attract more industrial investment to Tamil Nadu. A Special policy package





for small scale entrepreneurs will also be introduced". என்று இந்த புதியதொழில் கொள்கையை தலைவர் முதல்வர் அவர்கள் இங்கே அறிவித்திருக்கின்றார்கள். இதுவும் தமிழ்நாட்டிற்கு ஒரு பெரிய வரப்பிரசாதமாக அமையும். இன்னொன்றையும் இந்தத் தொழில் துறையிலே குறிப்பிட்டிருக்கின்றார்கள். ஏற்கெனவே இருந்த ஆட்சியில் குறிப்பாக சிறு தொழில்கள் பாதிக்கப்பட்டிருக்கின்றன. எடுத்துக்காட்டாக சிறு தொழில்களுக்கு ஏற்கெனவே மின்சாரம் அவர்கள் உபயோகிப்பதற்காக அவர்களுக்குப் போடப்பட்டிருந்த ஒரு டெபாசிட்-முன்வைப்புத் தொகை ஒரு ஹார்ஸ் பவருக்கு 50 ரூபாய் என்றுதான் இருந்தது. இது நம்முடைய மாண்புமிகு முதல்வர் அவர்கள், முன்பு முதலமைச்சராக இருந்த காலத்திலே போடப்பட்டிருந்தது. இப்போது அது 300 ரூபாயாக ஆக்கப்பட்டிருக்கிறது. ஒரு ஹார்ஸ் பவர்-க்கு 300 ரூபாய் டெபாசிட். அதுவும் சிறு தொழிற்சாலைகளுக்கு. அதைப்போலவே டெவலப்மெண்ட் சார்ஜ் என்று ஒரு ஹார்ஸ் பவருக்கு 300 ரூபாய் போடப்பட்டிருக்கிறது. *(மணியடிக்கப்பெற்றது).*

*முற்பகல் 10-45*

**மாண்புமிகு பேரவைத் துணைத் தலைவர்:** மாண்புமிகு உறுப்பினர் அவர்களுக்கு தெரிவித்துக் கொள்கிறேன். தாங்கள் முதலில் விவாதத்தை துவக்குகிறீர்கள் என்பதால் உங்களுக்கு அதிக நேரம் வழங்கப்பட்டிருக்கிறது. நீங்கள் 10-16க்கு ஆரம்பித்தீர்கள். இன்னும் 1 நிமிடம் தருகிறேன். அதற்குள் முடித்து விடுங்கள்.

**திரு. பசும்பொன் தா. கிருட்டிணன்:** மாண்புமிகு பேரவைத் துணைத் தலைவர் அவர்களே, இந்த மாமன்றத்திலே இது என்னுடைய கன்னிப் பேச்சு (சிரிப்பு). இந்த மாமன்றத்திலே, இதுதான் என்னுடைய கன்னிப் பேச்சு.

**மாண்புமிகு பேரவைத் துணைத் தலைவர்:** கன்னிப் பேச்சு என்பதால்தான் அதிக நேரம் வழங்கப்பபட்டிருக்கிறது. அதைச் சரியாகப் பயன்படுத்திக். கொள்ளுங்கள்.

**திரு. பசும்பொன் தா. கிருட்டிணன்:** கன்னிப்பேச்சு பேசுகிற நேரத்திலே யாரும் குறுக்கிடக்கூடாது என்று ஒரு மரபு இருக்கிறது. நான் அதை சொல்ல வேண்டும் என்று அவசியம் இல்லை. அதைப்போலவே...

**மாண்புமிகு பேரவைத் துணைத் தலைவர்:** அதில் மற்றவர்கள் தான் குறுக்கிடக் கூடாது. இந்த இருக்கையில் இருப்பவர்கள் குறுக்கிடலாம்.

**திரு. பசும்பொன் தா. கிருட்டிணன்:** அதைப்போலவே நிறைவேற்றுவதற்கு என்று ஏராளமான திட்டங்களை நம்முடைய மாண்புமிகு முதலமைச்சர் அவர்கள் அறிவித்திருக்கிறார்கள். ஆனால் இதை எல்லாவற்றையும் சொல்லிவிட்டால் மற்றவர்கள் பேசுவதற்கு வழி இருக்காது என்று நான் நினைக்கிறேன். ஆகவே முக்கியமானதாக ஏற்கெனவே நான் சொன்னதைப்போல அண்ணா வழியிலே நடைபெறுகிற இந்த அரசு, இந்தி ஆதிக்கத்தை எதிர்க்கின்ற அரசு என்று நான் சொன்னேன். இதிலே ஒரே ஒரு கருத்தை மட்டும் சொல்ல விரும்புகிறேன். இன்று தமிழ்நாட்டில் ஆங்கிலத்திற்கு முக்கியத்துவம் கொடுக்கப்படுகிறதோ, அதன் காரணமாக தமிழுக்கு முக்கியத்துவம் இல்லையோ என்ற கருத்து பரவலாகப் பேசப்பட்டு வருகிறது. அதை மாற்றுவதற்காகத்தான் நம்முடைய மாண்புமிகு முதல்வர் அவர்கள், தமிழ் வளர்ச்சிக்கு என்று ஒரு இலாகாவையே அறிவித்திருக்கிறார்கள். அது மட்டும் அல்ல, அண்ணா அவர்கள் ராஜ்ய சபையிலே குறிப்பிட்ட அந்த கருத்தை மீண்டும் இங்கே நான் சொல்ல விரும்புகிறேன். I Plead for English, not because I am enamoured of it; but it is a convenient tool which distributes merits and de-merits evenly. நான் ஆங்கிலத்தை இப்போது விரும்புகிறேன் என்று சொன்னால், ஆங்கிலம் எனக்கு வேண்டிய மொழி என்பதற்காக அல்ல; நான் விரும்புகிறேன் என்பதற்காக அல்ல. இந்த ஆங்கிலம் ஒன்றுதான் இந்தி பேசுகிற மக்களுக்கும், இந்தி பேசாத மக்களுக்கும், நன்மையையும் தீமையையும் சரிசமமாகப் பகிர்ந்து தருகிறது. இந்தி பேசாதவர்களுக்கு என்ன தீமை வருகிறதோ, அதே தீமை இந்தி பேசுகிறவர்களுக்கு ஆங்கிலத்தால் வருகிறது. இந்தி பேசுகிறவர்களுக்கு ஆங்கிலத்தால் என்ன நன்மை வருகிறதோ அதே நன்மை இந்தி பேசக்கூடிய மக்களுக்கு ஆங்கிலத்தால் வருகிறது. அந்த காரணத்தினால்தான் நான் ஆங்கிலத்தை விரும்புகிறேனே தவிர, ஆங்கிலம் எனக்கு வேண்டிய மொழி அல்ல என்று சொன்னார்கள்.

அதைத்தான் இன்றைக்கும் நம்முடைய தலைவர் மாண்புமிகு முதல்வர் அவர்கள், இந்தி ஆதிக்கத்தை எந்தக் காலத்திலும், எந்த வழியிலேயும் ஏற்றுக் கொள்ள முடியாது. அதற்குப் பதிலாக பண்டித நேரு அவர்கள் கொடுத்த வாக்குறுதியை பாராளுமன்றம் சட்டம் ஆக்க வேண்டும். அதை நிறைவேற்றித் தரவேண்டும். அதுதான் மக்களுக்கு திருப்தி தரும். தமிழ்நாட்டு மக்களுக்கு திருப்தியை கொடுக்கும் என்ற கருத்தைக் கூறி, அதற்கு இடையிலே நம்முடைய தமிழ்நாட்டில் தமிழை



ஆட்சி மொழியாக்குவதற்கு எங்கும் தமிழ் எதிலும் தமிழ் என்ற அந்த நிலையை உருவாக்குவதற்கு அவர்கள் முயற்சி எடுத்துக் கொண்டிருக்கிறார்கள். ஆகவே அதையும் நான் இந்த நேரத்திலே பாராட்டுகிறேன்.

அதைப்போலவே கடைசியாக என்னுடைய தொகுதி சம்பந்தமாக ஒரே ஒரு கருத்தை மட்டும் நான் இங்கே வலியுறுத்திச் சொல்லக் கடமைப்பட்டிருக்கிறேன். நம்முடைய தலைவர் முதல்வர் அவர்கள் எப்படி நாட்டு மக்களுக்கு வாக்குறுதி தந்திருக்கிறார்களோ, அதைப் போலவே சட்டமன்ற உறுப்பினர்களாக தேர்ந்தெடுக்கப்பட்ட நாங்களும் சில வாக்குறுதிகளை தந்திருக்கிறோம். சிவகங்கை கிராபைட் தொழிற்சாலை என்பது நீண்ட நாட்களாக நம்முடைய மக்களுடைய கவனத்தை ஈர்த்துக் கொண்டிருக்கிற ஒரு பிரச்சினை. பாராளுமன்றத்திலே நான் பேசுகிறபோது கூட, இந்த கிராபைட் தொழிற்சாலையை சிவகங்கையிலே துவக்கப்படவில்லை என்றால் நான் சாகும் வரை உண்ணாவிரதம் இருக்கபோகிறேன் என்று பேசினேன். எல்லா உறுப்பினர்களும் என்னை சமாதானப்படுத்தினார்கள். ஆனால் நான் உயிரோடு இருக்கிறேன். தொழிற்சாலை இன்னும் வரவில்லை. இப்போதும் அந்த உறுதியை மக்களுக்கு நான் சொல்லியிருககிறேன். அந்த தொழிற்சாலை சிவகங்கையிலே வருமேயானால், நெய்வேலி லிக்னைட் கார்ப்பரேஷன் போல, நெய்வேலி நிலக்கரிச் சுரங்கம் இருப்பதைப் போல, ஒரு பெரிய தொழிற்சாலையாக, பலலாயிரக்கணக்கானவர்களுக்கு வேலை வாய்ப்பைத் தருகிற ஒரு வாய்ப்பாக அது அமையும். அதையே நான் முதல்வர் அவர்களிடத்திலே தேர்தல் நேரத்திலேயே வருகிற போதே சொன்னேன். இப்போது கடிதம் மூலம் தெரிவித்திருக்கிறேன். அதை அவர்கள் அன்போடு பரிசீலிக்கிறார்கள் என்பதை நான் அறிவேன். இருநதாலும் அதை என் தொகுதி மக்கள் சார்பாக நான் தெரிவித்துக் கொள்ள விரும்புகிறேன். இன்னொன்றையும் சொல்ல விரும்புகிறேன். காளையார் கோவில் ஒன்றியம் என்று என் தொகுதியில் உள்ளது. பல இடங்களில் குடிநீர் கிடைக்கவில்லை. அந்த ஒன்றியத்திற்குள்ளே எங்காவது ஒரு இடத்தில் என்னை கொண்டுபோய் விட்டுவிட்டால் திரும்பி வர முடியாது. சாலை வசதி ஒன்றுகூட கிடையாது. நூற்றுக்கணக்கான கிராமங்கள் அப்படி வசதியற்ற நிலையிலே இருக்கின்றன. அப்படிப்பட்ட அந்தப் பகுதிக்கு ஒரு சிறப்புத் திட்டத்தை நம்முடைய ஆட்சியிலே தந்து உதவ வேண்டும் என்று இந்த நேரத்திலே நான் கேட்டுக்கொள்கிறேன்.

[திரு. பசும்பொன் தா. கிருட்டிணன்] [1996 மே 25 முற்பகல் 10-50

இன்னொன்று, மாண்புமிகு முதல்வர் அவர்கள் ஏற்கனவே செய்த ஒரு காரியம். முத்தரையர்கள் என்ற சமுதாயத்தினரை மிகவும் பிற்படுத்தப்பட்டோர் பட்டியலிலே நீங்கள் சேர்த்து அந்தச் சமுதாயத்திற்கு பெருமை தந்திருக்கிறீர்கள். அந்தச் சமுதாய மக்களுக்கு ஆதிதராவிடர் மக்களுக்கு இலவச வீடு கட்டித் தருவதைப்போல ஒரு திட்டத்தை நீங்கள் 1989-லே துவக்கினீர்கள். அந்த முத்தரையர்களுக்கு வீடு கட்டித்தரப்பபடுகிற திட்டம் இடையிலே கைவிடப்பட்டது. அதை நீங்கள் மனமுவந்து பரிசிலிக்க வேண்டுமென்று நான் உங்களை கேட்டுக்கொள்கிறேன். அந்த முத்தரையர் சமுதாயத்திற்கும் இலவசமாக கான்கிரீட் வீடுகள் கட்டிக் கொடுக்கின்ற திட்டத்தை நீங்கள் செயல்படுத்தி அந்த மக்களை கைதூக்கிவிட வேண்டும் என்று நான் இந்தச் சந்தர்ப்பத்திலே கேட்டுக்கொண்டு இன்னும் நிறைய சொல்ல வேண்டுமென்று இருந்தாலும் கூட அவைகளை எல்லாம் பட்ஜட் வருகின்ற நேரத்திலே நான் தெரிவிக்கின்றேன் என்று சொல்லி இந்த அற்புதமான திட்டங்களை ஆளுநர் மூலமாக நம்முடைய அரசாங்கம் நாட்டுக்குத் தெரிவித்திருக்கிறது. இந்த மன்றத்திற்குத் தெரிவித்திருக்கிறது. அந்த அறிக்கையை, அந்த கருத்தை நமக்காக இந்த மன்றத்தினுடைய வேண்டுகோளை ஏற்று ஆளுநர் அவர்கள் இந்த அவைக்குத் தந்து அதை இந்த அவையிலே சமர்ப்பித்ததற்காக இந்த மாமன்றம் தன்னுடைய நன்றியை ஆளுநர் அவர்களுக்குத் தெரிவித்துக் கொள்கின்றது என்ற தீர்மானத்தை இந்த மன்றம் ஏகமனதாக நிறைவேற்றித்தர வேண்டுமென்று நான் உங்களையெல்லாம் கேட்டுக் கொண்டு என்னுடைய உரையை நிறைவு செய்கின்றேன். நன்றி. வணக்கம்.

## 1. தகவல் கோரல்--தொடர்ச்சி

### (அ) 24-5-1996 அன்று இரங்கல் தீர்மானம் எடுத்துக் கொள்ளப்பட்ட நடைமுறை பற்றி ஓர் உறுப்பினர் பத்திரிகைக்கு அளித்த செய்தி குறித்து--தொடர்ச்சி

**மாண்புமிகு பேரவைத் துணைத் தலைவர்:** திரு. எஸ். திருநாவுக்கரசு.

***திரு. எஸ். திருநாவுக்கரசு:** பேரவைத் துணைத் தலைவர் அவர்களே, ஒரு சிறு தன்னிலை விளக்கம். இன்று காலை.....

**மாண்புமிகு பேரவைத் துணைத் தலைவர்:** மாண்புமிகு உறுப்பினர் திருநாவுக்கரசு, காலையிலேயே அந்தப் பிரச்சினைக்குப் பதில் சொல்லி முடித்தாகிவிட்டது. தன்னிலை விளக்கம் எதுவாக இருந்தாலும்



1996 மே 25] [பேரவைத் துணைத் தலைவர்]

அறையில் வந்து தெரிவித்துக் கொள்ளலாம். அடுத்து, மாண்புமிகு உறுப்பினர் திரு. ச. அழகிரி. (குறுக்கீடு) உட்காருங்கள். அந்தப் பிரச்சினையைப் பேசி முடித்தாகிவிட்டது. நீங்கள் அறைக்கு வந்து பேசுங்கள். மாண்புமிகு உறுப்பினர் திரு. ச. அழகிரி. (குறுக்கீடு) உங்களுக்கு அனுமதி மறுக்கப்படுகிறது. காலையிலேயே இதுசம்பந்தமாக பிரச்சினை எழுப்பி முதலமைச்சரும் பதில் சொல்லி முடித்திருக்கிறார்கள்.

**திரு. எஸ். திருநாவுக்கரசு:** பேரவைத் துணைத் தலைவர் அவர்களே, என்னவென்று கேளுங்கள்.

**மாண்புமிகு பேரவைத் துணைத் தலைவர்:** அந்த நேரம் பிரச்சினை நடந்துகொண்டிருக்கும்போது நீங்களும் இங்கே இருந்தீர்கள். (குறுக்கீடு) அதாவது பிரச்சினை நடந்து கொண்டிருக்கும்போது நீங்களும் இருந்தீர்கள். தன்னிலை விளக்கம் அளிப்பதாக இருந்தால் அப்போதே எழுந்து தெரிவித்திருக்கலாம். எனவே, இப்போது தயவுசெய்து உட்காருங்கள். (குறுக்கீடு) உட்காருங்கள். மாண்புமிகு உறுப்பினர் அழகிரி. (குறுக்கீடு) உட்காருங்கள். காலையிலேயே பேசி முடித்தாகிவிட்டது. மேலும் ஏதாவது சொல்லவேண்டுமென்றால் நீங்கள் அறைக்கு வந்து சொல்லுங்கள்.

**திரு. எஸ். திருநாவுக்கரசு:** துணைத் தலைவர் அவர்களே, அறையிலே பேசுகின்ற விஷயம் அல்ல.

**மாண்புமிகு பேரவைத் துணைத் தலைவர்:** மாண்புமிகு உறுப்பினர் திருநாவுக்கரசு அறியவும். காலையிலே பிரச்சினை நடந்து கொண்டிருந்தபோது நீங்கள் அவையிலே இருந்தீர்கள். அவையிலே இருந்தபோது அப்போதே நீங்கள் தன்னிலை விளக்கம் கொடுத்திருக்கலாம்.

**திரு. எஸ். திருநாவுக்கரசு:** துணைத் தலைவர் அவர்களே, கான்ட்ரோவர்சி இல்லை. ஒரே நிமிடத்தில் முடித்துவிடுகிறேன். இல்லையென்றால் இதையெல்லாம் திரும்ப வெளியிலேதான் சொல்ல முடியும். ஒரு நிமிடம் பேசவிட்டீர்கள் என்றால் என்னவென்று சொல்லிவிடுகிறேன்.

**மாண்புமிகு பேரவைத் துணைத் தலைவர்:** சரி. சுருக்கமாகச் சொல்லுங்கள்.

**திரு. எஸ். திருநாவுக்கரசு:** துணைத் தலைவர் அவர்களே, அந்த நாற்காலிக்கு ஏதாவது சக்தி இருக்கிறதா அந்த மாதிரி? எல்லோரும் உட்கார்ந்தவுடனே இந்த மாதிரி ஆகிவிடுகிறார்கள்.

**மாண்புமிகு பேரவைத் துணைத் தலைவர்:** இருக்கைக்கு உள்நோக்கம் கற்பித்துப் பேசக்கூடாது. மாண்புமிகு அவை முன்னவர்.

**மாண்புமிகு பேராசிரியர் க. அன்பழகன்:** மாண்புமிகு பேரவைத் துணைத் தலைவர் அவர்களே, பிரச்சினைகள் வருகிறபோது எந்த மாண்புமிகு உறுப்பினரும் அந்தப் பிரச்சினையிலே தங்களுக்குத் தொடர்பு இருக்குமானால், ஒரு கருத்தைத் தெரிவிக்க வேண்டுமானால் தெரிவிக்கலாம். ஆனால் தாங்கள் நினைக்கின்றபோதெல்லாம் ஒரு பிரச்சினையை விளக்குவதற்கு இந்த அவையிலே நியாயமாக இடம் அளிக்க முடியாது. அதிலேயும் மாண்புமிகு உறுப்பினர் அவர்கள் அவரே ஒரு பிரச்சினையாக ஆகிவிடக்கூடாது. ஏனென்றால் பிரச்சினையை விளக்குவதே ஒரு பெரிய பிரச்சினையாகி அந்தப் பிரச்சினையை விளக்குவதுதான் தன்னுடைய ஒரே பொறுப்பு என்ற ஒரு சூழ்நிலையில் ஒரு மாண்புமிகு உறுப்பினர் நினைத்தபோது பிரச்சினையை எழுப்புவது இந்த அவையினுடைய மரபுக்கு ஏற்றதல்ல என்பதால் நான் முன்னவர் என்ற முறையில் மாண்புமிகு உறுப்பினரை அப்படி ஒரு பிரச்சினை இருக்குமானால் நாளை சபாநாயகர் இங்கே இருக்கின்றபோது அந்தப் பிரச்சினையை எழுப்பலாம் என்று தெரிவித்து அவரை இப்போது அதை எழுப்பாமல் இருக்குமாறு கேட்டுக்கொள்கிறேன். (குறுக்கீடு)

**மாண்புமிகு பேரவைத் துணைத் தலைவர்:** உட்காருங்கள். அவை முன்னவர் அவர்கள் கேட்டுக்கொண்டதற்கிணங்க தயவு செய்து உட்காருங்கள். (குறுக்கீடு) அதாவது பிரச்சினை நடந்தபோது நீங்கள் சபையிலே இருந்தீர்கள். ஏதாவது தன்னிலை விளக்கம் தருவதாக இருந்தால் நீங்கள் அப்போதே எழுந்து சொல்லியிருக்கலாம். இப்போது நீங்கள் நினைத்தபோதெல்லாம் எழுந்து பேசவேண்டும் என்றால் அது முடியாது. அதற்கு மரபு இடம் தராது. திரு. ச. அழகிரி.

**திரு. எஸ். திருநாவுக்கரசு:** பேரவைத் துணைத் தலைவர் அவர்களே, பின்னர் எதிர்க்கட்சித் தலைவரிடமிருந்து கேள்விப்பட்டதை . . . . .

**மாண்புமிகு பேரவைத் துணைத் தலைவர்:** மாண்புமிகு அவை முன்னவர்.

*முற்பகல் 10-55*

**மாண்புமிகு பேராசிரியர் க. அன்பழகன்:** மாண்புமிகு பேரவைத் துணைத் தலைவர் அவர்களே, அப்படி ஏதேனும் பிரச்சினை இருக்குமானால் இன்றையதினம் அவர் எழுதி சபாநாயகர் அவர்களிடத்திலே கொடுத்து நாளைக்குக் காலையிலே வந்த உடன்



அதை விளக்கலாம். யாராக இருந்தாலும் எல்லா நேரத்திலும் தங்கள், தங்களுக்கு ஏற்படுகிற பிரச்சினையை அவையிலே அந்த அந்த நேரத்திலே கொண்டு வருவது என்பது அவை மரபுக்கு ஏற்றது அல்ல என்பதை தாங்கள் மூலம் தெரிவித்துக் கொள்கிறேன்.

**மாண்புமிகு பேரவைத் துணைத் தலைவர்:** நீங்கள் எழுத்து மூலமாக எழுதிக் கொடுத்து நாளைக்கு பேரவைத் தலைவர் ஏற்றுக்கொண்ட பிறகு வந்து பேசுங்கள். இப்போது உட்காருங்கள்.

**திரு. எஸ். திருநாவுக்கரசு:** மாண்புமிகு பேரவைத் துணைத் தலைவர் அவர்களே, இன்றைக்கு நடந்ததை இன்றைக்குச் சொல்கிறேன். ஏன் நாளைக்கு எழுதிக் கொடுக்கவேண்டும்?

**மாண்புமிகு பேரவைத் துணைத் தலைவர்:** இப்போது நீங்கள் உட்காருங்கள். மாண்புமிகு உறுப்பினர் திரு. ச. அழகிரி பேசலாம். நீங்கள் பேசவில்லை என்றால் அடுத்த உறுப்பினரை நான் கூப்பிட வேண்டி வரும். உங்களை நான் அழைத்து இருக்கிறேன், பேசுங்கள்.

**திரு. எஸ். திருநாவுக்கரசு :** இன்றைக்கு நடந்த நிகழ்ச்சியைப் பற்றி நான் கேட்கவிரும்புகிறேன்.

**மாண்புமிகு பேரவைத் துணைத் தலைவர்:** இன்றைக்கு நீங்கள் அந்த நேரத்திலே உள்ளே இருந்தீர்கள். இப்போது மாண்புமிகு அவை முன்னவர் அவர்கள் கேட்டுக்கொண்டார்கள். நீங்கள் தேவையில்லாமல் அவையினுடைய நேரத்தினை வீணடித்துக்கொண்டு இருக்கிறீர்கள். தயவு செய்து உட்காருங்கள். அடுத்த உறுப்பினர் பேசட்டும். நாளைக்கு உங்களுடைய கோரிக்கை என்ன என்பதை எழுத்து மூலமாக கொடுத்துவிட்டு அறையில் வந்து பேசுங்கள். அதற்குப் பிறகு அனுமதி தருகிறோம். திரு. அழகிரி உங்களைப் பேச அனுமதித்து இருக்கிறேன். பேசுங்கள்.

**திரு. எஸ். திருநாவுக்கரசு:** இன்று நடந்த நிகழ்ச்சியைப்ப பற்றி பேச விரும்புகிறேன்.

**மாண்புமிகு பேரவைத் துணைத் தலைவர்:** நீங்கள் உட்கார்ந்து கொண்டு இருந்திர்களே அப்போதே இதைச் சொல்லியிருக்கலாம்.

**திரு. எஸ். திருநாவுக்கரசு:** நான் வந்ததற்குப் பின்னால் கேள்விப்பட்டேன். ஆகவே பேச விரும்புகிறேன்.

**மாண்புமிகு பேரவைத் துணைத் தலைவர்:** மாண்புமிகு முதலமைச்சர் அவர்கள் உரையாற்றும்போது நீங்கள் இங்கே இருந்தீர்கள்; நானும் அங்கே இருந்தேன்.

**திரு. எஸ். திருநாவுக்கரசு:** மாண்புமிகு பேரவைத் துணைத் தலைவர் அவர்களே, பாதியில் வந்தேன்; அதற்கு முன்னால் மாண்புமிகு சபாநாயகர் அவர்கள், எதிர்க்கட்சித் தலைவர் அவர்கள் பேசியிருக்கிறார்கள்.

**மாண்புமிகு பேரவைத் துணைத் தலைவர்:** மாண்புமிகு உறுப்பினர் அவர்கள் இந்த அவையினுடைய மூத்த உறுப்பினர். தாங்கள் எல்லா விதிமுறைகளையும், எல்லா மரபுகளையும் நன்கு தெரிந்து வைத்திருக்கிறீர்கள். ஏற்கனவே துணைத் தலைவராக இருந்து இந்தச் சபையை நடத்தியிருக்கிறீர்கள். எனவே, அவை ஒழுங்காக நடைபெறுவதற்கு தாங்கள் ஒத்துழைக்க வேண்டும் என்று கேட்டு, அடுத்த உறுப்பினர் திரு. அழகிரி அவர்களைப் பேச அழைக்கிறேன். திரு. அழகிரி அவர்கள் பேசவில்லை என்றால் நான் அடுத்த உறுப்பினரை அழைக்க வேண்டிவரும்.

**திரு. ச. அழகிரி:** மாண்புமிகு பேரவைத் துணைத் தலைவர் அவர்களே, நீங்கள் அவரை உட்கார வைத்தால் தான் நான் பேசமுடியும். ஆகவே, நீங்கள் அவரை உட்கார வைக்கவேண்டுமென்று கேட்டுக்கொள்கிறேன்.

**மாண்புமிகு பேரவைத் துணைத் தலைவர்:** உங்களுடைய ஒலிவாங்கி வேலை செய்கிறது. நீங்கள் பேசலாம். (குறுக்கீடு) மாண்புமிகு முதலமைச்சர் அவர்கள்.

**மாண்புமிகு டாக்டர் மு. கருணாநிதி:** மாண்புமிகு பேரவைத் துணைத் தலைவர் அவர்களே, மாண்புமிகு அனைத்திந்திய அண்ணா திராவிட முன்னேற்றக் கழக தலைவர் திருநாவுக்கரசு அவர்கள் ஏதோ ஒரு விளக்கம் அளிக்கவேண்டும் என்று விரும்புகிறார். தான் வந்த பிறகு முதலிலே நடந்ததை, கேள்விப்பட்டதை ஒட்டி விளக்கம் அளிக்க விரும்புகிறார். விளக்கம் அளிப்பது ஒரு விவாதத்திற்கு உரியதாக ஆகாமல் ஒரு வரி விளக்கமாக இருக்குமானால் அதை தாங்கள் அனுமதிக்கலாம்.

**திரு. எஸ். திருநாவுக்கரசு:** மாண்புமிகு பேரவைத் துணைத் தலைவர் அவர்களே, பேசுவதற்கு அனுமதி பெற்றுத் தந்த மாண்புமிகு முதலமைச்சர் அவர்களுக்கு நன்றி. இடையில் போக்குவரத்து காரணமாக சிறிது நேரம் காலதாமதமாக வந்ததால் முதலிலே நடந்த நிகழ்ச்சியை இங்கே பக்கத்திலே இருக்கிற மாண்புமிகு மற்ற எதிர்க்கட்சித் தலைவர்கள் மூலமாக கேள்விப்பட்டு அவர்கள் வருந்துவதை அறிந்து அதற்கும்



சேர்த்து ஒரு சிறிய விளக்கத்தைச் சொல்லத் தான் முன் வந்தேன். நேற்றைக்கு கூட பத்திரிகைகளிலே நான் மிகுந்த நிதானத்தோடு எந்த குற்றச்சாட்டோ; கண்டனமோ எதுவும் சொல்லாமல் என்ன சொன்னேன் என்றால் இரண்டு வகையான வாதங்கள் நடந்தன. ஒன்று, முன்னால் இருந்த உதாரணங்களை எல்லாம் சொல்லி, சபாநாயகர் அவர்கள் சொல்லி ஒரு மணி நேரம் ஒத்தி வைத்தால் போதும் என்று வாதம் நடந்தபோது, நான் ஒரு நாள் ஒத்திவைக்கலாம் என்று சொன்ன யோசனையை மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்கள், மாண்புமிகு முதலமைச்சர் அவர்கள், மற்ற அலுவல் ஆய்வுக்குழு உறுப்பினர்கள் ஒத்துக் கொண்டார்கள் என்பதையும் சொன்னேன். அதுவும் பத்திரிகைகளில் வந்திருக்கிறது. அதற்கு அடுத்து இந்த இரங்கல் உரையில் உரையாற்ற அனுமதிக்கலாம் என்ற அபிப்பிராயத்தைச் சொன்னேன். அது அலுவல் ஆய்வுக் குழுவில் ஏற்கப்படாததால் அங்கே உரை நிகழ்த்த முடியவில்லை, இங்கே என்னுடைய இரங்கலைத் தெரிவித்துக் கொள்கிறேன் என்றுதான் சொன்னேனே தவிர இதில் கண்டனமோ, குற்றச்சாட்டோ, எதுவும் இல்லை. இதைக் கூட நான் சொன்னதற்குக் காரணம் நான் வெளியே போனதும் பத்திரிகைக்காரர்கள் என்னைச் சந்தித்து இதற்கு முன்னாலே எல்லாம் முதலமைச்சர் மறைவுக்குப் பின்னாலே எல்லாம் இரங்கல் தீர்மானத்திலே உரையாற்றுகிற சம்பவம் நடந்து இருக்கிறதே, இன்று ஏன் நீங்கள் எல்லாம் உரையாற்றவில்லை என்று கேட்டதற்குப் பின்னாலேதான் சுருக்கமாக இந்த விளக்கத்தை மட்டும் சொன்னேன்.

**மாண்புமிகு டாக்டர் மு. கருணாநிதி:** மாண்புமிகு பேரவைத் துணைத் தலைவர் அவர்களே, மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்கள் இங்கே சுட்டிக்காட்டிய வரி இந்தியன் எக்ஸ்பிரஸில் இன்று வந்து இருப்பதை "The Speaker in this case, had ignored such a convention, he said," திருநாவுக்கரசு சொன்னார் என்று வந்து இருப்பதைத்தான் அவர்கள் சுட்டிக்காட்டி தன்னுடைய வேதனையைத் தெரிவித்துக் கொண்டார்கள்.

**திரு. எஸ். திருநாவுக்கரசு:** மாண்புமிகு பேரவைத் துணைத் தலைவர் அவர்களே,....

**மாண்புமிகு பேரவைத் துணைத் தலைவர்:** போதும் உட்காருங்கள். திரு. அழகிரி நீங்கள் பேசுங்கள்.

**திரு. எஸ். திருநாவுக்கரசு:** மாண்புமிகு பேரவைத் துணைத் தலைவர் அவர்களே, பாதியில் இப்படிச் செய்கிறீர்கள். முடித்து விடுகிறேன். பிரஸில் வந்து இருப்பதை, இந்தியன் எக்ஸ்பிரஸில் வந்து

[திரு. எஸ். திருநாவுக்கரசு] [1996 மே 25

இருப்பதை மாண்புமிகு முதலமைச்சர் அவர்கள் படித்தார்கள். இன்றைக்கு இந்த செய்தியே பல பத்திரிகைகளில் பல மாதிரி வந்தி இருக்கின்றது. இண்டியன் எக்ஸ்பிரஸில் இந்த மாதிரி வந்திருக்கிறது. மற்ற பத்திரிகைகளில் வந்து இருக்கின்றது. நான் சொன்ன வாசகம் இதுதான். இந்த மாதிரி நான் சொன்னேன், அது ஏற்கப்படாததால் இங்கே என்னுடைய இரங்கல் உரையைத் தெரிவிக்கிறேன் என்று சொன்னேன்.

*முற்பகல் 11-00*

**மாண்புமிகு டாக்டர் மு. கருணாநிதி:** கேள்வி கேட்டு விடை பெறுகிற அளவிற்கு இந்த விளக்கம் வரக்கூடாது. பத்திரிகைகளில் வந்திருப்பது, "The Speaker in this case, had ignored such a convention, he said," என்று இருக்கிறது. அது தாங்கள் சொன்னதா, இல்லையா என்பதுதான் பிரச்சினை.

**திரு. எஸ். திருநாவுக்கரசு:** மாண்புமிகு பேரவைத் துணைத் தலைவரவர்களே, அந்த 'இண்டியன் எக்ஸ்பிரஸ்' பத்திரிகையிலே எழுதியிருப்பது மாதிரி நான் சொல்லவில்லை. எல்லாப் பத்திரிகை நிருபர்களும் அப்பொழுது இருந்தார்கள். (குறுக்கீடு) இல்லை, இல்லை, அதுதான். அதுமாதிரி நான் சொல்லவில்லை. அதேநேரத்திலே ஏகமனதாக நாம் முடிவு செய்யவும் இல்லை. ஏகமனதாக நாம் முடிவு செய்யவில்லை. கருத்தைச் சொன்னேன். அதற்குப் பின்னாலே-- அதனாலேதான் அந்தக் கருத்தை நான் வெளியே சொன்னேன். அப்படியென்றால் மினிட்ஸ் வாங்குகிறமாதிரி அப்புறம் நீங்களெல்லாம் பிசினஸ் அட்வைசரி கமிட்டி முடிந்தவுடனே அதிலே அப்புறம் மினிட்ஸிலே கையெழுத்துப்போட்டு யாரும் டிசென்ட் நோட் போட்ட மாதிரிதான், அப்பொழுதுதான் அதனுடைய நடவடிக்கைகள் என்னவென்று சரியாக வெளிவரும். ஆகவே, ஏகமனதாக ஒத்துக்கொள்ளப்படவில்லை. என்னுடைய அபிப்பிராயத்தை நான் சொன்னேன். அதோடு நான் அங்கே எடுத்த முடிவுக்கு இங்கே வந்து சொன்னதற்குப் பின்னாலே இங்கேயும் நான் வந்து அது இரங்கல் தீர்மானம் என்பதாலே அதிலே தலையிடுவது மரபு அல்ல என்கிற காரணத்தினாலே நான் குறுக்கிட்டுக்கூட நேற்று சொல்லவில்லை. இல்லையென்றால் நேற்றே சொல்லியிருக்கலாம். சொல்லவில்லை.



1996 மே 25]

**மாண்புமிகு பேரவைத் துணைத் தலைவர்:** விளக்கம் போதுமானது. ஒரு பிரச்சினையை முடித்தாகிவிட்டது. நீங்கள் கேட்டு பதில் சொல்லியாகிவிட்டது. அடுத்தப் பிரச்சினைக்குப் போகக் கூடாது.

**திரு. எஸ். திருநாவுக்கரசு:** அந்த அலுவல் ஆய்வுக் குழுவிலே இருக்கிற எதிர்க்கட்சித் தலைவர்கள் எல்லோரும் ஆமாம் சாமி என்று சொன்னதாக.....

**மாண்புமிகு பேரவைத் துணைத் தலைவர்:** அது ஏற்கெனவே பேசப்பட்ட பொருள். அதற்கு அவைத்தலைவர் தன்னுடைய தீர்ப்பை வழங்கியிருக்கிறார்கள். மீண்டும் மீண்டும் நீங்கள் அதே பிரச்சினையைப் பேசிக்கொண்டிருப்பது நல்லது அல்ல. மாண்புமிகு உறுப்பினர் திரு. அழகிரி. (குறுக்கீடு) நீங்கள் நினைத்ததற்கெல்லாம் விளக்கம் அளித்துக் கொண்டிருக்க முடியாது. நீங்கள் விளக்கம் கேட்க வேண்டுமென்றால் அந்த நேரத்திலே எழுந்திருந்து கேட்க வேண்டும். திரு. அழகிரி, நீங்கள் பேசவில்லை என்றால் நான் அடுத்த உறுப்பினரை அழைக்க வேண்டியிருக்கும்.

**திரு. எஸ். திருநாவுக்கரசு:** ஒரே நிமிடத்திலே முடித்து விடுகிறேன்.

**மாண்புமிகு பேரவைத் துணைத் தலைவர்:** திரு. அழகிரி, நீங்கள் இருங்கள்.

**திரு. எஸ். திருநாவுக்கரசு:** அதாவது, இங்கேகூட எல்லா எதிர்கட்சித் தலைவர்களும் என்னிடத்திலே வருத்தமாகச் சொன்னார்கள். அதற்காக என்னுடைய வருத்தத்தைத் தெரிவித்துக் கொள்கிறேன் என்று சொன்னேன். அதற்குப் போய் இவ்வளவு தகராறா?

**மாண்புமிகு பேரவைத் துணைத் தலைவர்:** இல்லை, இந்த வருத்தத்தை முதலிலேயே தெரிவித்திருக்கலாம். இவ்வளவு நேரம் கழித்துத் தெரிவிக்க வேண்டியதில்லை. அடுத்து, திரு. அழகிரி பேசுங்கள். (குறுக்கீடு)

**திரு. ஆர். சொக்கர்:** மாண்புமிகு பேரவைத் துணைத் தலைவரவர்களே, மாண்புமிகு உறுப்பினர் திருநாவுக்கரசு அவர்கள் சொன்னபொழுது, ஏகமனதாக எடுக்கப்பட்ட முடிவு அல்ல என்று சொன்னார். அது சரியல்ல என்று நான் நினைக்கின்றேன். விவாதம் வந்தது. விவாதத்தின் முடிவில் எடுக்கப்பட்ட முடிவு ஏகமனதாக எடுக்கப்பட்ட முடிவுதான் என்ற விளக்கத்தை நான் சொல்கிறேன்.

**திரு. எஸ். திருநாவுக்கரசு:** டிஸென்ட் . . .

**மாண்புமிகு பேரவைத் துணைத் தலைவர்:** உட்காருங்கள். (குறுக்கீடு) உங்களுக்கே நன்றாகத் தெரியும். அவை அலுவல் ஆய்வுக் குழுவிலே முதலமைச்சரே வந்து கலந்து கொண்ட அலுவல் ஆய்வுக் குழு, ஒழுங்காக நடந்த அலுவல் ஆய்வுக் குழு அன்றைக்கு நடந்த அலுவல் ஆய்வுக் குழுதான். உங்களுக்கு நன்றாகத் தெரியும். உட்காருங்கள். (குறுக்கீடு) முடிந்து போய்விட்ட பிரச்சினை.

## 5. ஆளுநர் உரைக்கு நன்றி தெரிவிக்கும் தீர்மானத்தின் மீது விவாதம்--தொடர்ச்சி

**மாண்புமிகு பேரவைத் தலைவர் :** திரு. ச. அழகிரி

**திரு. ச. அழகிரி:** மாண்புமிகு பேரவைத் துணைத் தலைவரவர்களே, இந்த 11-வது சட்டப்பேரவைக் கூட்டத்தொடரிலே ஆளுநர் உரைக்கு நன்றி தெரிவித்துப் பேசுவதில் நான் மிகவும் மகிழ்ச்சி அடைகிறேன். தமிழ் மாநிலக் காங்கிரஸ் கட்சியின் சார்பாக எங்கள் கட்சியினுடைய கருத்துக்களை இங்கே விளக்குவதற்காக நான் பெருமைப்படுகிறேன்.

அதேபோல, சட்டப் பேரவையினுடைய துணைத் தலைவராக நீங்கள் முதன்முதலில் அமர்ந்து என்னை நீங்கள் முதன்முதலாகப் பேச அழைத்தமைக்காக நான் உங்களுக்குப் பாராட்டு சொல்ல, நன்றி சொல்லக் கடமைப்பட்டிருக்கிறேன். ஏனென்றால், கடந்த ஐந்தாண்டுக் காலமாக நீங்களும், நானும், நம்மோடு சேர்ந்து அருமை நண்பர் திருநாவுக்கரசு அவர்களும் இந்தப் பேரவையிலே இணைந்து செயல்பட்டிருக்கிறோம். நாமெல்லாம் ஒன்றாகக் கூடி, இந்தப் பேரவையை மீண்டும் சிறப்பாக நடத்துவதற்கான ஒரு வாய்ப்பு கொடுத்தமைக்காக நான் என்னுடைய நெஞ்சார்ந்த நன்றியையும், மகிழ்ச்சியையும் இந்த அவையிலே கூறிக்கொள்ள ஆசைப்படுகிறேன்.

இன்று காலையிலே கோட்டையினுடைய எல்லாக் கதவுகளும் திறந்திருந்து எந்த வாயில்படி வழியாக வேண்டுமானாலும், யார் வேண்டுமானாலும் வரலாம் என்கின்ற ஒரு சூழ்நிலை ஏற்பட்டபொழுது ஏதோ ரோமானிய அடிமைகள் சுதந்திரம் பெற்றதைப் போன்ற ஒரு உணர்ச்சி நமக்கெல்லாம் ஏற்பட்டது. (மேசையைத் தட்டும் ஒலி) எங்களைப் போன்றவர்கள் அந்த வாயில்படியிலே வந்ததைவிடவும், மாண்புமிகு உறுப்பினர் திருநாவுக்கரசு போன்றவர்களும், தாமரைக்கனி போன்றவர்களும் அந்த வாயில்படி வழியாக வந்தபொழுது எங்களைவிட அவர்கள் மிகவும் சந்தோஷப்பட்டிருப்பார்கள் என்பதனை நான் எண்ணிப் பார்க்க இந்த நேரத்திலே விரும்புகிறேன். (மேசையைத் தட்டும் ஒலி)



முற்பகல் 11-05

முதன் முதலாக ஒரு புதிய ஆட்சியை எங்களைப் போன்ற இளம் உறுப்பினர்கள் இந்த அவையிலே காண்கிறோம். 5 ஆண்டுகளுக்கு முன்பு புதிய உறுப்பினர்களாக நாங்கள் இந்த அவைக்கு வந்தபோது, பெரிய கனவுகளோடும், கற்பனைகளோடும் வந்தோம். ஆனால் 5 ஆண்டு காலம் என்பது எங்களுக்கு ஒரு கானல் நீராகக் காட்சியளித்தது. ஆனால், இன்றையதினம் நிலைமை அப்படியில்லை என்பதைத் தொடக்கமே நமக்கு நன்றாகச் சுட்டிக்காட்டியிருக்கிறது. எனக்கு ஒரு பாடல் நினைவுக்கு வருகிறது. வழி தவறிப் போனவர்கள் போகும் இடம் சேர்ந்ததில்லை; துதிபாடி பிழைப்பவர்கள் உண்மையைச் சொன்னதில்லை; புகழ் கேட்டு அகம் மகிழ்ந்தோர் நிலை குலையாமல் இருந்ததில்லை; நான் என்ற அகந்தை கொண்டோர் வீழாமல் வாழ்ந்ததில்லை என்று பழைய சுதந்திர போராட்ட தியாகி கும்பகோணம் எஸ்.வீ. ரகீம் அவர்கள் ஒரு கவிதை எழுதியிருக்கிறார். அந்தக் கவிதை இன்றைய அரசியல் சூழ்நிலைக்கு எவ்வளவு சரியாக இருக்கிறது என்பதை வரலாறு நமக்கு நினைவுபடுத்திக் காட்டியிருக்கிறது என்பதனை நான் இங்கே நினைவுபடுத்த விரும்புகிறேன். இந்தப் புதிய ஆட்சியிலே தமிழ் மாநில காங்கிரஸுக்கு பங்கு இல்லையென்றாலும்கூட உங்களுக்கு துணையாக நின்று ஒரு நல்ல ஆட்சி அமைவதற்கு நாங்கள் உறுதுணையாக இருப்போம் என்பதனை எங்களுடைய அன்புத் தலைவர், தன்மானத் தலைவர் மூப்பனார் அவர்களின் சார்பாக நான் இங்கே நினைவுபடுத்திக் கொள்ளக் கடமைப்பட்டிருக்கிறேன் என்பதனைத் தெரிவித்துக்கொள்ள ஆசைப்படுகிறேன். (மேசையைத் தட்டும் ஒலி)

இங்கே இருக்கின்ற முதல்வர் அவர்கள் ஏராளமான அனுபவங்கள் பெற்றவராக இருக்கலாம். அரை நூற்றாண்டு கால அரசியல் அனுபவம் அவருக்கு இருக்கலாம். ஆனாலும்கூட, என்னைப்போன்ற புதிய உறுப்பினர்களுக்கு அவர் ஒரு புதிய முதலமைச்சர்தான். இப்போதுதான் நாங்கள் நேரிடையாக அவருடைய அரசாங்கம் எப்படி இருக்கும், அவருடைய ஆளுமை எப்படி இருக்கும் என்பதை நேரிடையாக பார்ப்பதற்கான ஒரு வாய்ப்பு கிடைத்திருக்கிறது. அதற்காக நான் பெருமைப்படுகிறேன் என்பதனை இந்த அவையிலே கூறிக்கொள்ள விரும்புகிறேன். நம்முடைய முதலமைச்சர் அவர்களை எப்படிப் பாராட்டுவது என்று எனக்கு நீண்டகாலமாக ஒரு பிரச்சனையிருந்தது. ஏனென்றால் எங்களுக்கு முதலமைச்சர்களைப் பாராட்டிப் பழக்கமில்லை. இந்த முதலமைச்சரைப் பாராட்டியே தீரவேண்டும் என்று முடிவு எடுத்தபோது, நான் தேடித்தேடிக் கண்டுபிடித்தபோது

எனக்கு ஒன்று கிடைத்தது. பாரதிதாசன் அவர்கள் பாடிய பாடல் ஒன்றுதான் எனக்கு கிடைத்தது.

*தொண்டு செய்து பழுத்த பழம்*
*தூய தாடி மார்பில் விழும்*
*மண்டை சிறப்பை உலகு தொழும்*
*மனக்குகை சிறுத்தை எழும்*

என்று தந்தைப் பெரியார் அவர்களைப் பாராட்டி பாரதிதாசன் பாடிய பாடல், அந்தப் பாராட்டுரை எனக்கு நினைவுக்கு வந்தது. வேண்டுமானால் நம்முடைய முதலமைச்சர் அவர்களுக்கு தூயத் தாடி இல்லாமல் இருக்கலாமேயொழிய தூய உள்ளம் இருக்கிறது என்பதனை நான் இங்கே நினைவுபடுத்த விரும்புகிறேன். (மேசையைத் தட்டும் ஒலி) எனவே, ஒரு சிறந்த ஆட்சி அமைவதற்கு, 5 ஆண்டு காலம் தமிழகம் பெற்ற சிரமங்களிலிருந்து, தமிழ் மக்களை விடுவிப்பதற்கு, இந்தப் பேரவையிலே இருக்கின்ற ஆளும் கட்சி மட்டுமல்ல, எதிர்க்கட்சிகளும் சேர்ந்து, இணைந்து போராடி, தமிழ் மக்களுக்கு ஒரு புதிய வாழ்வை, புதிய வளத்தைக் கொண்டுவர வேண்டுமென்று நான் இந்த நேரத்திலே கேட்டுக்கொள்ள ஆசைப்படுகிறேன்.

ஆளுநர் உரையிலே அரசாங்கம் பல்வேறு கருத்துக்களைச் சொல்லியிருக்கிறது. ஆனால், ஆளுநர் உரை மிகவும் குறுகியதாக இருந்தது. நான்கூட, அருமை தோழர் சொக்கர் அவரிடம் சொன்னேன், இவ்வளவு குறுகியதாக ஆளுநர் உரை இருக்கிறதே என்று சொன்னேன். அதற்கு சொக்கர் அவர்கள் சொன்னார், நீங்கள் அதைப் பேரவையிலே சுட்டிக்காட்ட வேண்டாம், அப்படிச் சொன்னால் மாண்புமிகு முதல்வர் எழுந்து சொல்வார் அது திருக்குறள் போல சத்தாக இருக்கிறது என்று சொல்லிவிடுவார், எனவே சொல்ல வேண்டாம் என்று சொன்னார். திருக்குறளைப் போன்று ஒரு தீர்க்கமான ஆளுநர் உரையாக இருந்தாலும்கூட அரசாங்கத்தினுடைய கொள்கைக் குறிப்புகள், அரசாங்கத்தினுடைய வருங்காலத் திட்டங்கள் இன்னும் கொஞ்சம் அதிகமாக அதில் கோடிட்டுக் காட்டியிருக்கலாம் என்பதை நான் இங்கே நினைவுபடுத்த விரும்புகிறேன்.

மக்கள் மன்றத்தினுடைய தீர்ப்பு நம்மை வியக்க வைத்திருக்கிறது. நாம் இவ்வளவு பெரிய வெற்றியை எதிர்பார்க்கவில்லை. வெற்றி பெறுவோம் என்று எண்ணினோமேயொழிய இவ்வளவு மகத்தான வெற்றி நமக்குக் கிடைக்கும் என்று நாம் எண்ணவில்லை. ஆனால்,



மக்கள் மன்றம் ஒரு சிறந்த அரசாங்கம் வர வேண்டுமென்றபதற்காக மாபெரும் தீர்ப்பினை நமக்கு வழங்கியிருக்கிறார்கள். அதற்காக இந்த அவையின் சார்பாக தமிழ் மக்களுக்கு நாம் நன்றியைச் சொல்லிக் கொள்ளக் கடமைப்பட்டிருக்கிறோம் என்பதை நான் நினைவுபடுத்த விரும்புகிறேன்.

*முற்பகல் 11-10*

இந்த வெற்றி சாதாரணமாகக் கிடைத்த வெற்றியல்ல. ஆட்சி மாற்றம் வேண்டும் என்பதற்காக மட்டும் கிடைத்த வெற்றியல்ல. ஒரு முதலமைச்சரை மாற்றி வேறொரு முதலமைச்சர் வரவேண்டும் என்பதற்காக மட்டும் கிடைத்த வெற்றியல்ல. ஐந்தாண்டு காலம் குமுறியிருந்த மக்கள், தங்களுடைய கோபத்தை ஒரு புரட்சிகரமான முறையிலே, நல்ல அமைதியான முறையிலே அந்த மாற்றத்தை நமக்குக் கொண்டுவந்திருக்கிறார்கள். இதற்கு மூன்றுபேரை முக்கிய காரணமாக நான் சொல்ல விரும்புகிறேன். சலியாது உழைத்து, உறுதியாக நின்று, கட்டுக் கோப்பாகத் தன்னுடைய இயக்கத்தை நடத்திச்சென்ற நம்முடைய முதல்வர் கலைஞர் அவர்களும் (மேசையைத் தட்டும் ஒலி) அதேபோல் சரியான நேரத்தில் சரியான முடிவை எடுத்த மக்கள் தலைவர் மூப்பனார் அவர்களும், இந்த இரண்டுபேருக்கும் உறுதுணையாக, எதையும் எதிர்பாராமல், நல்லது நடக்க வேண்டும் என்பதைத் தவிர மற்றதை நினைக்காத, திரைப்பட நடிகர் திரு. ரஜினிகாந்த் அவர்களும் இந்த மாபெரும் வெற்றிக்கு உரியவர்கள் என்பதை நான் இந்த நேரத்தில் அன்போடு நினைவுபடுத்த விரும்புகிறேன். எனவே இந்த வெற்றிக்கான காரணங்களை எல்லாம் நாம் தொடர்ந்து நடைமுறைப்படுத்த வேண்டுமென்றும், வெற்றிக் களிப்பில் மட்டும் நாம் மூழ்கிவிடக்கூடாது என்றும், மக்கள் நம்மிடத்தில் எதிர்பார்த்திருக்கிற ஆயிரமாயிரம் உதவிகளை, ஆயிரமாயிரம் தேவைகளை நாம் நிறைவேற்றிக் காட்ட வேண்டுமென்றும் இந்த நேரத்தில் நான் கூறிக்கொள்ள ஆசைப்படுகிறேன்.

நான் இந்த அரசாங்கத்திற்கு பல்வேறு நன்றிகளைச் சொல்லக் கடமைப்பட்டாலும் கூட முதற்கட்டமாக தோழர் திரு. ஞானசேகரன் அவர்கள் சொன்னதைப் போல போக்குவரத்துக் கழகத்திற்கு ராஜீவ் காந்தி அவர்களுடைய பெயரை, எங்களுடைய கனவுலக இளவரசன், இந்த மண்ணில் வந்து வீழ்ந்துபோன அன்புத் தலைவர் ராஜீவ் காந்தி அவர்களுடைய பெயரை தமிழ்நாடு அரசு வைத்ததற்காக தமிழ் மாநில காங்கிரஸ் சார்பாக, எங்களுடைய இதயபூர்வமான நன்றியினை இந்த

அரசாங்கத்திற்கும் இதன் தலைவர் முதல்வர் அவர்களுக்கும் சொல்லிக்கொள்ளக் கடமைப்பட்டிருக்கிறேன்.

அதேபோல புரட்சித் தலைவர் எம்.ஜி.ஆர். அவர்களுடைய பெயரைத் திரைப்பட நகருக்கு வைத்ததற்காக நன்றி சொல்லக் கடமைப்பட்டிருக்கிறேன். நான் சொல்வதை விடவும் அந்தக் கட்சியினுடைய சட்டமன்ற தலைவர் சகோதரர் திரு. திருநாவுக்கரசு அவர்கள் சொன்னால் அது மேலும் சிறப்புடையதாக இருக்கும் என்பதை நான் இங்கே நினைவுபடுத்த விரும்புகிறேன்.

இன்றைக்கு எங்களுடைய காங்கிரஸ் இயக்கத்திற்கும் திராவிட முன்னேற்றக் கழகத்திற்கும் ஒரு நல்ல உறவு இருக்கிறது. அந்த உறவு தொடர வேண்டுமென்று நாங்கள் விரும்புகிறோம். முதலமைச்சர் அவர்கள் கூடச் சொல்லியிருக்கிறார்கள். நீங்கள் தவறுகளைச் சுட்டிக் காட்டுவதோடு நிற்கக் கூடாது; குட்டியும் காட்டலாம் என்று அவர்கள் சொல்லியிருக்கிறார்கள். அதற்கான ஒரு நிலைமை வராது என்பதை அன்போடு நான் தெரிவித்துக்கொள்ள ஆசைப்படுகிறேன். ஏனென்றால் உங்களைப் போன்ற அனுபவம் மிக்க ஒரு தலைவர் ஆட்சி செய்கிறபோது அதிலே எதிர்க்கட்சியினுடைய பங்கு குறைவாகத்தான் இருக்குமேயொழிய எதிர்க்கட்சியினுடைய பங்கு அதிகமாக இருக்கிற அளவுக்கு ஒரு தவறான அரசாங்கத்தை நீங்கள் தர மாட்டீர்கள் என்ற உறுதியான நம்பிக்கை எங்களுக்கு இருக்கிறது என்பதைச் சொல்லிக்கொள்ள ஆசைப்படுகிறேன். (மேசையைத் தட்டும் ஒலி) 'அகலாது அணுகாது தீ காய்வார்கள் போல' என்று சொல்வார்கள். குளிரில் தீ காய்கிறவர்கள் அந்தத் தீ மூட்டத்திற்கு மிக அருகாமையில் சென்று விட முடியாது. சென்றால் தீயினால் ஏற்படுகிற சுகத்திற்குப் பதிலாக சூடுதான் கிடைக்கும். சரி, கொஞ்சம் வெளியே விலகி நிற்போமே என்று போனால் தீயினால் ஏற்படுகிற சுகம் கிடைக்காமல் குளிரினால் ஏற்படுகிற கொடுமைதான் நமக்குக் கிடைக்கும். எனவே, எங்களைப் பொறுத்தவரையில் உங்களிடமிருந்து அகலவும் மாட்டோம், அணுகவும் மாட்டோம்; அதைப்போன்றதோர் உறவு முறையை திராவிட முன்னேற்றக் கழகத்திற்கும், தமிழ் மாநில காங்கிரஸ் கட்சிக்கும் இடையே நாங்கள் நடைமுறைப்படுத்துவோம் என்பதை உங்களுக்கு நான் அன்பாகச் சொல்லிக்கொள்ள ஆசைப்படுகிறேன்.

ஆளுநர் உரையில் பல்வேறு நல்ல விளக்கங்கள் எல்லாம் சொல்லப்பட்டிருக்கின்றன. எல்லாவற்றையும் நான் இங்கே தெளிவாகச் சொல்லவேண்டிய அவசியம் கிடையாது. ஏனென்றால் மாண்புமிகு உறுப்பினர் திரு. தா. கிருட்டிணன் அவைகளை எல்லாம் தெளிவாக



எடுத்துச் சொல்லிவிட்டார்கள். ஆனால் ஒன்றைமட்டும் சொல்லிக் கொள்ள ஆசைப்படுகிறேன்; பாராட்ட விரும்புகிறேன். ஆசிரியர்கள் நியமனத்திற்கு நீங்கள் இப்போது ஏற்படுத்தியிருக்கிற முறை என்பது தமிழ்ச் சமுதாயம் இன்னும் ஆயிரமாயிரம் ஆண்டுகளுக்கு உங்களைப் பாராட்டக்கூடிய வகையிலே நீங்கள் அதைச் செய்திருக்கிறீர்கள்.

*முற்பகல் 11-15*

சென்ற சட்டமன்றக் கூட்டத் தொடரில் இந்தப் பிரச்சினையை நாங்கள் ஆரம்பித்தபோது இதைப் பேசுவதற்குக்கூட எங்களுக்கு அனுமதி கிடைக்கவில்லை. நான் சொன்னேன். ஆரம்பப் பள்ளிக்கூட ஆசிரியர்களை நியமிக்கிறீர்கள், அதற்கு சீனியாரிட்டி இருந்தால் போதும் என்று. தகுதியையும், திறமையையும் பார்க்கப் போகிறோம் என்று சொல்கிறீர்களே, தகுதியும், திறமையும் என்றால் என்ன? அந்த ஆசிரியர்களை அழைத்து 'அ'-வண்ணா, 'ஆ'-வண்ணா எழுதிக் காட்டச் சொல்வீர்களா? அல்லது ஒன்று, இரண்டு சொல்லச் சொல்வீர்களா? அல்லது ஏ.பி.சி.டி சொல்வாரா என்று நீங்கள எதிர்பார்க்கிறீர்களா? பள்ளிக்கூட ஆசிரியர்களுக்கு இதுவெல்லாம் தேவையில்லை, அவர்கள் இதையெல்லாம் செய்வார்கள், எனவே நீங்கள் சீனியாரிட்டி பாருங்கள், வேலைவாய்ப்பு அலுவலகங்களிலே பதிவு செய்திருக்கிறவர்களுக்கு முன்னுரிமை கொடுங்கள். அந்த அடிப்படையிலே நீங்கள் வேலை கொடுப்பீர்களேயானால் கிராமங்களிலே இருக்கின்ற தாழ்த்தப்பட்டவர்கள், பிற்படுத்தப்பட்டவர்கள் ஆயிரக்கணக்கான ஏழை குடும்பங்களிலே இருக்கின்ற இளைஞர்கள் ஆகியோருக்கும் வேலைவாய்ப்பு கிடைக்கும். இதைவிடுத்து நீங்கள் வேறு விதமான தேர்வு முறையை செய்வீர்களேயானால் உங்களுடைய கஜானா நிரம்புமேயொழிய மக்களுடைய பிரச்சினை தீராது என்று நாங்கள் சொன்னபோது பழைய அரசாங்கம் அதனை ஏற்றுக்கொள்ளவில்லை. ஆனால், இன்றைய புதிய அரசாங்கம், நாங்கள் அப்படி ஒன்றை உங்களுக்குச் சொல்வதற்கு வாய்ப்பு அளிக்காத வகையில் நீங்களே முதல் முறையாக அதனை அறிவித்திருப்பதற்கு தமிழ் மாநில காங்கிரஸ் கட்சியின் சார்பாக நாங்கள் எங்களுடைய பாராட்டையும் (குறுக்கீடு)

**மாண்புமிகு பேரவைத் துணைத் தலைவர்:** மாண்புமிகு முதலமைச்சர் அவர்கள்.

**மாண்புமிகு டாக்டர் மு. கருணாநிதி:** மாண்புமிகு பேரவைத் துணைத் தலைவர் அவர்களே, திரு. அழகிரி அவர்களின் அழகான பேச்சில் குறுக்கிட விருப்பமில்லை. இருந்தாலும், விளக்கத்திற்காகச்

சொல்கிறேன். ஆசிரியர் நியமனத்தில் முதல் முறையாக இப்போது இந்த நிலை கடைபிடிக்கப்படவில்லை. 1989-ஆம் ஆண்டில் தி.மு.க. அரசு இங்கு அமைந்தபோதே நேர்காணல் முறை தேவையில்லையென்று எடுத்துரைத்து, வேலைவாய்ப்பு அலுவலகங்களிலேயுள்ள முன்னுரிமைபடி ஆசிரியர் நியமனம் இருக்க வேண்டும் என்ற விதிமுறையை வகுத்து, ஆணையிடப்பட்டு 1989, 1990 ஆகிய இரண்டு ஆண்டுகளில், 1991 வரையில் அதை நிறைவேற்றியது. 1991-க்குப் பிறகு வந்த ஆட்சியிலேதான் அது ரத்து செய்யப்பட்டது. எனவே, கவர்னர் உரையிலே மிகுந்த எச்சரிக்கையாகப்போட்டிருக்கிறோம், மீண்டும் ஆசிரியர் நியமனத்தில் பழைய முறை கடைபிடிக்கப்படும் என்று போட்டிருக்கிறோம்.

**மாண்புமிகு பேரவைத் துணைத் தலைவர்:** திரு. ச. அழகிரி.

**திரு. ச. அழகிரி:** மாண்புமிகு பேரவைத் துணைத் தலைவர் அவர்களே, இன்றைய புதிய அரசாங்கத்திற்கு இரண்டு விதமான பிரச்சினைகள் இருக்கின்றன, ஒன்று, நிர்வாகச் சீர்திருத்தம் செய்வது. சீர்திருத்தவே முடியாத அளவிற்கு சீரழிந்து போய் இருக்கின்ற இந்த நிர்வாக அமைப்பை இந்த அரசாங்கம் எப்படி சீர்திருத்தப் போகிறது என்பது எங்களுக்குத் தெரியவில்லை. ஆனால், அனுபவம் மிக்க மாண்புமிகு முதல்வர் அவர்கள் நிச்சயமாக இதற்கு ஒரு நல்ல திட்டத்தை வைத்திருப்பார்கள் என்று நாங்கள் நம்புகிறோம்.

இரண்டாவதாக, வளர்ச்சிப்பணிகள் எல்லாம் தேங்கிக் கிடக்கின்றன. ஊராட்சி ஒன்றியங்கள சோம்பிக் கிடக்கின்றன. பொதுப்பணித்துறையிலே ஒன்றுமேயில்லை. மின்வாரியம் பெயருக்குத்தான் இருக்கிறது. மருத்துவமனைகள் காலியாக இருக்கின்றன. ஒரு வெள்ளை அறிக்கை கொடுக்கின்ற அளவிற்கு அரசாங்கத்தினுடைய போக்குவரத்துத் துறை இருக்கிறது. 172 கோடி ரூபாய் நஷ்டம் என்று போக்குவரத்துத் துறை அமைச்சர் அவர்கள் சொல்லியிருக்கிறார்கள். எனவே, இவைகளையெல்லாம் எப்படி சீர்திருத்தம் செய்வது, செப்பனிடுவது என்பதனை பற்றி அரசாங்கம் தீவிரமாக யோசிக்க வேண்டும் என்று நான் இந்த நேரத்திலே கேட்டுக் கொள்ள ஆசைப்படுகிறேன்.

இன்னொன்று, இதுவரை பழைய அரசாங்கம் செய்திருக்கின்ற தவறுகளை, அவர்களைப் பழிவாங்குவதற்காக அல்ல, அந்தத் தவறுகள் செய்தவர்கள் தப்பித்துவிடக் கூடாது என்பதற்காக, அந்தத் தவறுகள் செய்தவர்கள் மீது, அந்தத் தவறுகளின் தன்மைக்கு ஏற்ப எத்தகைய



நடவடிக்கைகளை இந்த அரசாங்கம் எடுக்கப் போகிறது என்பதனை நான் அறியவிரும்புகிறேன். உதாரணமாக நான் சிலவற்றைப் பார்க்கலாம். நீங்கள் முதலிலே ஒரு பாரபட்சமற்ற நிர்வாகத்தைக் கொடுப்பதற்கு தயாராக இருக்க வேண்டும். நீங்கள் தருவீர்கள் என்ற நம்பிக்கை எங்களுக்கு அதிகமாக இருக்கிறது. நாங்கள் எதிர்பார்ப்பதைவிட மக்கள் உங்களிடமிருந்து அதிகமாக எதிர்பார்க்கிறார்கள். பாரபட்சமற்று எதிர்பார்க்கிறார்கள். எல்லா தரப்பிலும் எதிர்பார்க்கிறார்கள். எனவே, இந்த அரசாங்கத்தினுடைய முதல் கடமை ஒரு பாரபட்சமற்ற நிர்வாகத்தை வழங்குவதுதான். நான் ஏற்கெனவே சொன்னதைப் போல நீங்கள் வழங்குவீர்கள் என்கின்ற உறுதியான நம்பிக்கை எங்களுக்கு இருந்தாலும்கூட, ஒருசில ஆலோசனைகளை உங்களுக்கு வழங்கலாம் என்று கருதுகிறேன்.

முற்பகல் 11-20

முதற்கட்டமாக ஆளும் கட்சியைச் சார்ந்த நண்பர்கள் அரசாங்க அலுவலகத்திற்குள் நுழைந்து அதிகாரம் செய்கின்ற தன்மையை இந்த அரசாங்கம் தடுத்து நிறுத்த வேண்டும். ஏனென்றால், பழைய அரசாங்கத்திற்கு ஏற்பட்ட வீழ்ச்சி அதனால்தான் என்பது உங்களுக்கு நன்றாகத் தெரியும்.

**மாண்புமிகு பேரவைத் துணைத் தலைவர்:** முதலில் பேசிய உறுப்பினர்கள் தவிர மற்றவர்களுக்கெல்லாம் 10 நிமிடங்கள்தான் ஒதுக்கப்பட்டிருந்தது. நீங்கள் 18 நிமிடங்கள் பேசியிருக்கிறீர்கள். விரைவாகப் பேசி முடித்துக் கொள்ளுங்கள்.

**திரு. ச. அழகிரி:** நம்முடைய பழைய உறவை நீங்கள் நினைவிலே வைத்து கொஞ்சம் சலுகை தரலாம் என்று நான் உங்களைக் கேட்டுக் கொள்ள ஆசைப்படுகிறேன். (சிரிப்பு)

**மாண்புமிகு பேரவைத் துணைத் தலைவர்:** நெஞ்சிருக்கும் வரை நினைவிருக்கும். (சிரிப்பு)

**திரு. ச. அழகிரி:** அரசாங்க அலுவலகங்களுக்குள் நுழையக் கூடாது என்று நான் சொல்கிறபோது நீங்கள் பழைய சேடப்பட்டியார் போல மணி அடிக்கிறீர்கள்.

**மாண்புமிகு பேரவைத் துணைத் தலைவர்:** நான் அதனால்தான் சரியாகச் சொன்னேன். 10 நிமிடங்கள் ஒதுக்கப்பட்டிருந்தது. நீங்கள்

18 நிமிடங்கள் பேசியிருக்கிறீர்கள். இன்னும் 12 உறுப்பினர்கள் பேச வேண்டியிருக்கிறது. நேரத்தின் அருமை கருதி சுருக்கமாகச் சொல்லுங்கள்.

**திரு. ச. அழகிரி:** மூதறிஞர் இராஜாஜி அவர்கள் முதலமைச்சராக இருந்தபோது கையிலே ஒரு தடி வைத்திருப்பார்கள். எதற்காக அந்தத் தடியை கையிலே வைத்திருக்கிறீர்கள் என்று கேட்டபோது, 'முதுமை குறித்து அல்ல, எங்களுடைய கட்சிக்காரர்கள் அரசாங்க அலுவலகங்களைச் சுற்றி வரக்கூடாது. வந்தால் அவர்களை அடித்து விரட்டுவதற்காக நான் இந்தத் தடியை வைத்திருக்கிறேன்' என்று அவர்கள் சொன்னார்கள். நம்முடைய முதலமைச்சர் அவர்கள்கூட ஒரு தடி வேண்டுமென்று விரும்பினால் நாங்கள் வழங்குவதற்குத் தயாராக இருக்கிறோம். ஏனென்றால் அது அவர்களுக்குத் தேவைப்படும். ஏனென்றால், முதுமை......(குறுக்கிடு)

அடுத்தபடியாக, சோவியத் ரஷ்யாவிலே புரட்சி ஏற்பட்டபோது, சீர்திருத்தத்தை எங்கிருந்து தொடங்குவது என்று மாண்புமிகு லெனின் அவர்கள் கேட்டார்கள். அப்போது அந்தக் கட்சியிலே உள்ளவர்கள் கல்விக் கூடங்களிலே இருந்துதான் சீர்திருத்தத்தைத் தொடங்க வேண்டுமென்று ஆலோசனை சொன்னார்கள். எனவே, நம்முடைய மாண்புமிகு முதல்வர் அவர்களும் இந்த அரசாங்கம் செய்யப்போகின்ற சீர்திருத்தங்களை கல்விக்கூடங்களிலே தொடங்கவேண்டுமென்று நான் கேட்டுக்கொள்ள ஆசைப்படுகிறேன். நாம் சமூக நீதி பற்றிப் பேசுகிறோம். பிற்படுத்தப்பட்டவர்களைப் பற்றிப் பேசுகிறோம். தாழ்த்தப்பட்டவர்களைப் பற்றிப் பேசுகிறோம். அவர்களுக்கு கல்வியிலும், வேலைவாய்ப்பிலும் முன்னுரிமை அளிக்கவேண்டுமென்று நாம் சொல்கிறோம். ஆனால் அண்ணாமலை பல்கலைக் கழகத்திற்கோ அல்லது இராமச்சந்திரா மெடிக்கல் கல்லூரிக்கோ அல்லது தமிழகத்திலே இருக்கிற வேறு எந்தத் தனியார் கல்லூரிக்கோ ஒரு ஏழை சென்று, எம்.பி.பி.எஸ். சீட்டோ அல்லது எஞ்சினியரிங் சீட்டோ வாங்க வேண்டுமென்றால் இரண்டு இலட்சம் ரூபாய் கொடுத்தால்தான் வாங்கமுடியும். இது ஊர் அறிந்த இரகசியம். இந்த அரசாங்கத்தினுடைய வெற்றியென்பது, முதலமைச்சர் அவர்களுடைய வெற்றி என்பது, தகுதியுள்ளவர்கள் இந்தக் கல்லூரிகளுக்குச் சென்று ஒரு எஞ்சினியரிங் சீட்டோ அல்லது ஒரு மருத்துவ சீட்டோ தங்களுடை தகுதியின் அடிப்படையிலே பெறுவதற்குரிய வாய்ப்பினை நீங்கள் ஏற்படுத்துவீர்களென்றால் அதுதான் இந்த ஆட்சியினுடைய வெற்றியேயொழிய வேறெதுவும் இந்த ஆட்சியினுடைய வெற்றியாக இருக்க முடியாது என்பதனை நான் மெத்தப் பணிவோடு சொல்லிக்கொள்ள ஆசைப்படுகிறேன். ஏனென்றால், ஏழைகள்



இன்றைக்குக் கல்விக் கூடங்களிலே சென்று படிக்கவே முடியாத ஒரு சூழ்நிலை இருக்கிறது. பணக்காரர்கள் மட்டும்தான் சென்று படிக்கலாம். இப்போது பணக்காரர்களெல்லாம் எந்தக் கட்சி ஆளும் கட்சியாக வந்தாலும் அந்தக் கட்சிக்கு அவர்கள் வேண்டியவர்களாக ஆகிவிடுகிறார்கள். இதனை நாம் பார்க்கிறோம். மக்கள் இதனைச் சொல்லமுடியாது. அதனைச் சொல்வதற்கான பலம் அவர்களுக்குக் கிடையாது. ஆனால் மக்கள் அதை மனதிலே வைத்துக் கொண்டு தேர்தல் வருகின்றபோது, அவர்கள் அதற்குப் பதில் சொல்கின்ற விதத்தினை நான் உங்களுக்கு நினைவுபடுத்த விரும்புகிறேன். ஏனென்றால், படிப்பறிவு பெறுவது என்பது எவ்வளவு சிரமம் என்பது நமக்குத் தெரியும். அதிலும், எளிய குடும்பங்களிலிருந்து வந்திருக்கின்ற நாம் இரண்டு இலட்சம் ரூபாய் கொடுத்து, பத்து இலட்சம் ரூபாய் கொடுத்து படிக்க முடியாது. எனவே, தகுதியுள்ள மாணவன் யாராக இருந்தாலும் சரி, அவனுக்குப் படிப்பதற்கான அனுமதியை அவனுடைய இல்லம் தேடி அளிக்க வேண்டும். ஆகவே, தனியார் கல்லூரி நடத்துகின்ற அதிபர்களுக்கு நீங்கள் எச்சரிக்கையாகச் சொல்லவேண்டும் என்று நான் இந்த நேரத்திலே உங்களிடம் அன்போடு கேட்டுக் கொள்ள ஆசைப்படுகிறேன். அதுபோல, இன்றைக்கு பழைய ஆட்சியாளர்கள் ஒரு பெரிய கொள்ளை அடித்திருக்கிறார்கள். 'ஸ்பிக்' நிறுவனத்திலே 100 கோடி ரூபாய் அரசாங்கத்தினுடைய பணம் போயிருக்கிறது. அரசாங்கத்தினுடைய பணம் என்று சொன்னால் மக்களுடைய வரிப்பணம். நான் மாண்புமிகு முதலமைச்சர் அவர்களைப் பார்த்து கேட்டுக்கொள்ள ஆசைப்படுகிறேன். அன்றைக்கு அதைக் கேட்கமுடியவில்லை. இன்றைக்குக் கேட்பதற்கான இடத்தில் நாம் இருக்கிறோம். அரசாங்கத்தினுடைய பங்குகளை அன்றைய மார்க்கெட் நிலவரப்படி குறைவாக விற்கப்பட்ட அந்தப் பங்குகளை மீண்டும் அந்த நிறுவனத்திடமிருந்து இந்த அரசாங்கம் பெற்றுக் கொள்ளுமா? அதற்கான வழிமுறைகள் எதையாவது நீங்கள் வைத்திருக்கிறீர்களா? நினைவிலே அது வந்திருக்கிறதா என்று நான் உங்களைப் பார்த்துக் கேட்க ஆசைப்படுகிறேன்.

முற்பகல் 11-25

மக்களுடைய வரிப்பணம் கொள்ளையடிக்கப்படக் கூடாது. செல்வந்தர்களுடைய கைக்கு அது போகக் கூடாது என்று நான் சொல்லிக்கொள்ள ஆசைப்படுகிறேன். அதேபோல ஸ்டாண்டர்டு மோட்டார்ஸ். ஸ்டாண்டர்டு மோட்டார்ஸில் என்ன நடந்தது. 13 கோடி ரூபாய் வங்கிகளிடமிருந்து அந்த நிறுவனத்திற்கு கடன் வாங்கித் தரப்பட்டது. 3 கோடி ரூபாய் அரசாங்கம் கொடுத்தது. அந்த

நிறுவனத்தார் அவர்களுடையப் பங்குத்தொகையாக 6 கோடி ரூபாய் தரவேண்டும் என்று சொல்லப்பட்ட போது, அவர்கள் என்ன செய்தார்கள். தங்களுடையப் பணத்தைக் கொண்டு வந்து கொடுக்கவில்லை. தமிழ்நாடு பெட்ரோ கெமிக்கல்ஸ் ஜாயிண்ட் செக்டார் கூட்டு நிறுவனம். அதிலிருந்த பணத்தைக் கொண்டு வந்து தங்களுடையப் பணமாகக் காட்டினார்கள். ஒரு சாதாரண ஏழை ஐ.ஆர்.டி.பி.யி,லே 6,000 ரூபாய் கடன் வாங்கி திருப்பிச் செலுத்தவில்லையென்றால் அவர்களுடைய கைகளைக் கட்டி காவல்துறையினர் இழுத்துச் செல்கிறார்கள். ஆனால், 6 கோடி ரூபாய் ஜாயிண்ட் செக்டாரிலிருந்து கொண்டு வந்து தங்களுடையப் பங்குப்பணம் என்று போட்டு இன்றைக்கு அந்த நிறுவனமே நடக்கவில்லை, அந்த பணமும் எங்கே சென்றது என்றும் தெரியவில்லை. அதனை நாம் விட்டுவிடமுடியுமா என்று நான் கேட்க ஆசைப்படுகிறேன். ஏனென்றால் அரசு இதுபோன்ற நடவடிக்கைகளை எடுத்தால்தான் அரசாங்கத்தின் மீது மக்களுக்கு மட்டுமல்ல என்னைப் போன்றவர்களுக்குக் கூட நம்பிக்கை வரும். நிச்சயமாக நீங்கள் செய்வீர்கள் என்ற நம்பிக்கை இருக்கிற காரணத்தினால் இந்த அவையிலே அதைக் கூறிக்கொள்ள ஆசைப்படுகிறேன். வேண்டுமென்றால் இன்னொன்று கூடச் செய்யலாம். வழக்கு மன்றத்தில் இருக்கிறது என்று சொல்வார்கள். பணக்காரர்கள் தப்பித்துக்கொள்வதற்கு ஆயிரமாயிரம் வழிகள் இருக்கின்றன. ஆனால் முதலமைச்சர் என்பவர் ஒரு பப்ளிக் சர்வண்ட். இன்றைக்கு அரசாங்கத்தில் இருக்கும் பப்ளிக் சர்வண்ட் அரசுப் பணம் கொள்ளை போவதற்கோ, அல்லது அரசு பணம் வீணாகப் போவதற்கோ காரணமாக இருந்தால் சர்சார்ஜ் புரோசீடிங்கஸ் நாம் செய்கிறோம். ஒரு சாதாரண எழுத்தர் தவறு செய்துவிட்டால் 10 ரூபாய் அரசாங்கத்திற்கு நஷ்டம் ஏற்படுத்திவிட்டால் சர்சார்ஜ் புரோசீடிங்ஸ் செய்து அவரிடமிருந்து அந்தப் பணத்தை நாம் பெற்றுவிடுகிறோம். இந்த நாட்டினுடைய ஒரு முதலமைச்சர் அவர்கள் பல நூறு கோடி ரூபாய்கள் தனியாருக்கு லாபகரமாகப் போவதற்கு வழி செய்ததற்காக நீதிமன்றத்திலே ஒருபுறம் நீதி கிடைக்கட்டும். ஆனால் நம்முடைய அரசு சர்சார்ஜ் புரோசீடிங்ஸ் செய்து அந்த முதலமைச்சரிடமிருந்துகூட அதற்கானத் தொகையைப் பெறலாம் என்ற ஆலோசனையை நான் உங்களுக்கு வழங்க விரும்புகிறேன். நீங்கள் முதலமைச்சராக இருந்தபோது தமிழ்நாடு ஆரோமேடிக்ஸை கொண்டு வந்தீர்கள். அன்றைக்கு இருந்த பெட்ரோலிய அமைச்சர் குருபாதசுவாமி அவர்களிடம் உங்களுக்கிருந்த செல்வாக்கைப் பயன்படுத்தி 2,000 கோடி ரூபாயிலே அந்தத் திட்டம் கொண்டுவரப்பட்டது. ஆனால் அந்தத் திட்டத்தின் நிலைமை



இன்றைக்கு என்ன ஆயிற்று? ஸ்பீக் நிர்வாகத்திற்கும், எம்.ஆர்.எல். நிர்வாகத்திற்கும் இருக்கின்ற வேறுபாட்டின் காரணமாக அல்லது சண்டையின் காரணமாக அல்லது யார் யாருக்கு எவ்வளவு பங்கு போவது என்பதில் ஏற்பட்ட பிரச்சினையின் காரணமாக 2,000 பேருக்கு வேலை கிடைக்கவேண்டிய அந்த ஆரோமெட்டிக் நிறுவனம் அதனுடையப் பணியைத் தொடங்கமுடியாமல் இருக்கின்றது. எனவே மாண்புமிகு முதலமைச்சர் அவர்கள் இதிலே கவனம் செலுத்தவேண்டும் என்று கேட்டுக்கொள்கிறேன். ஆளுநர் உரையிலே...

**மாண்புமிகு பேரவைத் துணைத் தலைவர்:** நீங்கள் 25 நிமிடமாகப் பேசிக்கொண்டிருக்கிறீர்கள். இன்னும் 12 உறுப்பினர்கள் பேசவேண்டும். அதனால் ஒரு நிமிடத்தில் உரையை முடித்து விடுங்கள்.

**திரு. ச. அழகிரி:** மாண்புமிகு பேரவைத் துணைத் தலைவர் அவர்களே, ஆளுநர் உரையிலே ஒரு ஏமாற்றம். அதிலே பலவற்றை எழுதியிருக்கிறீர்கள். ஆனால் புதிய மின் நிலையங்களைப் பற்றி நீங்கள் சொல்லவேயில்லை. தொலைநோக்குப் பார்வை இல்லை. புதிய மின் நிலையங்கள் இல்லாமல் எந்தத் தொழில்துறை தமிழகத்திற்கு வந்திடமுடியும். இன்றைக்குத் தொழில் நடத்துபவர்கள் மின் தட்டுப்பாட்டால் அவதியுறுகிறார்கள். நம்மிடம் ஏற்கெனவே வந்திருக்கக்கூடிய மின் நிலையங்களுக்கான திட்டங்கள பல இருக்கின்றன. அதிலே ஏதோ பேச்சுவார்த்தையிலே பிரச்சினை ஏற்பட்டதால் அவை செயல்படுத்த முடியாமல் போய்விட்டன. எனவே, மாண்புமிகு முதலமைச்சர் அவர்கள் நேரடியாக கவனம் செலுத்தி புதிய மின் நிலையங்கள் தமிழகத்திற்கு வரவேண்டும் என்பதிலே ஆர்வம் காட்டவேண்டும். இந்தச் சட்டமன்றப் பேரவையிலே ஏதாவது புதிய மின் நிலையத்தைக் கொண்டு வருவதற்கான திட்டத்தை அவர் அறிவிக்கவேண்டும் என்று நான் கேட்டுக்கொள்கிறேன். எனக்கு திராவிட முன்னேற்றக் கழகத்தில் இருக்கும் தலைவர்களைப் பற்றி தெரியாது. ஆனால் சொல்வார்கள், மாண்புமிகு உள்துறை அமைச்சர் ஆற்காடு வீராசாமி அவர்கள் மாண்புமிகு முதலமைச்சருக்கு நெருக்கமானவர் என்று. இவ்வளவு நெருக்கமானவர் புதிய மின் நிலையத் திட்டத்தைக் கொண்டு வருவதில் ஆளுநர் உரையில் தன் செல்வாக்கை ஏன் பயன்படுத்தவில்லை என்று புரியவில்லை. இதில் அவர் செல்வாக்கைப் பயன்படுத்தவேண்டும் என்று கேட்டுக்கொள்கிறேன்.

அடுத்ததாக, பேருந்து துறையிலே பழைய அரசாங்கம் பல கோடி ரூபாயை விழுங்கிவிட்டது. இந்த ஆட்சி வருவதற்கு 6 மாதத்திற்கு

முன்பு ஒரு பெரிய வசூல் நடந்தது. அந்த வசூலில் 10 கோடி ரூபாய்க்கும் மேலாக அரசாங்கத்திற்கு கிடைத்தது. என்ன வசூல் என்றால், கன்வர்சன் என்ற ஒன்றைக் கொண்டு வந்தார்கள். டவுன் பஸ்களை மஃபசில் பஸ்களாக ஆக்குவது.

*முற்பகல் 11-30*

**மாண்புமிகு பேரவைத் துணைத் தலைவர்:** திரு. அழகிரி, நீங்கள் 28 நிமிடங்கள் பேசியிருக்கிறீர்கள். இன்னும் நிறையபேர் பேசவேண்டியிருக்கிறது. சீக்கிரம் முடித்துக் கொள்ளுங்கள்.

**திரு. ச. அழகிரி:** மாண்புமிகு பேரவைத் துணைத் தலைவர் அவர்களே, 1890 பேருந்து உரிமையாளர்களிடமிருந்து சற்றேறக்குறைய 15 கோடி ரூபாய்க்கு மேலாக பழைய அரசாங்கம் பெற்றிருக்கிறது. அதற்குப் பதிலாக என்ன சலுகை கொடுத்திருக்கிறது என்றால்......

**மாண்புமிகு பேரவைத் துணைத் தலைவர்:** திரு. அழகிரி சீக்கிரம் பேசி முடித்துக் கொள்ளுங்கள். நீங்கள் இன்னும் நேரம் எடுத்துக்கொண்டால் உங்கள் கட்சியின் சார்பாக பேசும் ஒருவருக்கு வாய்ப்பு கிடைக்காமல் போய்விடும்.

**திரு. ச. அழகிரி:** மாண்புமிகு பேரவைத் துணைத் தலைவர் அவர்களே, 'Conversion, variation, curtailment, revision of times' என்று பல்வேறு பெயர்களிலே அரசாங்கப் போக்குவரத்து நிறுவனங்களுக்கு நஷ்டம் ஏற்படுகின்ற வகையிலும் தனியார் போக்குவரத்து நிறுவனங்களுக்கு லாபம் ஏற்படுகின்ற வகையிலும் ஒரு திட்டத்தைக் கொண்டுவந்து ஒரு கிலோ மீட்டருக்கு இரண்டாயிரம் ரூபாய் என்ற வகையிலும், சில விசயங்களுக்கு, டவுன் பஸ்ஸை மஃபசில் பஸ்ஸாக ஆக்குவதற்கு 50 ஆயிரம் என்ற அளவிலும் வசூல் செய்து அரசாங்க போக்குவரத்து நிறுவனங்களுக்கு பெருத்த நஷ்டத்தை ஏற்படுத்தியிருக்கிறார்கள். அதிலே ஒன்றுதான் 170 கோடி ரூபாய், அரசாங்கப் போக்குவரத்துக் கழகங்களுக்கு ஏற்பட்டிருக்கக்கூடிய நஷ்டம் என்று அமைச்சர் அவர்கள் சொன்னார்கள். எனவே நான் மாண்புமிகு அமைச்சர் அவர்களை கேட்டுக்கொள்ள ஆசைப்படுகிறேன், இந்தப் போக்குவரத்துக் கழகங்கள் பற்றிய ஒரு வெள்ளை அறிக்கையைக்கூட நீங்கள் இங்கே வைக்கலாம். 6 மாதங்களுக்கு முன்பாக தனியார் போக்கு வரத்து நிறுவனங்கள் எந்த நிலையில் இருந்தனவோ அதே நிலையில்தான் அவைகள் மீண்டும் இருக்கவேண்டுமே ஒழிய அந்தப் பணத்தை அவர்கள் பெற்றுக் கொண்ட காரணத்தினால் 'Conversion, curtailment,



variation, revision of times' கொடுத்திருப்பதை இந்த அரசாங்கம் மாற்றவேண்டும் என்றும் பழைய நிலைமையை கொண்டுவர வேண்டும் என்றும் நான் கேட்டுக் கொள்ள ஆசைப்படுகிறேன்.

ஐ.ஏ.எஸ். அதிகாரிகள் இருக்கிறார்கள். அவர்கள் வீடுகளில் சி.பி.ஐ. ரெய்டு நடத்தியிருக்கிறது. குறைந்தபட்சம் அவர்களை எல்லாம் தற்காலிகப் பணிநீக்கமாவது நீங்கள் செய்து வைக்கலாம். அவர்கள் பெயர்களை எல்லாம் நான் எழுதி வைத்திருக்கிறேன். பேரவைத் துணைத் தலைவர் கோபமாக இருக்கிற காரணத்தால் நான் அவைகளை எல்லாம் சொல்ல முடியவில்லை. அந்த அரசாங்க அதிகாரிகள் தங்களை இளவரசர்களாக நினைத்துக் கொள்கிறார்கள். எந்தத் தவறு செய்தாலும் யாரையாவது பிடித்து தப்பித்துக் கொள்ளலாம் என்ற எண்ணம் அவர்களுக்கு இருக்கின்ற காரணத்தால், சி.பி.ஐ. ரெய்டு நடந்து இருக்கின்ற அதிகாரிகளை எல்லாம் உடனடியாக இந்த அரசாங்கம் தற்காலிக வேலை நீக்கம் செய்யவேண்டுமென்று நான் கேட்டுக்கொள்ள ஆசைப்படுகிறேன்.

கடைசியாக ஒன்று. மது விஷயம். இந்த அரசாங்கம் எதன் பெயராலும் தமிழகத்திலே மது விற்பனையை தடுக்க வேண்டுமென்று நான் கேட்டுக் கொள்ள ஆசைப்படுகிறேன். ஏனென்றால், திராவிட பாரம்பரியத்திலே வந்திருக்கின்ற நீங்கள் சமுதாயத்திலுள்ள சாதாரண மக்கள் முன்னேறவேண்டுமென்று ஆசைப்படுகிற நீங்கள, சமுதாய மறுமலர்ச்சி வரவேண்டுமென்று விருப்பப்படுகிற நீங்கள், அத்தகைய எண்ணங்களை எல்லாம் கொண்டிருக்கின்ற உங்களோடு சேர்ந்து இருக்கின்ற நாங்கள், நம்மை எல்லாம் ஆதரித்து இருக்கின்ற மக்கள், நம்மிடமிருந்து எதிர்ப்பார்க்கின்ற ஒன்றே ஒன்று எதன் பெயராலும் மதுவோ, சாராயமோ கிராமப்புறங்களில் விற்கப்படக்கூடாது என்பதுதான். எனவே அதனை நீக்குவதற்கு, தடுப்பதற்கு மாண்புமிகு முதலமைச்சர் அவர்கள் என்ன நடவடிக்கைகளை வைத்திருக்கிறார்கள், என்ன திட்டங்களை வைத்திருக்கிறார்கள் என்பதை அவர்கள் இந்தப் பேரவையில் அறிவித்து அதன்மூலம் தமிழ் கூறும் நல்லுலகத்திற்கு அவர்கள் புதிய வாழ்க்கையைத் தரவேண்டுமென்று நான் கேட்டுக் கொள்கிறேன். (மணியடிக்கப்பெற்றது) இவ்வளவு நேரம் பேசுவதற்கு என்னை அனுமதித்த பேரவைத் துணைத் தலைவர் அவர்களுக்கு நன்றி தெரிவித்துக் கொள்வதற்கு முன்பாக, நான் முதலமைச்சர் அவர்களிடமிருந்தும், அவை முன்னவர் அவர்களிடமிருந்தும் ஒரு சந்தேகத்தை மட்டும் கேட்டு தெரிந்து கொள்ள ஆசைப்படுகிறேன். இவ்வளவு வயதான காலத்திலும் இவ்வளவு இளமையுடன் இருக்கிறீர்களே அது எப்படி என்று எங்களுக்குத் தெரியவில்லை.

(சிரிப்பு) அதுபற்றி தயவுசெய்து சொல்லுவீர்களானால் நாங்களும் அதைப் பின்பற்றுவதற்கு வசதியாக இருக்கும் என்று கூறிக்கொண்டு விடைபெறுகிறேன், நன்றி, வணக்கம்.

**மாண்புமிகு டாக்டர் மு. கருணாநிதி:** நாட்டையும், சமுதாயத்தையும் காக்க உங்களைப் போன்ற இளைஞர்கள் இருக்கின்றீர்கள் என்ற மகிழ்ச்சியில்தான் நாங்கள் இளமையோடு இருக்கிறோம். (சிரிபபு)

**மாண்புமிகு பேரவைத் துணைத் தலைவர்:** திருவாரூர் சட்டமன்றத் தொகுதி உறுப்பினர் திரு. அ. அசோகன்.

***திரு. அ. அசோகன்:** மாண்புமிகு பேரவைத் துணைத் தலைவர் அவர்களே, மரியாதைக்குரிய அவை முன்னவர் உட்பட அமைச்சர் பெருமக்கள அனைவருக்கும், மரியாதைக்குரிய இந்த மாமன்றத்தின் உறுப்பினர் பெருமக்கள் அனைவருக்கும், இவை எல்லாவற்றுக்கும் மேலாய் நம் மாண்புமிகு முதல்வர் வரலாற்றால் திறனாய்வு செய்யப்படுகிற சொல்லாற்றல் மிக்கத் தலைவர் கலைஞர் அவர்களுக்கு எனது பணிவான வணக்கங்கள்.

*முற்பகல் 11-35*

மேதகு ஆளுநர் அவர்கள் கடந்த காலத்திலே இந்த அவையிலே மனம் வெந்து உரையாற்றியிருப்பார்கள். ஆனால் இந்த முறை மனம் உவந்து ஆற்றிய உரை என்பது அனைவரும் அறிந்தது. இந்த உரையிலே மாநகர்களுக்கு 300 கோடி ரூபாய், சென்னை நகருக்கு கிருஷ்ணா நீர்த் திட்டம், மீண்டும் மேலவை, மீண்டும் மனுநீதித் திட்டம், பெண்கள் நலத் திட்டம், மத்திய அரசு ஊதிய விகிதம், உள்ளாட்சித் தேர்தல்களை உடனே நடத்துதல், முறையான உறுப்பினர்களின் சேர்க்கைக்குப்பின் கூட்டுறவுச் சங்கத் தேர்தல், தமிழ் ஆட்சி, மத நல்லிணக்க அமைதிக் குழு, இட ஒதுக்கீடு முனைப்பு, இப்படி ஏற்றமிகு அம்சங்கள் இடம் பெற்றுள்ளன. இதை மனசாட்சி உள்ளவர்கள் மட்டுமல்ல உண்மையிலேயே மக்கள் நலனில் அக்கறை உள்ளவர்களும் மனதார பாராட்டி வாழ்த்துவார்கள். இன்றைக்கு "ஓடி வந்த இந்திப் பெண்ணே கேள், நீ தேடி வந்த கோழை உள்ள நாடு இதுவல்ல" என தான் வலம் வந்த மண்ணில் எங்கள் தலைவர் கலைஞர் அவர்கள் நடந்து முடிந்த தேர்தலில் நான் தி.மு.க. சார்பிலே போட்டியிட்டு அவரது விருப்பத்தை பூர்த்தி செய்திருப்பது போல திருவாரூர் தொகுதி மக்கள் என்னை சட்டமன்ற உறுப்பினராக தேர்ந்தெடுத்து அமோக வெற்றி தந்திருக்கும் மக்களுக்கு எப்படி நன்றி தெரிவிப்பது என எனக்குத் தெரியவில்லை.



நன்றியை வாயால் சொல்லாமல் வாய்மையோடு செயலில் காட்டுவேன். என்னைப் போன்ற ஒரு இளைஞனை இனம் காட்டிய தாய் உள்ளம் கொண்ட என் தானைத் தலைவருக்கு தமிழ்வேள் கலைஞர் அவர்களுக்கு எனது தலைதாழ்ந்த வணக்கங்களை மீண்டும் மீண்டும் தெரிவித்துக்கொள்கிறேன்.

திருவாரூர் என்றாலே ஒவ்வொரு இந்திய குடிமகனுக்கும் இரண்டு தான் நினைவுக்கு வரும். ஒன்று திருக்குவளையை ஈன்று எடுத்த செந்தமிழாம் என் தானைத் தலைவர் கலைஞர் தான். இரண்டாவது ஆடி அசைந்துவரும் ஆரூர் தேர். ஓடாத தேரை ஓட்டி வைத்தவர் நம் தங்கத் தமிழ்த் தலைவர் சிங்கநிகர் கலைஞர் அவர்கள். நிலையாய் நின்ற ஆரூர்தேரின் அழகுமிகு சக்கரங்கள் நீண்டகாலத்திற்குப் பின் சுழல வைத்தபோது எத்துணை ஆன்மீக உள்ளங்கள் அந்தச் சக்கரங்களுடன் சுழன்றன என்பதை அடுத்தவர்களின் கண்ணியத்தை மதிக்கத் தெரிந்த பகுத்தறிவு பெட்டகம் பண்புமாறா மறத்தமிழன் கலைஞரை எத்துனை பேர் பாராட்டி புகழ்ந்தனர் என்பதை இந்த தமிழ் கூறும் நல்லுலகம் அறியும். தலைவர் கலைஞர் அவர்கள் வலம் வந்த மண் என் திருவாரூர் தொகுதி என்ற காரணத்தினாலேயே முந்தைய அரசால் முழுமையாக புறக்கணிக்கப்பட்ட தொகுதி என் தொகுதி. அது மட்டுமல்ல மத்திய-மாநில அரசு அலுவலகங்கள் கூட பக்கத்து ஊருக்கு படை எடுத்துவிட்டன. பள்ளம் மேடுகள் என்பது எனது தொகுதி. சாலைகள் பழகிபோன ஒன்று. அவைகளையெல்லாம் கலைஞர் அவர்களின் தடையில்லாத் தமிழ் போல சரளமாக மாறவேண்டும். அது மட்டுமல்ல, திருவாரூரிலேதான் இன்றைக்கு மாண்புமிகு உறுப்பினர் எனக்கு முன்னாலே பேசிய உறுப்பினர் திரு. அழகிரி தாம் குறிப்பிட்டதைப் போல எனது திருவாரூர் தொகுதியிலே நன்றி கூற போனபோது நான் ஒரு நெடுஞ்சாலைத் துறை அலுவலகத்திற்குச் சென்றேன். அப்போது காலை 11 மணி. அலுவலகத்திலே அங்குள்ள அதிகாரிகள் கட்டிலிலே மெத்தை போட்டு படுத்திருந்தார்கள் என்பதை மிக்க வருத்தத்துடன் தெரிவித்துக் கொள்கிறேன். நிச்சயம் சமன் செய்து சீர்தூக்கும் கோல் போல பணியாற்றப் போகும் இந்த அரசு, நமது தலைவர் மாண்புமிகு முதல்வர் அவர்கள் அதற்கு உதவுவார் என்று என்னால் உறுதியாக சொல்லமுடியும். அது போல அருகிலே காவிரி இருந்தும் எனது தொகுதியில் தாகம் எடுத்த மக்கள்தான் அதிகம். அவர்கள் தாகத்தைத் தீர்த்து வைக்க அவர்கள் நம்பித் தேர்ந்தெடுத்தது தி.மு.க. ஆகும். அந்த நம்பிக்கையை திருவாரூர் வலம் வந்த எனது தலைவர் உதவியுடன் நிறைவேற்ற முடியும் என்பதை நிச்சயமாகக் கூற முடியும்.

சாலை வசதி, தண்ணீர் வசதி இவற்றுடன் மின் வசதி, இதுவும் திருவாரூர் தொகுதிக்கு தேவையான அளவிற்கு கிடைக்க வேண்டும். எனது தொகுதியிலே மூன்று ஒன்றியங்கள், இரண்டு பேரூராட்சிகள், ஒரு நகரம் அடங்கியுள்ளது. உதாரணத்திற்கு என் தொகுதியில் அடங்கியுள்ள முப்பத்திக்கோட்டம் என்ற அந்தக் கிராமத்தை அடைவதற்கு ஒரு முதுமலையைக் கடந்துதான் நான் வாக்கு சேகரிக்கச் சென்றேன். அந்த அளவிற்கு என் தொகுதி பின்தங்கியுள்ளது. பெரிய புராணம் காலத்திலே தொகையடியவர்கள் என்ற சுந்தரமூர்த்தி சுவாமிகளால் புகழப்பட்டவர்கள் யார் தெரியுமா? திருவாரூரில் பிறந்தவர்கள்தான். இன்றைக்கு தமிழ் மக்களால் ஒருமனதாக தேர்ந்தெடுக்கப்பட்டு பெரிய மாற்றத்தை ஏற்படுத்திய தலைவர் யார் என்று சொல்லித் தெரிய வேண்டிய அவசியம் இல்லை. இந்த திருவாரூர்காரரை பாராட்ட நான் ஒன்றும் சுந்தரமூர்த்தி சுவாமிகளும் இல்லை. வயதும் எனக்கு இல்லை. என் தொகுதி உங்கள் தொகுதி. இனிய தமிழ் தலைமையின் தொகுதி என்று மீண்டும் மீண்டும் நினைவுபடுத்தி வணங்குகிறேன். நன்றி.

**மாண்புமிகு பேரவைத் துணைத் தலைவர்:** டாக்டர் இ.எஸ்.எஸ். இராமன்.

***டாக்டர் இ.எஸ்.எஸ். இராமன்:** மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, இந்த மன்றத்திலே நிற்பதற்கு வாய்ப்பினை அளித்த மக்களுக்கும் என் மக்கள் தலைவருக்கும் வணக்கத்தைச் செலுத்தி எனது முதல் பேச்சைத் துவக்குகிறேன். நேற்றைய தினம் மாண்புமிகு எதிர்க்கட்சித் தலைவர் அவர்களோடு ஒரு மூத்த பத்திரிகையாளரை சந்தித்து இந்த ஆட்சி மலர்வதற்கு துணை நின்றீர்கள் என்று சொன்னோம்.

*முற்பகல் 11-40*

அவர்கள் சொன்னார்கள், 'I played only a marginal role' என்று சொன்னார்கள். அதற்கு பதிலுரையில் நான் சொன்னேன், Your marginal role only has brought us big margins' என்று சொன்னேன். அந்த அளவுக்கு எல்லாத் தரப்பு மக்களும் இந்த அரசு அமைவதற்கு, இந்த அரசு மலர்வதற்குத் துணைநின்று இருக்கிறார்கள். மிகுந்த நம்பிக்கையோடு இந்த அரசு அமைவதற்கு வாக்களித்திருக்கிறார்கள்.

ஆளுநர் அவர்கள் உரையிலே குறிப்பிட்டதைப்போல ஒரு Massive Mandate என்ற வகையிலே, ஒரு மகத்தான வெற்றியைத் தந்திருக்கிறார்கள்.



அந்தப் பொறுப்புணர்ச்சியோடு ஆளுநர் உரை அமைந்திருப்பதை, மகிழ்ச்சியாகவும் பாராட்டத்தக்கதாகவும், இருப்பதை நான் சொல்ல விரும்புகிறேன். ஆளுநர் அவர்கள் உரையைக் குறிப்பிட்டுப் பேசும்போது ஒரு குறையாக, "இந்த ஆளுநர் உரையிலே பக்கங்கள் குறைவு, திட்டங்களும் குறைவு" என்று சொன்னார்கள். நான் சொன்னேன்; பக்கங்கள் குறைவு என்பது ஒரு குறையே அல்ல, மக்கள் நம் 'பக்கம்' இருக்கிறார்கள் என்பதால்தான் பக்கங்களைப் பற்றி நாம் கவலைப்படவில்லை என்று சொன்னேன். அந்த அளவில் ஒரு மிகுந்த நம்பிக்கையோடு அமையப்பெற்றிருக்கிற அரசு தூய்மையான, சிறப்பான ஆட்சியைத் தரும் என்பதிலே ஐயப்பாடு இல்லை. அந்த அளவுக்கு இந்த ஆட்சி அமையவேண்டும் என்று நாங்கள் இருக்கின்ற தோழமைக்கட்சியான தமிழ் மாநில காங்கிரஸ் விரும்புகிறது.

டாக்டர் கலைஞர் அவர்கள் முதலமைச்சராகப் பதவி ஏற்றவுடனேயே கோட்டையின் முன்னிருந்த இரும்புத் தடுப்புகளை எல்லாம் அகற்றியிருக்கிறார்கள். அவர்கள் அகற்றியது பெயரளவிலே இரும்புத் தடுப்புகள். உண்மையில் அகற்றப்பட்டது மக்களுக்கும் அரசுக்கும் இடையில் இருந்த இரும்புத் திரை என்பதைச் சுட்டிக்காட்ட விரும்புகிறேன்.

நான் வாக்குச் சேகரிக்கச் சென்ற இடங்களிலே குறிப்பாக என்னுடைய பகுதி தெலுங்கையும் தமிழையும் கலந்து பேசுகிற பகுதியிலே Bi-Lingual ஒரு காலத்திலே Composite Madras—என்ற சென்னை மாகாணத்திலே சித்தூர் ஜில்லாவிலே இருந்த திருத்தணிப் பகுதியிலே வாக்குச் சேகரிக்கையிலே சென்றபோது விவசாயப் பெருங்குடி மக்களைச் சந்தித்தபோது அவர்கள் தெலுங்கிலே சொன்னார்கள்; இன்றைய தமிழக முதலமைச்சர் அவர்கள் பெயரைச் சொல்லி, அவர்கள் தெலுங்கில் சொன்ன அதே வார்த்தையை நான் சொல்கிறேன். 'ஆயினு மா தேவுடு, ஆயினுக்கிண்டி வேறெவருக்கு ஓட்டு' என்று சொன்னார்கள். தமிழிலே சொல்ல வேண்டுமானால் 'அவர் எங்களுடைய இறைவன், அவருக்கு இல்லாமல் வேறு யாருக்கு வாக்களிப்போம்' என்று சொன்னார்கள். அவர்கள் அப்படிச் சொன்னதற்குக் காரணம் விவசாயத்திற்கு முதுகெலும்பாக விளங்குகிற மின்சாரத்தை இலவசமாக வழங்கி, விவசாயப் பெருங்குடி மக்களுக்கு உறுதுணையாகச் செய்த காரியம்தான் என்பதை நாங்கள் உணர முடிந்தது. அந்த வகையிலே நெசவாளர் பெருங்குடி மக்கள் வாழ்கின்ற பகுதி என்னுடைய பகுதி என்பதாலும் தமிழகத்திலே கைத்தறிகள் எல்லாம் விசைத்தறிகளாக மாறுகின்ற நிலைமை இருப்பதாலும், விவசாயப் பெருங்குடி மக்களுக்கு எப்படி இலவச மின்சாரம் வழங்கினீர்களோ அதேபோல நெசவாளப்

பெருங்குடி மக்களுக்கும் நீங்கள் இலவச மின்சாரம் வழங்க வேண்டுமென்று இந்த மாமன்றத்தின் மூலமாக நான் கோரிக்கை வைக்க விரும்புகிறேன். சென்ற ஆட்சிக் காலத்திலே செய்த பல நன்மைகள் கல்லின்மேல் இட்ட எழுத்தாக மறையாமல் மக்கள் மனதிலே இருப்பதுதான மீண்டும் இந்த ஆட்சி மலர்வதற்குக் காரணமாக இருந்தது என்பதை சுட்டிக்காட்ட விரும்புகிறேன்.

தமிழுக்கு அணி சேர்க்கின்ற வகையிலே ஒரு புதிய அமைச்சகத்தை இந்த அரசு உருவாக்கிக் கொடுத்திருக்கிறது. என்னுடைய நண்பர்கள்கூட வருத்தமாகச் சொன்னார்கள்; பேரவைத் தலைவராக இருந்த மாண்புமிகு தமிழ்க்குடிமகன் அவர்களுக்கு ஒரு முக்கியத்துறையான பி.டபிள்யு.டி.-பொதுப்பணித் துறையோ அல்லது மின்சாரத் துறையோ வழங்காமல், முக்கியத்துவம் குறைந்த தமிழ் ஆட்சி மொழித் துறையைக் கொடுத்திருக்கின்றார்கள் என்று சொன்னார்கள். நான் சொன்னேன்; நீங்கள் நினைப்பது தவறு. பொதுப்பணித் துறையும், மின்சாரத் துறையும் காலம் தொட்டு இருப்பது. அதில் என்ன செய்ய வேண்டும், என்ன செய்யக் கூடாது என்று வரைமுறைகள் இருக்கின்றன. ஆனால் நிறையச் செய்ய வேண்டியிருக்கின்ற புதிய அமைச்சகத்தில் தமிழ் வளர்ச்சியினுடைய பணிக்காக அர்ப்பணிக்கப்பட்டது தான் இந்த அமைச்சருடைய துறை. ஆகவே, முக்கியத்துவம் வாய்ந்த துறையில்தான் மாண்புமிகு தமிழ்க்குடிமகன் அவர்கள் அமர்த்தப்பட்டிருக்கின்றார்கள் என்று சொன்னேன். எங்கும் தமிழ், எதிலும் தமிழ் என்ற வகையிலே தமிழ் கோலோச்ச வேண்டும் தமிழ்நாட்டிலே! என்பதிலே யாருக்கும் எந்தவிதக் கருத்து வேறுபாடும் இருக்க முடியாது.

*பிற்பகல் 11-45*

பொதுவாக, தமிழ் பயிற்று மொழி ஆக்கப்பட வேண்டும் என்பதிலே தமிழ் பெருமக்கள் எல்லாம் ஒன்றுபட்ட கருத்து உடையவர்களாக இருப்பார்கள். ஆனால் அது உண்மையில் நடைமுறைப்படுத்தப்படுகிறதா என்றால், அப்படி இல்லை என்பதுதான வேதனை தரக்கூடிய விஷயம். கல்விக்கூடம் ஆகட்டும், நீதிமன்றங்கள் ஆகட்டும், ஆலயங்கள் ஆகட்டும் தமிழ் மொழி இன்னும் முழுமையாக நடைமுறைக்குக் கொண்டுவரப்படவில்லை என்பதுதான் என்னுடைய ஆதங்கம். அப்படிக் கொண்டுவரப்பட வேண்டும் என்பதுதான் என்னுடைய கோரிக்கையும் ஆகும். குறிப்பாக, கர்நாடக மாநிலத்தை எடுத்துக்கொண்டால் கன்னட மொழியைப் பயிலாதவர்கள் அங்கு இருக்க முடியாது. ஆனால் தமிழைப் பயிலாமல் கடைசிவரை



முதுநிலைப் பட்டப் படிப்பு அல்லது முனைவர் பட்டம் வரை தமிழகத்திலே பயின்று விடலாம் என்ற நிலைமை இருக்கிறது. இந்த நிலைமை நிச்சயமாக மாற்றப்பட வேண்டும். தமிழ் கட்டாயமாக ஒரு பயிற்று மொழியாக இருக்க வேண்டும். எல்லா நிலைகளிலும், பள்ளிக்கூடங்களிலும், ஆலயங்களிலும், அலுவலகங்களிலும், அப்படி ஆக்கப்பட வேண்டும் என்பதில் இந்த அரசு உறுதியாக இருக்க வேண்டும். அப்படி ஆக்குவதற்கு உண்டான அதிகாரங்கள இந்த அமைச்சருக்கு வழங்கப்பட வேண்டும் என்று கேட்டுக்கொள்கிறேன். நேற்று முன் தினம் கூட மாண்புமிகு அமைச்சர் தமிழ்க்குடிமகன் அவர்கள் சுற்றுலா ஸ்தலங்களில் கலைஞர் அவர்கள் எழுதிய புஸ்தகங்களை வைக்கவேண்டுமென்று அவர்கள் கோரியிருந்தார்கள். அவர்கள் வேறு ஒரு அமைச்சருக்கு கோரிக்கை விடுத்து, அந்த அமைச்சர் கோரிக்கையை ஏற்று, இன்றைக்கு அந்தக் கோரிக்கை நிறைவேற்றப்படுமென்று செய்தித்தாளில் வந்து இருக்கிறது. இந்த நிலைமை மாற வேண்டும். தமிழ் வளர்ச்சிக்காக அர்ப்பணிக்கப்பட்டுள்ள அமைச்சருக்கு நேரடி அதிகாரங்கள் வழங்குவதன் மூலம் நிச்சயமாக தமிழை அரியணையிலே ஏற்ற முடியும் என்பதிலே ஐயப்பாடு இல்லை. அந்த வகையிலே அந்த அமைச்சருக்கு உண்டான அதிகாரங்கள் வழங்கப்பட வேண்டும். இன்னொன்றையும் நான் சொல்ல விரும்புகிறேன். சென்னைத் தொலைக்காட்சி நிலையத்திலும், ஏ.ஜி.எஸ். ஆபீஸ் என்று சொல்லப்படுகின்ற தணிக்கை அலுவலகங்களிலும் இந்தியைப் பரப்புவதற்கு, இந்தியை நிலைப்படுத்துவதற்கு, தனி அதிகாரிகள் இருக்கிறார்கள். 'ஸ்பெசல் ஆபிசர்கள்' இருக்கிறார்கள். அந்த வகையிலே ஒவ்வொரு அலுவலகத்திலும் குறிப்பாக மாநகராட்சி அல்லது நகராட்சி ஆகட்டும், அங்கே தமிழை நடைமுறைப்படுத்துவதற்கு என்று தமிழ் தெரிந்த அதிகாரிகளை நாம் நியமிக்கவேண்டும். அப்படி நியமிப்பதன் மூலம் நிச்சயமாக தமிழ் ஆட்சி மொழியாக அமல்படுத்த முடியும்.

இந்தத் தமிழ் மாநிலத்திலே, மிக நெடுங்காலமாக ஒரு கோரிக்கை இருந்து வந்திருக்கின்றது. திருக்குறளை தேசிய நூலாக அறிவிக்க வேண்டுமென்று தமிழறிஞர்கள் பலரும், பன்னெடுங்காலமாக கோரிக்கை விடுத்து வந்திருக்கிறார்கள். கடந்த ஆண்டு வடவிலைத் தந்தை என்று போற்றப்படுகின்ற மங்கலங்கிழார் நூற்றாண்டு விழாவிலேக் கூட அருமைத் தலைவர் ஐயா மூப்பனார் அவர்கள் பேசும்போது தமிழறிஞர்கள் இந்தக் கோரிக்கையை விடுத்தார்கள். அவர்கள் எனக்கு இருக்கின்ற செல்வாக்கைப் பயன்படுத்தி அதை நான் ஆக்குவேன்

என்று உறுதி அளித்தார்கள். வள்ளுவர் கோட்டத்தையும் குறளோவியத்தையும் தந்து, வள்ளுவத்திற்குத் தனிப் பெருமை சேர்த்திருக்கின்ற டாக்டர் கலைஞர் அவர்கள் முதல்வராக இருக்கின்ற போது, திருக்குறள் தேசிய நூலாக அறிவிக்கப்பட வேண்டும். அந்த வகையிலே இந்த மன்றம் ஒரு தீர்மானத்தை நிறைவேற்றி நடுவண் அரசைக் கேட்டுக்கொண்டு, அந்த வரலாற்றுச் சாதனையை செய்யவேண்டுமென்று கோரிக்கை விடுக்க விரும்புகிறேன்.

அதேபோல முத்தமிழுக்குத் தொண்டாற்றியவர்கள், குறிப்பாக இசைக் கலைஞர்கள், அதிலே முன்னோடியாக விளங்கியவர்களுக்கு எடுக்கும் விழாக்களை அரசு விழாக்களாக நாம் அறிவிக்க வேண்டும். உதாரணத்துக்கு சொல்ல வேண்டுமென்றால், இசைக் கலைஞர்களுக்கு, நாதஸ்வர இசைக் கலைஞர்களுக்கு, குறிப்பாக ஒரு தனி மரியாதையையும் சுய கௌரவத்தையும் பெற்றுத் தந்துள்ளவர் திருவாடுதுறை டி.என். இராஜரத்தினம் பிள்ளை ஆவார்கள். அவருடைய விழாவை ஐயா மூப்பனார் அவர்கள் சென்னை, கும்பகோணம், டெல்லியிலே கூட நடத்த முயற்சித்தார்கள். இரண்டு இடங்களில் நடந்தது. ஏன் இதைச் சொல்கிறேன் என்றால், அப்படி ஆக்குவதன் மூலமாக, இசைக் கலைஞர்களுக்கு, அரசு விழாக்களாக அவருடைய நாட்களை அறிவிப்பதன் மூலமாக ஒரு தனி கௌரவத்தை நாம் பெற்றுத் தர முடியும். அந்த வகையிலே, இந்த நல்ல கருத்தை கலைஞருடைய அரசு செய்ய வேண்டுமென்று நான் கேட்டுக்கொள்கிறேன்.

*1974*-ஆம் ஆண்டு கீழ்ப்பாக்கம் மருந்துவக் கலலூரியின் மாணவராக இருந்தபோது, சென்னை மருத்துவக் கல்லூரி, ஸ்டான்லி மருத்துவக் கல்லூரி, கீழ்ப்பாக்கம் மருத்துவக் கல்லூரி ஆகியவை சேர்ந்து, நாங்கள் முத்தமிழ் விழா நடத்தினோம். அப்போதைய முதல்வரும், இப்போதைய முதல்வருமான டாக்டர் கலைஞர் அவர்களை அழைத்து அந்த விழாவிற்குத் தலைமை தாங்கச் செய்தோம். அப்போது தேவநேயப் பாவாணர் அவர்கள் உயிரோடு இருந்தார்கள். தேவநேயப் பாவாணர் உயிரோடு இருக்கும்போது அகர முதலியைத் துவக்குகின்ற பணியை அவர்களுக்கு அளித்து இருந்தார்கள். அவர்களைப் பாராட்டும் முகத்தான், ஒரு தனி பாராட்டு இதழை நாங்கள் அளித்தோம். அகரமுதலியைத் துவக்கின்ற ஒரு அரிய பணியை தேவநேயப் பாவாணர் செய்கிறார்கள். ஆகவே இந்த அகரமுதலி முற்றுப்பெறும் வரை அவர் நீண்ட நெடுங்காலம் வாழவேண்டும் என்று வாழ்த்தினோம். டாக்டர் கலைஞர் அவர்களும் வாழ்த்திப் பேசினார்கள். ஆனால், இன்றைக்கு அகர முதலி தொகுக்கும் பணி நிச்சயமாக முடிந்துவிட்டதா ? எனக்குத்



தெரியவில்லை? முடியவில்லை என நான் அறிகிறேன். ஆகவே இப்போது ஏற்பட்டிருக்கின்ற தனித்துவம் தமிழுக்குத் தரப்பட்டிருக்கிற முக்கியத்துவம் அகரமுதலியை முடிக்கின்ற பணியிலே நிறைவேறச் செய்கின்ற பணிக்குப் பயன்பட வேண்டும். அதை தனி நிறுவனத்திடம் ஒப்படைக்கலாம். அதற்கான முன்னுதாரணம் இருக்கின்றது. ஆகவே அவற்றைப் பயன்படுத்தி, அகர முதலியைத் தொகுக்கின்ற அரிய பணியை, தமிழுக்கு வளம் சேர்க்கும் பணியை இந்த அரசு நிச்சயமாக முழுமையாக நிறைவேற்ற வேண்டும் என்று நான் கேட்டுக் கொள்கிறேன். அதே போல பல்வேறு மொழிகளான சீனம், கிரேக்கம், லத்தீன் போன்ற மொழிகள் Classical language என்று சொல்லப்படுகின்ற உயர் தனிச் செம்மொழிகளாக அறிவிக்கப்பட்டிருக்கின்றன. உலக அரங்கிலே அவற்றிற்கு ஒப்பியல் ஆய்வு இலக்கணம் எல்லாம் செய்யப்பட்டிருக்கிறது. ஆனால் தமிழ் மொழிக்கு அப்படித் தனித்துவம், சிறப்பு செய்யப்படவில்லை என்பது ஒரு வருத்தமான உண்மை. அந்த வகையிலே, எந்த வகையிலே செய்ய வேண்டுமோ அந்த வகையிலே தமிழை உயர்தனிச் செம்மொழியாக கிளாசிகல் லாங்குவேஜ் என்று அறிவிக்கின்ற ஒரு அறிவிப்பினையும் இப்போது இருக்கின்ற அரசு செய்ய வேண்டுமென்று நான் கேட்டுக்கொள்ளக் கடமைப்பட்டு இருக்கின்றேன். *(மணியடிக்கப்பெற்றது)*

*முற்பகல் 11–50*

குறிப்பாக என்னுடைய தொகுதியைப் பற்றி நான் கோரிக்கை விடுக்க விரும்புகிறேன். செங்கல்பட்டு மாவட்டத்திலே வடகோடியிலே இருக்கக்கூடிய பள்ளிப்பட்டு தொகுதி மிகவும் பிற்பட்ட பகுதியாக, இண்டஸ்ட்ரியலி மோஸ்ட் பேக்வேர்டு என்று அறிவிக்கப்பட்டு இருந்தது. ஆனால் இன்றைய நிலையிலே எந்த ஒரு முன்னேற்றமும் இல்லாத நிலையிலே--சென்ற ஆட்சியின் லட்சணம் உங்களுக்கு நன்றாகவே தெரியும், அந்த அளவுக்கு எந்த ஒரு முன்னேற்றமும் ஏற்படாத நிலையிலே இருக்கிறது. அந்த ஆணை திரும்பப் பெறப்பட்டு இருப்பதாக நான் அறிகிறேன். அப்படி இல்லாமல் மீண்டும் ஐந்து வருடங்கள் ஒரு பொற்காலமாக அமைய இருக்கின்ற இந்த ஆட்சியிலே பள்ளிப்பட்டுத் தொகுதியை மீண்டும் மிகவும் பிற்படுத்தப்பட்ட பகுதியாக நீங்கள் அறிவிக்க வேண்டும் என்ற கோரிக்கையை இந்த மாமன்றத்தின் வாயிலாக விடுக்க விரும்புகிறேன்.

மதுவிலக்கைப்பற்றி 25 ஆயிரம் பெண்கள் பிரசாரத்தில் ஈடுபடுவார்கள் என்று சொன்னார்கள். திருடனாய்ப் பார்த்து திருந்தாவிட்டால் திருட்டை ஒழிக்க முடியாது என்ற வகையிலே குடிப்போராய்ப் பார்த்து திருந்தாவிட்டால் குடியை ஒழிக்க முடியாது என்ற வகையிலேதான் இன்றைய நிலைமை இருக்கிறது. ஆனாலும், மதுவிலக்கில் ஆணித்தரமான நம்பிக்கை கொண்டிருக்கின்ற மக்கள் ஒருபுறம் இருந்தாலும் ஒரு தீவிரப் பிரச்சாரத்தின் மூலமாக, இந்த மதுவிலக்கு பிற மக்களுடைய மனதிலேயும் பதிய வேண்டுமென்ற வகையிலே 25 ஆயிரம் பெண்களை நியமித்து இருப்பதை நான் வரவேற்கிறேன். ஆனால், அவர்களை அதற்கு மட்டும் பயன்படுத்தாமல் வேறு நல்ல செயல்களுக்கும் குறிப்பாக குழந்தைகளைப் பராமரிக்கின்ற செவிலித் தாய்களாகவும் பணிகளை மாற்றி அமைக்க வேண்டுமென்று நான் இந்த மாமன்றத்தின் மூலம் கேட்டுக்கொள்கிறேன்.

மனித உரிமைகள் மீதான புகார்களைப் பற்றி விசாரணை செய்ய அமைக்கப்படும் மாநில மனித உரிமைகள் ஆணையம் பாரபட்சமின்றி செயல்பட ஆவன செய்ய வேண்டும். அனைத்துக் கட்சிகளின் பிரதிநிதிகளும், தொண்டு நிறுவனங்களும், நடுநிலையாளர்களும் உட்பட அனைவரும் அதிலே இடம்பெற வேண்டும் என்று இந்த மாமன்றத்திலே கேட்டுக்கொள்கிறேன்.

உயர் பதவியில் உள்ளோர், அதிகாரிகள் ஆகியோர்க்கு எதிரான ஊழல் புகார்களை விசாரிக்க அமைக்கப்படும் ஆம்புட்ஸ்மென் கமிட்டி குறுகிய வரையறைகளைக் கொண்டதாக இருக்காமல் மிகுந்த நம்பிக்கையை மக்களிடையே நம்பிக்கையை ஏற்படுத்தும் வண்ணம் இருக்க வேண்டுமென்று நான் கேட்டுக்கொள்கிறேன்.

பொதுவாக மிகுந்த நம்பிக்கையோடு, மக்களின் பெருவாக்கோடு, பெருமனதோடு அமையப்பெற்ற இந்த அரசு மக்களுடைய அரசாக விளங்க வேண்டும். இந்த அரசு தெய்வமாக நிற்கும் என்று, ஒரு அசுர பலத்தை மக்கள் தந்து இருக்கிறார்கள். அந்த அசுர பலம் மக்களுக்கு அருள் பாலிக்கத்தான் பயன்படவேண்டும். அந்த வகையில் இந்த அரசு அமைய வேண்டுமென்று கேட்டுக்கொண்டு, இந்த நல்ல வாய்ப்பை அளித்த உங்களுக்கு என்னுடைய நெஞ்சார்ந்த நன்றியைத் தெரிவித்துக்கொண்டு விடைபெறுகிறேன், நன்றி, வணக்கம்.

**மாண்புமிகு பேரவைத் துணைத் தலைவர்:** மாண்புமிகு உறுப்பினர் திரு. வ. வேலுசாமி.



**திரு. வ. வேலுசாமி:** மாண்புமிகு பேரவையினுடைய துணைத் தலைவர் அவர்களுக்கு முதற்கண் எனது வணக்கம். இந்த மாமன்றத்திலே முதன்முதலிலே பேசக்கூடிய ஒரு வாய்ப்பினைத் தந்த உங்களுக்கு மீண்டும் எனது நன்றியினைத் தெரிவித்துக்கொண்டு, நீதிமன்றங்களில் மாத்திரம் என்னுடைய விவாதங்களை வைத்துக்கொண்டிருந்த என்னை இந்த மாமன்றத்திலே பேசுவதற்கு வாய்ப்பு அளித்த கழகத் தலைவர் மாண்புமிகு முதல்வர், டாக்டர் கலைஞர் அவர்களுக்கும், பெருவாரியான வாக்குகளால் தமிழக மக்கள் ஒரு அரசியல் விழிப்புணர்ச்சியோடு நல்லதொரு தீர்ப்பினை வழங்கி இருக்கக்கூடிய தமிழக அனைத்து மக்களுக்கும், குறிப்பான முறையிலே, எனது மதுரை கிழக்குத் தொகுதி மக்களுக்கும் என்னுடைய நன்றியினைக் காணிக்கையாக்கி, ஒருசில கருத்துக்களைச் சொல்ல விழைகின்றேன்.

ஆளுநர் உரையானது தமிழக மக்களுடைய எண்ணத்தைப் பிரதிபலிப்பதாகவும், அவர்களுடைய நலன் காப்பதற்காக ஏற்படுத்தப்பட்ட உரையாகவும், மக்களுடைய எதிர்ப்பார்ப்புகளை முழுமையாக நிறைவேற்றக் கூடிய ஒன்றாகவும் அமைந்து இருக்கிறது. அந்த உரையிலே முதன்முதலிலேயே சொல்லி இருக்கக்கூடிய ஒன்றானது.

> *"கல்தோன்றி மண் தோன்றாக் காலத்தே*
> *முன்தோன்றி மூத்த தமிழ்மொழி".*

இலக்கணமும், இலக்கியமும் நிறைந்த தமிழ் மொழி, உலகத்திலே உள்ள மிகச் சிறந்த மொழிகளிலே சிறந்த தமிழ்மொழி, இங்கே தமிழர்களாக நாம் இருந்தும் இந்தத் தமிழ் மொழிக்கு ஆட்சி மொழியிலே இடம் இல்லை என்று இதுநாள் வரை இருந்த கருத்து நீங்கிட, சிலோன், சிங்கப்பூர் போன்ற நாடுகளில்கூட சென்று குடியேறிய மக்கள் எல்லாம், அவர்களுக்கு எல்லாம் இன்று நம்முடைய அருமை தாய்மொழியாம் தமிழ்மொழி ஆட்சி மொழியாக இருக்கும்பொழுது, இங்கே முன்தோன்றிய மூத்தக்குடிகளாக இருக்கக்கூடிய நமது தமிழர்களுக்கு ஆட்சிமொழி இல்லையே என்ற கவலையைப் போக்கிட நம்முடைய ஒப்பற்ற தலைவர், மாண்புமிகு முதல்வர் அவர்கள் தமிழ் மொழியையும் இந்திய மொழிகளிலே ஆட்சி மொழியாகக் கொண்டுவருவோம் என்று சொல்லியிருக்கக்கூடிய இந்தக் கருத்து மனதார வரவேற்கக்கூடிய ஒன்றாகும்.

முற்பகல் 11-55

அதைப்போலவே, 69% இட ஒதுக்கீடு வெறும் ஏட்டுச் சுரைக்காயாக, அது சட்ட வடிவம் கொடுக்கப்பட்ட பின்பும், பின்னாலே

உச்சநீதிமன்றத்திலே மீண்டும் 50% என்று ஆக்கி, அதிலே ஏழையெளிய பிற்படுத்தப்பட்ட, தாழ்த்தப்பட்ட மக்களுக்கு எல்லாம் அவர்களுடைய பங்கு ஒழுங்காகக் கிடைக்காத அளவிலே ஏற்படுத்தப்பட்டிருக்கக்கூடிய ஒரு சூழ்நிலையை உடனடியாக நீக்குவதற்கு மீண்டும் உச்சநீதிமன்றம் சென்று, மீண்டும் 69 சதவிகிதத்தை கொண்டு வருவோம் என்று சொல்லியிருக்கக்கூடியதும், உள்ளாட்சி மன்றத் தேர்தல்கள், கானல்நீராக இருந்து, அதிலும் குறிப்பான முறையிலே, சென்னை மாநகராட்சி, மதுரை மாநகராட்சி போன்ற தேர்தல்கள் எனக்குத் தெரியாத காலத்திலே நடத்தப்பட்டு, இதுவரையிலும் நடத்தப்படாமல் இருக்கக்கூடிய ஒன்றினை உடனடியாக நடத்துவோம் என்று சொல்லியிருக்கக்கூடிய அந்த உரைகளும், கூட்டுறவுச் சங்க தேர்தல்களிலே பல தில்லுமுல்லுகள் ஏற்கெனவே செய்து, அவர்களால் உறுப்பினர்களாக புதிது புதிதாக தேவையற்றவர்கள் எல்லாம் சேர்ந்திருக்கக் கூடியதை, அப்படிப்பட்ட நபர்களை உண்மை அறிந்து, அவர்களை விலக்கி, உண்மையான உறுப்பினர்களை நல்லமுறையிலே சேர்த்து, தேர்தல்களை, உடனடியாக உயர்நீதிமன்றம் சென்று அதனுடைய உரிய உத்தரவைப் பெற்று நடத்துவோம் என்ற காரியங்களும், நகர் பகுதி மேம்பாடு திட்டம் மற்றும் வீட்டுவசதித் துறைக்கு முக்கியத்துவம் கொடுக்கக்கூடிய இந்த வாசகங்களும், போககுவரத்து நெரிசலைக் குறைப்பதற்காக புறவழிச் சாலைகளை ஏற்படுத்தி அதன்மூலம் ஏற்கெனவே நம்முடைய மாண்புமிகு உறுப்பினர்கள் சொன்னதைபோல, பல்வேறு இடங்களிலே போககுவரத்து நெரிசலால் பல உயிரிழப்புகள் ஏற்படக்கூடியவைகளை தவிர்ப்பதற்கும், பாதுகாக்கப்பட்ட குடிநீர், இது ஒரு சாதாரணமான வாசகம் அல்ல-- இன்றைய நிலையிலே தமிழகம் குடிநீருக்காக மக்கள் அலைந்துகொண்டிருக்கக்கூடிய சூழ்நிலையில், நம்முடைய மாண்புமிகு முதல்வர் அவர்கள் குடிநீர்ப் பிரச்சினையை முக்கியமானதாக எடுத்துக்கொண்டு, எந்த வழியிலும் சாதாரண குடிநீர் அல்ல, ஒரு பாதுகாப்போடு கூடிய குடிநீரை வழங்குவோம் என்று சொல்லியிருக்கக்கூடிய அந்த வாசகங்களும், நெசவாளர்கள், விவசாயிகள், அதைப்போலவே வணிகர்கள், தொழிலாளர்களுடைய தேவைகளை நிறைவேற்றுவோம் என்ற அளவிலே இருக்கக்கூடியவைகளும், கருத்துக்களுடைய சொற்போர்களும், நிறைய தேவைகளுக்கு உரிய கருத்துக்களும் சொல்லக்கூடிய அந்த மேலவையை மீண்டும் கொண்டுவருவோம் என்ற வாசகங்களும், பெண்களுக்கு இளங்கலை வரையிலும்--பட்டப்படிப்பு வரையிலும் இலவசக் கல்வி, திருமண உதவி, கருவுற்ற பெண்களுக்கு பேறுக்கால நிதியுதவி போன்ற கருத்துக்களையும், மனதார, உளமார அனைத்து உறுப்பினர்களும் பாராட்டக் கடமைப்பட்டிருக்கின்றோம்.



பொதுவான முறையிலே, நான் ஒருசில கோரிக்கைகளை எனது தொகுதி அடிப்படையிலே சொன்னாலும், அது தமிழகம் முழுவதும் இருக்கக்கூடிய இந்த உறுப்பினர்களுக்கு எல்லாம் அது நிச்சயமான முறையிலே தேவைப்படும் என்ற அளவோடு ஒரு சில கருத்துக்களை இந்தப் பேரவையின் முன்பாக வைக்கக் கடமைப்பட்டிருக்கின்றேன்.

நம்முடைய ஒப்பற்ற தலைவர், மாண்புமிகு முதல்வர் அவர்கள் நகர் அபிவிருத்தித் திட்டத்தின்கீழ் 200 கோடி ரூபாய் சென்னை மாநகரத்திற்கும், 100 கோடி ரூபாயினை மதுரை, திருநெல்வேலி, திருச்சி, சேலம் போன்ற நகர்களுக்கும் அளித்திருக்கக்கூடிய ஒரு சூழ்நிலையும் வரவேற்கக் கூடிய ஒன்றுதான். ஆனால் மதுரை நகரைப் பொறுத்தவரை, அதை மாநகராட்சி என்று சொல்லிக்கொள்ளலாமே தவிர, அது ஒரு மிகப் பெரிய நகரமாக இல்லை. மதுரையிலிருந்து சிறிய சிறிய பக்கத்துக் கிராமங்களுக்குச் செல்லக்கூடிய பாதைகளுக்கு சரியான சாலை வசதிகள் இல்லை. இருக்கின்ற எல்லாச் சாலைகளும் குண்டும் குழியுமாகத்தான் இருக்கக்கூடிய சூழ்நிலைதான் இருக்கிறது. மதுரைக்கு வரக்கூடிய ஒரு சில சாலைகள் தவிர்த்து, கடந்த ஆட்சிக்காலத்திலே அந்த நகரத்தில் எந்தச் சாலையும் செப்பனிடப்படவில்லை. ஆகவே, இந்தத் தொகையை ஒதுக்கியிருப்பது வரவேற்கக்கூடிய ஒன்றாகும். அதைப்போலவே, புறவழிச்சாலை. புறவழிச் சுற்றுச்சாலை ஆரம்பிப்பதாக ஏடுகளில் பார்த்திருக்கிறோமே தவிர, அது பல ஆண்டுகளாக அப்படியே இருக்கக்கூடிய சூழ்நிலையில்தான் இருக்கிறது. ஒருங்கிணைந்த பேருந்து நிலையம் ஒன்று கட்டப்பட்டு அது அரைகுறையாக இருக்கிறது. மதுரை மாநகரம் மிகப்பெரிய கோயிலைக் கொண்டது. அருள்மிகு மீனாட்சி அம்மன் கோயில் இருக்கிறது. உலகச் சுற்றுலாப் பயணிகள் எல்லாம் அங்கே வந்து கண்டுகளிக்கக்கூடிய அந்த வானுயர் கோபுரங்கள் கொண்ட மீனாட்சிப்பட்டினமாம் கூடல் மாநகரத்திலே அந்தக் கோயிலுடைய அருகாமையில் மார்க்கெட் இருக்கிறது. இங்கே சென்னையிலே இருந்த மார்க்கெட் கோயம்பேட்டுக்கு மாற்றப்பட்டதைப் போல, மதுரை மார்க்கெட்டை வேறு ஒரு இடத்திற்கு மாற்றுவதற்கு மாண்புமிகு முதல்வர் அவர்கள் நடவடிக்கை எடுத்து, வேறு ஒரு இடம் தரவேண்டும் என்று கேட்டுக்கொள்கிறேன்.

நண்பகல் 12-00

மேலும் நீதியை நிலைநாட்டுவதற்காக தன் இன்னுயிரை ஈந்த பாண்டிய மாமன்னன் நெடுஞ்செழியன் வாழ்ந்த மதுரையில், எங்களுடைய நீண்டநாள் கோரிக்கை, உயர்நீதிமன்றத்தின் கிளையை அங்கே ஆரம்பிக்கவேண்டும் என்பதுதான். பொதுமக்களுக்காக

வானளாவிய கட்டிடங்களைக் கட்டுவதில்-ராசி என்று நாம் நினைக்காவிட்டாலும்-அந்த ராசிக்குச் சொந்தக்காரரான நம்முடைய மாண்புமிகு முதல்வர் அவர்களுடைய காலத்தில்தான் அந்த நீதிமன்றக் கட்டிடங்கள் அங்கே கட்டப்படும், திறக்கப்படும் என்று நாங்கள் அங்கே ஏற்கெனவே சொல்லியிருக்கிறோம். நம்முடைய மாண்புமிகு கழகப் பொருளாளர் அவர்கள்கூட ஏற்கெனவே மதுரைக்கு வந்து ஒரு கூட்டத்தில் பேசும்போது நிச்சயம் திராவிட முன்னேற்றக் கழகத்தின் ஆட்சி வரும், எங்களுடைய ஒப்பற்ற தலைவர் கலைஞர் அவர்கள் வந்துதான் உயர்நீதிமன்றத்தின் மதுரைக் கிளையை ஆரம்பித்து வைப்பார்கள் என்று சொல்லியிருக்கிறார்கள். அதை உடனடியாகக் கவனித்து நிச்சயமாக தலைவர் கலைஞர் அவர்கள் அதற்கு முன்னுரிமை கொடுத்து உயர்நீதிமன்றக் கிளையை அங்கே துவக்கி வைக்கவேண்டுமென்று நான் இந்த நேரத்தில் கேட்டுக்கொள்கிறேன்.

அதைப்போலவே, நாம் அனைவரும் எதிர்பார்ப்பதும், சாதாரண மக்கள் எலலாம் எதிர்பார்ப்பதும் வேறு ஒன்றுமில்லை, அடிப்படை வசதிகள்தான். நாம் எல்லாம் வாக்குகளைக் கேட்கப் போகும் போதும், நன்றி கூறப் போனபோதும் அந்த மக்கள் கேட்டதெல்லாம் அதிகம் இல்லை. எங்களுக்குக் கழிப்பிட வசதியில்லை. குடிநீர் இல்லை. புழங்குவதற்கு தண்ணீர் வசதியில்லை. சாலை வசதியிலலை. மின்சார வசதியில்லை என்று இந்த நான்கைத்தான் கேட்டார்கள். அதைத் தலைவர் அவர்கள் கவனித்து, அதற்கு முன்னுரிமை கொடுத்து, அவைகளை செய்து தரவேண்டுமென்று கேட்டுக்கொள்கிறேன். இல்லையென்றால் இன்னும் மூன்று மாதங்கள் கழித்துத் தொகுதிக்குப் போனாலும் கூட உள்ளே செல்ல முடியாது. ஏற்கெனவே பத்திரிகைகள் வாயிலாக எல்லாம் படித்திருக்கிறோம். பல வேட்பாளர்கள் ஏற்கெனவே இருந்தவர்கள், தொகுதிகளுக்குள்ளே செல்லமுடியாமல், கல்லெறிபட்டுவந்த அந்த சூழ்நிலையைப் பார்த்தோம். இன்னும் மூன்று மாதங்கள் கழித்து தொகுதிக்குச் சென்றாலும், நிச்சயமாக அந்த மக்கள் அதைப்பற்றிக் கேட்கத் தயாராக இருக்கிறார்கள். ஆகவே அதற்கேற்ற நடவடிக்கையை எடுத்து மாண்புமிகு முதல்வர் அவர்கள் உதவவேண்டுமென்று கேட்டுக் கொள்கிறேன்.

**மாண்புமிகு பேரவைத் துணைத் தலைவர்:** திரு. வேலுசாமி, சீக்கிரம் பேசி முடித்துக் கொள்ளுங்கள். நிறைய உறுப்பினர்கள் பேசவேண்டியிருக்கிறது.

**திரு. வ. வேலுசாமி:** எங்களுடைய மதுரை கிழக்குப் பகுதியிலே உள்ள பிரச்சினைகள் பற்றி நம்முடைய தலைவர் அவர்களுக்குத்



தெரியும். நெசவாளர்கள் அதிகமாக இருக்கக்கூடிய பகுதி. நெசவுத் தொழில் நசிந்து போய் இருக்கக்கூடிய பகுதி. ஏற்கெனவே நூல் விலை உயர்வால் அந்தத் தொழில் நசிந்து போயிருக்கிறது. அதைத் தலைவர் அவர்கள் அறிவார்கள். 22 அம்சத் திட்டம் என்று வைக்கப்பட்டிருக்கிறது. அதிலும் கவனம் செலுத்தவேண்டும் என்று கேட்டுக்கொள்கிறேன். அங்கே இருக்கக்கூடிய சௌராஷ்டிரா சமுதாயம் என்பது மிகச் சிறுபான்மை சமுதாயம். அவர்களை பிற்பட்டோர் பட்டியலிலிருந்து மிகப் பிற்பட்டோர் பட்டியலில் அவர்களைச் சேர்க்கவேண்டும் என்று கேட்டுக்கொண்டு, எனக்கு இவ்வளவு நேரம் பேசுவதற்கு வாய்ப்பளித்த மாண்புமிகு துணைத் தலைவர் அவர்களுக்கு நன்றி கூறி விடைபெறுகிறேன். நன்றி, வணக்கம்.

*பிற்பகல் 12.05*

**மாண்புமிகு பேரவைத் துணைத் தலைவர்:** அடுத்து, மாண்புமிகு உறுப்பினர் திரு. கே. சுப்பராயன்.

**•திரு. கே. சுப்பராயன்:** மாண்புமிகு பேரவைத் துணைத் தலைவர் அவர்களே, சிக்கலும் நெருக்கடியும் நிறைந்த இன்றைய தமிழ் நாட்டு அரசியல் பொருளாதார, சமூகச் சூழலில் இங்கே முன் வைக்கப்பட்டிருக்கிற இந்த ஆளுநர் உரையின் மீது இந்திய கம்யூனிஸ்ட் கட்சியின் சார்பில் சிலபல கருத்துக்களை நான் சொல்ல விரும்புகிறேன்.

ஆளுநர் உரை என்பது இன்றைக்கு தமிழ்நாட்டில் நிலவுகிற இந்த அரசியல், பொருளாதார, சமூக நிலைமைகளின்பால் ஆளுகிற கட்சியினுடைய கொள்கை ரீதியான அணுகுமுறை எப்படி இருக்கிறது என்பதை வெளிப்படுத்துகிற ஒரு கண்ணாடியாகத்தான் இந்த கவர்னர் உரை இருக்கிறது. தெளிவாகச் சொல்ல வேண்டுமானால் ஆளுகிற கட்சியினுடைய மன ஓட்டத்தை அடையாளம் காட்டுகிற எக்ஸ்-ரே காப்பியாக இந்த கவர்னர் உரை இருக்கும். அந்த அடிப்படையிலே இங்கே முன் வைக்கப்பட்டிருக்கிற இந்த கவர்னர் உரையின் மீது ஒரு சில பொதுவான விஷயங்களை நான் கோடிட்டுக் காட்ட விரும்புகிறேன். குறிப்பான விஷயங்களைப் பற்றியும், துறைவாரியான விஷயங்களைப் பற்றியும் பின்னர் பட்ஜெட்டின் மீதும், மானியக் கோரிக்கைகள் மீதும் நடைபெறுகிற விவாதத்தில் பேச வாய்ப்பு இருக்கிறது என்ற காரணத்தால் கவர்னர் உரை கோடிட்டுக் காட்டியிருக்கிற விஷயங்களைப் பற்றி மட்டும் சொல்லி முடிக்க விரும்புகிறேன்.

எனது பேச்சின் தொடக்கத்தில் மகத்தான ஜனநாயகத் தீர்ப்பில் வெற்றி பெற்று அதிகாரத்தைப் பெற்றிருக்கிற திராவிட முன்னேற்றக் கழக ஆட்சிக்கு இந்தியக் கம்யூனிஸ்ட் கட்சியின் சார்பில் மகிழ்ச்சி ததும்ப வாழ்த்துக்களைத் தெரிவித்து என்னுடைய பேச்சைத் தொடங்குகிறேன். பேரவைத் துணைத் தலைவர் அவர்களே, இந்தியக் கம்யூனிஸ்ட் கட்சியின் சார்பில் நாங்கள் இங்கே கருத்துக்களை முன்வைக்க விரும்புகிறபோது தங்களுக்கு ஒன்றைச் சொல்லிக்கொள்ள விரும்புகிறோம். இந்த அவையில் எங்களோடு இருக்கிற பலர் இந்த அவைக்கு புதியவர்கள் என்றாலும் கூட இந்த அவைக்குப் புதிதாக வருகிற ஒவ்வொருவரும் எழுத்தெண்ணி படித்து எதிர்காலத்தில் இந்த அவையில் எப்படி நடந்து கொள்ள வேண்டும் என்பதைக் கற்றுக்கொடுக்கக் கூடிய இலக்கண உரையை நிகழ்த்திய மகத்தான மேன்மக்கள் பலர் இந்த அவையில் எங்கள் கட்சியின் சார்பில் கடந்த காலங்களில் அலங்கரித்து இருக்கிறார்கள் என்கிற பெருமிதம் எங்களுக்குண்டு. அந்த மகத்தான பாரம்பரியத்தின் பெருமையுடன் இன்றைய பிரதிநிகளாக அவர்களின் வாழையடிவாழையாக நாங்கள் விளங்குவோம் என்பதைத் தங்களுக்கு முதலில் நான் உறுதிகூற விரும்புகிறேன். தொடக்கத்தில் ஒரு விஷயத்தை தெளிவுபடுத்த விரும்புகிறேன். நம்முடைய மரியாதைக்குரிய முதல்வர் கலைஞர் அவர்கள் மகத்தான வெற்றிக்குப்பின்னர் இந்த ஆட்சிப் பொறுப்பை ஏற்பதற்கு கொஞ்சம் முன்னால் தன்னடக்கத்தோடு அவர்கள் வெளியிட்ட அறிவிப்புகள் உண்மையிலேயே நிதானத்தையும், நீண்ட அனுபவத்தினுடைய முதிர்ச்சியையும் வெளிப்படுத்தியது என்று நான் கருதுகிறேன். வெற்றிக்கு பின்னர் ஆரவாரம் இல்லாமல், மிகுந்த அடக்கத்தோடு, புதிய நல்லாட்சி நடத்துவதற்கு எது தேவையோ அதை மட்டுமே குறி வைத்து தன்னுடயை அறிவிப்பை வெளியிட்டார்கள் என்பதிலே உண்மையிலே நமக்கு மகிழ்ச்சி உண்டு. அவர்கள் தொடக்கத்தில், திராவிட முன்னேற்றக் கழகம் ஆளுகிற கட்சி என்ற முறையில் அந்தக் கட்சியினுடைய சட்டமன்ற உறுப்பினர் கூட்டத்திலும் சரி, அதற்கு பின்னர் பொதுமக்களுக்கு அறிவித்த அறிவிப்புகளும் மன நிறைவும் நம்பிக்கையும் அளிக்கக்கூடிய ஒன்று என்பதைக் குறிப்பிட்டுச் சொல்ல விரும்புகிறேன்.

நல்லாட்சி என்பது உண்மையிலேயே ஒரு தவம். நல்லாட்சி என்ற தவத்திற்கு கலைஞர் அவர்கள் தன்னை தயாரித்துக் கொண்டிருக்கிறார்கள் என்றாலும் அவர்களுடைய தவத்தை கலைப்பதற்குரிய அரக்கச் சேட்டைகள் சில உள்ளும் புறமும் நிகழக் கூடும் என்ற அச்சத்தையும் நான் முன்கூட்டியே தெரிவிக்க



விரும்புகிறேன். ஏனென்றால் கடந்த ஐந்தாண்டு காலமாக தமிழ்நாட்டில் ஒருவித ஈனச்சுவைக்கு அதிகார வர்க்கம் பழக்கப்படுத்தப்பட்டுவிட்டது. அதிகார வர்க்கம் எதற்கு பயன்படுத்தப்பட வேண்டுமோ அதற்கு பயன்படுத்தப்படாமல், எதற்கு பயன்படுத்தக்கூடாதோ அதற்குப் பயன்படுத்தப்பட்டு விட்டார்கள். அத்தகைய ஒரு வரலாற்று விபத்து நிகழ்ந்துவிட்டதற்கு பிறகு இன்றைக்கு பொறுப்பு ஏற்றிருக்கக்கூடிய திராவிட முன்னேற்றக் கழகத்தினுடைய தலைவர் கலைஞர் அவர்கள் இந்த அதிகார வர்க்கத்தை நல்லாட்சி தருகிற மிக உயர்ந்த நோக்கத்திற்கு எப்படி பயன்படுத்தப் போகிறார்கள் என்பதை பொறுத்திருந்து எதிர்காலத்தில் நாம் கவனிக்க வேண்டியிருக்கிறது. தன்னுடைய மிகுந்த அனுபவ முதிர்ச்சியால் அத்தகைய சவால்களை எதிர்கொள்கிற மன வலிமையும், அனுபவ முதிர்ச்சியும் அவர்களுக்கு உண்டு என்ற நம்பிக்கையோடு நான் சிலபல கருத்துக்களை வெளியிட விரும்புகிறேன்.

பிற்பகல் 12-10

எனக்கு முன்னர் இங்கே பேசிய மாண்புமிகு உறுப்பினர்கள் எல்லாம் பல்வேறு விஷயங்களைக் குறிப்பிட்டார்கள். தமிழ்நாட்டில் நீண்ட இடைவெளிக்கு பிறகு தான் தற்போது ஜனநாயகம் விடுவிக்கப்பட்டு இருக்கிறது. கூண்டில் அடைபபட்டுக்கிடந்த அந்த ஜனநாயகம் விடுவிக்கப்பட்டு இருக்கிறது என்பது கோட்டையிலேயே தெரியத் தொடங்கி இருக்கிறது. இதற்கு முன்னர் எப்படி இருந்தது என்பதைப் பற்றி நான் கடந்த அவையில் இல்லை என்றாலும் இருந்தவர்கள் சொல்லக் கேட்டும், பத்திரிகையிலே படித்தும் தெரிவிக்கிறேன். எனவே, நடைமுறையில் ஜனநாயகப் பண்புகள் துளிர்க்கத் தொடங்கி இருக்கின்றன என்ற முறையில், நாம் உண்மையிலே மகிழ்ச்சி அடைகிறோம்.

நான் அடுத்து சில குறிப்பான விஷயங்களைப் பற்றிச் சொல்லவேண்டியிருக்கிறது. உண்மையிலே கவர்னர் உரையிலே கோடிட்டுக் காட்டவேண்டிய பல நல்ல அம்சங்கள் கோடிட்டுக் காட்டப்பட்டு இருக்கின்றன என்றாலும், எதிர்த்தரப்பிலே இருக்கிற நாங்கள்-தோழமைக் கட்சி என்றாலும், இடிக்கவேண்டிய நேரத்தில் இடித்துக் காட்டக் கடமைப்பட்டவர்கள் என்பதை கலைஞர் அவர்களும் கூட குறிப்பிட்டு இருக்கிறார்கள். நாங்கள் இடித்துக் காட்ட வேண்டிய நேரத்தில் நிச்சயம் இடித்துக் காட்டுவோம். ஆனால் ஒருபோதும் கடிக்கிற கட்சியாக இருக்கமாட்டோம் என்பதைத்தான் எங்கள் நடவடிக்கைகளிலும் சரி, பிரச்சினைகளின் அணுகுமுறைகளிலும் சரி, நாங்கள் வெளிப்படுத்த இருக்கிறோம்.

53|126-13

நான் இந்த கவர்னர் உரையிலே சொல்லப்பட்ட ஒரு விஷயத்தைத் தொடக்கத்தில் எடுத்துச் சொல்ல விரும்புகிறேன். “சிற்றூர், பேரூர், நகர்புறங்களில் வாழ்கிற மக்கள், தங்களின் அடிப்படைத் தேவைகளுக்கான கோரிக்கைகளை எடுத்துக் கூறி நிறைவேற்றிக் கொள்ள தங்களால் தேர்ந்தெடுக்கப்பட வேண்டிய மக்கள் பிரதிநிதிகள் உள்ளாட்சி மன்றங்களில் இல்லாமல் இருந்திடும் குறையை நீக்கிட தேர்தல் நடத்தப்படும்” என்ற அறிவிப்பை நாங்கள் முழு மகிழ்ச்சியோடு வரவேற்கிறோம். ஆனால், இந்தத் தேர்தல் நடத்துவது மட்டுமே நடைமுறையில் அடிப்படைத் தேவைகளை நிறைவேற்றிடத் தீர்வாகிவிடுமா என்றால் இல்லை. கடந்த 5 ஆண்டுக்காலத்திற்குள் நிறைவேற்றப்பட்ட சட்டம்தான் நடப்பில் இன்றைக்கும் இருந்துகொண்டு இருக்கிறது என்பதை மாண்புமிகு முதலமைச்சர் அவர்களுக்கு நான் நினைவுபடுத்த வேண்டிய அவசியமே இல்லை. அந்தச் சட்டத்தின் ஜனன நோக்கத்தை தயவுசெய்து குத்திக்கிழித்துப்பார்க்கவேண்டும் என்று நான் விரும்புகிறேன். அந்தச் சட்டம் வந்த காலம் தமிழ்நாட்டில் ஆளுகிற கட்சியாக அன்றைக்கு இருந்த அனைத்திந்திய அண்ணா திராவிட முன்னேற்றக் கழகத்தை வீழ்த்துகிற வலிமையுள்ள ஒரு கட்சியாக திராவிட முன்னேற்றக் கழகம் வடிவம் பெற்றுக் கொண்டிருந்தபோது, உள்ளாட்சித் தேர்தல் நடத்தினால், திராவிட முன்னேற்றக் கழக அணி வெற்றி பெறும் என்பதால் அவர்கள் வெற்றி பெற்றாலும், வெற்றி பெற்றவர்கள் சுய ஆட்சியை நடத்தாமல் தடுக்கின்ற வஞ்சக உள்நோக்கத்தோடுதான் அந்தச் சட்டம் கொண்டுவரப்பட்டது என்று நான் குற்றம் சாட்டுகிறேன். அந்தச் சட்டத்தை ஒவ்வொரு ஷரத்து வாரியாக இப்போது விவாதிக்க நான் விரும்பவில்லை. அந்தச் சட்டம் அப்பட்டமாக ஜனநாயக உள்ளடக்கத்தைச் சிதைத்த சட்டம். அந்தச் சட்டத்தோடு தேர்தல் நடத்துவது நல்லதல்ல. கலைஞரின் நற்பெயருக்கு அது களங்கப் பொட்டாக அமைந்துவிடும் என்பதைத்தான் நான் குறிப்பிட்டுக் காட்ட விரும்புகிறேன். எனவே, ஜனநாயக ரீதியான உள்ளாட்சி அமைப்புகளுக்கு இரண்டு தேவைகள் இருக்கின்றன. நாம் காலம்காலமாக வலியுறுத்தி வருகிற உள்ளாட்சியின் தேவைகள் என்பது அறியாத ஒன்றல்ல. ஒன்று அதிக நிதி. இன்னொன்று அதிக அதிகாரம். அதிக நிதியையும், அதிக அதிகாரத்தையும் பறிக்கின்ற ஒரு சட்டம்தான் கடந்த காலச் சட்டம். ஒரேயொரு உதாரணத்தைச் சொல்ல விரும்புகிறேன். மூன்று அடுக்கு முறையில் உள்ளாட்சி அமைப்புகள் உருவாக்கப்பட்டுள்ளன. அந்த மூன்று அடுக்கும் ஒன்றோடொன்று தொடர்பு இல்லாமல், மாநில அரசின் நேரடிக் கட்டுப்பாட்டின் கீழ் இயங்குகிற அமைப்பாகத்தான் அந்த 3



அமைப்புகளும் மாற்றப்பட்டுவிட்டன. அதுமட்டுமல்ல, மக்களால் தேர்ந்தெடுக்கப்பட்ட-எலக்டட் பாடிக்கு அந்தப் பகுதியின் தேவைகளை, மதிப்பிடும் பட்ஜெட்டை உருவாக்கிக்கொள்கிற உரிமைகூட இல்லை. அதையும் எக்சிகியூடிவ் ஆபிசர்தான் உருவாக்குவார். பட்ஜெட்டை உருவாக்குகிற உரிமை கூட இல்லை. அதேபோல் ஒரு மாநில அரசு நினைத்தால், எந்தக் கேள்வியும் கேட்காமல் தேர்தெடுக்கப்பட்ட யூனியன் தலைவரையோ, பஞ்சாயத்துத் தலைவரையோ சட்டப்படி நீக்கிவிடலாம். இவற்றை, உண்மையிலே ஜனநாயக ஈரக்கசிவு உள்ள கலைஞர் அவர்கள், அங்கீகரிக்கமாட்டார்கள் என்ற நம்பிக்கையோடு தான் இந்திய கம்யூனிஸ்ட் கட்சியின் சார்பாக இந்தக் கருத்துக்களைத் தெரிவித்துக் கொள்கிறேன். சட்டத்தில், More power to people என்கிற கோஷம் கிளம்பியிருக்கிறபோது, தமிழ்நாடு சட்டம் More power to அதிகாரிகள் என்று மாற்றி இருக்கிறது. சட்டத்திற்கு உரிய பொருத்தமான திருத்தங்களைக் கொண்டுவரவேண்டும் என்பதை மட்டும் நான் சுருக்கமாகச் சொல்வதோடு, உள்ளாட்சித் துறை மானியக் கோரிக்கை வருகிறபோது, விரிவான விவரங்களை என்னுடைய கட்சியின் சார்பாக நாங்கள் முன்வைப்போம் எனபதையும் தெரிவித்துக் கொள்கிறேன்.

அதேபோல் இதிலே இன்னொரு கொடுமை இருக்கிறது. நேரடித் தேர்தல்கள் கிடையாது. நேரடித் தேர்தலகள் இல்லை என்றால் என்ன ஆகும்? ஆள் கடத்துகிற கொடுமை நடக்கும். அதுவும் குற்றவாளிகள் தங்குமிடமாக அரசியல் மாறிக் கொண்டிருக்கிற இன்றைய நிலையில், இது அனுமதிக்கப்படுமானால், ஆள் கடத்தப்படுகிற கொடுமைகளில் பல்வேறு உயிர்பலிகள் கூட நடக்கலாம். அந்த நிலைமைகளை எல்லாம் தவிர்க்க உரிய சட்டத் திருத்தம், அதிக அதிகாரம் உள்ளாட்சிக்கு வேண்டும். இந்த நேரத்தில் நான் இன்னொன்றையும் நினைவுபடுத்த விரும்புகிறேன். 1983-ல் கர்நாடகாவில் ஒரு சட்டம் கொண்டு வந்தார்கள். அந்தச் சட்டத்தில் மாவட்ட பஞ்சாயத்துத் தலைவருக்கு ஒரு கேபினெட் மினிஸ்டருக்கு உரிய அந்தஸ்தும் உண்டு. அவருக்குக் கீழேதான் மாவட்ட ஆட்சித் தலைவர் வேலை செய்யவேண்டும். ஆனால் இந்தச் சட்டத்தில் என்ன? எல்லா அதிகாரங்களும் மாவட்ட ஆட்சித் தலைவருக்குத்தான். இது எப்படி நியாயமாகும் என்பதைச் சிந்திக்கவேண்டும் என்பதை மட்டும் நான் தெரிவித்துக் கொள்ள விரும்புகிறேன். அத்தோடு இன்னும் மற்ற விஷயங்களைப் பறறி உள்ளாட்சித் துறை மானியம் வருகிறபோது பேசலாம் என்பதை மட்டும் நான் இங்கே குறிப்பிட விரும்புகிறேன்.

*பிற்பகல் 12-15*

அதேபோல இந்த மாநிலத்தில் தரமான அடிப்படை சுகாதாரம், மருத்துவ வசதி அளிக்க முன்னுரிமை வழங்கப்படும் என்று சொல்லப்பட்டிருக்கிறது. இதுவும் வரவேற்கப்பட வேண்டிய ஒன்றுதான். இந்த மாநிலத்தில் தரமான அடிப்படை சுகாதார மருத்துவ வசதிகளை அளிக்க உயர் முன்னுரிமை என்பது வரவேற்க வேண்டிய விஷயம். ஆனால் இந்த இடத்திலே நான், தேர்வு செய்யப்பட்டு, புதிதாக நல்ல தொடக்கத்தை மேற்கொண்டிருக்கக்கூடிய மாநில அரசுக்கு தெரிவித்துக்கொள்ள விரும்புவது 30 ஆண்டுகளுக்கு முன்னர் இருந்த சென்னை மாகாணம் இன்றைக்கு இல்லை. 30 ஆண்டுகளுக்கு முன்னர் இருந்த நகரங்கள் இல்லை. நகரம் பெருகிவிட்டது; நாடு விரிந்துவிட்டது; மக்கள் பெருகிவிட்டார்கள். ஆனால் சுகாதாரப் பணியாளர்கள் மட்டும் அதிகப்படுத்தப்படவே இல்லை. எப்படி அடிப்படை சுகாதாரத்தை நாம் தீர்வு செய்யமுடியும் என்பதை இந்த நேரத்தில் யோசித்துப் பார்க்கவேண்டும். இன்றைக்கும் தடை இருக்கிறது. உள்ளாட்சி அமைப்புகளில், பேரூராட்சிகளில், ஊராட்சிகளில் அதே போன்று நகராட்சிகளில் சுகாதாரப் பணியாளர்களை எடுக்கின்ற உரிமை இன்றைக்கும் தடை செய்யப்பட்டிருக்கிறது. மூன்று மடங்கு, நான்கு மடங்கு எண்ணிக்கையைக் கூட்ட வேண்டிய நிலையில் 30 வருடங்களுக்கு முன்பிருந்த அதே சுகாதாரப் பணியாளர்களைக் கொண்டு நீங்கள் எப்படி இந்த சுகாதாரத்தை உருவாக்கமுடியும் என்பதைச் சிந்திக்க வேண்டும். எனவே அவற்றை மாற்றுவதற்குரிய வழியையும், புதிய சுகாதாரப் பணியாளர்களைக் கொண்டுவருவதற்குரிய வழிகளைப் பற்றியும் பட்ஜெட்டின் போதோ, அடுத்து வருகிற மானியக் கோரிக்கைகளின் போதோ, அது உருவாக்கப்படக்கூடும் என்ற நம்பிக்கையோடு நான் அவற்றையும் தெரிவித்துக் கொள்ள விரும்புகிறேன்.

அதேபோல இன்னொரு பெரிய பிரச்சினை. 'அன் அப்ரூவ்ட் 'லே-அவுட்ஸ்'. 'அன் அப்ரூவ்ட் லே-அவுட்ஸ்' என்பது முனிசிபல் ஏரியாவில் இன்றும் இருக்கிறது. அன் அப்ரூவ்ட் லே அவுட்ஸ் உருவாவதற்கு பொது ஜனங்கள் குற்றவாளிகள் அல்ல. யாரோ லே அவுட் போட்டவர்கள் போட்டுவிட்டுப் போய் விட்டார்கள். இன்றைக்கு நகராட்சிகள் என்ன சொல்கின்றன என்றால், அன் அப்ரூவ்ட் லே அவுட்சில் சாக்கடை வசதிகளோ, ரோடு வசதிகளோ, விளக்கு வசதிகளோ இப்படி அடிப்படைத் தேவைகளை செய்துதர மாட்டோம் எனறு சொல்கிறார்கள். குற்றம் புரிந்தவர்கள் லே அவுட் போட்டவர்கள். அவர்கள் அந்த லே அவுட் போட்டு விற்றுவிட்டுப் போய்விட்டார்கள். ஆனால் அங்கே விவரம் தெரியாமல் சைட் வாங்கிக் குடியிருக்கிற



பொது மக்களைத் தண்டிப்பது நியாயமா என்பதைத்தான நான் இங்கே கேட்டுக் கொள்ள விரும்புகிறேன். கடந்த 1989-90-லே கூட இந்தப் பிரச்சினை அவையிலே கிளப்பப்பட்டு ஒரு நல்ல அறிவிப்பு வெளிவந்தது. ஆனால் அது முற்றுப்பெறவில்லை; முழு உருவம் பெறவில்லை; எனவே, மாண்புமிகு முதலமைச்சர் அவர்களை நான் தங்கள் மூலம் கேட்டுக் கொள்ளவிரும்புவது இந்த அவையிலாவது அன்-அப்ரூவ்ட் லே அவுட்ஸ் என்பது இதுவரையிலும் இருப்பவை அங்கீகரிக்கபட வேண்டும். முழு அடிப்படைத் தேவைகளை நகராட்சிகள் நிறைவேற்ற வேண்டும். இனிமேல் லே அவுட் போட்டால், அங்கே ஒரு சைட் வாங்குகிறார்கள் என்றால், அப்ரூவ்டு ஆன இடங்களை மட்டும்தான் பத்திரப் பதிவு செய்யவேண்டும். அப்ரூவ்டு ஆன லே-அவுட்டில்தான் ரிஜிஸ்ட்ரார் ஆபீசில் பத்திரப் பதிவு செய்யப்படும் என்ற முறையில் ஒரு சட்டத் திருத்தம் கொண்டுவரப்படுமேயானால் அன் அப்ரூவ்ட் லே அவுட்ஸ் உருவாகாமல் தவிர்க்கலாம், தடுக்கலாம். அது பற்றியும் சிந்திக்க வேண்டுமென்பதை நான் இந்த நேரத்தில் தெரிவித்துக்கொள்கிறேன்.

அடுத்து இன்னொரு முக்கியமாஎ விஷயத்தையும் நான் இங்கே குறிப்பிட விரும்புகிறேன். கூட்டுறவுத் தேர்தல் பற்றியும் சொல்லப்பட்டிருக்கிறது. கூட்டுறவுத் தேர்தல், அது மூன்று மாத காலத்தில் எப்படி நடைபெறும் என்கிற விவரம் எல்லாம் கவர்னர் உரையில் வெளியிடப்பட்டிருப்பதை நாம் பார்க்கிறோம். நான் இந்த இடத்தில் ஒன்றே ஒன்றை மட்டும் சொல்ல விரும்புகிறேன். மத்திய பிளானிங் கமிஷனால் வெளியிடப்பட்டிருக்கிற 'மாடல் கூட்டுறவு ஆக்ட்டை' இந்த மாநில அரசு அமலாக்கவேண்டும், சட்டம் ஆக்கவேண்டும் என்று நான் இந்திய கம்யூனிஸ்ட் கட்சியின் சார்பில் வலியுறுத்துகிறேன். பககத்திலே நம்முடைய ஆந்திர மாநிலம் அவற்றைச் சட்டமாக்கியிருக்கிறது. மாடல் கூட்டுறவு ஆக்ட் என்பதை ஜனநாயகவாதிகள் இந்தியாவில் பல துறைகளில் சட்டத் துறையிலும் சரி, நிர்வாகத் துறையிலும் சரி, வேறு பல துறைகளிலும் சரி, நிர்வாகத் துறையிலும் சரி, வேறு பல துறைகளிலும் தேர்ந்த நேர்மையாளர்கள் இந்த மாடல் ஆக்ட்டை அமலாக்கி வரவேற்றிருக்கிறார்கள். எனவே இந்த மாடல் ஆக்ட்டை ஆந்திரா முன்னுதாரணம் காட்டியிருக்கிறது. ஆநதிர மாநிலத்தைப் போல தமிழ்நாட்டிலும் கூட்டுறவு மாதிரிச் சட்டத்தை சட்டமாக்க வேண்டுமென்று நான் இங்கே வலியுறுத்திக் கேட்டுக் கொள்ள விரும்புகிறேன். அவற்றை வலியுறுத்துவதன் மூலம் உண்மையிலேயே மாண்புமிகு உறுப்பினர்கள் முன்னர் குறிப்பிட்டதைப்போல் வரலாற்றில் என்றென்றைக்கும் நிற்கின்ற ஒரு பெயராக அது நிற்கும். கூட்டுறவுத் துறை ஜனநாயகப்படுத்தப்பட்டதாக

வரலாற்றில் வரும். எனவே அவற்றை மாண்புமிகு முதலமைச்சர் அவர்கள் கவனத்தோடு குறித்துக்கொண்டு, அவற்றுக்குரிய தீர்வைச் செய்து தரவேண்டுமென்று இங்கே நான் குறிப்பாகத் தெரிவித்துக் கொள்ள விரும்புகிறேன்.

அடுத்து, பொது விநியோக முறையில் ஒரு பிரச்சினையை இங்கே நான் குறிப்பிட விரும்புகிறேன். பொது விநியோக முறையைப் பற்றி சிறப்பாகக் குறிப்பிடப்பட்டிருக்கிறது. அதிலே ஒரேயொரு குறை என்னவென்றால், பல இடங்களில் ரேஷன் கார்டுகள் இல்லாத நிலை இன்றைக்கும் இருக்கிறது. பல இடங்களில் ஆயிரக்கணக்கான அளவில் மக்களுக்கு ரேஷன் கார்டுகள் இல்லை. எனவே அந்த ரேஷன் கார்டுகள் இல்லாத குடும்பங்களுக்கு ரேஷன் கார்டுகள் வழங்கும் நடைமுறை ஒன்றை மாநில அரசு வெளியிட வேண்டும் என்று இந்த நேரத்திலே கேட்டுக் கொள்ள விரும்புகிறேன். அதைப்போல இரண்டாவது பசுமைப்புரட்சி பற்றி சொல்லியிருப்பது காலத்தின் தேவையை உணர்ந்து வெளிப்படுத்தப்பட்டிருக்கிற ஒரு நல்ல ஆலோசனை. ஆனால் அதற்கு முதலில் என்ன தேவையென்றால் தண்ணீர். தமிழ்நாட்டில் தண்ணீர் பாய்வதை அதிகரிப்பதற்கு நீண்டகாலமாக பாண்டியாறு-புன்னம்புழா திட்டம் சொல்லப்பட்டு வருகிறது. கேரளாவில் மேற்கு நோக்கி பாய்ந்துக் கொண்டிருக்கிற-கிட்டத்தட்ட 85 ஆறுகள் பாய்ந்துக் கொண்டிருப்பதாக விவரங்கள் சொல்லுகிறார்கள். அந்த ஆறுகளில் வீணாகிற தண்ணீரை, இன்றைக்கு இருக்கிற அரசியல் சூழ்நிலையில், கேரள அரசோடு பேச்சு வார்த்தை நடத்தி, தமிழ்நாட்டின் தென் மாவட்டங்களில், வறட்சியால் பாதிக்கப்பட்டிருக்கிற தென் மாவட்டங்களில் முழுக்க முழுக்க பயன் பெறக்கூடிய வகையில், குறிப்பிட்ட அளவு தண்ணீரை திருப்புவதற்கு தன்னுடைய முதிர்ந்த அனுபவ முதிர்ச்சியை வெளிப்படுத்தி ஒரு தீர்வு காண, மாணபுமிகு முதல்வர் கலைஞர் அவர்கள் முயற்சிக்க வேண்டும் என்று நான் இந்த நேரத்திலே தெரிவித்துக் கொள்ள விரும்புகிறேன். அப்படி நீங்கள் பேசுகிறபோது ஒருவகையில் தீர்வு பெறக்கூடும். அதற்குரிய அனைத்து ஒத்துழைப்பையும் நாங்கள் இந்திய கம்யூனிஸ்ட் கட்சியின் சார்பாக தருவோம் என்பதையும் நான் இங்கே தெரிவித்துக் கொள்ள விரும்புகிறேன்.

*பிற்பகல் 12.20*

அதைப்போல தொழில் முதலீட்டாளர்களை ஈர்ப்பதைப் பற்றிச் சொல்ல வேண்டும். முதலீட்டாளர்களை ஈர்ப்பதற்குரிய சில பல அறிவிப்புகள் வெளியிடப்பட்டிருக்கின்றன. தமிழ்நாட்டை



தொழில்வளமாக்க முயற்சிப்பது அவசியமானது, தேவையானது. ஆனால் அதே நேரத்தில் எனக்கு ஒரு மன வருத்தம் உண்டு. தமிழ்நாட்டின் அந்நியச் செலவாணியை ஈட்டுகிற காமதேனுவாக இருப்பது திருப்பூர். அந்த திருப்பூர் ஏன் கவர்னர் உரையில் விடுபட்டு போய் விட்டது என்றே தெரியவில்லை. பல ஆயிரக்கணக்கான கோடி ரூபாய்களை ஃபாரின் எக்ஸ்சேஞ்சாக ஈட்டித் தருகிற திருப்பூரில், தமிழ்நாட்டிலுள்ள பிறபல மாவட்டங்களிலிருந்து வேலை வாய்ப்புக்கு ஈர்க்கின்ற மையமாக திருப்பூர் இருக்கிறது. திருப்பூர் நகரத்தில் இன்றைக்கும் அடிப்படை பிரச்சினை தீர்க்கப்படவே இல்லை. குடிக்க தண்ணீரே கிடையாது. இது குறித்து நான் மாண்புமிகு முதலமைச்சர் அவர்களுக்கு ஒரு மனுவைக் கொடுத்திருக்கிறேன். அது உரியபடி கவனிக்கப்படும் என்ற நம்பிக்கை எனக்கு திரும்பத் திரும்ப உண்டு. ஆகவே முதலமைச்சர் அவர்களுக்கு நான் கொடுத்திருக்கிற மனுவில் நான் குறிப்பிட்டிருப்பது, இப்போது கிராமப்புறங்களில் தண்ணீரே இல்லை. என்னைக் காட்டிலும் திருப்பூரை மிகத்தேர்ந்த கலைஞர் அவர்கள் அறிவார்கள். அந்த திருப்பூருக்கு நடுவிலே நொய்யல் நதி இருக்கிறது. அந்த நொய்யல் நதியில் கெமிக்கல் வாட்டர் மட்டுமே ஓடிக் கொண்டிருக்கிறது. இரண்டு பக்கங்களிலும் போர் வெல் வாட்டரும், வெல் வாட்டரும் ஏறத்தாழ கெட்டுப் போய் விட்டன. திருப்பூரில் குடிப்பதற்கு தண்ணீர் வேண்டுமானால் வெளியிலே இருந்து கொண்டு வந்தால்தான் குடிக்க முடியும் என்பது கம்பல்ஷன். இந்த நிலையிலே இப்போது உடனடியாக கலைஞர் அவர்களுடைய பதிலுரையிலே இதற்குத் தீர்ப்பு தெரிவிக்க வேண்டும் என்பதை நான் குறிப்பிட்டு வலியுறுத்தி தெரிவிக்க விரும்புகிறேன்.

திருப்பூர் நகருக்கு கொண்டு வந்திருக்கிற ஒரு குடிதண்ணீர் திட்டம், இது ஒன்றும் இப்போது புதிய திட்டம் இல்லை. திருப்பூர் நகரில் சப்ளை செய்யப்படுகிற-2வது குடிநீர் திட்டத்தை 23 பஞ்சாயத்துக்களுக்கும் விஸ்தரிக்க உத்தரவிடவேண்டும். அதற்கு உடனடியாக குழி தோண்டி இப்போது பைப்லைன் போட்டால்தான் நம்பிக்கை வரும். குடிக்க தண்ணீர் இல்லையென்றால் அமைதி இல்லை. அதைச் செய்ய வேண்டும் என்பதைத் தெரிவித்துக் கொள்வதோடு, இன்னொன்றையும் பொதுப் பணித்துறை அமைச்சர் அவர்களுக்கும் நான் தெரிவித்திருக்கிறேன். திருப்பூரிலே மிகப்பெரிய பிரச்சினை தண்ணீர். குடிநீர் பிரச்சினை தீர்க்கப்படும் என்று சொல்லியிருப்பதால் நான் குறிப்பிட்டுச் சொல்கிறேன். அங்கே திருப்பூரின் வடக்குப் பகுதியிலே குளம், குட்டைகளிலே தண்ணீர் நிரப்பப்படவேண்டும். இல்லையென்றால் குடிக்க கிணறுகளில் தண்ணீர்

இருக்காது என்பதையும் சுருக்கமாகச் சொல்லி, வேறு பல விஷயங்களை பின்னர் நான் பேசுகிறேன் என்பதைத் தெரிவித்துக் கொள்கிறேன். அடுத்து ஏற்றுமதி நகரமான திருப்பூரில் பனியன் பிரச்சினையில் ஒரே ஒரு விஷயத்தை நம்முடைய மரியாதைக்குரிய கலைஞர் அவர்களுடைய கவனத்திற்கு கொண்டுவர விரும்புகிறேன். நீண்டகாலப் பிரச்சினை அது. கல்கத்தாவிலே பனியன் தொழில் இருக்கிறது. பஞ்சாபிலே இருக்கிறது. வேறு பல மாநிலங்களிலேயும் இருக்கிறது. அங்கெல்லாம் உள்நாட்டு பனியன் துணிகளை தயாரிப்பவர்களுக்கு சேல்ஸ் டாக்ஸ் கிடையாது. ஆனால் திருப்பூரிலே உள்நாட்டு பனியன் தயாரிப்பவர்களுக்கு சேல்ஸ் டாக்ஸ் உண்டு. இதன் மூலம் பிற மாநில பனியன் உற்பத்தியாளர்களோடு போட்டியிடுகிற நிலைமை திருப்பூர் உற்பத்தியாளர்களுக்கு குறைந்து விட்டது. அவர்களால் போட்டியிட முடியவில்லை. பலமுறை பேசி பேரம் படியாததால் விற்பனைவரி நீக்கப்படவில்லை. ஆகவே நான் குறிப்பிட்டுச் சொல்ல விரும்புவது, மிகுந்த நிதானத்தோடும், ஆழ்ந்த சிந்தனையோடும், உடனடியாக தீர்வு காண்கிற கலைஞர் அவர்கள் இந்த விஷயத்திலும் ஒரு தீர்வை சொல்ல வேண்டும்.

உள்நாட்டு பனியன் துணிகளின் மீது விதிக்கப்பட்டிருக்கிற, இந்த சேல்ஸ் டாக்ஸ் நீக்கப்படும் என்ற அறிவிப்பை வெளியிட்டால், உண்மையிலேயே தமிழ்நாட்டில் தொழில் வளர்ச்சிக்கு மாநில அரசு துணை நிற்கும் எனற அந்த சொல்லுக்கு உயிர் ஊட்டியதாகும், என்பதால் அவற்றை நீங்கள் சொல்லவேண்டும் என்று நான் கலைஞர் அவர்களைக் கேட்டுக் கொள்கிறேன். அடுத்து காவல்துறை. நான் இதைப்பற்றி விரிவாக காவல் துறை மானியம் வருகிறபோது பேச வேண்டும். அனேகமாக காவல் துறையின் ஆன்மா அழுகிவிட்டது.

பிற்பகல் 12.25

காவல்துறையில் நேர்மை கிட்டத்தட்ட இல்லை என்ற நிலை ஏற்பட்டுவிட்டது. ஆனாலும் உண்மையிலேயே இதுவரையில் இருந்த முதலமைச்சர்களில் நிர்வாக ஆற்றலை விரல் நுனிகளில் வைத்திருக்கக்கூடிய கலைஞர் அவர்கள் உண்மையில் இந்த காவல்துறையைச் செப்பனிடுவதில் முழு கவனம் செலுத்த வில்லையென்றால் கவிழ்க்கின்ற படகாக இந்த காவல்துறைதான் இருக்கும் என்பதை நான் தெளிவாகத் தெரிவித்துக்கொள்ள விரும்புகிறேன்.

ஒரே ஒரு கொடுமை எப்படி இருந்தது என்பதற்கு மட்டும் உதாரணம் சொல்ல விரும்புகிறேன். பெண்ணுரிமை இயக்கத்தைச் சார்ந்தவர்கள் ஒரு போலீஸ் நிலையத்திற்கு போகிற ரோடில் ஒரு தட்டி



வைத்துவிட்டார்கள். பெண்களே, இந்த ரோட்டில் போகாதீர்கள். இங்கேதான் போலீஸ் நிலையம் இருக்கிறது என்று எழுதி வைத்துவிட்டார்கள். அந்த அளவுக்கு காவல்துறையின் நம்பகத்தன்மை கடந்த ஐந்தாண்டுக்காலம் பாழ்படுத்தப்பட்டுவிட்டது. எனவே நான் இங்கே நம்முடைய மாண்புமிகு முதலமைச்சர் அவர்களுக்குத் தெரிவித்துக் கொள்ள விரும்புவது காவல்துறையை மறுசீரமைக்க வேண்டும்; புனரமைக்க வேண்டும்; அவர்களுக்கு ட்ரெயினிங் சென்ட்ரிலேயே, அவர்களுக்கு கல்வி கொடுக்கின்ற முறைகளிலேயே அடிப்படை மாற்றம் கொண்டுவர வேண்டும் என்பதை நான் வலியுறுத்த விரும்புகிறேன். பிற விஷயங்களை காவல்துறை மானியத்தின்போது நான் தெரிவிக்க விரும்புகிறேன். ஏனென்றால் ஒரு டி.ஜி.பி. ரேங்கில் இருந்தவர்கூட ஆளுங்கட்சியின் தொண்டு ஊழியராக மாறிப்போன ஒரு விஷயம் நடந்துள்ளது. ஆளுகிற கட்சியினுடைய ஸ்போக்ஸ்மேனாக மாறி ஊர்வலத்திற்கு எவ்வளவு பேர் வந்தார்கள் என்று அறிவிக்கின்ற அளவுக்கு தாழ்ந்து தாழ்ந்து தரை லெவலுக்குத் தாழ்ந்து போய்விட்டார்கள் என்றால் எப்படி மீட்க முடியும் என்று தயவு செய்து யோசித்துப் பார்க்கவேண்டும். மீட்க வேண்டியது மிக அவசர அவசியம் என்பதைத்தான் இங்கே நான் வலியுறுத்திச் சொல்ல விரும்புகிறேன்.

அதேபோல இன்னொரு விஷயம். இதே காவல் துறையில் பல இடங்களில் சாலை விபத்துக்கள் நிகழ்கின்றபோது போலீசார் வழக்கை எடுத்துக்கொள்வதில்லை. வழக்கை எடுத்துக்கொள்ளாத ஒரு நிலை ஏற்படுகிறது. அங்கே இங்கே என்று இழுத்தடித்த நிலை. கடந்த ஒரு வார காலத்திற்கு முன்பு கூட செய்திகள் வந்திருக்கின்றன. ஆகவே, இத்தகைய நிலைமைகள் வராமல் தடுப்பதற்கு உண்மையிலேயே உடனடி நடவடிக்கை எந்த காவல் நிலையத்திற்கு போகிறார்களோ அந்த காவல் நிலையமே எடுக்கவேண்டும் என்ற ஒரு நிலையை கொண்டுவர வேண்டும் என்பதோடு இன்னொரு விஷயம் என்னவென்றால் உயர் பதவிகளில் இருக்கக்கூடியவர்கள் முதலமைச்சரிலேயிருந்து எல்லோரும் விசாரணைக்கு உட்படுத்தப்பட வேண்டும் என்ற முறை சரியானது. இது முன்னர் கொண்டுவரப்பட்ட ஒன்றுதான். இடையில் ஏன் விடப்பட்டது என்று எல்லோருக்கும் தெரியும். விடப்பட்ட ஒன்றுக்கு மீண்டும் உயிர் கொடுக்க வேண்டும். அதில் எங்களுக்கு பல்வேறு கருத்துக்கள் உண்டு. பில் இண்ட்ரடியூஸ் ஆகிறபோது அதுபற்றிய விவரங்களையெல்லாம் விரிவாகப் பேசலாம் என்பதை மட்டும் நான் சொல்லி அதை முழுக்க வரவேற்பதோடு இறுதியாக ஒரே ஒரு விஷயத்தைச் சொல்லி முடிக்க விரும்புகிறேன்.

53|126-14

(மணியடிக்கப்பெற்றது) எல்லோரும் நேரம் அதிகம் எடுத்து இருக்கிறார்கள். நான் இன்னும் அதிகம் எடுக்கவில்லை....

**மாண்புமிகு பேரவைத் துணைத் தலைவர்:** 22 நிமிடங்கள் ஆகியிருக்கிறது.

**திரு. கே. சுப்பராயன்:** துணைத் தலைவர் அவர்களே, முடித்துவிடுகிறேன். கல்விக் கொள்கை. கல்விக் கொள்கையைப் பொறுத்தவரையிலும் நிறைய பேச வேண்டிய விஷயம். பல இடங்களில் ஆசிரியர்கள் எடுக்கப்படவில்லை. அதேபோல மாணவர்கள் ஒரு வகுப்பிற்கு 150 பேர் 200 பேர் என்று இருக்கிறார்கள். இந்த விஷயங்களையும் கவனிக்க வேண்டும் என்று சொல்லி நிறைவாக தொகுதியைப்பற்றி ஒரே ஒரு விஷயத்தை சொல்லி முடித்துக்கொள்ள விரும்புகிறேன்.

முன்னாள் முதலமைச்சர் ஜெயலலிதா அவர்கள் ஆட்சியின்போது திருப்பூருக்கு என்று வளர்ச்சித் திட்டத்திற்கு ஆயிரம் கோடிக்கு மேல் ஒரு திட்டத்தை அறிவித்தார்கள். இடைக்கால பட்ஜெட்டிலேயே அறிவிக்கப்பட்டது. ஆனால் இங்கே கவர்னர் உரையில் அதுபற்றிய விவரங்கள் இல்லை. அது கைவிடப்பட்டுவிட்டதா? அண்ணா திராவிட முன்னேற்றக் கழக ஆட்சியின்போது அறிவிக்கப்பட்ட அந்த ஆயிரம் கோடி திருப்பூர் வளர்ச்சித் திட்டம் என்னவாயிற்று? அந்தத் திட்டம் எடுத்துக்கொள்ளப்படுமா? ஒருவேளை அவர்கள் அறிவித்தார்கள் என்பதால் கைவிடப்பட்டுவிடக்கூடாது என்பதற்காகத்தான் நான் மாண்புமிகு முதலமைச்சர் அவர்களுக்குத் தங்கள் மூலமாகத் தெரிவித்துக்கொள்ள விரும்புகிறேன். கடந்த அண்ணா திராவிட முன்னேற்றக் கழக அரசு கலைவதற்கு முன்னால், அழிவதற்கு முன்னால், அது தன்னுடைய பதவியை முடித்துக் கொள்வதற்கு முன்னால் திருப்பூர் வளர்ச்சித் திட்டம் என்று அறிவித்ததை அங்கீகரிக்க வேண்டும். அவற்றை எந்த நிறுவனங்களின் மூலம் நிறைவேற்ற முயற்சித்து பவானி நதியிலிருந்து மூன்றாவது குடிநீர்த் திட்டம் கொண்டுவருவது எல்லாம் உள்ளடக்கப்பட்டிருக்கிறதோ அவை தொடர வேண்டும் என்பதைச் சொல்லி முடித்துக் கொள்கிறேன். வணக்கம்.

**மாணபுமிகு பேரவைத் துணைத் தலைவர்:** அடுத்து திரு. செல்வராஜ் என்கிற கவிதைப்பித்தன்.



**திரு. செல்வராஜ் என்கிற கவிதைப்பித்தன்:**

“இருந்தமிழே உன்னால் இருந்தேன்-வானோர்
விருந்தமிழ் தெனினும் வேண்டேன்”

எனக்கூறி தாய் மொழியாம் தமிழை வணங்கித் தொடங்குகின்றேன்.

பிற்பகல் 12-30

பெருமதிப்பிற்குரிய பேரவைத் துணைத் தலைவர் அவர்களுக்கு என்னுடைய வணக்கத்தையும், மேதகு ஆளுநர் உரைக்கு நன்றி தெரிவிக்கும் விவாதத்தில் பேச வாய்ப்பு அளித்தமைக்கு முதற்கண் நன்றியையும் தெரிவித்துக்கொள்கிறேன். முதலில் வணக்கத்திற்குரிய தமிழக முதல்வர் அவர்களுக்கு என்னுடைய பணிவு கலந்த நன்றியைத் தெரிவித்துக்கொள்ள விரும்புகிறேன். ஏன் என்றால் பகுதியையும், விகுதியையும் பார்த்து பாட்டு எழுதிக்கொண்டிருந்த என்னை கொஞ்சம் தொகுதியையும் பார் என்று அரசியலில் ஈடுபடுத்தி, இன்னும் சொன்னால் பட்டிமன்றத்திற்கும் கவி அரங்கத்திற்கும் சென்று வந்து கொண்டிருந்த என்னை ‘சட்டமன்றத்திற்கு வா தொகுதி மக்கள் பிரச்சினையை சபையில் பேசு’ என்று இந்த மாமன்றத்தில் மேதைகள் நிறைந்த, பாரம்பரிய புகழ்மிக்க இந்த மாமன்றத்திலே மிக பின்தங்கிய குடும்பத்திலே ஒரு சாதாரண சாமானிய ஏழை கார் டிரைவருடைய மகனாகப் பிறந்த என்னை, தமிழக முதலமைச்சரின் அன்பைப்பெற்றவன் என்கிற ஒரு தகுதியைத் தவிர வேறு எந்த அடிப்படை தகுதியும் இல்லாத என்னை, இந்த மாமன்றத்திலே இடம்பெற வைப்பதற்கு அரிய வாய்ப்பினை வழங்கியமைக்கு என்னுடைய முதல் நன்றியைத் தெரிவித்துக் கொள்கிறேன்.

(மாண்புமிகு பேரவைத் தலைவர்-தலைமை)

இன்னும் ஒன்று தமிழகத்தினுடைய அமைச்சரவைச் சரித்திரத்திலேயே வேறு எந்த முதலமைச்சரும் எண்ணிப் பார்க்காத, செய்யாத ஒரு திருப்புமுனை சாதனையாக பல்வேறு ஜாதி பிரிவினர்களுக்கு அமைச்சரவையில் பெரும் பொறுப்பு வழங்கிய மாண்புமிகு தமிழக முதலமைச்சர் அவர்கள், குறிப்பாக தாழ்த்தப்பட்ட சமுதாயத்தைச் சேர்ந்த உட்பிரிவுகள் என்று அழைக்கப்படுகிற 3 பிரிவுகளைச் சேர்ந்தவர்களுக்கும் இதே அரசு முன்பு பொறுப்பு ஏற்று இருந்தபோது பிரதிநிதித்துவம் வழங்கி ஒரு மகத்தான சாதனையைப் படைத்திருந்தார்கள்.

இந்த முறை இன்னும் கூடுதலாக தாழ்த்தப்பட்ட சமுதாயத்தைச் சேர்ந்த 3 பிரிவுகளுக்கு அமைச்சரவையில் இடம் வழங்கியதோடு மட்டுமல்லாமல் கொஞ்சம் கூடுதலாக இந்த மாமன்றத்தினுடைய பேரவைத் துணைத் தலைவராகவே ஒரு தாழ்த்தப்பட்ட சமுதாயத்தைச் சேர்ந்த பாரம்பரியம் மிக்க குடும்பத்திலே பிறந்தவருமாகிய, தமிழக முதலமைச்சரின் அன்பைப் பெற்றவருமாகிய மாண்புமிகு முன்னாள் மேலவை உறுப்பினரின் புதல்வரை சட்டமன்றத்தினுடைய பேரவைத் துணைத் தலைவராக வீற்றிருக்க வைத்து இந்த கண்ணியம் மிக்க, மரபு மிக்க, பாரம்பரியம் மிக்க பேரவையில் இடம் பெற்று இருக்கிற மேதைகளை நடத்துகிற பெரும் வாய்ப்பை வழங்கி, இன்றைக்கு நாட்டிலே குலத்திற்கு முன்னாலும், ஜாதி; கட்சி கொள்கைக்கு முன்னாலும் ஜாதி; வாங்கும் பணத்திற்கு முன்னாலும் ஜாதி; காதல் பார்வைக்கு முன்னாலும் ஜாதி, செய்யும் மணத்திற்கு முன்னாலும் ஜாதி, ஓது மந்திரத்திற்கு உள்ளேயும் ஜாதி, செத்த பிணத்தைதான் விட்டதுவா ஜாதி; அங்கும் பிரிவுக்கு தக்கபடி சுடுகாடு உண்டு என்கிற ஒரு அவல நிலை தலைவிரித்து ஆடுகிற நிலைமைக்கு முற்றுப்புள்ளி வைக்கிற வகையில் ஜாதி மத பிணக்குகளை தீர்க்கிற வகையில் இந்த அரசு விரைந்து செயல்படும் என்று அறிவித்ததற்கு இணங்க தாழ்த்தப்பட்ட பிரிவினருக்கு முக்கியத்துவம் வழங்கியமைக்காக நானும் ஒரு ரிசர்வ் தொகுதியிலிருந்து தேர்ந்தெடுக்கப்பட்டவன் என்கிற முறையில் பாதம் தொட்டு என் நன்றியைத் தெரிவித்துக் கொள்கிறேன்.

ஆளுநர் உரைக்கு நன்றி தெரிவிக்கும் வகையில் எந்த வரியைச் சொல்லி என் பணிவு கலந்த நன்றியை நான் தெரிவிக்க வேண்டும் என்று எண்ணுகிறபோது கற்கண்டு கட்டியை உடைத்துப் போட்டால் எந்த பகுதி இனிக்கும் அதில் எல்லா பகுதியும் தான் தித்திக்கும் என்று சொல்லுவது போல் ஒவ்வொன்றையும் விளக்குவதற்கு வாய்ப்பு இல்லாமல் போனாலும் ஒன்று இரண்டை மட்டும் நான் சுருக்கமாகச் சொலலி விடைபெற பேரவைத் துணைத் தலைவர் அவர்கள் அனுமதி தரவேண்டுகிறேன். குறிப்பாக தமிழ் மொழியை மத்திய ஆட்சி மொழிகளில் ஒன்றாக்கிட இந்த அரசு முயற்சி மேற்கொள்ளும் என்கிற வரியைப் படித்துப் பார்த்தபோது மாண்புமிகு தமிழக முதலமைச்சர் அவர்கள் பொறுப்பு ஏற்று இருக்கிற இந்த ஆட்சியிலே தமிழுக்கு முக்கியத்துவம் வழங்குவது, அதைச் சுட்டிக்காட்டுவது எப்படி இருக்கும் என்றால் வங்கக் கடலை வானொலியில் விளம்பரம் செய்வது போல் ஆகிவிடும். ஏன் என்றால் இன்னும் 7 நாட்களில் 73-வது வயதில் அடி எடுத்து வைக்க இருக்கும் மாண்புமிகு தமிழக முதலமைச்சர் அவர்கள் தன்னுடைய ஈரேழு வயதிலேயே 'ஓடி வந்த இந்தி[illegible]ா கேள், நீ தேடி வந்த கோழை உள்ள நாடு இதுவல்லவே' என்று கையில் தமிழ்க்கொடி ஏந்தி திருவாரூர் வீதிகளிலே எக்காள முழுக்கம் இட்டு தன்னுடைய பொது வாழ்க்கையின் முதல் அத்தியாயத்தையே தமிழ் மொழியைக் காக்கின்ற, பாதுகாக்கின்ற மொழிப் போராட்டத்தினைத் தொடங்கியவர். எனவே, தமிழ் மொழியைப் பாதுகாப்போம், தமிழ் மொழியை மத்திய ஆட்சி மொழியில் ஒன்றாக்கிட இந்த அரசு முயற்சி மேற்கொள்ளும் என்று ஆளுநர் உரை ஆற்றியதில் இடம் பெற்று இருக்கிற வரிகளை நான் சுட்டிக்காட்டிச் சொல்லவேண்டியது இல்லை என்று கூட எண்ணுகிறேன். அதேநேரத்தில் எந்த அமைச்சரவையும் செய்து காட்டாத ஒன்றாக தமிழுக்கு மிகமிக முத்தாய்ப்பாக முடிசூட்டுகிற வகையில் தமிழ் ஆட்சி மொழித் துறைக்கு என்றே ஒரு தனி அமைச்சகத்தை ஏற்படுத்தி புரட்சித் கவிஞன் பாரதி தாசன் பாடினானே 'தமிழ் ஆந்த தமிழ் மகன் தான் தமிழ்நாட்டின் முதலமைச்சராய் வருதல் வேண்டும்" என்று அந்த வரிகளுக்கு இலக்கணமாக விளங்குகிற தமிழக முதலமைச்சர் அவர்கள் தமிழ் ஆட்சி மொழித் துறைக்கு ஒரு அமைச்சகத்தை ஏற்படுத்தியதோடு மட்டும் அல்லாமல் தமிழ் ஆய்ந்த தமிழ் மகன் தான் தமிழ்நாட்டின் முதலமைச்சராக வருதல் வேண்டும் என்ற அந்த இலக்கணத்தின் இலக்கியமாக விளங்குகிற தலைவர் அவர்கள் தமிழ் ஆய்ந்த தமிழ்க்குடிமகன்தான் அந்தத் துறைக்கும் அமைச்சராக வரவேண்டும் என்று தகுதியான, பொருத்தம் உள்ள ஒருவரை அமைச்சராக நியமித்ததற்கு தமிழ் கூறும் நல்லுலகம் என்றென்றைக்கும் நன்றிக் கடன் பட்டிருக்கிறது எனபதை நான் பணிவோடு தெரிவித்துக் கொள்கிறேன்.



நண்பகல் 12.35

அதுமட்டுமல்ல, இந்த நாட்டில் பெண்ணடிமை ஒழிப்புக்காகவும், பெண்கள் முன்னேற்றத்திற்காகவும், பெண்களின் சம உரிமைக்காகவும் அறிஞர் பெருமக்கள், கவிஞர் பெருமக்கள், அரசியல் தலைவர்கள் எவ்வளவோ பேர் குரல் கொடுத்திருக்கிறார்கள். குறிப்பாக, புரட்சிக்கவிஞன் பாரதிதாசன் அவர்கள், 'பெண்ணடிமை தீருமட்டும் பேசும் திருநாட்டில் மண்ணடிமை தீர்ந்து வருதல் முயற்கொம்பே' என்று பாடினான். அப்படிப் பெண்ணடிமையைத் தீர்க்காமல் மண்ணடிமை தீராது என்று புரட்சிக்கவிஞன் பாரதிதாசன் சொன்ன வரிகளை நிலைநாட்டுகிற வகையிலே புரட்சிக் கவிஞன் பாரதிதாசனுடைய வரிகளிலே தோய்ந்து தோய்ந்து, ஆய்ந்து ஆய்ந்து நிறைவுகண்ட நம்முடைய தமிழக முதல்வரவர்கள் பெண்களுக்கென்று அறிவித்திருக்கிற, ஆளுநர் உரையிலே இடம் பெற்றிருகிற செய்திகளை எண்ணிப் பார்க்கின்றபொழுது கடந்த முறை இதே அரசு

பொறுப்பேற்றிருந்த நேரத்திலே சொத்தில் சம உரிமை, வேலைவாய்ப்பில் முப்பது சதவீதம், கல்வித்துறையிலே மிகுந்த அளவிற்குச் சலுகைகள், குறிப்பாக இளங்கலை பட்டப்படிப்பு வரை பெண்களுக்கு இலவசக்கல்வி, அதேபோல, எட்டாம் வகுப்பு வரை பெண்கள் படித்திருந்தால் இலவசத் திருமண உதவி என்று, பாரதிதாசன் பாடுவானே, கல்வியில்லாத பெண்கள் களர்நிலம், அந்நிலத்தில் புல் விளைந்திடலாம். நல்ல புதல்வர்கள் விளைவது இல்லை என்று, அந்த அவல நிலை இல்லாத அளவிற்குப் பெண்கள் களர்நிலமாக மாறக்கூடாது என்று பெண்களைக் கல்வித் துறையிலே ஈடுபடுத்துகிற அளவிற்கு நல்ல பல திட்டங்களைக் கடந்த அரசு அறிவித்ததோடு மட்டுமல்லாமல், இன்றைக்கு நடைபெறுகிற அரசு அந்தத் திட்டத்தை விரிவுபடுத்தும் என்று ஆளுநர் உரையிலே அறிவித்திருப்பது மிகுந்த மகிழ்ச்சியைத் தருகிறது.

அதுமட்டுமல்ல,

"கண்களும் ஒளியும்போலக்
  கவின்மலர் வாசம்போலப்
பெண்களும் ஆண்கள் தாமும்
  பெருந்தமிழ் நாடு தன்னில்
தண்கடல் நிகர்த்த அன்பால்
  சமானத்தர் ஆனார் என்ற
பண்வந்து காதிற் பாயப்
  பருகுநாள் எந்த நாளோ ?"

என்று புரட்சிக் கவிஞன் பாரதிதாசன் பாடினான்.

ஆண்களுக்கு நிகராகப் பெண்கள் வாழ்கின்றார்கள். உரிமை பெற்று மகிழ்ச்சியோடு திகழ்கிறார்கள் என்கிற 'பண்' என் காதில் விழுந்து பாய்ந்து அதை நான் பருகும் நாள் எந்த நாளோ என்று புரட்சிக் கவிஞன் பாடினானே, அந்தப் புரட்சிக் கவிஞன் பாரதிதாசன் மட்டும் இன்று உயிரோடு இருந்திருந்தால், அந்த நாள் எந்த நாள், இதோ தமிழக முதல்வர் டாக்டர் கலைஞர் அவர்கள் ஆட்சி நடத்துகிற இந்த நாள் என்று எழுதியிருப்பான் என்ற சொல்லுகிற அளவிற்கு (மேசையைத் தட்டும் ஒலி) பெண்களுக்கு மிக முக்கியத்துவம் வழங்குகிற திட்டங்கள் ஆளுநர் உரையிலே இடம் பெற்றிருப்பதை நான் மகிழ்ச்சியோடு தெரிவித்துக்கொள்ள விரும்புகிறேன்.

ஏழையின் சிரிப்பில் இறைவனைக் காண்போம் என்று பேரறிஞர் பெருந்தகை அண்ணாவின் வழியில் எள்ளளவும், எள் முனையளவும் இடம் புரளாமல், தடம் புரளாமல் நடை போடுகிற, வழி நடத்துகிற



மாண்புமிகு தமிழக முதல்வர் அவர்கள் ஒன்றைத் தன்னுடைய எழுத்திலே குறிப்பிடுவார்கள், குடிசைவாசியே என் சொந்தக்காரன்; குப்பை மேட்டில் வசிப்பவனே என் உறவினன், தோட்டிக்கு நான் தோழன், தொழிலாளிக்கு நான் தொண்டன் என்று எழுதுவார்கள். அந்த எழுத்தை நடமுறைப்படுத்துகிற வகையிலே நம்முடைய மாண்புமிகு முதல்வர் அவர்களை ஒரு கவிஞன் ஒருமுறை குறிப்பிட்டான், உங்கள் இந்த அன்னைத் தமிழ் நாட்டின் ஆயுள்ரேகையே உங்கள் உள்ளங்கைகளில்தான் ஓடிக்கொண்டிருக்கிறது என்று. அதைப்போல அந்த உள்ளங்கையில் பேனாவைப்பிடித்து, தமிழக முதல்வராகப் பொறுப்பேற்றவுடன் அவர் அறிவித்த முதல் உத்தரவே, முதல் கையெழுத்தே, ஏறத்தாழ ஒரு கோடியே இருபத்தைந்து இலட்சம் குடும்பங்கள் பயன்பெறுகின்ற வகையிலே தரை வரியை ரத்து செய்தாரே அப்பொழுதே இந்த நாடு, ஏழைகளின் தலைவர் மாண்புமிகு தமிழக முதல்வர் என்பதை ஒப்புக் கொள்ளத் தொடங்கிவிட்டது என்பதை நான் பெருமிதத்தோடு தெரிவித்துக் கொள்ள விரும்புகிறேன்.

அடுத்து, மாண்புமிகு தமிழக முதல்வர் அவர்களுக்கு நான் பணிவோடு ஒன்றைத் தெரிவித்துக் கொள்வேன். வடகிழக்குப் பருவ மழை பொய்த்த காரணத்தால் கடந்த ஆண்டு ஏற்பட்ட பஞ்சத்தின் அடிப்படையில் சில பகுதிகளை வறட்சிப் பகுதியாக அறிவித்து, வறட்சி நிவாரணம் போர்க்கால நடவடிக்கையின் அடிப்படையில் நிகழும் என்று தெரிவித்திருக்கிறார்கள் ஆளுநர் உரையில். புதுக்கோட்டை மாவட்டத்திற்கு வடகிழக்குப் பகுதியில்தான் பூகோள ரீதியாக திருவாரூர் அமைந்திருக்கிறது. எங்களைப் பொறுத்த வரையில் வடகிழக்குப் பருவமழை நீங்கள்தான். வான்மழை பொய்த்தாலும், வான் பொய்த்தாலும் தான் பொய்க்காத வளமுடைய நெஞ்சத்துக்குச் சொந்தக்காரராகத் தமிழக முதல்வர் அவர்கள் இங்கே இடம் பெற்றிருக்கிறீர்கள். எனவே, புதுக்கோட்டை மாவட்டத்தில், அதிலும் குறிப்பாக 21 ஆண்டுகளுக்குப் பிறகு எல்லா நிலைகளிலேயும் இருண்டு போய்க் கிடந்த என்னுடைய கொளத்தூர் தொகுதியில் இப்போதுதான் சூரியன் உதிக்கத் தொடங்கியிருக்கிறது. என்னுடைய தொகுதிக்கு கவனம் செலுத்த வேண்டுமென்று கேட்டுக் கொள்கிறேன். வாய்ப்பு இருந்தால், சட்டம் இடம் கொடுத்தால், விதிகள் இடம் கொடுத்தால், வறட்சி பகுதி என்று அறிவிப்பது போல, என் கொளத்தூர் தொகுதியை வறட்சித் தொகுதி என்று நீங்கள் அறிவித்தால்கூட அந்தத் தொகுதி மக்கள் உங்களுக்குக் காருள்ளளவும், கடல்நீருள்ளளவும் கடமைப்பட்டிருப்பார்கள் என்பதை நான் பணிவோடு தெரிவித்து, இந்த ஆளுநர் உரையிலே, நன்றி தெரிவிக்கும் விவாதத்திலே நான் பேசுவதற்கு வாய்ப்பு வழங்கியமைக்காக

பணிவோடு நன்றியைத் தெரிவித்து, நான் முழுமையாக என்னுடைய உரையிலே புரட்சிக் கவிஞன் பாரதிதாசருடைய வரிகளை மட்டுமே மேற்கோளாகக் காட்டியதற்கு இன்னொரு காரணமும் உண்டு. ஏனென்றால் இந்த மாமன்றத்தில் இனிமேலாவது புரட்சி என்கிற அடைமொழி தகுதியுள்ளவர்களுக்கு மட்டும் பயன்பட வேண்டுமென்பதைத் தெரிவித்து, விடை பெறுகிறேன், நன்றி, வணக்கம். (மேசையைத் தட்டும் ஒலி)

*பிற்பகல் 12.40*

***மாண்புமிகு பேரவைத் தலைவர்:*** அடுத்து, கோவை கிழக்குத் தொகுதி மாண்புமிகு சட்டமன்ற உறுப்பினர் திரு.வி.கே. லட்சுமணன்.

***திரு.வி.கே. லட்சுமணன்:** மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, ஒளிமங்கியிருந்த மதுரை கோவிலுக்கு எப்படி ஒளியூட்டினீர்களோ, அதைப் போல இந்தப் பேரவைக்கு ஒளியூட்ட வந்திருக்கின்ற உங்களை நான் நெஞ்சார பாராட்டக் கடமைப்பட்டிருக்கின்றேன். இந்த 11-வது சட்டமன்றக் கூட்டத்திலே பேசுகின்ற வாய்ப்பு கிடைத்தமைக்கு என்னுடைய மகிழ்ச்சியைத் தெரிவித்துக் கொள்கிறேன். நடந்து முடிந்த தேர்தல் ஒரு தர்மயுத்தம் என்று எல்லோரும் சொன்னார்கள். ஆனால், மக்கள் தர்மம் யார் பக்கம் இருக்கிறது என்பதை மிகத் தெளியாக நிருபித்திருக்கிறார்கள். என்னைப் பொறுத்தமட்டிலே இந்தத் தீர்ப்பைப் பார்க்கின்றபோது ஏதோ தமிழ்நாட்டில் இருக்கின்ற அத்தனை கோடி மக்களும் ஏதோ ஒரு மண்டபத்திலே உடகார்ந்துகொண்டு ஏகமனதாக தீர்மானம் போட்டு, இப்படித்தான் நாம் நடக்க வேண்டுமென்று முடிவு செய்தது போல இந்தத் தீர்ப்பு இருப்பதை எண்ணிப்பார்த்து உள்ளபடியே நான் வியப்பு அடைகிறேன். அதேபோல அரசியல் பிழைத்தோருக்கு அறன் கூற்றாகும் என்பதை இந்தத் தேர்தல் மிகத் தெளிவாக சொல்லியிருக்கிறது என்பதை நான் இங்கே சுட்டிக்காட்ட விரும்புகிறேன். சென்றமுறை நான் இந்த மாமன்றத்திலே இருந்ததாக நினைவு இருக்கிறது எனக்கு. அப்பொழுதெல்லாம் உண்மையாக சட்டமன்ற உறுப்பினராக பணியாற்ற வாய்ப்பு இல்லாத சூழ்நிலையிலே, ஜனநாயகத்தினுடைய குரல்வளை நெறிக்கப்பட்டு, இன்னும் கொஞ்சம் நாள் போனால் ஜனநாயகத்தை அருங்காட்சியகத்திலேதான் பார்க்க முடியும் என்ற நிலை ஏற்பட இருந்தபோது, மீண்டும் இங்கே ஜனநாயகம் மலர ஒரு வாய்ப்பு கிடைத்திருப்பதைப் பார்த்து உள்ளபடியே பெருமைப்படுகிறேன்.



ராஜிவ்காந்தி அவர்கள் 21-வது நூற்றாண்டுக்கு இந்தியத் திருநாட்டை அழைத்துச் செல்வதாகச் சொன்னார்கள். தற்போது ராஜிவ்காந்தி நம் மத்தியிலே இல்லை. அவர் பெயரிலே ஒரு போக்குவரத்துக் கழகம் இருப்பதைப் பார்த்து நான் அதற்கு முதல்வர் அவர்களுக்கு நன்றி சொல்லக் கடமைப்பட்டிருக்கிறேன். அதைப் போல இந்த மாமன்றம் 21-ஆம் நூற்றாண்டை எட்டிப் பிடிக்கப் போகிறது. 20-ஆம் நூற்றாண்டின் கடைசியிலே தொடங்கிய இந்த மாமன்றம், 21-ஆம் நூற்றாண்டுக்குச் செல்லப் போகிறது என்பதை எண்ணிப் பார்க்கும்பொழுது, அந்தப் புதிய சகாப்தத்தை உருவாக்குகிற வரலாற்றுச் சிறப்புமிக்க மாமன்றமாக இது விளங்கப்போகிறது என்பதை நான் சொல்லிக் கொள்ள விரும்புகிறேன்.

ஆளுநர் உரை சுருக்கமாக இருக்கலாம், குறைவான பக்கங்கள் கொண்டதாக இருக்கலாம். ஆனால், அந்த உரையிலே பல நல்ல கருத்துக்கள் சொல்லப்பட்டிருப்பதை நான் இங்கே சுட்டிக்காட்ட விரும்புகிறேன். அதேபோல விடுபட்ட கருத்துக்கள் இருந்தாலும்கூட, அந்தத் திட்டங்கள் எல்லாம் வரப்போகிற காலங்களிலே நிறைவேற்றப்படும் என்ற நம்பிக்கையோடு ஆளுநர் உரைக்கு நன்றி சொல்ல கடமைப்பட்டிருக்கிறேன். குறிப்பாக உள்ளாட்சித் தேர்தலை நான் எண்ணுகிறபோது எனக்கு ஒரு செய்தி நினைவுக்கு வருகிறது. ஒரு தூக்கு தண்டனைக் கைதியைப் பார்த்து, அவன் தூக்கு தண்டனையிலிருந்து தப்பியோட நினைக்கும் கைதி, அந்தக் கைதியைப் பார்த்து, உன்னுடைய இறுதி ஆசை என்ன என்று அதிகாரி கேட்டாராம். கைதி சொன்னானாம், எப்படியாவது கூட்டுறவுத் தேர்தலையும், பஞ்சாயத்துத் தேர்தலையும் பார்த்துவிட்டு செத்துப் போக வேண்டுமென்று சொன்னானாம். அந்த அளவுக்கு பஞ்சாயத்துத் தேர்தல் வருமா, வராதா, கூட்டுறவுத் தேர்தல் வருமா, வராதா என்றெல்லாம் ஏங்கிப் போயிருக்கின்ற நேரத்திலே, அதை அறிவித்திருக்கின்ற இந்த அரசுக்கு நான் நன்றி சொல்லக் கடமைப்பட்டிருக்கிறேன்.

தேர்தல் சீர்திருத்தம் என்று ஆளுநர் உரையிலே அதனுடைய அவசியத்தை அவர்கள் மிகத் தெளிவாகச் சொல்லியிருக்கிறார்கள். நான் மேலும் ஒன்றைச் சொல்ல விரும்புகிறேன். நடந்து முடிந்த தேர்தலிலே எல்லாத் தொகுதிகளிலேயும் ஆயிரக்கணக்கான வாக்காளர்கள் பெயர்கள் வாக்காளர் பட்டியலிலே விடுபட்டுப் போயிருப்பதை நான் இங்கே சுட்டிக்காட்ட விரும்புகிறேன். இனி

63/126-15

நமக்கு உள்ளாட்சித் தேர்தல் வரும், கூட்டுறவுத் தேர்தல் வரும். அப்படி வருகின்றபோது எல்லா வாக்காளர்களும் ஆர்வத்தோடும், வேகத்தோடும் வாக்களிக்க இருக்கிறார்கள். வாக்கு இல்லையென்று சொல்கிறபோது அவர்கள் மிகுந்த கொந்தளிப்புக்கு ஆளாகிறார்கள். அந்த அளவுக்கு, ஜனநாயக உரிமைகளைப் பயன்படுத்த விரும்புகிற மக்களுக்கு, அந்த வாக்குரிமையை நாம் அளித்தாக வேண்டும். எனவே, வாக்காளர் பட்டியலைத் தயாரிப்பதற்கு நாம் ஏதேனும் ஒரு புதிய முறையை கையாண்டு, கண்டிப்பாக, வாக்களிக்க விரும்புகிற அத்தனை பேருக்கும் வாக்களிப்பதற்கு வகை செய்ய வேண்டுமென்று கேட்டுக்கொள்வதோடு, வரப் போகிற தேர்தலிலே புகைப்பட அடையாள அட்டைகள் வழங்குவதற்கு நீங்கள் விரைவாக ஏற்பாடு செய்யவேண்டுமென்று உங்கள் மத்தியிலே சொல்லிக் கொள்ளக் கடமைப்பட்டிருக்கிறேன்.

*பிற்பகல் 12-45*

நான் சென்ற முறை சட்டமன்றத்திலே நுழைந்தவுடனே ஒரு கோரிக்கையை வைத்தேன். எங்களுடைய மாவட்டத்திலே பல பஞ்சாலைகள் மூடப்பட்டிருக்கின்றன. அதிலே பணியாற்றுகிற பல தொழிலாளர்களின் குடும்பங்கள், பல இன்னல்களுக்கு ஆளாகி இருக்கிறார்கள். அவையெல்லாம் தீர்க்கப்பட வேண்டுமென்ற ஒரு கோரிக்கையை வைத்தேன். இன்று வரை எந்தப் பஞ்சாலையும் திறக்கப்படவில்லை. எனவே அதை நீங்கள் செய்ய வேண்டுமென்று நான் உங்களை அன்போடு கேட்டுக் கொள்கிறேன்.

இந்த கவர்னர் உரையிலே கல்வி பற்றிச் சொல்லியிருக்கிறார்கள். ஆனால் இந்த உரையிலே உயர் கல்வி பற்றிக் குறிப்பிட்டு எதுவும் இல்லை என்பதை நான் சுட்டிக் காட்ட விரும்புகிறேன். தமிழ்நாட்டைப் பொறுத்தவரையில் கடந்த பல ஆண்டுகளாக ஐ.ஏ.எஸ்., ஐ.பி.எஸ்., பரிட்சையில் தேறுகிற மாணவர்கள் பட்டியலைப் பார்த்தால் நம்முடைய மாநிலத்தைச் சேர்ந்த மாணவர்கள் குறைந்துக்கொண்டே வருகிறார்கள். இதுவே அளவுகோல் என்று நான் சொல்லவில்லை. இருந்தாலும் கூட உயர் கல்வியிலே இருக்கிற கோளாறுதான் இதற்குக் காரணம் என்பதை நாம் மறுத்துவிட முடியாது. இன்றைக்கு நம்முடைய பல மாவட்டங்களில் இருக்கின்ற ஐ.ஏ.எஸ்., ஐ.பி.எஸ். அதகாரிகள் வேறு மாநிலத்தைச் சேர்ந்தவர்களாக இருக்கிறார்கள். இவையெல்லாம் மாற வேண்டும் எனறால் உயர் கல்வியில் அதிகக் கவனம் செலுத்துவதோடு கண்டிப்பாக இந்தத் தேர்வுகளிலே நம்முடைய மாணவர்கள் பெருவாரியாக வெற்றி



பெறுவதற்கு எல்லா முயற்சிகளையும் நம்முடைய கல்வி அமைச்சர் அவர்கள் எடுக்க வேண்டும் என்று நான் கேட்டுக்கொள்ள விரும்புகிறேன்.

இந்த ஆளுநர் உரையில் நீர்ப்பாசன வசதிகள் பற்றிக் குறிப்பிடப்படவில்லை. சென்ற முறை பாண்டியாறு-புன்னம்புழா திட்டம் பற்றி இந்த மாமன்றத்திலே பேசியபோது, பாண்டியாறு-புன்னம்புழா என்பது காவிரி நதியோடு இணைந்த ஒன்று. அது காவிரி பேசினிலே இருக்கக்கூடிய ஒரு நதி. எனவே அந்த காவிரி டிரிபுனல் முடிவு வரும் வரை, அந்தப் பிரச்சினை தீரும் வரை இந்தத் திட்டம் துவக்கப்பட மாட்டாது என்று ஒரு கருத்து சொல்லப்பட்டது. அதை நீங்கள் மீண்டும் பரிசீலிக்க வேண்டும். இல்லை என்றால் கோவை மாவட்டத்தில் பவானி, திருப்பூர், அவினாசி போன்ற தாலூக்காக்கள் மிக விரைவாகப் பாலைவனம் ஆகிவிடும் என்று நீரியல் நிபுணர்கள் சொல்லியிருக்கிறார்கள். எனவே மிக விரைவாகக் கேரள அரசோடு தொடர்பு கொண்டு இந்த பாண்டியாறு-புன்னம்புழா திட்டத்தை நிறைவேற்றிக் கொடுக்க வேண்டும் என்று கேட்டுக் கொள்ள விரும்புகிறேன்.

அதேபோல் அச்சன்கோயில், பம்பா போன்ற நதிகளை வைகையோடு இணைக்கவேண்டும் என்ற ஒரு திட்டம் பல ஆண்டுகளாகப் பேசப்பட்டு வருகிறது. அது அரசின் பரிசீலனையில் இருக்கிறது. அந்தத் திட்டத்தையும் நிறைவேற்றி, மேற்கு நோக்கி ஓடுகிற அத்தனை ஆறுகளும் வீணாக அரபிக் கடலில் கலப்பதைத் தடுத்து தமிழகத்திற்குத் திருப்பி விடப்பட வேண்டும் என்றும், நம்முடைய நீர்பாசன வசதியை அதன்மூலம் பெருக்கவேண்டும் என்றும் நான் உங்களை அன்போடு கேட்டுக் கொள்கிறேன்.

சட்டமன்றத் தேர்தலின்போது வாக்காளர்களைச் சந்திக்க நான் சென்ற போது, உணவுப் பங்கீட்டு அட்டைகளை வைத்துக்கொண்டு மண்ணெண்ணெய்க்காகக் காத்திருந்த மக்களை நான் பல இடங்களிலே பார்த்தேன். அவர்கள் வரிசையில் நிற்கிறார்கள் என்று சொன்னால் முதல்நாள் இரவே வந்து அங்கே படுத்துக் கொண்டு காத்து இருப்பதால் ஒருநாள் கூலியை இழந்து அவ்வாறு அங்கே காத்திருக்க வேண்டிய சூழ்நிலை இருப்பதைப் பார்க்கிறோம். ஆகவே மண்ணெண்ணெய்க்காக இவ்வளவு நேரம் காத்திருந்து கூலி இழக்கிற அந்த நிலையை மாற்றி அந்த மக்களுக்கு அந்தப் பொருட்கள் எல்லாம் நல்ல முறையில் கிடைக்க இந்த அரசு ஏற்பாடு செய்ய வேண்டுமென்று நான் உங்களை அன்போடு கேட்டுக்கொள்கிறேன்.

கோவையைப் பொறுத்தவரையில் நீண்டகாலமாக ஒரு கோரிக்கையை நாங்கள் அரசாங்கத்தினிடத்திலே வைத்திருக்கிறோம். அந்தக் கோரிக்கை என்னவென்றால் கோவையிலே பல நீதிமன்றங்கள் இருக்கின்றன. எல்லா நிதிமன்றங்களையும் ஒரே வளாகத்தில் கொண்டுவர வேண்டியது மிகமிக அவசியமாகும். அது அங்கே பணியாற்றுகிற வழக்கறிஞர்களுக்கு மிக உதவியாக இருக்கும். ஆகவே கோவையில் இருக்கிற அத்தனை நீதிமன்றங்களையும் ஒரே வளாகத்தில் கொண்டுவர நீங்கள் உத்தரவு பிறப்பிக்க வேண்டும் என்று உங்களை அன்போடு நான் கேட்டுக் கொள்ளக் கடமைப்பட்டிருக்கிறேன்.

சுகாதாரப் பணி கிராமங்களில் சிறப்பாக நடைபெற வேண்டும் என்று நாம் எல்லோரும் விரும்புகிறோம். ஆனால் அங்கே பணியாற்றுகிற மருத்துவர்களைக் கேட்டால், சிலபேர் மருந்தில்லை என்று சொல்கிறார்கள். சிலபேர் தங்குவதற்கு உரிய வீடு இல்லை என்று சொல்கிறார்கள். எனவே நகரங்களிலே படித்துப் பட்டம் பெற்ற மருத்துவர்கள் கிராமங்களுக்குச் சென்று பணியாற்றுவதற்குரிய வசதிகளையும், தங்கும் வசதிகளையும், மருந்து வசதிகளையும், அதுபோல் கருவிகள் போன்றவற்றையும் நல்ல முறையில் வழங்கினால் கண்டிப்பாக அந்த மருத்துவர்கள் அங்கே போய் தங்கியிருந்து பணியாற்றுவார்கள் என்று நான் உறுதியாக நம்புகிறேன். அதற்கு வேண்டிய காரியத்தை அரசு செய்ய வேண்டுமென்று நான் அன்போடு கேட்டுக் கொள்ள விரும்புகிறேன்.

*பிற்பகல் 12.50*

அதேபோல சென்ற முறை சட்டமன்றம் கூடுகின்றபோதெல்லாம் ஒரு திருக்குறளை வாசிப்பார்கள். அந்தக் குறளுக்கும் இங்கே, சட்டமன்றத்திலே நடந்த நிகழ்ச்சிகளுக்கும் சம்பந்தமே இருக்காது. நாங்களும்கூட அதையெல்லாம் நம்பி அதன்படி நடக்கும் என்று நினைத்து, நாங்களும் ஒரு குறளைச் சொன்னோம்.

"இடிப்பாரை இல்லாத ஏமரா மன்னன்
கெடுப்பார் இலானும் கெடும்"

என்று நாங்களும் ஒரு குறளைச் சொல்லி வைத்தோம். ஆனால் ஒரு நாள்கூட அவர்கள் செய்த தவறுகளை ஒருபோதும் ஒத்துக்கொண்டதில்லை. அது கெடுப்பார் இல்லாமலேயே கெட்டுப் போய்விட்டது. ஆக, அப்படியில்லாமல் எங்களைப் பொறுத்தமட்டிலே ஆக்கப்பூர்வமான ஒரு எதிர்க்கட்சியாக நாங்கள் செயல்படுவோம். எங்கேனும் குறைபாடுகள் கண்ணுக்குத் தென்படும் என்று சொன்னால்



அவற்றைக் கண்டிப்பாகச் சுட்டிக்காட்ட தவறமாட்டோம் என்று மட்டும் கூறி இந்த அரிய வாய்ப்புக்கு நன்றி கூறி விடைபெறுகிறேன், வணக்கம்.

**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** அடுத்து, கடலூர் தொகுதி மாண்புமிகு சட்டமன்ற உறுப்பினர் புகழேந்தி அவர்கள்.

***திரு இ. புகழேந்தி**: மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, திராவிட பேரியக்கத்தினுடைய தத்துவத்தை படைத்து நம்மையெல்லாம் மனிதனாக உருவாக்கி நடமாட வைத்த தந்தை பெரியார் அவர்களையும், அவர் வழிமுறைகளை, அரசியல் நெறிமுறைப்படுத்தி நம்மையெல்லாம் ஆளாக்கிய பேரறிஞர் அண்ணா அவர்களையும், தந்தை பெரியாராக பேரறிஞர் அண்ணாவாக வீற்றிருக்கக்கூடிய நம்முடைய தானையத் தலைவர், மாண்புமிகு முதல்வர் தலைவர் கலைஞர். அவர்களையும், 1967-ஆம் ஆண்டு இந்த அவையின் உறுப்பினராக பணியாற்றிய என்னுடைய தந்தையார் மறைந்த வழக்கறிஞர் திரு. இளம்வழுதி அவர்களையும், இந்த அவைக்கு உறுப்பினராக வருவதற்கு உழைத்த அன்பு உள்ளங்களையும், வாக்களித்த பெருங்குடி மக்களையும் ஒருகணம் எண்ணி நன்றி கூறி, எண்ணிப் பார்த்து என்னுடைய உரையை துவக்குகிறேன்.

இருபத்தியேழு பத்திகளைக் கொண்ட, பதினாறு பக்கங்களை உடைய இந்த ஆளுநர் உரை சிறியதாக இருந்தாலும் சிறப்பு பெற்றதாக அமைந்திருக்கின்ற இந்த ஆளுநர் உரை, கடமை உணர்ந்த அரசின் திட்ட அறிவிப்பு, சாதனைப் புத்தகத்தின் முன்னுரை, வரும் வரலாற்றுக்கு முகப்பு, தொடங்கிவிட்ட நியாயத்திற்கு அச்சாரம், சமுதாய நீதியின் அறிவிப்பு, கொள்கை பிரகடனத்தின் வாயில், முரசொலியின் முதல் ஆதாரம், தானைத் தலைவர் முதல்வர் கலைஞர் அவர்களுடைய சிந்தனைக்கீற்று என்றெல்லாம் போற்றி புகழக்கூடிய அளவிற்கு நாளை அமையக்கூடிய தமிழகத்திற்கு இன்றைக்கு நாம் காணக்கூடிய நிலையாக வகுத்து வந்திருக்ககூடிய அற்புதமான ஒரு திட்டக்கூறு இந்த ஆளுநர் உரை ஆகும். திராவிடர் வாழ்வில் மலர்ச்சி வேண்டும் என்பதற்காக தன்னுடைய வாழ்நாள் எல்லாம் உழைத்தவர்களான தந்தை பெரியார், பேரறிஞர் அண்ணா ஆகியோருடைய எண்ண பிரதிபலிப்பாகவும் இந்த உரை விளங்கிக் கொண்டிருக்கிறது என்பதை நான் குறிப்பிட்டுக் காட்ட விரும்புகிறேன். அர்த்தமற்ற புகழ்ச்சி நஞ்சைவிட கொடியது. தேவையான புகழ்ச்சி மருந்தைவிட முக்கியமானது என்பதை உணர்ந்த தலைவர் கலைஞரின் தொண்டன் என்ற முறையில் உண்மை உணர்வுகளை இங்கே எடுத்து வைக்கின்றேன். நோயாளியாக

மாற்றப்பட்டவருக்குச் சிகிச்சை தொடங்கிவிட்டது. ஆயத்தப் பணிகளின் குறிப்பேடாக இந்த ஆளுநர் உரை அமைந்திருக்கிறது. நன்றாக இருந்த தமிழன் ஐந்தாண்டு காலத்திலே நோயாளியாக மாற்றப்பட்டுவிட்ட நிலைமையை மாற்ற வேண்டும் எனபதற்கான ஆயத்தப் பணியாகவும், அதனுடைய குறிப்பேடாகவும் இந்த ஆளுநர் உரை அமைந்து இருக்கிறது என்பதையும், இது நன்றிக் காணிக்கையின் துவக்கம் என்பதையும் இங்கே தெரிவித்துக் கொள்ள நான் கடமைப்பட்டிருக்கிறேன்.

*பிற்பகல் 12-55*

அதுமட்டுமல்லாமல், தமிழ்ப்பெருங்குடி மக்களின் எதிர்ப்பார்ப்புகளுக்கு ஏற்றவகையிலே அமைந்துள்ளது. எல்லா இதழ்களும் மணக்கின்ற ரோஜாவைப் போல, எல்லா அறிவாளர்களும் நல்லவர்களும் பாராட்டுகின்ற டாக்டர் கலைஞரைப்போல, இந்த உரையின் அனைத்துப் பகுதிகளும் வரவேற்புக்கு உரியதாக அமைந்திருக்கிறது என்பதை நான் இங்கே சுட்டிக்காட்ட விரும்புகிறேன்.

**மாண்புமிகு டாக்டர் மு. கருணாநிதி:** தலைவர் அவர்களே, இங்கே உரையாற்றிய சிதம்பரம் தொகுதி மாண்புமிகு உறுப்பினர் அழகிரி அவர்கள் ஒரு பாட்டை நினைவுபடுத்தினார்கள். அந்தப் பாட்டின் மூலம், அதிகமாகப் புகழ்ந்து கொண்டிருந்தால் அந்தப் புகழ்ச்சியால் நிலை குலைந்து போய்விடுவேன் என்றார்கள். ஆளும் கட்சியிலே உள்ளவர்கள் புகழ்வதன் மூலமாக என்னை நிலை குலையச் செய்ய வேண்டாம் என்று கேட்டுக் கொள்கிறேன்.

**திரு. இ. புகழேந்தி:** ஆகவேதான், நம்முடைய தலைவர் கலைஞர் அவர்களுடைய தீர்க்கமான பார்வையும், தொலைதூர நோக்கும் இந்த ஆளுநர் உரையை சிறப்புச் செய்து கொண்டிருக்கிறது என்பதை என்னால் சொல்லாமல் இருக்கமுடியவில்லை. மேலும், இங்கே குறிப்பிட்டார்கள், சிறு உரையென்றாலும் இதில் பெரும் கருத்து இருக்கிறது என்பதையும், சிறிய உளிதான் அற்புதமான சிலைகளை வடிக்கிறது என்பதையும், கண்கள் சிறியது ஆனால் காட்சி பெரியது என்கின்ற அடிப்படையில் சிறியதாக இருக்கின்ற காரணத்தால் இது சிறப்பு குறைந்ததாகப் போய்விடவில்லை என்பதை எடுத்துக்கூற விரும்புகிறேன். இந்த உரையினுடைய பல்வேறு பக்கங்களைப் பார்க்கின்றபோது, குறிப்பாக ஒரு கொள்கைப் பிரகடனமாகவே அதைப் பார்க்கிறோம். இதை நான் குறிப்பிடுவதற்குக் காரணம், 5-வது பத்தியிலே குறிப்பிடப்பட்டிருக்கின்ற மாநில சுயாட்சி பற்றிய கருத்து, அதைப்போல 6-வது பத்தியிலே அரசினுடைய ஆவலாக வெளிப்படுத்தியிருக்கின்ற தமிழை ஆட்சிமொழி ஆக்கவேண்டும் என்ற எண்ணத்தினுடைய



பிரதிபலிப்பு, 7-வது பத்தியிலே குறிப்பிடப்பட்டிருக்கின்ற 69 சதவிகித சமூக நீதியைப் பெற்றுத் தரவேண்டுமென்ற அந்தக் கொள்கையினுடைய கடப்பாடுகள் ஆகியவை ஆகும். ஆக, கொள்கைப் பிரகடனமாக இந்த ஆளுநருடைய உரை மிகச் சிறப்பாக அமைந்திருக்கிறது என்பதை நான் இங்கே குறிப்பிட்டுச் சொல்ல விரும்புகிறேன்.

அதுமட்டுமல்ல, ஆளுநர் உரையிலே குறிப்பிடுகின்றபோது, மற்றொரு அரசாங்கம் கொண்டு வந்தது என்ற அடிப்படைக் காரணத்திற்காக எந்தவொரு திட்டத்தையும் இந்த அரசு விட்டுவிடாது. அதனுடைய நியாயபூர்வமான, உண்மையான ஆக்கபூர்வமான கருத்தின் அடிப்படையில் அவற்றைச் செயலாக்கப்படுத்துவோம் என்ற கருத்தின் அடிப்படையில்தான் கிருஷ்ணா நதிநீர் திட்டம் முன்பு கொண்டுவரப்பட்டதாக இருந்தாலும்கூட ஆளுநர் உரையிலே மிகத் தெளிவாக அந்தத் திட்டம் சென்னை மாநகருக்கு தரவிருக்கும் நீரின் அளவினையும், காலக்கெடுவினையும் இங்கே குறிப்பிட்டிருக்கிறார்கள். ஆக, யார் கொண்டு வந்தார்கள் என்பதல்ல பிரச்சினை. அது எப்படிப்பட்ட திட்டம் என்பதுதான் அதனுடைய நிலையை அறியப் பயன்படுமே தவிர வேறல்ல என்பதை இந்த ஆளுநர் உரை மூலமாக உணரமுடிகிறது. ஆனால் ஒன்றை நான் குறிப்பிட்டுச் சொல்லவிரும்புகிறேன். ஆளுநர் உரைக்கு நன்றி தெரிவிக்கும்போது, தனது தொகுதியிலுள்ள குறைபாட்டைத் தனியாகக் கூறமுடியாது என்றாலும்கூட, கிருஷ்ணா நதிநீர்த்திட்டத்தை நம்முடைய தலைவர் கலைஞர் அவர்களுடைய அரசு கொண்டு வருவதைப் பாராட்டும்போது, தலைவர் கலைஞருடைய தலைமையில் 1989-ஆம் ஆண்டு அமைந்த அரசு கொண்டு வந்த சட்டங்களும், திட்டங்களும் நிறைவேற்றமுடியாமல் ஐந்தாண்டு காலம் ஆங்காங்கே தொங்கிக் கொண்டிருப்பதை நான் சொல்லாமல் போக முடியாது. என்னுடைய தொகுதியிலே நான் சொல்லவேண்டுமென்றால், இங்கே மாண்புமிகு அமைச்சராக இருக்கின்ற அன்பிற்குரிய அருமை அண்ணன் பொதுப்பணித்துறை அமைச்சர் அவர்கள் தலைவர் கலைஞருடைய உத்தரவை ஏற்று கடலூருக்கு ஓடோடி வந்து சிங்காரத்தோப்பிற்குப் பாலம் ஒன்று அமைப்பதற்கான கருத்துருக்கள் உருவாக்கப்பட்டு, வந்துவிடும் என்ற நிலையிலே ஆட்சி ஜனநாயகப் படுகொலையாகக் கலைக்கப்பட்டது. ஆனால் ஐந்து ஆண்டு காலம் அந்தப் பாலம் அங்கே கட்டப்படவில்லை. அதை மக்கள் எதிர்பார்த்தார்கள். இப்படி கழக அரசு துவங்கிய பணிகளை அப்படியே விட்டுவிட்டுப்போன வரலாறு முன்னேற்றக் கழகத்திற்கு என்றைக்குமே சொந்தமானது அல்ல என்பதை இங்கே குறிப்பிட்டுக் சொல்ல விரும்புகிறேன்.

அதைப்போலத்தான் கடலூருக்கும் சென்னைக்கும் இடையே கடல்வழி போக்குவரத்து. பயணிகள், சரக்குகள் இவற்றை ஏற்றிக் கொண்டு வரக்கூடிய அளவிற்கு அந்தப் போக்குவரத்து அமைக்கப்படவேண்டுமென்று தலைவர் கலைஞர் அவர்கள் அன்றைக்கு முதல்வராக இருந்தபோது ஒரு திட்டக் கூறினை உருவாக்கினார்கள். ஐந்து ஆண்டு காலமாக அது என்ன ஆயிற்று என்று தெரியாத அளவிற்கு மறைக்கப்பட்டது. புதைக்கப்பட்டது. கடலூரில் புதிய பேருந்து நிலையம் அமைக்கப்படுவதற்கான கருத்துருக்கள் உருவாக்கப்பட்டது. அன்றைக்கு உள்ளாட்சித் துறை அமைச்சராக இருந்த மாண்புமிகு கோ.சி. மணி அவர்களை நேரடியாக பேருந்து நிலையத்தைப் பார்வையிட வைத்து, அதற்கான திட்டங்கள் உருவாக்கப்பட்டன. ஆனால் 5 ஆண்டு காலமாக அந்தப் பேருந்து நிலையம் கட்டப்படுகிறது, கட்டப்படுகிறது என்று சொல்லி அங்கே பணம் வீணாக கொட்டப்படுகின்ற நிலைமையை மக்கள் பார்த்துக் கொண்டிருக்கிறார்கள். இப்படி தலைவர் கலைஞர் அவர்கள் துவக்கிவைத்த அந்தத் திட்டங்கள் மக்கள் நல்வாழ்வுத் திட்டங்களாக இருந்தாலும்கூட அவைகள் புறக்கணிக்கப்பட்டிருக்கும் செய்தியை நான் குறிப்பாக சொல்லிக்கொள்ள விரும்புகிறேன்.

*பிற்பகல் 1-00*

அதேப்போலவேதான், ஒருங்கிணைந்த நீதிமன்றக் கட்டிடம் தலைவர் கலைஞரால் உருவாக்கப்பட்ட அந்தத் திட்டம் அப்படியே புறக்கணிக்கப்பட்டதால், 100 ஆண்கடுளுக்கு மேலான பாரம்பரியமிக்க, சிறப்புமிக்க கடலூர் வழக்கறிஞர்கள் சங்கம் இன்றைக்கு ஆங்காங்கு இருக்கக்கூடிய கட்டிடங்களுக்கு போகக்கூடிய நிலைமையும், அதனால் மாவட்டத்து மக்கள் பெருந்தொல்லைக்கு ஆளாகும் நிலைமையும் இன்றைக்கு கடலூரிலே இருந்துகொண்டிருக்கிறது. ஒருங்கிணைந்த நீதிமன்றக் கட்டிடத் திட்டத்தை, 5 ஆண்டு காலமாக ஒரு அரசு நடந்ததே அது மறந்து போனது. இப்படி தலைவர் கலைஞரால் கொண்டுவரப்பட்ட அனைத்து திட்டங்களும் மறக்கடிக்கப்பட்டன. ஆனால், அந்தத் திட்டங்களுக்கெல்லாம் மீண்டும் உயிரூட்டுகின்ற வகையிலே, மீண்டும் வாழ்வளிக்கின்ற வகையிலே நம்முடைய அரசு மக்களால் இங்கே உருவாக்கப்பட்டிருக்கிறது. நான் குறிப்பாக சொல்ல விரும்புகிறேன். சுற்றுலாத்துறையில் உருவாக்கப்பட்ட மிகப்பெரிய கட்டிடமாக கடலூர் மாநகரிலே அமைந்த 25 இலட்சம் மதிப்பீட்டில் அமைந்த திட்டத்திற்கு அமைச்சரால் அடிக்கல் நாட்டப்பட்டது. ஆனால் திமுக ஆட்சி கலைக்கப்பட்டது. நம்மைவிட்டு உண்மையான நிலையிலேயிருந்த ஜனநாயகம் உண்மையிலேயே போனதற்குப்பிறகு,



வந்த அதிகாரவர்க்கம் அந்த அடிக்கல்லைத் தூக்கி எறிந்தது. மக்களின் மனதிலே இருந்த அந்த உண்மையான நிலையை, அந்த வேதனையை வாக்குகளாக நமக்கு அள்ளித் தந்திருக்கிறார்கள். ஆக, இன்றைக்கு நம்முடைய அரசு ஆளுநர் உரையின் மூலமாக, நாங்கள் பாரபட்சமின்றி நடப்போம், எந்தவிதமான வித்தியாசங்களுக்கும் இடமில்லாமல் நடப்போம். தெளிவாகவும், உறுதியாகவும் சொல்லிக்கொள்கிறோம் நாங்கள் நல்லவர்களாகவும், வல்லவர்களாகவும் இருப்போம் என்பதை தலைவர் கலைஞர் அவர்கள் இங்கே தெளிவாகத் தெரிவித்திருக்கிறார்கள். மேலும், தலைவர் கலைஞர் அவர்கள் ஒரு கருத்தைச் சொன்னார்கள். அதைக் குறிப்பாகச் சொல்ல விரும்புகிறேன். என் உயிரை காத்துக்கொள்ள ஏ.கே. 47 துப்பாக்கி தாங்கிய வீரர்கள் தேவையில்லை, என்னைக் காப்பாற்றிக்கொள்ள என் நெஞ்சுறுதியும், கொள்கைப்பிடிப்பும் போதுமானவை. பெரியார் தந்த துணிவும், அண்ணா தந்த கொள்கைகளும் போதுமானவை, இங்கேயுள்ள தலைவர்களின் அன்பும், உடன்பிறப்புகளின் ஒத்துழைப்பும், பாசமும் போதுமானவை, நான் வாழ்வதும் உங்களுக்காகத்தான், வீழ்ந்தால் அதுவும் உங்களுக்காகத்தான் என்ற கருத்து பிரகடனத்தைக் தலைவர் கலைஞர் அவர்கள் வெளியிட்டிருக்கிறார்கள். அந்தத் தலைவரின் தொண்டர்கள் என்ற முறையிலே மகிழ்ச்சியோடு இந்த மக்களுக்காக நாங்கள் பணியாற்ற வருகிற காலம், இந்த ஆளுநர் உரையின் மூலமாக மேலும் நாங்கள் மகிழ்ச்சியடைகிறோம். காரணம் திட்டக்கூறுகள் வெளிப்படுத்தப் பட்டிருக்கின்றன. எல்லாவிதமான துறைகளுக்கும் திட்டங்கள் தீட்டப்பட்டிருக்கின்றன. அனைத்துத் துறைகளின் மூலமாகவும் செயல்பாடுகள் மக்களுக்கு கிடைக்கின்ற வகையில் திட்டங்கள் உருவாக்கப்பட்டிருக்கின்றன. ஆளுநர் உரையில் மக்களின் அடிப்படைத் தேவைகள் சொல்லப்பட்டிருக்கின்றன. நேர்மை வலியுறுத்தப் பட்டிருக்கிறது. அதிகாரிகள் மீதான விசாரணை குறிக்கப்பட்டிருக்கிறது.

மேலும், எல்லா வகையிலும் தூய்மையாக இது தங்களைத் தாங்களே அழித்துக்கொண்டு மக்களை, தமிழர்களை வாழ வைக்கின்ற அரசு என்ற கருத்து நமக்கெல்லாம் புரியக்கூடிய வகையிலும், நாட்டுக்குத் தெரிவிக்கூடிய வகையிலும் இந்த ஆளுநர் உரையிலே கருத்துக்கள் அமைந்திருப்பதை நாம் வரவேற்க கடமைப்பட்டிருக்கிறோம். தலைவர் கலைஞர் அவர்களுடைய தலைமையில் அமைந்திருக்கக்கூடிய இந்த அரசாங்கம் எல்லா வகையிலும் சிறப்பு பெற்றதாக அமையக்கூடிய வகையிலே தன்னுடைய கருத்துக்களை, சிந்தனைத் தெளிவை இதிலே தெரிவித்து இருக்கிறார்கள். இங்கே அமர்ந்திருக்கக்கூடிய அனைத்து மாண்புமிகு உறுப்பினர்களும் மாண்பினை பெறக்கூடிய வகையில்

நான் மிகவும் மகிழ்வோடு சொல்லிக்கொள்கிறேன். ஒரு விடுதலை உணர்வு ஏற்பட்டிருக்கிறது. ஆதிக்க உணர்வு அகன்று நாமெல்லாம் தெளிவாக, மகிழ்ச்சியோடு இருக்கிறோம் என்ற அந்த உணர்வு ஏற்பட்டிருக்கிறது. மக்கள் அனைவரும் இந்தக் கோட்டைக்குள்ளே நடமாடக்கூடிய ஒரு சூழலை உருவாக்கியிருக்கிறது இந்த அரசு. எனவே இந்த அரசு போற்றுதலுக்குரிய அரசாகும். ஆகவேதான் அனைத்து நிலைகளிலும் வரவேற்கப்படக்கூடிய இந்த ஆளுநர் உரை, அனைத்து தரப்பாலும் ஏற்றுக் கொள்ளப்பட்ட ஆளுநர் உரை, எதிர்க்கட்சி நண்பர்களாலும்கூட இது சிறியது என்று சொல்லாமே தவிர, வேறு எந்த வகையிலும் வலிமைகுன்றியது என்றோ, வளம் குன்றியது என்றோ, தெளிவு குன்றியது என்றோ, சொல்ல முடியாத அளவுக்கு சீறு பெற்ற ஒரு நிலையாக சிறப்பாக இந்த ஆளுநர் உரை அமைந்திருக்கிறது.

*பிற்பகல் 1-05*

அதைப்போன்று அடிப்படைத் தேவையான குடிநீர்ப் பிரச்சினை கோலோச்சுகின்ற இந்தக் கொடுமையான சூழ்நிலையை மாற்றுகின்ற முகத்தான் என்னுடைய கடலூர் தொகுதியிலே பல்வேறு திட்டங்கள் உருவாக்கப்பட்டு அன்று குடிநீர் அமைச்சராக இருந்த அண்ணன் டாக்டர் பொன்முடி அவர்கள் கடலூரில் 20 ஆயிரம் பேருக்கு மேற்பட்டோரின் குடிநீர்ப் பிரச்சினையை தீர்த்து வைக்க உதவிகரமாக இருந்தார்கள். இன்றைக்கு அந்தக் குடிநீரே கெட்டுப்போய் மீண்டும் கடலூர் பாழ்பட்டுப் போயிருக்கின்ற இந்தச் சூழ்நிலையில், மேலும் பல்வேறு நன்மைகளை அந்நகருக்குச் செய்து தரவேண்டும் என்று எடுத்துச் சொல்லி, கடலூரை ஒரு மாதிரி நகரமாக, ஒரு மாடல் நகரமாக இந்த அரசு எடுத்துக்கொண்டு தமிழகத்திலே அந்த நகரை ஒரு முன் மாதிரி நகரமாக உருவாக்குவதற்கு உதவிட வேண்டுமென்று அன்போடு கேட்டுக்கொண்டு சிறப்புமிக்க இந்த ஆளுநர் உரையை அறிவாளர்கள், நல்லவர்கள், தெளிவானவர்கள், உண்மையானவர்கள் வரவேற்பார்கள் என்று கூறி, வாய்ப்புக்கு வணங்கி விடைபெறுகிறேன். நன்றி, வணக்கம்.

**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** மாண்புமிகு பேரவை உறுப்பினர் புகழேந்தி அவர்கள் ஒரு சிறந்த வழக்கறிஞர். அவருடைய கன்னிப்பேச்சிலே இடையூறு செய்ய நான் விரும்பவில்லை. ஆனால் ஒன்றைமட்டும் நான் அவருக்கு நினைவுபடுத்தக் கடமைப்பட்டிருக்கிறேன். அவர்களுடைய தலைவர் மாண்புமிகு முதலமைச்சர், அவருடைய அண்ணன்மார்கள் எல்லாம் மாண்புமிகு அமைச்சர்கள். ஆகவே, சட்டமன்றப் பேரவையிலே பேசுகின்ற



நேரத்திலே, முதலமைச்சர் என்றும், அமைச்சர்கள் என்றும் அழைக்க வேண்டுமென்ற எனது அன்பான வேண்டுகோளை தெரிவித்துக் கொள்கிறேன். அடுத்து நாகைத் தொகுதி சட்டமன்ற மாண்புமிகு உறுப்பினர் திரு. நிஜாமுதீன்.

***திரு. ஜி. நிஜாமுதீன்:** மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, இந்த சட்டமன்றத்தில் கன்னி உரை ஆற்றுகின்ற வாய்பைத் தந்த உங்களுக்கு எனது நன்றியைத் தெரிவித்துக் கொள்கிறேன். இந்த மாமன்றத்தில் அமர்ந்து இங்கே நடக்கின்ற உயிரோட்டமான விவாதங்களில் பங்கேற்று தமிழக மக்களுக்கு சேவை செய்கின்ற வாய்ப்பை வழங்கிய இந்திய தேசிய லீக்கிற்கும் எங்களுடைய தலைவர் மாண்புமிகு M.A. லத்தீப் அவர்களுக்கும், நாகை சட்டமன்றத் தொகுதி மக்களுக்கும், அருமையான தீர்ப்பை வழங்கி, மாண்புமிகு கலைஞர் தலைமையில் நல்லாட்சி மலர்ந்திட, உதயசூரியனை உச்சிமுகர்ந்து முற்போக்குக் கூட்டணி வெற்றிபெற வாய்ப்பளித்த தமிழக வாக்காள நெஞ்சங்களுக்கும் என்னுடைய நன்றியைத் தெரிவித்துக் கொள்கிறேன்.

மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களுக்கும், பேரவைத் துணைத் தலைவர் அவர்களுக்கும் சூழும் இருள்போக்க சூனியகாரர்களின் சூழ்ச்சியினை சுட்டெறிக்க அரியனை ஏறிய 'சூழும் இருள் போக்கி, சூனியக்காரர்களின் சூழ்ச்சிகளை' சுட்டெரித்த தமிழக முதல்வர் அவர்களுக்கும், அவரோடு இணைந்த அமைச்சர் பெருமக்களுக்கும் நான் சார்ந்துள்ள இந்திய தேசிய லீக் சார்பாகவும், எனது தொகுதி மக்கள் சார்பாகவும் வாழ்த்துக்களையும் பாராட்டுகளையும் தெரிவித்துக் கொள்கிறேன்.

மேதகு ஆளுநர் உரையில் நல்லபல திட்டங்கள் அறிவிக்கப்பட்டுள்ளன. சமநிலை நின்று சமூக நீதி அடிப்படையில் புதிய அரசு அனைத்து தரப்பு மக்களுக்கும் உரிய பொதுவான திட்டங்களை செயல்படுத்தும் விதமாக இருப்பதால் மேதகு ஆளுநர் உரைக்கு நன்றி தெரிவிக்கும் தீர்மானத்தை என் சார்பாகவும், நான் சார்ந்துள்ள இந்திய தேசிய லீக் சார்பாகவும் வரவேற்று பாராட்டுகிறேன். தமிழக மக்கள் நலனுக்காகவும், என்னுடைய தொகுதி மக்களின் நலனுக்காகவும் ஒரு சில கருத்துக்களை இந்தப் பேரவையின் கவனத்திற்கு கொண்டு வர விரும்புகிறேன். 'தமிழா இருப்பாய், நெருப்பாய்; இருந்தது போதும் செருப்பாய்' என்ற கவிதை வரிகளுக்கு ஏற்ப, தமிழர்கள் நெருப்பாய் இருக்க, தமிழக முதல்வர் பொறுப்பாய் இருந்து அமைத்துள்ளார் தமிழக ஆட்சிமொழிக்கான அமைச்சகம். அதற்கு அமைச்சராக நியமிக்கப்பட்டிருப்பவரின் பெயரோ 'தமிழ்க்குடிமகன்'

என்ன பொருத்தம் பாருங்கள். தமிழக முதலமைச்சர் அவர்களே தமிழை ஆட்சி மொழியாக மாற்றுவது மட்டும் போதாது, தமிழுக்கு என தனிக் கொடியும், தமிழ் இனத்திற்கென தனி நாளும் அறிவிக்கப்பட வேண்டும். அதை தமிழக மக்கள் சார்பாக நான் உங்களை வேண்டி விரும்பிக் கேட்டுக் கொள்கிறேன்.

தேர்தல் நேரத்தில் கடைபிடிக்கப்பட்ட சுவர் விளம்பரம் செய்வதில் கட்டுப்பாடு, சுவரொட்டி ஒட்டுவதில் கட்டுப்பாடு, ஒலிபெருக்கி வாயிலாக விளம்பரம் செய்வதில் கட்டுப்பாடு போன்ற நல்ல முறைகளை தேர்தல் இல்லாத நேரங்களிலும் தொடர்ந்து கடைபிடிக்க வேண்டிய நடவடிக்கை எடுக்க வேண்டுமாய் கேட்டுக் கொள்கிறேன். மக்களை கவருவதற்காக அள்ளி வழங்கப்படுவதை குறைத்து ஏழை மக்கள் கையேந்தும் நிலையை போக்கிட அந்த நிதியை தொழில் வளம் பெருக, செலவு செய்து, மக்களுக்கு நிரந்தர வேலைவாய்ப்புகள் கிடைத்திட வாய்ப்பு ஏற்படுத்திட வேண்டுமாய் நான் அன்போடு கேட்டுக் கொள்கிறேன்.

இலவச மின்சார திட்டத்தில் ஆண்டுக்கு சுமார் 1300 மில்லியன் யூனிட் விரயமாகிறது. தமிழகத்தில் சுமார் 15 லட்சம் விவசாயிகள் மின் இணைப்பு பெற்றிருக்கிறார்கள். குறிப்பாக, கோவை, பெரியார் சேலம், தர்மபுரி போன்ற மாவட்டங்களில் 200 முதல் 550 அடிவரை ஆழ்கிணறு தோண்டப்பட்டு கம்ப்ரசர் மூலம் தண்ணீர் எடுக்கப்பட்டு வருகிறது. இதற்குப் பதிலாக நீர் மூழ்கி மோட்டார்களை அமைத்தால் சுமார் 180 கோடி ரூபாய் மதிப்புள்ள 930 மில்லியன் யூனிட் மின்சாரம் சேமிக்க முடியும். மேலும் இலவசமாக மின்சாரம் வழங்குவதற்கு மின்சாரத்திற்குரிய கட்டணத்தை தமிழ்நாடு அரசுதான் செலுத்த வேண்டும். கடந்தக் காலங்களில் தொகை செலுத்தப்படவில்லை. இந்தக் கட்டணத்தை மின்சாரத் துறை மின் கட்டணத்தை உயர்த்துவதன் மூலம் ஈடு செய்துகொள்கிறது. அதனால் மக்கள் மீது பளு சுமத்தப்படுகின்றன. பயனடைவோர் ஒருவரும் பணம் செலுத்துவோர் ஒருவரும் இருக்கும் நிலை மாறிட வேண்டுமென்று கேட்டுக் கொள்கிறேன்.

*பிற்பகல் 1-10*

"தமிழ்நாடு டாக்ஸ் ஆன் லக்சுரிஸ் இன் ஹோட்டல்ஸ் அண்ட் லாட்ஜிங் ஹவுஸ்சஸ் ஆக்ட் 1981" தங்கும் விடுதிக் கட்டணத்தில் 50 ரூபாய்க்கு மேல் உள்ளவைகளுக்கு 10 முதல் 20 சதவிகித வரி விதிக்கப்படுகின்றன. இத்தொகை 1981-ல் நிர்ணயம் செய்யப்பட்டுள்ளது 15 ஆண்டு காலத்தில் 300 சதவிகித விலைவாசி உயர்வு அடைந்துள்ளன.



ஆகையினால் இந்த குறைந்த பட்ச நிர்ணயத் தொகை 50 ரூபாயை 250 ரூபாயாக மாற்ற வேண்டுமென்று கேட்டுக் கொள்கிறேன்.

காவிரி டெல்டா பகுதிகளில் விவசாயிகளின் தண்ணீர் பிரச்சினையை தீர்த்திட துறையூர் பகுதியில் மலைச்சூழ்ந்த இடம் மற்றும் பள்ளத்தாக்கான இடங்களில் வல்லுநர்களைக் கொண்டு அணைக்கட்டு ஒன்றைக் கட்ட வேண்டுமாய் கேட்டுக்கொள்கிறேன்.

அதில் கொள்ளிடம் வழியாக கடலுக்குச் செல்லும் உபரி நீரையும், மழைக்காலங்களில் கடலுக்குச் செல்லும் உபரி நீரையும் பயன்படுத்தி அந்த அணைக்கட்டில் நீர் தேங்குவதன் மூலம் விவசாயிகள் தேவைகளைப் பூர்த்தி செய்ய வேண்டுமாய் கேட்டுக்கொள்கிறேன்.

நாகை-காயிதே மில்லத் மாவட்டம் உருவாக்கப்பட்டு 5 ஆண்டு காலம் ஆகிவிட்ட நிலையில் அங்கு இன்னும் ஆட்சியாளர் அலுவலகம் கட்டப்படவில்லை. ஒரு தனி சிறப்புமிக்க ஊர் நாகப்பட்டினம். ஏனென்றால் எங்கள் ஊருக்கு மூன்று சட்டமன்ற உறுப்பினர்கள் இருக்கிறார்கள். அதில் ஒருவன் நான். மற்றொருவர் தமிழக மாண்புமிகு முதலமைச்சர் அவர்கள். அவர்கள் பிறந்த திருக்குவளை அந்தத் தொகுதியில் தான் இருக்கிறது. மற்றொருவர் திருவாரூர் தொகுதியின் சட்டமன்ற உறுப்பினர் மாண்புமிகு திரு. அசோகன் அவர்கள். ஆக. மூன்று பேர்களின் சார்பாகவும் கேட்டுக் கொள்கிறேன் - உடனடியாக நாகையில் மாவட்ட ஆட்சியர் அலுவலகம் கட்டி தாருங்கள் என்று.

மாநகராட்சிகளுக்கு நிதி ஒதுக்கீடு செய்துள்ளது போல நகராட்சிகளுக்கும் நிதி ஒதுக்கீடு செய்ய வேண்டுமாய் கேட்டுக் கொள்கிறேன்.

நாகை துறைமுகத்தை விரிவுபடுத்தி நன்கு செயல்படுத்திடவும், அதன்மூலம் வியாபாரமும், ஏற்றுமதியும் பெருகிடவும் வழிவகை செய்ய வேணடுமாய் கேட்டுக் கொள்கிறேன்.

சென்ற ஆட்சிக் காலத்தின்போது, காணாமல் போன கோவில் சொத்துக்கள் எல்லாம் கண்டுபிடித்திட வழிவகை செய்திட வேண்டும். குறிப்பாக நாகை நீலதாட்சியம்மன் கோவிலில் காணாமல் போன மரகத லிங்கத்தை கண்டுபிடிக்க நடவடிக்கை எடுத்தல் வேண்டும்.

வளர்ந்துவரும் நாகை தனி பாரம்பரியமிக்கதாகும். வடக்கே நாகூர் தர்கா, தெற்கே வேளாங்கன்னி மாதாகோயில், மேற்கே [illegible] வேலன் ஆலயம், கிழக்கே வங்கக் கடல் என்று [illegible]

218920.

புண்ணியஸ்தலங்கள் சூழப்பட்ட ஊர். இது போன்ற ஊர் இந்தியாவில் வேறு எங்கும் கிடையாது. ஆகவே, இந்த நான்கு ஊரை இணைத்து ஒரு சுற்றுலாஸ்தலமாக அறிவிக்க வேண்டுமாய் கேட்டுக்கொள்கிறேன்.

ஜாதியின் அடிப்படையில் இட ஒதுக்கீடுகள் செய்வதைப் போல மத சிறுபான்மையினருக்கும் அவரவர்கள் விகிதாசாரபடி வேலை வாய்ப்பிலும் கல்வியிலும் இடஒதுக்கீடு செய்யவேண்டுமாய் கேட்டுக் கொள்கிறேன்.

நாகை-காயிதே மில்லத் மாவட்டத்தில் தொழிற்சாலைகள் துவங்குவதற்கு ஏற்ற சூழ்நிலை தற்போது அமைந்துள்ளது. தொழிற்சாலைகள் துவங்குவதற்கு வசதியாக "நேச்சுரல் காஸ்", ஆயில், சிலிக்கேட் உற்பத்தி செய்ய பயன்படும் மணல் ஆகியவை அங்கே நிறைய கிடைப்பதால் அப்பகுதிகளில் தொழிற்சாலைகளைத் தொடங்கி அந்த மாவட்டத்தின் மக்கள் முன்னேற வழிவகுக்க வேண்டுமாய்க் கேட்டுக் கொள்கிறேன்.

நாகூர், நாகைப் பகுதியில் எம்.ஆர்.எல்., ஐ.டி.பி., ஓ.என்.ஜி.சி. போன்ற நிறுவனங்களினால் போக்குவரத்து நெரிசலை போக்கிட நாகூர் பாலத்தை புதிதாக கட்டவும், நாகூர், நாகை பகுதியில் பை-பாஸ் ரோடு போடவும் ஆவன செய்ய வேண்டுமாய் கேட்டுக் கொள்கிறேன். நாகூர் பாலம் கட்டும் திட்டம் 1973-ம் வருடம் அப்போதிருந்த சட்டமன்ற உறுப்பினர் தொடர்ந்து வலியுறுத்தி வந்திருப்பதையும் இந்தச் சபையின் கவனத்திற்குக் கொண்டுவர விரும்புகிறேன்.

வளர்ந்து வரும் நாகைக்கு குடிநீர் பிரச்சினை ஒரு சவாலாக இருந்து வருகிறது. இந்நிலையைப் போக்கிட போர்க்கால அடிப்படையில் ஆவன செய்து தரவேண்டுமாய் கேட்டுக்கொள்கிறேன். மேலும் சாலைப் போக்குவரத்து மிகவும் பழுதடைந்த நிலையில் உள்ளது. சோழன் காலத்தில் போட்ட ரோடுகள் போல் எங்களது தொகுதி ரோடுகள் உள்ளன. சோழன் போக்குவரத்து கழகப் பேருந்துகளும் மிகவும் பழுதடைந்த நிலையில் உள்ளது. நாகை பேருந்து நிலையத்தில் இருவர் பேசிக் கொண்டது நினைவுக்கு வருகிறது. ஒருவர் சொல்கிறார் பாரம்பரியமிக்க ஊரில் சோழன் போக்குவரத்துக் கழக பேருந்துகள் மிகவும் பழுதடைந்த நிலையில் உள்ளது. ஆனால் புதியதாக தோற்றுவிக்கப்பட்ட ஜெயலலிதா போக்குவரத்து கழக பேருந்துகள் பகட்டாக இருப்பதற்கு காரணம் என்ன என்று கேட்டார். அதற்கு மற்றொருவர் "சோழன் செத்து பல ஆண்டுகாலமாகிவிட்டது. அதனால் மிகவும் மங்கிய நிலையில் இருக்கிறார். இவரோ சினிமா நடிகை



பகட்டானவர் அதனால் பகட்டாக இருக்கிறார் என்று கூறினார். இதுபோன்ற நிலைமைகள் இல்லாமல் கார்பரேஷன்களிலே உள்ள அனைத்து பஸ்களும் ஒரேமாதிரியாக இருக்க இந்த அரசு நடவடிக்கை எடுக்க வேண்டுமென்று கேட்டுக்கொண்டு, வாய்ப்பளித்தமைக்கு நன்றிகூறி விடைபெறுகிறேன். நன்றி, வணக்கம். (குறுக்கீடு).

*பிற்பகல் 1-15*

**திரு. ம. அப்துல் லத்தீப்:** மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, ஒரு சிறிய விளக்கம். மாண்புமிகு உறுப்பினர் திரு. நிஜாமுதீன் அவர்கள் இப்போதுதான் முதல் தடவையாக சட்டமன்றத்திற்கு வந்திருக்கிறார். இது அவருடைய கன்னிப் பேச்சும்கூட, அவர்கள் பேசும்போது தமிழ்நாட்டிற்கு** தமிழுக்கு என்று ஒரு** வேண்டும் என்று அவர்கள் சொல்லியதை தவறாகப் புரிந்து கொள்ளக்கூடாது. எனவே, அந்தச் சொற்றொடர்களைத் தயவுசெய்து அவைக்குறிப்பிலிருந்து நீக்க வேண்டுமென்று கேட்டுக் கொள்கிறேன். தமிழ்நாட்டில் தமிழ்தான் அரசோச்ச வேண்டும் என்ற பொருளிலே, தமிழுக்கு முன்னுரிமை வேண்டும் என்ற பொருளிலே அவர் பேசியிருக்கிறார் எனறுதான் அந்தக் கருத்தை ஏற்றுக்கொள்ள வேண்டும். எனவே, இந்தச் சொற்றொடர்களை அருள்கூர்ந்து நீக்கிவிடும்படி கேட்டுக் கொள்கிறேன். (குறுக்கீடு)

**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** மாண்புமிகு உறுப்பினர் திரு லத்தீப் அவர்களுடைய கோரிக்கை ஏற்றுக் கொள்ளப்படுகிறது. அடுத்து, பெரம்பூர் தொகுதி மாண்புமிகு சட்டமன்ற உறுப்பினர் செங்கை சிவம்.

***திரு. செங்கை சிவம்:** மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, மீண்டும் இந்தச் சட்டமன்றத்திற்கு உறுப்பினராக வரக்கூடிய ஒரு நல்ல வாய்ப்பையும், மக்களுக்கு பணியாற்றக்கூடிய ஒரு நல்ல சந்தர்ப்பத்தையும் வழங்கிய தமிழக முதல்வர், திராவிட முன்னேற்றக் கழகத்தினுடைய தலைவர், முத்தமிழ் அறிஞர் டாக்டர் கலைஞர் அவர்களுக்கும், பெரம்பூர் தொகுதி குறிப்பாக தாழ்த்தப்பட்ட, மிகமிக தாழ்த்தப்பட்ட, எளிய மக்கள், பிற்படுத்தப்பட்ட மக்கள் ஏராளமாக வசிக்கின்ற மக்களுடைய பெரும்பான்மையான வாக்குகளால் என்னை வெற்றிபெறச் செய்து, இந்த மாமன்றத்திற்கு வந்து மீண்டும் பணியாற்றுவதற்கு நல்லதொரு சந்தர்ப்பத்தை வழங்கிய அந்தப் பகுதி மக்களுக்கும்

**மாண்புமிகு பேரவைத் தலைவரின் ஆணைக்கிணங்க அகற்றப்பெற்றது.

சேர்த்து, என்னுடைய தலைசாய்ந்த வணக்கத்தை முதற்கண் தெரிவித்துக் கொள்ள விரும்புகின்றேன்.

ஆளுநர் உரைக்கு நன்றி தெரிவித்து, உறுப்பினர் பசும்பொன் கிருஷ்ணன் முன்மொழிந்த தீர்மானத்தில் பேசுவதற்கு ஒரு நல்ல சந்தர்ப்பத்தை வழங்கிய பேரவைத் தலைவர் அவர்களுக்கும், முதல்வர் கலைஞர் அவர்களுக்கும் நன்றியினைத் தெரிவித்துக் கொள்கிறேன்.

இந்த ஆளுநர் உரையில் ஏறக்குறைய 26 அம்சங்கள்-- 26 நலத் திட்டங்களும், சட்டங்களும் அமைந்து இருக்கின்றன. ஆகவே அந்தத் திட்டங்களில் குறிப்பாக சென்னையிலிருந்து தேர்ந்தெடுப்பட்டிருக்கின்ற நான் தெரிவித்துக் கொள்வது, 1968 லேயிருந்து நக்ராட்சிகளுக்குத் தேர்தலே நடைபெறவில்லை. ஏறக்குறைய ஒரு ஜெனரேஷன் என்று சொல்லப்படுகின்ற அளவுக்கு இன்றைக்கு மாநகராட்சியினுடைய தேர்தலை நாம் சந்திக்காதவர்கள். ஆகவே கடந்த அரசு 'எழில்மிகு சென்னை 2000' என்று சொன்னார்கள். ஆனால், இன்றைக்குச் சென்னையைப் பார்க்கும்போது 1989, 1990, 1991 ஆம் ஆண்டுகளில் திராவிட முன்னேற்றக் கழக ஆட்சிக் காலத்திலே அமைச்சர் பெருமக்களும், முதலமைச்சரும் பலகோடி ரூபாய்களை சென்னை மாநகரத்திற்குத் தந்து, அப்போது போடப்பட்ட சாலைகள் தெருவிளக்குகள்தான் இருக்கின்றன. இன்றைக்கு அதுவும் 5 ஆண்டு காலத்தில் பாழடைந்து, மிகமிக மோசமான சூழ்நிலையிலே சென்னை மாநகரம் காட்சி அளிக்கின்றது. ஆகவே, இப்படிப்பட்ட மாநகரத்திற்கு ஏறக்குறைய தமிழக முதல்வர் டாக்டர் கலைஞர் அவர்கள் மனமுவந்து 200 கோடி ரூபாய் அளித்து, சென்னை மாநகரத்தை மீண்டும் எழில்மிகு சென்னையாக மாற்றி அமைக்க வேண்டுமென்ற நல்லெண்ணத்தில் அவர்கள் பணத்தை ஒதுக்கீடு செய்திருக்கிறார்கள். அதற்கான திட்டங்களைத் தீட்டியிருப்பது வரவேற்கக்கூடிய ஒன்றாகும்.

அதுமட்டுமல்லாமல், இன்றைக்கு நம்முடைய உள்ளாட்சித் துறை அமைச்சர் அவர்கள் பொறுப்பேற்ற காலத்திலிருந்து அதிகாரிகளை அழைத்து அதற்குரிய நடவடிக்கைகளை எடுத்ததோடு மட்டுமல்லாமல், 28-ஆம் தேதி சென்னையிலே இருக்கின்ற சட்டமன்ற உறுப்பினர்கள் நாடாளுமன்ற உறுப்பினர்கள், அரசு அதிகாரிகளை அழைத்து, சென்னையை எழில்மிகு சென்னையாக மாற்றியமைத்திட, முந்தைய அரசு செய்திருக்கிற பல்வேறு சீர்கேடுகளை மாற்றியமைப்பதற்கு அதற்குண்டான ஆக்கப் பணிகளை, கருத்துக்களை அறிய நம்முடைய அமைச்சர் அவர்கள் முதலமைச்சர் அவர்களுடைய யோசனையோடு செய்தது மட்டுமல்லாமல், இப்போது பல தொகுதிகளில் அதிகாரிகளும், மற்றவர்களும் சொல்லுகின்ற பணிகளை மிக வேகமாகச் செய்திருக்கிற நிலைமைகளை நாம் பார்க்கின்றோம்.



பிற்பகல் 1-20

அதுமட்டுமல்ல, கடந்த தேர்தலில், நாடு பூராவும் அறிந்த ஒன்றுதான், பல இடங்களிலே கூட தேர்தலை ரத்து செய்து, மறு தேர்தல்கள் கூட பல வாக்குச் சாவடிகளில் நடைபெற்றன. வாக்குச் சாவடிகளிலே பல நிலைகளிலே, பல வாக்காளர்கள் விடுபட்டுவிட்டார்கள். வேண்டுமென்றே அந்த வாக்காளர் பட்டியலில் பெருமளவு தெருத்தெருவாக மட்டுமல்ல, பாகம் பாகம் ஆகவே கூட வாக்காளர்கள் விடுபட்டுவிட்டார்கள். பல இடங்களில் வாக்குச் சாவடிகளுக்கு, வாக்காளர் பட்டியல்களை கூட எடுத்துக் கொண்டு வரவில்லை. ஆகவேதான், மாநகராட்சித் தேர்தல்களை வைப்பதற்கு முன்னால், மீண்டும் அந்த வாக்காளர் பட்'டியலை, எப்படி கூட்டுறவுத் தேர்தலுக்கு முன்னாலே சரிபார்க்க வேண்டுமென்று சொல்கிறார்களோ, அந்த அளவுக்கு, வாக்காளர் பட்டியலை மீண்டும் ஒருமுறை சரிபார்த்து, தேர்தலை வைக்க வேண்டும். நம்முடைய தமிழக முதல்வர் அவர்கள், சென்னையிலே இருக்கிற மக்களுக்கு ஒரு தித்திப்பான செய்தியை சொல்லியிருக்கிறார்கள். மாநகராட்சி, உள்ளாட்சித் தேர்தல்கள் நடைபெறும் என்று இந்தக் கூட்டத் தொடரில் சொல்லியிருப்பது வரவேற்க கூடியதாகும். அதே நேரத்தில் வாக்காளர் பட்டியலைச் சரி பார்க்க வேண்டுமென்று எடுத்துச் சொல்ல விருமபுகிறேன். கோயம்பத்தூர் மாவட்டத்தில் சிறுவாணி தண்ணீர் கொண்டு வந்து அந்த மக்களுடைய துயர் துடைத்த நம்முடைய தமிழக முதல்வர் டாக்டர் கலைஞர் அவர்கள்.

அதுபோல் கிருஷ்ணா நதிநீர்த் திட்டம் இருக்கிறது. யார் இந்த கிருஷ்ணா நதிநீர் திட்டத்தைக் கொண்டு வந்தார்கள் என்பது அல்ல. அந்த நதி நீர்த்திட்டம் எம்.ஜி.ஆர். காலத்திலே கொண்டு வந்தாலும்கூட கடந்த திராவிட முன்னேற்றக் கழகத்தினுடைய ஆட்சிக் காலத்தில், அமைச்சர் பெருமக்கள், அமைச்சர் பொன்முடியும், அமைச்சர் துரைமுருகனும், பல முறை சென்று, அந்தப் பணிகளை வேகப்படுத்தினார்கள். கடந்த ஐந்து ஆண்டு காலத்தில், அந்தப் பணிகள் முடக்கப்பட்டு, பணம் போய்ச் சேர்ந்து இருக்கிறதே தவிர, பணிகள் முடக்கப்பட்டுவிட்டது. அப்போதும் கூடச் சொன்னார்கள். தேர்தல் காலத்திற்கு முன்னாலே சொன்னார்கள். ஜனவரியிலேயே கிருஷ்ணா நதி நீர் வந்துவிடும் எனறு, நாம் கூட மிக ஆவலாக எதிர்ப்பார்த்தோம். ஜெயலலிதா சொல்கிறார்களே - முதலமைச்சர் சொல்கிறார்களே என்று கூட எதிர்பார்த்தோம். ஆனால் கிருஷ்ணா நதி நீர் வந்தபாடு இல்லை. ஆனால் இன்றைக்கு தமிழகத்தில் டாக்டர் கலைஞர் அவர்கள் பொறுப்பேற்றவுடன் இரண்டு மூன்று முறை, நம்முடைய ஆந்திர முதல்வர் திரு. சந்திரபாபு நாயுடு அவர்களை பல

கட்டங்களில், டெல்லியிலே, பல இடங்களிலே அவர்களைச் சந்தித்ததோடு மட்டுமல்ல, இந்த கிருஷ்ணா நதி நீர்த் திட்டத்தை மிக விரைவிலே துரிதப்படுத்தி, இந்த ஆண்டு டிசம்பர் மாதத்திலே தண்ணீர் கிடைக்க, தமிழகத்திற்கு, குறிப்பாக சென்னைக்குத் தண்ணீர் கிடைக்க வழி செய்வோம் என்று அவர்கள் ஆளுநர் உரையிலே குறிப்பிட்டிருப்பது மிகமிக வரவேற்கத்தக்கது. ஆகவே கலைஞர் சொன்னதைத்தான் செய்வார். செய்வதைத்தான் சொல்வார் என்ற தத்துவத்தின் அடிப்படையிலே, ஆளுநர் உரையிலே இருக்கிற குறிப்புகள் இன்று சென்னை மக்களினுடைய எதிர்பார்ப்புகளுக்கு பெரும் மகிழ்ச்சியை அளிக்கிறது என்பதை நான் இந்த நேரத்திலே தெரிவித்துக் கொள்ள விரும்புகிறேன். இன்றைக்கு நம்முடைய உள்ளாட்சித் துறை அமைச்சர் அவர்களுக்கு மட்டுமல்லாமல் மற்றவர்களுக்கும் பல இடங்களிலே தண்ணீரிலே பொல்லூஷன் இருக்கிறது; வாட்டர் பொல்லூஷன் இருக்கிறது; சென்னையில் பல இடங்களிலே வாட்டர் பொல்லூஷன் இருக்கிறது. பல பைப்புகள் சோக்ட் அப் என்று சொல்லுகிற அளவுக்கு துரு பிடித்து இருக்கிறது. அதனாலேதான் குடிநீர் வருகிற இடங்களிலே அந்த பைப்புகளிலே கழிவுநீரும் சேர்ந்து வருகிற நிலை இருக்கிறது. ஆகவே இன்றைக்கு சென்னைக்கு குடிநீர் வருவதற்கு முன்னரே, ென்னையில் அனைத்துப் பகுதியில் இருக்கிற பழைய பைப்புகளை புதுப்பித்து, பழைய பைப்புகளை எல்லாம் நீக்கிவிட்டு புது பைப்புகளை போட்டு அதன் மூலமாக சென்னைக்கு குடிநீர் வழங்கினால்தான் இப்படிப்பட்ட வாட்டர் பொல்லூஷன் வருவதைத் தவிர்க்க முடியும் எனபதை இந்த நேரத்திலே நான் எடுத்துச் சொல்ல விரும்புகிறேன்.

*பிற்பகல் 1-25*

அதுமட்டுமல்லாமல் இந்த ஆளுநர் உரையிலே இன்னொரு சிறப்பு அம்சம் அமைந்து இருக்கிறது. அந்த சிறப்பு அம்சம் என்னவென்று சொன்னால், மேல் சபையை மீண்டும் தமிழகத்திற்குக் கொண்டுவர வேண்டும் என்று ஆளுநர் உரையிலே இருப்பது மிகமிக குறிப்பிடத்தக்கது. 1947-ல் இந்த மேல் சபை மூலமாகத்தான் இந்த நாட்டிற்கே சுதந்திரத்தை பிரகடனப்படுத்தியது அறிவிக்கப்பட்டது. வல்லுநர்களும் படித்த கல்வியாளர்களும் நிரம்பி இருக்கிற இந்த மேல்சபை மீண்டும் தமிழகத்தில் கொண்டுவர வேண்டும் என்று டாக்டர் கலைஞர் அவர்கள் ஆளுநர் உரையில் சொல்லி இருக்கிறார்; அவரேகூட ஓர் இடத்திலே மேல்சபை என்பது கப் அண்டு சாஸர் என்று சொல்லி இருக்கிறார்கள். சூடாக விவாதங்கள் இங்கே சட்டமன்றத்திலே நடைபெற்றாலும்கூட, மேல்சபையிலே அது குறையும். எப்படி என்று சொன்னால், திரு. லட்சுமணசாமி முதலியார், திரு. ராமசாமி முதலியார் போன்ற மிகப்



பெரிய வல்லுநர்கள் மேல்சபையிலே இருந்து பணியாற்றிய ஒரு நல்ல சபைதான் மேல்சபை. ஆகவே, குறிப்பாக, இன்றைய தமிழக முதல்வர் டாக்டர் கலைஞர் அவரகள் 1986-லே மேல் சபையினுடைய தலைவராக வந்து விடுவார் என்ற ஒரு காரணத்தின் அடிப்படையிலேதான் மேல் சபையையே ரத்து செய்தார்கள். அந்த மேல் சபை ரத்து செய்யப்பட்டது. ஆனால், மீண்டும் நம்முடைய கல்வியாளர்களும், நல்ல அறிஞர் பெருமக்களும், மற்றவர்களும் கூட வேண்டுமென்ற நல்ல எண்ணத்திற்காக, இன்றைக்கு மேல்சபையை கொண்டுவருவது உண்மையிலேயே படித்தவர்கள் மத்தியில், சான்றோர்கள் மத்தியில் ஒரு நல்ல வரவேற்பு இருக்கிறது.

அதுமட்டுமல்லாமல் ஆளுநர் உரையிலே சர்க்கார் ஊழியர்களை, என்.ஜி.ஓ.களைப் பற்றி, குறிப்பிட்டு இருப்பதை மிகமிக வரவேற்கின்றேன். பல லட்சக்கணக்கான ஊழியர்கள், என்.ஜி.ஓ-கள் கலைஞர் அவர்கள் எப்போது ஆட்சிக்கு வருவார், எப்போது பே கமிஷன் அறிவிப்பார் என்ற எதிர்பார்ப்புகளோடுதான் ஒவ்வொரு முறையும் இருப்பார்கள். ஐந்தாவது பே கமிஷனை கலைஞர் அவர்கள் 1989-லே ஆட்சிப் பொறுப்புக்கு வந்த பிறகுதான் அறிவித்தார்கள். மீண்டும் இந்த ஆளுநர் உரையிலே அவர்கள் குறிப்பிட்டு இருக்கிறார்கள். மத்திய அரசு ஊழியர்களுக்கு அங்கே வழங்கப்படுகிற அந்த பே கமிஷனை டிட்டோ - அப்படியே தமிழகத்திலே பணியாற்றுகிற என்.ஜி.ஓ.-களுக்கு, தமிழக அரசு ஊழியர்களுக்கு வழங்குவேன் எனறு சொல்லி இருப்பதை மிகமிக வரவேற்கின்றேன். கடந்த முறை பல அனாமலிஸ் இருந்தது. ஆங்காங்கே பல அனாமலிஸ் இருக்கின்றன; சில இடங்களில் பேக் லாக் இருக்கிறது. அவைகளை எல்லாம் போக்கி, இந்த முறை மாநில சர்க்கார் ஊழியர்களுக்கும் மத்திய சர்க்கார் ஊழியர்களுக்கு வழங்கப்படுகின்ற அந்தச் சம்பள விகிதத்தை வழங்க வேண்டும்; அனாமலிஸை எல்லாம் தீர்த்து வைக்க வேண்டுமென்று இந்தச் சந்தர்ப்பத்திலே நான் கேட்டுக் கொள்ள விரும்புகிறேன்.

அதுமட்டுமல்லாமல், பெண்களுக்கு சொத்திலே சம பங்கு, எட்டாவது படித்த பெண்களுக்கு 5 ஆயிரம் ரூபாய் நிதி உதவி, கர்ப்பிணிப் பெண்களுக்கு மாதாமாதம் உதவித் தொகை என இப்படிப்பட்ட பல திட்டங்களை 1989-ல் கலைஞர் அவர்கள் ஆட்சிப் பொறுப்புக்கு வந்தபோது கொண்டு வந்தார்கள். ஆனால், கடந்த ஐந்தாண்டுகளில் அவைகள் கிடப்பில் போடப்பட்டுவிட்டன. கிடப்பிலே போட்டதன் காரணமாக பல மக்கள் பயனடையவில்லை. ஆனால், இன்றைக்கு மீண்டும் கலைஞர் அவர்கள் ஆட்சி பொறுப்புக்கு வந்த உடனேயே,

ஆளுநர் உரையிலே முதல்கட்டமாக, கடந்த காலத்திலே 35 ஆயிரம் பெண்கள் அந்த ஐந்து ஆயிரம் ரூபாய் நிதி உதவியை பெற்றார்கள்--அதை விரிவுபடுத்தி இரண்டு மடங்காக ஆக்கி இருக்கிறார்கள். பல திட்டங்கள் கடந்த ஆட்சியிலே நிறைவேற்றப்படவில்லை என்றாலும் கலைஞர் அவர்கள் தேர்தல் காலத்திலே மக்களுக்கு அளித்த வாக்குறுதிகளின் அடிப்படையிலே அவைகளை விரிவுபடுத்துவோம் என்று சொல்லி இருப்பதை மிகமிக வரவேற்கின்றேன்.

அதுமட்டுமல்லாமல், கூட்டுறவு சங்கங்களில் போலியாகவும் பல்வேறு தில்லுமுல்லுகளின் அடிப்படையிலும் சேர்க்கப்பட்டு இருக்கிற அந்த உறுப்பினர்களை நீக்கி, தேர்தலை முறையாக நடத்த 3 மாத காலம் தேவை என்று அறிவித்து இருப்பது உண்மையிலேயே (மணியடிக்கப்பெற்றது) சென்னை பெருமக்களுக்கு நினைவு இருந்தாலும்கூட கிராமப்புற மக்களுக்கு அப்படிப்பட்ட அறிவிப்பு மிகச் சிறப்பாக அமைந்து இருக்கிறது.

ஒன்றை மட்டும் நான் குறிப்பிட விரும்புகிறேன். கடைசியாக நம்முடைய தலைவர் அவர்கள் அனுமதி அளிக்க வேண்டும். நாங்கள் எல்லாம் ரிசர்வேஷன் தொகுதியில் இருந்து வந்தவர்கள். ஆகவே, ரிசர்வ் தொகுதி என்றால் கொஞ்சம் கன்செஷன் உண்டு. (குறுக்கீடு)

**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** ரிசர்வ் தொகுதியிலே இருந்து வந்தவர்களுக்கு அதிக மரியாதை இந்த ஆட்சியில் கொடுக்கப்படும் என்பது உங்களுக்கே நன்றாகத் தெரியும். ஆகவே, அதை ஒரு காரணமாகச் சொல்லக் கூடாது.

**திரு. செங்கை சிவம்:** 69 சதவீத இட ஒதுக்கீடு குறித்து கடந்த கால அரசு அதிலே மிகப் பெரிய ஒரு குழப்பத்தையே செய்து விட்டது. உச்ச நீதிமன்றத்தில் 9-வது அட்டவணையில் இருக்கின்ற பிரச்சினையை சரியாக எடுத்துச் சொல்லாத காரணத்தால், 50 சதவீதமே என்று நிலை இருக்கிறது; அதை மீண்டும் 69 சதவீதம் என்று பெற்றுத் தர கலைஞர், முதல்வர் அவர்கள் இன்றைக்கு ஆளுநர் உரையிலே குறிப்பிட்டு இருக்கிறார்கள். அவர்கள்தான் அந்த 69 சதவீத இட ஒதுக்கீட்டை அதிகப்படுத்தினார்கள். அதிலே இருக்கிற இன்னொரு பிரச்சினை, அப்பாய்ண்ட்மெண்ட் அண்டு எஜுகேஷன் என்று சொல்லி இருப்பது, அந்த ரிசர்வேஷன் அடிப்படையில் ஏற்கெனவே தாழ்த்தப்பட்ட மலைசாதி மக்களுக்கு, எஸ்.சி./எஸ்.டி. மக்களுக்கு 40 பாயிண்ட்ஸ் ரோஸ்டரில், அந்த ரிசர்வேஷனில் அப்பாய்ண்ட்மெண்ட் அண்டு பிரமோஷன் என்ற நிலை இருக்கிறது உச்சநீதிமன்றத்திற்கு தமிழக அரசு



தாழ்த்தப்பட்ட மற்றும் மலைசாதி மக்களுக்கு பதவி உயர்வாலும் இட ஒதுக்கீடு தர வேண்டும் என்று எடுத்துச் சொல்லி உச்சநீதிமன்றத்தில் புதிய உத்தரவை பெற வேண்டும் என்று கேட்டுக் கொள்கிறேன். (மணியடிக்கப் பெற்றது) அந்த நிலையை இன்றைக்கு கலைஞர் அவர்கள் கொண்டு வர வேண்டுமென்று கேட்டுக்கொண்டு எனது உரையை முடித்தக் கொள்கிறேன். நன்றி, வணக்கம்.

*பிற்பகல் 1-30*

**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** மாண்புமிகு உறுப்பினர் லத்தீப் அவர்களுடைய கோரிக்கையை ஏற்றுக்கொண்டேன் என்று சொன்னேன். அந்தவகையிலே, மாண்புமிகு உறுப்பினர் நிஜாமுதீன் பேச்சிலே குறிப்பிட்ட **ஆகிய சொற்றொடர்களை மட்டும் அவைக் குறிப்பிலிருந்து நீக்குவதற்கு உத்தரவிடுகிறேன். அதை நிருபர்கள் கவனத்திற்கு நான் கொண்டு வரக் கடமைப்பட்டிருக்கின்றேன்.

இன்று மூன்று கட்சிகளின் சார்பிலேதான் பேசுவோர் பட்டியல் கொடுக்கப்பட்டிருந்தது. ஆகவே, அவர்களைத்தான் என்னால் அழைக்க முடிந்தது. திங்கட்கிழமையிலிருந்து மற்ற கட்சிகளைச் சார்ந்த தலைவர்களோ, கொறடாவோ, அவர்கள் கட்சியிலிருந்து பேசும் உறுப்பினர்களின் பட்டியலைக் கொடுக்க வேண்டுமென்று அன்போடு வேண்டிக்கொள்கிறேன்.

பேரவையின் இன்றைய நிகழ்ச்சிகள் இத்துடன் முடிவுற்றன. பேரவை மீண்டும் திங்கட்கிழமை (27-5-1996) காலை 9-30 மணிக்குக் கூடும். வணக்கம்.

*பின்னர், பேரவை பிற்பகல் 1-31 மணிக்கு ஒத்தி வைக்கப்பெற்றது.*

## 6. பேரவை முன் வைக்கப் பெற்ற ஏடுகள்

-எதுவுமில்லை-

218920

** மாண்புமிகு பேரவைத் தலைவரின் ஆணைக்கிணங்க அகற்றப்பெற்றது.

அரசு மைய அச்சகம், சென்னை-600 079.

**Copies can be had from the**
**Assistant Director,**
**Government Publication Depot,**
**816, Anna Salai,**
**Chennai-600 002.**

©

Published under Rules 280 and 283 of the Tamil Nadu Legislative Assembly Rules and printed by the Commissioner of Stationery and Printing, Chennai-600 002.